# Tamil Nadu Legislative Council Debates

FORTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*13th, 14th, 16th and 17th December* 1974.

*VOLUME CXXVI (Nos.* 1 *to* 4.)

TABLE OF CONTENTS.

*Friday, 13th December* 1974.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies | ix—xi |
| 1. Condolence Resolutions— | |
| (1) Demise of Thiru Jaya Chamaraja Wadiyar, former Governor of Tamil Nadu | 1—18 |
| (2) Demise of Thiru P. T. Rajan, former Minister of Composite Madras State | 1—18 |
| 2. Papers laid on the table of the House .. .. | 18—39 |


*Saturday, 14th December* 1974.


| | |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. | 41—71 |
| 2. Announcement *re* decision of the Business Advisory Committee .. .. .. .. | 72 |

63146

PAGES.

*Saturday, 14th December 1974*—cont.

3. Adjournment motion *re* drought conditions, food situation and rise in the cost of living in the State ... 72—75

4. Panel of Vice-Chairmen ... ... ... ... 74

5. Government Motions—

(1) Transaction of Government Business on a Private Member's day .. .. .. 74

(2) Food situation in the State ... ... 74—125

*Monday, 16th December 1974.*

1. Questions and Answers ... ... ... 131—171

2. Announcements—

(1) Election to the Senate of the Annamalai University ... ... ... ... 171—172

(2) Change in the programme of the House ... 172

3. Calling attention to the need for taking up drought relief works in North Arcot district and postponement of agricultural and other loans ... 173—174

4. Presentation of the Twenty-fourth Report of the Committee on Government Assurances ... 174

5. Election of a member to the Tamil Nadu Land Improvement Board ... ... ... 174—176

6. Election of a member to the Senate of the Tamil Nadu Agricultural University ... ... 176—177

7. Presentation of the Second Statement of Supplementary Expenditure for 1974–75 .. .. 178—183

8. Government Motion *re*—

Food situation in the State—*cont* 183—224

9. Papers laid on the table of the House ... 224—227



PAGES

*Tuesday, 17th December 1974.*

1. Questions and Answers ... ... 229—256

2. Government Motion *re*—

Food situation in the State—*cont.* .. .. 257—318

3. Papers laid on the Table of the House .. 318—323

Index .. .. .. .. .. 331—382.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and apex levels including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE. HON. THIRU MANNAI P. NARAYANASWAMY, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money-lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ்நாடு ஆளுநர் :

மேதகு திரு. கோதார்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (முதலமைச்சர்)
கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத்துறை,
நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர்
தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி
(ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை
அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில்
நுட்பவியல்.

**2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி
அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—
தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட
மன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**3. மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு
கழிவுநீர்-குடிநீர் வாரியம், நகரமைப்பு.

**4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பிற்பட்டோர் நலத்
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
வகிப்பார்:—பிற்பட்டோர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப்
பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சிரணி, இளைஞர், அணி,
பூதான—கிராமதான இயக்கங்கள்.

**5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணித் துறை
அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:
பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனம் உள்ளிட்ட சிறுபாசனத்
திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிற் சாலைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

8. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட, மாநில, மாவட்ட அளவிலான வளர்ச்சி வட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்.

10. **மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** (உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, கூட்டுறவு மற்றும் வேளாண்மை மறுநிதி உதவி.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர் நலன், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள்-அளவுகள் குறித்த சட்டம், புள்ளி விவரம் மற்றும் குடிசை மாற்று வாரியம்.

12. **மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர் சிறுவர் நலன் உள்ளிட்ட சமூக நலத்துறை, மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.



13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் மற்றும் சின்கோனா.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசினர் அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. **மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள் மற்றும் திரைப்படச்சட்டம்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு

### மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

- திரு. வி. வெங்கா
- திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
- திரு. ஜி. சுவாமிநாதன்
- திரு. அ. அய்யணன் அம்பலம்.

### மேலவைச் செயலாளர்.

ரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

### உதவிச் செயலாளர்

ரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்

ரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம். ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராசாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி. என். .. | மாநிலச் சட்டப் பேரவை |
| 13 இராமகிருஷ்ண தேவர், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 இராமநாதன், எம். .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம் |
| 16 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 எல்லமந்தா, பி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே.எஸ். .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு .. | நியமனம். |
| 20 கோலப்பா, சி.ஆர். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 சக்தி மோகன், ஆர். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி, எம்.ஏ.பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | [2] |
| 24 சாம்பசிவம், இரா. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ்.சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 27 சிற்றரசு, சி. பி. (மாண்புமிகு தலைவர்) | மாநிலச் சட்டப் பேரவை |
| 28 சுந்தரேசத் தேவர், என். .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கப்பாண்டியன், வி., பி.ஏ.பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 தங்கவேலு, ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 தமிழரசி, சி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ.ஆர்., பி.எஸ்.ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி.ஆர். .. | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, அ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். .. | நியமனம். |
| 39 தேவராஜ், வி.எம். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம்.கே.டி. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நடராசன், என்.வி. (பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, மன்னை, ப. (உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 நாராயணசாமி, எஸ். .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |



| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 44 பக்கர், எம்.எம். .. | நியமனம். |
| 45 பலராமன், எல். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், அ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பாலசுப்பிரமணியம், கு.மா. .. | நியமனம். |
| 48 பெரியண்ணன், வி.ஆர். .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மணி, கோ.சு. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, மு. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 54 முருகேசன், எச். எல். .. | நியமனம். |
| 55 ரஸ்ஸல் ராஜ் .. | நியமனம். |
| 56 வசந்த பாய், ஜி. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 57 வில்வம், ஏ. கே. .. | நியமனம். |
| 58 வில்சன் அப்போலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஜார்ஜ் கோமகன் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 வெற்றிடம் .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஒன்பதாவது கூட்டத்தொடர்.

**வெள்ளிக்கிழமை, 1974 டிசம்பர் 13.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் தீர்மானங்கள்.

**(1) திரு. ஜெய சாமராஜ வாடியார், முன்னாள் தமிழக ஆளுநர்;—**

**(2) திரு. பி. டி. இராஜன், ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் ஆகியோரின் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்னாள் தமிழக ஆளுநரும், மைசூர் மன்னருமான திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் 23—9—1974 அன்று காலமானார் என்ற செய்தியையும், அடுத்து முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாநில அமைச்சர் தமிழவேள் திரு. பி. டி. இராஜன் அவர்கள், செப்டம்பர் திங்கள், 25-ஆம் நாள் மாலை மதுரையில் இயற்கை எய்தினார் என்ற செய்தியையும் இவ்வவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களை, இரங்கற் தீர்மானங்களை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"1964 முதல் 1966 வரை தமிழ் நாடு ஆளுநராக இருந்த, முன்னாள் மைசூர் மன்னர் திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் 23—9—1974 அன்று மறைந்தது குறித்து, இம் மேலவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது".

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 13

"1921 முதல் 1937 வரை மற்றும் 1957 முதல் 1962 வரை, சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும், 1952 முதல் 1957 வரை, சட்ட மன்றப் பேரவை உறுப்பினராகவும், 1932 முதல் 1937 வரை ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் பொதுப் பணித்துறை அமைச்சராகவும் இருந்தவரும், நேர்மைக்கும், பண்பிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கியவரும், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டவர்களில் ஒருவரும், அறப் பணியாற்றியவரும், நீதிக் கட்சியின் தலைவருமான தமிழவேள் திரு. பி. டி. இராஜன் அவர்கள் 25—9—1974 அன்று இயற்கை எய்தியதைக் குறித்து, இம் மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் வழங்குகிறது."

தலைவரவர்களே, தமிழகத்தினுடைய ஆளுநராக 1964 முதல் 1966 வரை விளங்கிய மைசூர் மன்னர் திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் ஆளுநராக இங்கே பொறுப்பு ஏற்றிருந்த காரணமாக மாத்திரமல்லாமல், நம்முடைய தென் பகுதிக்கும், ஏன், சிறப்பாக இந்தியத் திருநாட்டுக்கும் உலகத்திலே பெரும் புகழை ஈட்டித் தருகிற வகையிலே, அறிவுலக மேதைகளில் ஒருவராக விளங்கிய பெருந்தகையாளர். மன்னர் என்ற நிலையிலே மாத்திரமல்லாமல், கர்நாடக மாநில மக்களுடைய அன்புக்கும், பற்றுக்கும், பாசத்திற்கும் மிக மிகப் பொருத்தமாக அவர்கள் விளங்கினார்கள். அந்தக் காரணத்தாலே, சமஸ்தானங்கள் இந்தியாவோடு இணைக்கப்பட்ட பிறகும்கூட, அந்த மாநில மக்களின் அன்பினைக் கருதி, மைசூர் மன்னரை, மைசூர் மாநிலத்திலேயே 'இராஜபிரமுக்' என்ற நிலையிலே இந்தியப் பேரரசு நியமித்து, அவருக்குத் தர வேண்டிய மரியாதையைத் தந்தது. அதற்குப் பிறகும்கூட 1956 முதல் 1964 வரையிலே மைசூர் மாநிலத்தினுடைய கவர்னராக திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர் வெளி நாடுகளில் தத்துவ அறிவுரைகள் பலவற்றை சொற்பொழிவுகள் மூலமாக நிகழ்த்தியிருக்கிறார்கள். பல நூல்களை யாத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியின் மக்களுடைய அன்பினைப் பெருவாரியாகப் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு நல்லவர், வல்லவர் நம்மிடமிருந்து பிரிந்துவிட்டார் என்பதை நமக்கு ஏற்பட்ட ஒரு பெரும் இழப்பாகக் கருதி, நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, தமிழ் நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளினுடைய தலைவர்களாலும், அரசியல் கட்சிகளுடைய முன்னணியினராலும் பெரிதும் பாராட்டி, மதிக்கப்பட்டவராக வாழ்ந்த சர் பொன்னம்பலம் தியாகராஜன் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு, பிறகு பி. டி. இராஜன் என்று அழைக்கப்பட்டு,



1974 டிசம்பர் 13] [டாக்டர் மு. கருணாநிதி]

பிறகு 'பி.டியார்' என்றாலே அனைவருக்கும் விளங்குமளவுக்கு தமிழகத்திலே புகழ் எய்திய மிகப் பெரும் மனிதர்களிலே ஒருவராக விளங்கிய திரு. பி. டி. இராஜன் அவர்கள் மறைந்தது நமக்கெல்லாம் ஏற்பட்ட ஒரு மாபெரும் இழப்பாகும். தமிழகத்திலே, மொழிக்கும், மக்களுடைய உரிமைக்கும் எந்த நேரத்திலே ஊறு நேர்ந்தாலும் அப்போது தமிழகத்தினுடைய தலைவர்களோடு இணைந்து நின்று, மொழி காக்க, இந்த நாட்டு மக்களுடைய உரிமைக்காக போர்க் குரல் கொடுத்த பெரியவர் மறைந்த திரு. பி. டி. இராஜன் ஆவார்கள். 'தட்சிணப் பிரதேசம்' என்ற ஒரு திட்டம் உருவாக்கப்பட்ட போது, அதை எதிர்த்து, பெரும் குரல் கொடுத்தவர் திரு. பி. டி. இராஜன் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. தமிழகத்தினுடைய எல்லைகளை மாற்றி, தேவிகுளம்-பீர்மேடு பகுதிகள் நம்முடைய மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டுவிட்டன என்ற நிலையில், அவை மீண்டும் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து நடத்திய போராட்டத்திற்கு அவரே தலைமை ஏற்று நடத்த வேண்டுமென்று ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. வேறுபட்ட காரணங்களால் மாறுபட்ட எண்ணம் கொண்டவர்கள்கூட இந்தப் பொதுக் காரியத்தில் அவர்கள்தான் தலைமை ஏற்க வேண்டுமென்று சொல்லி, அவர்கள் தலைமை ஏற்று, அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். மொழியைக் காப்பாற்றவும், கலாச்சாரத்தைக் காப்பாற்றவும், வயதான காலத்திலேகூட நமக்கெல்லாம் பெருந்துணையாக இருந்த அவரை இழந்தது நமக்குப் பேரிழப்பு என்று மீண்டும் மீண்டும் கூறி, அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய மக்களுக்கும் இந்த அவையின் மூலமாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, அவையின் முன்னவர், நமது முதல்வரவர்க்ள் பிரேரேபித்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இணைத்து, ஒருசில சொற்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தின் ஆளுநராகவும், நமது அண்டை மாநிலமாகிய மைசூர் மாநிலத்து ஆளுநராகவும், அதற்கு முன்னால் மைசூர் மகாராஜாவாகவும் இருந்து, எல்லோராலும் பாராட்டப் பெற்று அறிவுலக மேதைகளில் ஒருவராக விளங்கிய அவர் மறைந்தது நமக்கு ஒரு பெரிய இழப்பாகும். நமது மாநில கவர்னராக அவர் இருந்த காலத்தில், இரண்டொரு முறை நமது அவையையும், பேரவையையும் வந்து பார்த்துவிட்டுப் போனார். சுதேச சமஸ்தான இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா என்று இந்தியா இரண்டாக அழைக்கப்பட்ட அந்தக் காலத்தில், சமஸ்தானங்களில் ராஜாக்கள் வைத்ததுதான் சட்டம். அந்த மகாராஜாக்களின் திவான்கள் என்று வைத்துக்கொண்டு அவர்கள் ஏதேச்

## திரு. ஜெயசாமராஜ வாடியார், முன்னாள் தமிழக ஆளுநர், திரு. பி. டி. இராஜன், ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் ஆகியோரின் மறைவு குறித்து

[திரு. கே. ராஜாராம்] [1974 டிசம்பர் 13

சாதிகார ஆட்சி நடத்திக்கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே, மைசூரில் தொகுதிகளைப் பிரித்து, தேர்தல் நடத்தி, தேர்தல் மூலமாக வந்தவர்களைக் கொண்டு சட்டசபை ஏற்படுத்தி, மைசூரில் ஆட்சி நடந்துகொண்டிருந்ததென்பதை நினைக்கும்போது, எவ்வளவு முற்போக்காக அவர் இருந்தார் என்பது விளங்கும். அவர் மறைந்தது நமது நாட்டுக்கே ஒரு பெரிய இழப்பாகும்.

**(பிற்பகல் 4-10)**

அடுத்தபடியாக, திரு. பி. டி. இராஜன் அவர்களை நான் மாணவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்கு நன்றாகத் தெரியும். இங்கிலாந்து சென்று 'பாரிஸ்ட்டர் அட் லா' படித்து, தேர்ச்சியடைந்து இந்தியாவுக்கு வந்த புதிதில் மதுரையில் பெரிய வரவேற்பு ஒன்று வைத்திருந்தோம். நாங்கள் எல்லாம் கல்லூரியிலிருந்து சென்று அவரை வரவேற்றுப் பாராட்டினோம். பிற்காலத்தில் அரசியலில் ஈடுபட்ட பிற்பாடு ஜஸ்டிஸ் கட்சியின் தமிழ் நாட்டுக்கு ஒரே தலைவராக விளங்கியவர் அவர். தனிப்பட்ட வாழ்க்கையில் யாரிடமும் எந்தவிதமான விரோதமும் இல்லாத ஒரு அரசியல் மேதை தமிழ் நாட்டில் உண்டென்றால், அது பி. டி. இராஜன் அவர்கள்தான்.

அரசியல் ரீதியில் காங்கிரசாரையும், இன்னும் அவருக்குப் பிடிக்காத மற்றவர்களையும் அவர் தாக்கிப் பேசுவதுண்டு. அவரை, மற்றவர்களும் நாங்களும் தாக்கிப் பேசுவதும் உண்டு. ஆனால், மனிதனுக்கு மனிதன் நண்பர் என்ற முறையில் அவர் எவ்வளவு பச்சாதாபத்துடனும், பரிவுடனும் நடந்துகொண்டார் என்று நினைக்கும்பொழுது, எனக்கு கண்ணீர் வரும்படியான அளவு கவலை ஏற்படுகிறது.

எனக்குத் தெரியும், நாங்கள் அவரை அதிகமாகத் தாக்கி ஒன்றும் பேசாது போனாலும்கூட, சில நண்பர்கள் மேடைகளில் அவரைத் தாக்கிவிட்டு, மறுநாள் சென்று அவரிடம் உதவி கேட்டால், உடனே சிபாரிசுக் கடிதம் எழுதிக் கொடுப்பார். அவ்வளவு பெரிய பண்பு உடைய ஒரு மனிதர் அவர்.

அவர் வீடு, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை அன்னசத்திரமாகவே விளங்கியது என்று சொன்னால், அது மிகையாகாது. ஒரு வேளைக்கு 100 பேர்களுக்குக் குறையாமல் அவர் வீட்டில் உணவு அருந்துவார்கள். எல்லோரும் உணவருந்த வந்து உட்கார்ந்துவிட்டார்களா என்று பார்த்துவிட்டு, அதன்பின் தான் அவர் உட்காருவார். அவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். மதுரை மாவட்டத்திலேயே உத்தமபாளையம் முதலியார் குடும்பம் அவ்வளவு பெரிய பேர் போன ஒரு குடும்பம். இவர் பிறந்த பிற்பாடு, அந்தக் குடும்பத்திற்கு ஏற்கெனவே இருந்த பெரிய பெயரை மேலும்



1974 டிசம்பர் 13] [திரு. கே. ராஜாராம்]

உயர்த்தினார். அவருக்கு ஈடாக இன்னொருவரைச் சொல்ல என்றால் இயலாது. அவ்வளவு பெரிய மனம் படைத்தவர். தமிழுக்காகவும், சமுதாயத்திற்காகவும் அரும்பாடு பட்டார்.

கடைசி காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் சீர்திருத்தத் திருப்பணியை மேற்கொண்டு, பழமையான கோபுரங்களை எல்லாம் மராமத்து செய்து புதுப்பித்து, கோவிலின் உள்ளே தடைகளாக இருந்த பகுதிகளை இடித்து, வாசல் வைத்து, திருத்தியமைத்தார். இந்தத் திருப்பணிகள் எல்லாம் அவரில்லையென்றால் நடந்திருக்காது என்று கூடச் சொல்லலாம். தமிழ் நாட்டில், இவரில்லையென்றால், இவரைப் போன்ற ஒரு பெரிய மனிதர் யார் இத்தகைய திருப்பணியைச் செய்வார்கள்? அவர் இருந்து நடத்தியதால்தான் இந்தத் திருப்பணி சிறப்புடன் நடந்தேறியது. அவ்வளவு பெரிய மனிதர் அவர்.

அவர் இந்தச் சபையில் ஒரு முறையும், அடுத்த சபையில் ஒரு முறையும் உறுப்பினராக இருந்தார். சுதந்திரத்திற்கு முன்னால் நடந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி காலத்தில் அவர் அமைச்சராக இருந்தபோது கூட, எனக்கு அவரைத் தெரியும். மிக இளம் வயதினராக இருந்தாலும், அவர் அமைச்சராக இருந்தார்.

இன்று சென்னையில் வடபழனியில் இருக்கும் கோவில் அவரால் வந்தது என்பது பலருக்குத் தெரியாது. அவர் அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில்தான் வடபழனி கோவிலே கட்டப்பட்டது. கும்பாபிசேகமும் அப்போதுதான் நடந்தது. அவ்வளவு பக்தி நிறைந்தவர். இன்னொரு ரகசியம் பல பேருக்குத் தெரியாது. அவருடைய சட்டைப் பையில் எந்த நேரமும் முருகனுடைய வேல் இருக்கும். மனதுக்கு சஞ்சலம் ஏற்படும்போது எல்லாம் அந்த வேலை எடுத்துப் பார்த்துக் கொள்வார். அவ்வளவு முருக பக்தியும், நம்பிக்கையும் நிறைந்தவர். அவ்வளவு பெரிய மனிதர். பொதுக் காரியங்களில் சந்தேகத்திற்கெல்லாம் அப்பாற்பட்டவராக இருந்து, எந்தக் காரியத்தையும் முன்னின்று நடத்தினார் என்று சொல்வதில் நான் மிக்க பெருமைப்படுகிறேன்.

பொதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, மாநிலத்தில் இக்கட்டான காரியங்கள், கஷ்டமான அரசியல் பிரச்சினைகள் கிளம்பிவிட்டால், மதுரையிலிருந்து சென்னைக்கு ஓடிவருவார். மதுரையில் உட்கார்ந்துகொண்டிருக்கமாட்டார். சென்னைக்கு வந்து அவரைக் கூப்பிடு, இவரைக் கூப்பிடு என்று அழைத்துப் பேசுவார். இடைஞ்சலான காரியம் வந்துவிட்டால், எந்தவித வித்தியாசமும் இல்லாமல், எல்லா அரசியல் தலைவர்

[திரு. கே. ராஜாராம்] [1974 டிசம்பர் 13

களையும் அழைத்துப் பேசி, ஒன்று சேர்த்து ஒரே குரலில் எல்லோரும் சேர்ந்து சொல்லும்படியான காரியங்களில் ஈடுபடுவார். தட்சிணப் பிரதேச விஷயத்தில் நேரில் ஈடுபட்டார். எனக்குத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் அதைச் சொன்னது இவ்விடத்தில் மிகவும் பொருத்தமானது. தட்சிணப் பிரதேச விஷயத்தை கேட்டவுடன், மதுரையிலிருந்து ஓடிவந்தார். இங்கு வந்து உடனடியாக திரு. காமராஜ் அவர்களைச் சந்தித்தார். அப்போது திரு காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். தட்சிணப் பிரதேசம் வந்துவிடும் என்று முடிவான நேரத்தில், அது இல்லாமல் போயிற்று. இம் மாதிரியான மாநிலப் பொதுக் காரியங்களில் அவர் பெரும் ஈடுபாடு கொண் டிருந்தார். அவருடைய இழப்பு நம்மால் என்றுமே ஈடுசெய்ய முடியாத தாகும். சிறந்த பெரிய மனிதர் இரண்டு பேரை நாம் இழந்து தவிக்கின்றோம். அவர்களுடைய குடும்பங்களுக்கு என் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமைகிறேன்.

* THIRU S. NARAYANASWAMY : I am grateful for the opportunity, Mr. Chairman, of speaking on this very sorrowful occasion.

The late Maharaja of Mysore, Sri Jaya Chamaraja Wadiyar was known to me intimately for a period of over seven years, when I had occasion to give him, what he called, financial advice. He was a great humanist. Very many things that he did, because of his very peculiar position as a Ruling Prince, remained very confidential. He was a good Samaritan who played a very big part in very many good causes. Two things that are known about him are also very, very important. He was one of our cultural ambassadors over the last five or seven years of his life. was personally present when he delivered a lecture in the Hydelburg University in West Germany. Incidentally, he knew German well enough to speak colloquially and he made a very profound impression on his audience at the Hydelburg University lecture.

Some of his great disquisitions on philosophy are very monumental indeed. He delivered a series of lectures known as the "Ghana lectures" on Oriental philosophy, whose manuscript he handed over to me for my perusal. I was dumb-founded at the range and depth of his knowledge and his piety. He was a scholar



1974 டிசம்பர் 13] [Thiru S. Narayanaswamy]

in many languages of which people had no idea. He was one of the great masters of western music and a connoisseur of western music too. He composed a number of songs in Kannada and Sanskrit which have now become very very popular.

[பிற்பகல் 4-20]

In the art of giving away, it was indeed very difficult to find his equal. The state of his financial affairs has often been ascribed to the fact that he was, if anything, a very over-generous person. During his tenure of office as Governor of Madras, Sri Jaya Chamaraja Wadiyar regretted that the climate of Madras and his own diabetes made it impossible for him to stay right through and do his work in the manner he would have liked. In one particular matter—there is no harm in referring to it—namely, the discussions regarding having an electrical project at Hogenakal, he played a very confidential and very constructive part and that is the discussion which he had with the then Chief Minister with a view to finding some solution by which the project could come through. But, I am afraid, at the last minute, the Chief Minister of Mysore (Karnataka) found it impossible to accept the terms on which this project would have been made possible. He died a very untimely death. He was, I understand, had he been in good health, about to be appointed Ambassador to a very important country. But his failing health made it impossible for him, even when he was sounded, to accept the assignment and he passed away somewhat abruptly. I greatly appreciate that we have met this evening to mourn the death of a good man, a gentleman and a scholar and I would like to pay my tribute, my humble tribute, to a man whom I miss very much indeed.

Speaking about late Thiru P. T. Rajan, I knew him for the past forty years and I cannot adequately describe what a kind of elder brother he was in many ways. If I was asked to describe what was his most outstanding quality, I should say, friendliness and fellowship. There was not an evening, when I went to the Cosmopolitan Club, when he was in station, when he did not sit down and discuss the weather and Madras politics for three minutes before he went to the rummy or bridge table upstairs. He was that much friendly with me. His great piety made him not only renovate the temple at Madurai, but he also took a lot

of interest in the 'Ayyappa' movement which popularised 'Ayyappa' all over India, apart from being known in Kerala. One distinctive recollection we may have and that is what he did when, as is happening this year, there was a very critical drought and rains failed us. That was during the period when Rajaji was the Chief Minister. It was left to Thiru P. T. Rajan to suggest that prayers should be offered in temples for the purpose of inviting a downpour of rain. This was done and lo! and behold, we did have, on one particular range of 48 hours 18 inches of rain, with which all of us are familiar. That showed the extent of his piety and his faith in God. He was a good man and he was a great man. He knew the art of compromise both in life and in politics. I never heard from him anything but the most gentle word, even in reproof. At three different times, I had occasion to telephone him and invite him to Madras in his very advanced years and once to preside over Rajaji's birthday. In spite of failing health, he did come, he presided upon the occasion and sat through for 2½ hours and said that he regarded it as a great, privileged occasion for him to come. We have lost a great and good man. We can go on saying many things about him. I shall miss him, the Cosmopolitan Club will miss him and every friend in Madras will miss him, because he was a father-figure, a patriarchal figure. As the hon. the Leader of the Opposition very thoughtfully said, it is seldom we have his like.

We shall miss these two gentlemen very much indeed and I join the House in offering my profound sympathies to those bereaved.

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I wish to associate myself with the very sorrowful sentiments that have been expressed by the Hon. the Chief Minister as well as the Leader of the Opposition and Thiru S. Narayanswamy in condoling the demise of these two gentlemen who were extremely noble and cultured citizens of South India. Their demise has removed from our midst two men who have served their fellow-men with great sincerity and zeal.





The late Highness the Maharajah of Mysore, although I did not know him personally, had very close contacts with members of my family, more particularly my father who had the privilege to serve in the then State of Mysore as Dewan during those critical years 1945 to 1948 and right up to 1950. It is a little difficult for people of this generation to judge the great qualities of Jaya Chamaraja Wadiyar, but I know for a fact, Sir, that during those difficult days, when 556 States were in the process of acceding to the Indian Union, there was tremendous pressure brought to bear upon the late Highness by his colleagues in the Princes' Chamber to raise the claim of paramountcy as was done in another State ; but the fact remained that Thiru Jaya Chamaraja Wadiyar was so sincere a patriot that he refused to allow himself to be cajoled into supporting the cause of one or two other recalcitrant princes who gave a lot of head-ache to Sardar Vallabhbhai Patel. He was a great patriot, a noble scholar and a great philosopher. Many students of foreign Universities have listened to his lectures. He was very fond of touring abroad. He was, as I said, a great scholar although he was not very fortunate as a prince, because ever since he ascended the throne, he had a great deal of difficulty. He has left us at a very early age. I am sure both the cultural and philosophical world will pay their tributes to the memory of this great man.

As far as Thiru P. T. Rajan is concerned, he was a doyen of the Justice Party. Here again, although I was far too young to have any intimate knowledge of this great man, I should know him very well at least from remembrance, because he was one of the colleagues of my father. We have to go back 55 years when the Justice Party was formed and Thiru P. T. Rajan was one of the stalwarts of the Justice Party. Although the others who belonged to that party had drifted away from it, either to form new parties or to adopt non-partisan stands, Thiru P. T. Rajan stood firmly like a rock right up to the end and he was possibly the sole leader and representative of the Justice Party in the Legislative Assembly for five years. He was also extremely cultured, scholarly, kind-natured, gentlemanly in his approach, affable and sincere ; and in his demise Tamil Nadu

[Thiru A. R. Damodaran] [1974 டிசம்பர் 13

has indeed lost a great stalwart, a man who had rendered signal service during those troublesome years of 1920 to 1935 when we had the diarchic system of regime introduced in our country.

These men have rendered signal service and although it may be difficult for us to judge them in the light of what is happening in India in 1974, nonetheless, the thought does cross our minds that these men who set great traditions in the past leave good examples for us to follow as parliamentarians and I would like to join my other friends in paying my very sincere and humble tribute to the memory of the late Thiru P. T. Rajan. Thank you, Sir.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை, மேலவையுடன தொடர்பு கொண்டவர்களாகவும், அரசுடன் தொடர்பு கொண்டவர்களாகவும் இருந்த இரண்டு உத்தமர்கள்' மறைந்து விட்டதைத் தொடர்ந்து, நமது அருமை முதல்வர் கொண்டு வந்திருக்கும் இரங்கல் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கின்றேன்.

திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் இந்த மாநிலத்தில் கவர்னராக இருந்தவர். மைசூர் மாநிலத்திலும் அவர் கவர்னராக இருந்தவர். மைசூர் மாநிலத்தின் மகாராஜாவாகவும் இருந்தவர். பிறகு மகாராஜாவும் இல்லை, கவர்னரும் இல்லை. சாதாரண பிரஜையாக இருந்தார். மகாராஜாக்கள் இருந்த காலங்களிலே, அநேகமாக பிரஜைகளிடம் நல்ல பெயர் எடுக்க முடியாத நிலையில்தான் பெருவாரியான மகாராஜாக்கள் இருந்த சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்களைப் பொறுத்தமட்டில், இந்த அம்சத்தில் அவர் ஒரு விதி விலக்கு. மைசூர் மக்கள் அவரை தம் தந்தையைப் போல நேசித்தார்கள், பாராட்டினார்கள். மக்கள் அவரை அன்புடன் புகழ்ந்து கொண்டிருந்ததைப் பார்த்திருக்கின்றோம். அவர்கள் இந்த மாநிலத்திலும் மைசூர் மாநிலத்திலும் கவர்னராக இருந்து செய்த சேவை பாராட்டுக்குரிய சேவை. அவர்கள் மறைந்து விட்டது ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் தேசிய சேதாரம் என்று குறிப்பிடுவது மிகையாகாது.

நமது மாநிலத்தைச் சேர்ந்த திரு. பி. டி. இராஜன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டதையும் இந்த இரங்கற் தீர்மானத்திலே அரசு சேர்த்திருக்கின்றது. திரு. பி. டி. இராஜன் இந்த மாநிலத்தின் அமைச்சராக



1974 டிசம்பர் 13] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

இருந்திருக்கின்றார்; மேலவையின் உறுப்பினராக இருந்திருக்கின்றார்; பேரவையினுடைய உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார். அது மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள மக்கள் யாவரும் அறிந்த ஒரு புகழ் பெற்ற பெரியவராகவும் அவர் இருந்தார். நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 'திரு. பி. டி. இராஜன் அவர்கள் வீடு அன்ன சத்திரமாகவே விளங்கிக் கொண்டிருந்தது' என்று சொன்னார்கள். அந்த அன்ன சத்திரத்தில் உணவு உண்பவர்களில் நானும் ஒருவனாக இருக்கும் ஒரு சந்தர்ப்பம், முஸ்லீம் லீக் கட்சிக்காக நிதி திரட்ட நான் உத்தமபாளையம் சென்றிருந்தபோது, எனக்குக் கிடைத்தது. திரு. பி. டி. இராஜன் அவர்கள் கொடுப்பார்கள் என்று நண்பர்கள் என்னை அவரிடம் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் அவரிடம் சென்றபோது வாருங்கள் என்று உபசரித்தார். முதலில் சாப்பிட வாருங்கள் என்று சொன்னார்கள். நான் சாப்பிடப் போனால் அங்கு ஏற்கெனவே 30, 40 பேர் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். என்ன இப்படி நிறைய பேர் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்களே என்று கேட்டபோது, தொடர்ந்து பல அடுப்புகளில் சமையல் நடந்துகொண்டிருக்கும், நிரந்தர வருபவர்களுக்கு சமைத்து அளிப்பார்கள்' என்று சொன்னார்கள். அது தான் அந்த வீட்டினுடைய நிலைமை. அத்தகைய பெருமையினை உடைய ஒரு பெரியவர் அவர். தமிழகத்திற்கு மறக்க முடியாத உயர்ந்த சேவை செய்து புகழினை நிலைநாட்டிக் கொண்ட ஒரு உத்தமர் மறைந்து விட்டார்.

இரண்டு பெரியார்களுக்கும், முஸ்லீம் லீக் கட்சியினுடைய சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கற் தீர்மானத்தை வரவேற்று இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல நான் முற்படுகின்றேன். முன்னாள் மகாராஜாவாக இருந்தவரும், தமிழகத்தின் ஆளுநராக இருந்தவரும் ஆகிய திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்களுடைய மறைவு குறித்து, இங்கே பல கட்சித் தலைவர்கள் அவருடைய உயர்வைப் பற்றியும், பெருமையைப் பற்றியும், அறிவைப் பற்றியும், திறமையைப் பற்றியும் எடுத்துக் கூறி, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார்கள். அதை நானும் சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. படித்த ஒரு சிறந்த மாமேதை அவர். உலகம் எல்லாம் நன்றாகச் சுற்றுப் பயணம் செய்து, இந்த நாட்டினுடைய நிலைமையை எடுத்துக் கூறி, நம்முடைய நாட்டினுடைய பெருமையை உயர்த்தியவர். மகாராஜாவாக இருந்தபோதும், இந்த மாநிலத்தில் ஆளுநராக இருந்த போதும், தோற்றத்திலும், செயல்களிலும் அடக்கமாகவும், மரியாதையாகவும் காட்சி அளித்துக்கொண்டிருந்த ஒரு பெரியவர் அவர். அவர் அதிக வயதிலே

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1974 டிசம்பர் 13

கூட இல்லாமல், குறைந்த வயதிலேயே நம்மை விட்டுப் பிரிந்ததற்கு நான் ரொம்ப வருத்தத்தையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் அவருடைய குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, நமது தமிழகத்தில் மிகப் பெரியவராகவும், இந்து அரசினுடைய அமைச்சராகவும், மன்றத்திலே அங்கத்தினராகவும், நீதிக் கட்சியின் தலைவராகவும் இருந்து சிறந்த தொண்டாற்றி வந்த நமது திரு. பி. டி. ராஜன் நிறைந்த வயதிலேதான் இறந்தார் என்று நான் எண்ணுகின்றேன். அவர் 82 வயதிற்குமேல் நிறை வாழ்வு வாழ்ந்துதான் மறைந்திருக்கின்றார். அவருடைய வாழ்நாள் பூராவும் தமிழகத்திற்குச் சிறந்த பணியை அவர் செய்திருக்கின்றார். அவர் அரசியலிலே ஈடுபட்டிருந்தபோது, மாற்றுக் கட்சிகளிடமோ, வேறு கட்சிகளின் மாற்றுக் கருத்துக்களுக்கோ அவர் எந்தவித வேற்றுமையோ, பகைமையோ காட்டாமல் அத்தனை பேர்களையும் அன்பாக, ஆதரவாக அழைத்துப் பேசுவார். யாரிடமும் எத்தகைய பாரபட்சமும், வித்தியாசமும், மனப் பாகுபாடும் காட்டவும் மாட்டார். அப்படிக் காட்டவும் அவருக்குத் தெரியாது. அவரோடு 1952-லிருந்து நெருக்கமாகப் பழக வேண்டிய ஒரு நிலைமை எனக்கு இருந்தது. அவரோடு பல நாட்கள் இருந்து பேசிப் பழக வேண்டிய வாய்ப்பு எனக்கு இருந்தது. அவர் நீதிக் கட்சியின் தலைவராக இருந்தார் என்பது மட்டுமல்ல, அரசியலில் மாறுபட்ட கருத்துக்களையுடைய கட்சிகளின் **தலைவர்களோடு தொடர்பும் நட்பும் கொண்டவராய்** இருந்தார். தமிழகத்தில் இருக்கின்ற கோயில் திருப்பணிகளிலெல்லாம் முன்னணியில் நின்று அவைகளையெல்லாம் சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருந்தார். தமிழகத்திலே அவரால் பல திருப்பணிகள் முழு அளவுக்கு வெற்றி பெற்றுத் திகழ்ந்திருந்தன என்றால், அதற்கு அவருடைய சலியாத உழைப்பும், அத்தனை ஊர்களுக்கும் சென்று அத்தனை பேர்களையும் நேரிலேயே போய்ச் சந்தித்து அதற்கான நிதியை வசூல் செய்து அப்பணிகளையெல்லாம் வெற்றிகரமாகச் செய்தார் என்பதுதான் காரணம்.

இன்றைக்கு நம் மத்தியிலே இல்லாமல் அவர் மறைந்துவிட்டார். அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(பிற்பகல் 4.40)

* **திரு. ஆர். சக்தி மோகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையின் முன் வைத்துள்ள இந்த இரங்கற் தீர்மானத்தை நானும் என் கட்சியின் சார்பிலே ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 13] [திரு. ஆர். சக்தி மோகன்]

மறைந்த இரண்டு பெரியவர்களிலே ஒருவரான, மைசூர் மாமன்னராகவும் நமது மாநிலத்தின் ஆளுநராகவும் இருந்த, திரு. ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் மைசூருக்கு மட்டும் மன்னராக இல்லை, நமது தமிழகத்திற்கும் ஆட்சித் தலைவராக இருந்தவர் என்பதோடு, இந்திய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும், எல்லாவற்றுக்கும் மேலாக நமது நாட்டின் பெருமை மிக்க தத்துவங்களையும் உலக அரங்கிலே பல்வேறு நாடுகளிலே பரப்பியவர். இந்திய நாடு சுதந்திரம் அடைந்தபோது, நாட்டிலே இருந்த பல்வேறு இராஜ்யங்களை இந்திய நாட்டோடு இணைக்கும் பொறுப்பினை சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த நேரத்தில், அவருக்கு அதிக சிரமம் வைக்காமல் தாமாகவே முன்வந்து தமது சமஸ்தானத்தை இந்தியப் பேரரசிடம் ஒப்படைத்து, அதன் மூலம் மன்னர்கள் ஆட்சியில் மக்களுக்காகச் சாதிக்க முடிந்ததைவிட மக்கள் ஆட்சியின் மூலம் அதிகம் சாதிக்கலாம் என்ற அடிப்படையில் நாங்கள் உடன்படுகிறோம் என்று இந்திய நாட்டிலிருந்த சமஸ்தானாதிபதிகளுக்கு முன்னோடியாக இருந்தவர் மறைந்த மாமன்னர் ஜெய சாமராஜ வாடியார். அவர் வெளி நாடுகளுக்குச் சென்றிருந்த போதெல்லாம், இந்தியப் பண்பாட்டை, கலாச்சாரத்தை, தத்துவங்களையெல்லாம் மிகச் சிறந்த முறையில் எடுத்துரைத்து, அதன் மூலம் 'மன்னர்களுக்கும் இந்த அளவிற்கு இலக்கிய ஈடுபாடும் தத்துவார்த்தங்களிலே மேதாவிலாசமும் உண்டா' என்று உலகமே வியக்கத்தக்க அளவிற்கு நமது நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தந்தவர். அவரது அகால மரணம் நமக்கு அடக்கமுடியாத துயரமாகும்.

அடுத்து, நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஒரு பெரியவர், இந்த நூற்றாண்டின் இறுதிவரையில் கிட்டத்தட்ட இருந்து இறுதியடைந்த பெரியவர் திரு. பி. டி. இராஜன் அவர்கள். அவர்களைப்பற்றி விளக்கிப் பேசுவது என்றால், நீண்டதொரு தொடர் சரித்திரத்தை நாம் எழுதியாக வேண்டும் அல்லது பேசியாக வேண்டும். அவர் ஈடுபட்டு செய்து முடிக்காத பொதுப் பணிகள் இல்லை. அரசியலிலே அவரிடம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டவர்கள்கூட அவரோடு இணைந்து செயலாற்றும் அளவிற்கு பொதுக் காரியங்களிலே அவர் சிறிதுகூட மனவேறுபாடு இல்லாமல் ஒத்துழைப்புக் கொடுத்தவர். பெரும் தலைவராக இருந்தவர் அவர். பெரும் செல்வாக்கில் இருந்தவர். பொறுப்புமிக்க பெரும் அதிகாரங்களைக் கொண்ட பதவிகளில் இருந்தவர். அவர் தமக்கு இருந்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் எந்தக் காலத்திலும் தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டவர் இல்லை. அவர் தமது செல்வங்களை பொதுச் சேவைகளுக்காக அர்ப்பணித்தவர். இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு சமயம் என்னிடம் சொன்னார், 'சமூக வேறுபாடுகளைக் களைவதற்கு,

[திரு. ஆர். சக்தி மோகன்] [1974 டிசம்பர் 13

பொதுவாக மக்கள் அனைவரும் முன்னேறுவதற்கு நம்மால் ஆன அனைத்தையும்
செய்ய வேண்டும்' என்று சொன்னார். எனவேதான் அடிமை இந்தியாவில்
அமைச்சராக இருந்தவர் சுதந்திர இந்தியாவில் மக்களின் பிரதிநிதியாக வர
முடிந்தது. அந்த அளவிற்கு சிறப்புக்களைப் பெற்றவர் அவர்.

நண்பர்கள் மறைந்த அந்தப் பெரியவருடைய சிறப்பியல்புகளைப் பற்றிக்
குறிப்பிட்டார்கள்—மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவிலுக்கான திருப்பணிகளைப்
பற்றியும், தமிழ்ச் சங்கத்திற்குப் பொன் விழா எடுத்தது பற்றியும்.
இவையெல்லாம் அவருடைய சிறப்புகளுக்கு நிரந்தர அத்தாட்சிகளாகும்.
ஆனால் கடைசியாக அவருக்கு ஒரு குறை இருந்தது. அதாவது
கன்னியாகுமரியில் நிறுவப்பட்டுள்ள விவேகானந்தர் பாறையில் பாஸ்கர
சேதுபதி அவர்களுடைய சிலையினை நிறுவ வேண்டும் என்று பெரிதும்
விரும்பினார். விவேகானந்தர் பாறையில் இப்போதுள்ள அந்த நினைவுச்
சின்னத்தை நிறுவும் பணியை ஏற்று நடத்துவதற்காக அமைக்கப்பட்ட, அகில
இந்திய ரீதியில் அமைக்கப்பட்ட, அந்த கமிட்டியில் அவர் தலைவராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நேரத்திலே அந்தப் பாறையில் பாஸ்கர
சேதுபதி அவர்களின் சிலையினை அமைக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக்
கொண்டுபோனபோது, அதில் அங்கம் வகித்த பெரும்பாலான வட இந்தியர்கள்,
'பாஸ்கர சேதுபதி அவர்களுடைய சிலையினை அங்கே வைப்பதற்கு
அனுமதிப்பதற்கில்லை. அப்படி நினைத்தால், விவேகானந்தருக்கு மன்னர்கள்
பலரும் ஏராளமாக உதவியிருக்கின்றார்கள், அவர்களுக்கும் அங்கே சிலைகளை
வைக்கச் சொல்லுவார்கள். எனவே அது கூடாது' என்று மறுத்துவிட்டார்கள்.
அதற்கு திரு. பி. டி. இராஜன் அவர்கள் சொன்னார்கள், அவர் சொன்னதைத்
தான் நான் சொல்லுகிறேன், 'விவேகானந்தருக்கு இந்தியாவிலுள்ள
மன்னர்கள் பலர் ஏராளமாகப் பண உதவி செய்திருக்கலாம். ஆனால் அவர்கள்
செய்த உதவிகள் அனைத்தும் விவேகானந்தர் உலகப் புகழைப் பெற்றதற்குப்
பிறகுதான் செய்தார்கள். ஆனால் நரேந்திரனாக இருந்த அவரை
விவேகானந்தராக மாற்றி அவர் மூலம் இந்திய நாடும், இந்து மதமும் பெருமை
பெறுவதற்கு உதவி செய்தவர் பாஸ்கர சேதுபதி அவர்களேயாகும். எனவே
தான் அவருக்குச் சிலை வைக்க வேண்டும் என்று கோருகிறேன்' என்றார்.
'பாஸ்கர சேதுபதி அவர்கள் இல்லை என்றால் நான் இல்லை' என்று
விவேகானந்தரே கூறியிருப்பதையும் திரு. இராஜன் அவர்கள் எடுத்துக்
காட்டிப் பேசினார்கள். அப்படியும் அந்தக் கமிட்டியில் உள்ளவர்கள் அதற்கு
இணங்க மறுத்த அந்த ஒரே காரணத்தினால், அகில இந்திய மட்டத்தில் பெரும்
செல்வாக்குப் பெற்றிருந்த அந்தத் தலைமையை இராஜினாமா செய்து விட்டு
வந்தவர் அந்தப் பெரியவர்.



1974 டிசம்பர் 13] [திரு. ஆர். சக்தி மோகன்]

அவர் மறைவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், நோய்வாய்ப்பட்டிருந்த
நேரத்தில், தம் மனத்தில் இருந்ததை என்னிடம் கூறுவார்கள், நான் எழுதிக்
கொள்ளுவேன். அவர் மனத்தில் இந்தக் குறை எப்போதும் இருந்ததை நான்
உணர்ந்திருக்கின்றேன். அவர் நிறைவாழ்வு வாழ்ந்தவர். வேறு எந்தக்
குறையும் அவர் மனத்தில் இருந்ததில்லை. ஆனால் விவேகானந்தர் பாறையில்
பாஸ்கர சேதுபதியின் சிலையினை வைத்தே ஆகவேண்டும் என்ற எண்ணம்
எப்போதும் இருந்துகொண்டே இருந்தது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு,
அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும் நேரத்திலே நான் அவரைச் சந்தித்தபோது
கூட, 'நம்மால் இதைச் செய்ய முடியவில்லையே' என்று வருத்தப்பட்டுக்
கொண்டார். என்று நினைவிற்கு வருகின்றது, அந்த நேரத்தில் நமது
முதலமைச்சர் அவர்கள்கூட விவேகானந்தர் பாறை திறப்பு விழா சமயம்
பாஸ்கர சேதுபதி அவர்களுடைய சிலையினை விவேகானந்தர் பாறையிலோ
அல்லது கன்னியாகுமரியிலோ வைக்கலாம், இதைக் காலப் போக்கில்
செய்யலாம் என்று சொல்லியதாகப் பத்திரிகையில் பார்த்தோம். எனவே தமது
வாழ்நாள் முழுவதும் தமது நேரத்தையும் செல்வத்தையும் தமிழர்களுடைய
கலாச்சாரத்திற்காகச் செலவிட்ட அவருடைய ஆன்மா நிறைவு பெறுவதற்காக
பாஸ்கர சேதுபதி அவர்களுடைய சிலையினை விவேகானந்தர் பாறையில்
வைப்பதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
வேண்டிக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு பெரிய
இந்திய உத்தமர்களுடைய மறைவிற்காக முதலமைச்சர் அவர்கள் முன்
மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை, அஞ்சலித் தீர்மானத்தை என்னுடைய
தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆதரிக்கின்றேன்.

ஜெய சாமராஜ வாடியார் அவர்கள் நமது மாநிலத்தில் ஒருகாலத்தில்
ஆளுநராக இருந்தார்கள். அந்த நேரத்திலே இரண்டு முறை இராஜாஜியுடன்
சென்று அவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசும் வாய்ப்பினைப் பெற்றேன்.
அப்போது அவர் தமிழ் இலக்கியங்களைப் பற்றி, குறிப்பாக, சிலப்பதிகாரம்
பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மிக்க ஆர்வத்தோடு சிறிது நேரம்
என்னோடு உரையாடினார். 'அந்த நூலின் ஆங்கிலப் பிரதி ஒன்று வேண்டும்'
என்றுகூட கேட்டு, அதன்பேரிலே தீட்சிதர் அவர்கள் எழுதியுள்ள ஆங்கில
சிலப்பதிகார நூலின் பிரதி ஒன்றினை அவருக்கு அனுப்பி வைத்தேன். அவர்
ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்று நமது நாட்டின் தத்துவங்கள்பற்றி
எடுத்துச் சொல்லியிருக்கின்றார். இலக்கியத்தில், தத்துவத்தில் அவர்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 டிசம்பர் 13

கொண்டிருந்த ஆர்வத்தினை அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலே நான் அதிகமாக அறிந்துகொள்ள முடிந்தது. அத்தகைய பெரியவரின் மறைவிற்கு நான் எனது அஞ்சலியினை—அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பெரியவர் திரு. பி. டி. இராஜன் அவர்களுடைய மறைவுபற்றி முதலமைச்சர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் எடுத்துச் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் மிகப் பொருத்தமானதாகும். அரசியலில் கருத்து வேற்றுமை என்றால், ஒருவரையொருவர் சந்தித்துப்பழக முடியாத அளவிற்கு பகை உணர்ச்சி கொள்ளும் அநாகரீகம் வளர்ந்துவரும் இக்காலத்திலே, அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு நாகரீகத்தவர் என்பது மட்டுமல்ல; முற்றிலும் மாறுபட்ட ஒரு நாகரீகப் பாரம்பரியத்திற்கே அவர் கடைசியாக இருந்தாரோ என்று சொல்லத்தக்க அளவிற்கு, அவரிடம்—நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல—உயர்ந்த பண்பாடுகளைப் பார்க்க முடிந்தது. முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, தட்சிணப் பிரதேசத் திட்டத்தினை முறியடிக்கவும், தேவிகுளம்-பீர்மேடு தாலுக்காக்களை மீட்கவும் நானும் அண்ணா அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழரசுக் கழகமும் இணைந்து, அனைத்துக் கட்சிகளையும் இணைத்து நின்று பெரியதொரு கிளர்ச்சியினை நடத்தியபோது, அனைத்துக் கட்சிகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தலைவராக வரக்கூடிய தகுதி அவருக்குத்தான் இருந்தது. அவரைப் போடுவதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லாமல், அவரை முன் வைத்து நானும் இப்போது அமைச்சராக உள்ள திரு. என். வி. நடராசன் அவர்களும் செயலாளராக இருந்து, அந்தக் கிளர்ச்சியினை நடத்திய நேரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றது.

1956 பிப்ரவரி 19-ம் நாள் நாடு முழுவதும் கடையடைப்பு நடந்த நாளில் ஐலண்டு கிரவுண்டு திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அசம்பாவிதம் ஏற்பட்டு, பயங்கரமான கல்லெறி சம்பவம் நடந்துகொண்டிருப்பதாகச் செய்தி வந்தது. நான் அங்கே போக வேண்டும் என்று புறப்பட்ட நேரத்தில், என்னைக்கூட 'போக வேண்டாம்' என்று பலர் கேட்டுக்கொண்டார்கள். நாவலர் அவர்களுக்கும் அதே நிலை ஏற்பட்டது. ஆனால் நான் போவதற்குள் எங்கள் அனைவருக்கும் முன்பே அந்தப் பெரியவர் அவ்வளவு கல்லெறி, கலகம் நடந்து கொண்டிருந்த அந்த நேரத்திலே அந்தக் கூட்டத்தின் மத்தியில் இருந்ததைப் பார்த்தபோது, தமிழ் நாட்டிற்கே உரிய வீரத்திற்கெல்லாம் உரியவராக அவர் காட்சி அளித்ததைப் பார்த்தேன். அப்படிப்பட்ட பண்பு



1974 டிசம்பர் 13] [திரு. ம. பொ. சிவஞானம்]

மிக்க அந்தப் பெரியவருக்கு தமிழினம், இந்த மேலவை, அரசியல் உலகம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. அவருக்கு நானும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 1919-ஆம் ஆண்டில் பிறந்த திரு. ஜெய சாமராஜ வாடியார், 1940-ஆம் ஆண்டில் மைசூர் மன்னராக முடிசூட்டப்பெற்றார். இந்தியா குடியரசு அடைந்த நாளிலிருந்து இராஜபிரமுக் பதவியை ஏற்று, 1956 அக்டோபர் வரை அப் பதவியை வகித்தார்; மைசூர் ஆளுநராக 1956 முதல் 1964 வரையும், அதைத் தொடர்ந்து தமிழக ஆளுநராக 1966 வரையும் பதவி வகித்தார்.

தத்துவ நூல்களில் ஆழ்ந்த புலமையும், நுண்ணறிவும் மிக்க இவர் பல புத்தகங்களை எழுதியுள்ளார். உலகெங்கும் சுற்றுப் பயணம் செய்து, இந்தியக் கலை, தத்துவம், கலாச்சாரம் ஆகியவை குறித்து, அரிய பல உரைகள் ஆற்றியுள்ளார். அவரது மறைவால் இந்திய நாடு ஒரு தலைசிறந்த குடிமகனை இழந்துவிட்டது.

அடுத்து, இயற்கை எய்திய ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் திரு. பி. டி. இராஜன் அவர்கள் 1892-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 12-ஆம் நாள் பிறந்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று, பட்டம் பெற்று, 1917-ல் பாரிஸ்டராகி, இந்தியா திரும்பி, வழக்குரைஞராக விளங்கினார்.

1921 முதல் 1937 வரை, மற்றும் 1957 முதல் 1962 வரை இந்த அவையின் உறுப்பினராகவும், 1952 முதல் 1957 வரை சட்ட மன்றப் பேரவை உறுப்பினராகவும் விளங்கினார். 1932 முதல் 1937 வரை ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் பொதுப் பணித்துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

நீதிக் கட்சியின் தொடக்க காலத்திலிருந்து, அதன் கொறடாவாகவும், பின்னர் 1945 முதல் அதன் தலைவராகவும், இருந்து வந்த அவர், பண்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்து, அறிஞர் அண்ணா அவர்களால் 'பண்பாளர்' என்று பாராட்டப் பெற்றார்.

தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தனது வாழ்நாளில் பெருந்தொண்டாற்றினார். அவர் தமிழுக்கு மட்டுமின்றி, ஆலயத் திருப்பணிகளிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றினார். அவருடைய மறைவால் நமது தமிழ் நாடு, ஒரு தலைசிறந்த தலைவரை, நல்ல தமிழ்க் குடிமகனை இழந்துவிட்டது.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1974 டிசம்பர் 13

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாவட்ட அளவில் திட்டங்கள் ஆராயப்பெற்று, அவைகளினுடைய பணி முடிவுற்று இப்போது முழுமையான அளவில் பலநோக்குத் திட்டம் விரைவிலே வெளி வர இருக்கின்ற காரணத்தினால், மாவட்ட அளவிலே குழுக்கள் கலைக்கப்பட்டது உண்மைதான். தொடர்ந்து இந்தத் திட்டக் குழுவினுடைய பணிகள் ஆய்வுக்கும் திட்டத்திற்கும் உள்ளாகின்ற நேரத்தில், அட்மினிஸ்டிரேடிவ் விங்குகளாக தங்களுடைய பணிகளை நடத்துகின்ற நேரத்தில், தேவைப்பட்டால் அக்குழுக்களை மீண்டும் அமைத்துக்கொள்ள அரசு யோசிக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, மாநிலத் திட்ட ஆணைக் குழு ஆரம்பித்து எத்தனை நாட்கள் ஆகின்றன? ஆரம்பம் முதல் இது வரைக்கும் யார் யார் தலைவராகவும், உப தலைவராகவும் இருந்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த அறிக்கையிலேயே இது எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற விவரம் வைக்கப்பட்டுள்ளது. இது 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதியில் தொடங்கப்பெற்று, ஆரம்பத்திலிருந்து முதலமைச்சர் தலைவராகவும், உப தலைவராக திரு. ராஜாராம் அவர்களும் இருந்தார்கள். இப்போது, திரு. கே. மதியழகன் அவர்கள் உப தலைவராக இருக்கின்றார்கள்,

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, உணவு உற்பத்தியை நம் மாநிலத்தில் பெருக்குவதினைப்பற்றி குறிப்பாக ஏதாவது திட்டம் அரசு தயாரித்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, டாக்டர் நடராஜன் அவர்களுடைய தலைமையிலே, பல துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்கள் வேளாண்மை, கால்நடை அபிவிருத்தி, மீன் வளம் ஆகியவைகளைப்பற்றி ஆராய்ந்து அறிக்கைகள் தந்திருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அறிக்கைகள் எல்லாம் முடிவடைந்து விட்டனவா? இன்னும் ஏதாவது அறிக்கை கொடுக்கவேண்டி இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த ஆணைக் குழுவின் துணைக் குழுக்களாக 15 துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவைகளுடைய அறிக்கைகள் பெரும்பாலும் வந்து விட்டன.

## *Suction Engine fitted in the Fire Engine*

* 2. *Q.*—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Suction Engine fitted in the Fire Engine is not able to draw water from the well at 30 feet depth;

(*b*) if so, whether the Government will take necessary action to modify the same suitably; and

(*c*) whether the Government will take necessary steps to double the capacity of the water tank?

### தீயணைக்கும் வண்டியில் உள்ள தண்ணீர் உறிஞ்சும் இயந்திரம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தீயணைக்கும் வண்டியில் உள்ள தண்ணீர் உறிஞ்சும் இயந்திரம் 30 அடி ஆழமுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், தக்கவாறு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(உ) வண்டியில் உள்ள தண்ணீர்த் தொட்டியை இரு மடங்காக மாற்ற ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையங்களுக்கு, நீர் தாங்கி பொருத்தப்பட்ட ஓர் ஊர்தியும், அத்துடன் 30 அடிக்கு மேலே ஆழமுள்ள கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் சக்தியுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய ஒரு பம்பும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) விபத்துக்கள் அநேக இடங்களில் குறுகிய தெருக்களில் ஏற்படலாம்.. தற்போதுள்ள ஊர்திகள் குறுகிய தெருக்களில் செல்ல ஏதுவாக உள்ளது. இதிலுள்ள தண்ணீர்த் தொட்டியை இரு மடங்காகச் செய்தால் இந்த ஊர்திகளை குறுகிய தெருக்களில் எடுத்துச் செல்ல இயலாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, சமீபத்தில் குடியாத்தம் நகரில் தீ விபத்து ஏற்பட்டு, கிட்டத்தட்ட பல மணி நேரம் அது பரவி எரியும் வரையிலே, அந்தத் தீயணைப்பு இன்ஜின்கள் வந்தும் அணைக்க முடியாமல், அங்கே 30 அடிக்குக் கீழே கிணற்றிலிருந்து உறிஞ்சும்படியான சக்தி இல்லாத காரணத்தால், தீ பற்றியதை அணைக்க முடியாமல் காலதாமதம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 30 அடி ஆழமுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியவில்லை என்பது உண்மைதான். இப்போது இருக்கின்ற அந்த பைப்புகளினுடைய சக்தி உறிஞ்சும் சக்தி குறைவாக இருந்தது என்ற காரணத்தால், 24 அடி ஆழத்திற்கு மேல் இயங்க இயலாத நிலைமையிலே, இந்த பம்புகள் இருந்தன. ஆகையால், நாம் மத்திய அரசின் மூலமாக பம்பாயில் இருக்கிற தனியார் நிறுவனங்களிலே தயாரிக்கப் படுகின்ற, 30 அடிக்கு மேலும் தண்ணீரை உறிஞ்சும் பம்புகள் நமக்குத் தேவை என்று எழுதிக் கேட்டிருக்கின்றோம். அவைகள் தயாரிக்கப்படுகின்றன. விரைவிலே நமக்குக் கிடைக்கும்.

### *Upgrading Higher Grade Posts into Secondary Grade Posts*

* 3. *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware that, in the matter of upgrading the Higher Grade posts into Secondary Grade posts in Aided Elementary Schools, a Secondary Grade Teacher, who is benefited by this order, is not able to carry the scale with him at the time of migration;

(*b*) whether the upgraded post falling vacant by reason of such migration is not considered as an upgraded post for purpose of future appointments and promotion; and



(*c*) if so, whether there is any proposal with the Government to rectify the same?

**தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றுதல்.**

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளில் தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றும் நேர்வில், இந்த ஆணையினால் பயன்பெறும் உயர்நிலை ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றப்படும் நேர்வில், அதே சம்பள விகிதத்தைப் பெற இயலவில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) அவ்வாறு மாற்றப்படும் நேர்வில் காலியாக ஏற்படும் தரம் உயர்த்தப்பட்ட பதவி இனி செய்யப்படும் நியமனங்களுக்கும், பதவி உயர்வுக்கும் தரமுயர்த்தப்பட்ட பதவியாகக் கருதப்படுவதில்லையா?

(உ) ஆமெனில், இக்குறைபாட்டினைப் போக்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு ஏதும் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இடைநிலைப் பணியிடமான உயர்த்தப்பட்ட இளநிலைப் பணியிடத்தில் பணிபுரியும் ஆசிரியர் முன்னதாகவே இடைநிலைத் தகுதியுடையவரே. ஆதலால் அவர் மற்றோர் பள்ளியில் இடைநிலைப் பணியிடத்தில் பணியிலமர்ந்தால், இடைநிலை ஆசிரியருக்கான ஊதியம் பெற, மற்ற இடைநிலை ஆசிரியர்கள் போலவே சாதாரணமாக தகுதியுடையவராவார்.

(இ) இல்லை. ஏனெனில் அந்தப் பணியிடம் நிரந்தரமாக உயர்த்தப்பட்டதாகும்.

(உ) மேலே (இ)-ல் அளிக்கப்பட்ட விடை காரணமாக இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, என்னுடைய வினா உயர்த்தப்பட்ட பணியிடத்திலிருந்து வேறு ஒரு ஆரம்ப நிலைப் பள்ளிக்கு அவர் மாற்றப்பட்டால், அவருக்கு உயர்த்தப்பட்ட பதவி எடுத்துச் செல்லப்படாமலும், பள்ளிக்கும் கொடுக்கப்படாமலும் இருக்கிறது. இந்த நிலையை மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

தலைவரவர்களே, உயர்த்தப்பட்ட பணி இடங்கள் ஆசிரியருக்குச் சொந்தமா அல்லது பள்ளிக்குச் சொந்தமா என்று தெளிவான உத்தரவு இல்லை. அந்தக் காரணத்தினாலே உயர்த்தப்பட்ட பணியிடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்குச்

சென்றால், அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அதை மாற்றுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : Supplementary questions should be short and very clear.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, உயர்த்தப்பட்ட இடங்கள் அந்தந்தப் பள்ளிகளுக்குத்தான் சொந்தம். உயர்த்தப்பட்ட இடத்திலிருந்து செல்லும் ஆசிரியர் இன்னொரு இடத்திற்குப் போகும்போது, உயர்த்தப்பட்ட இடத்திற்குத்தான் அவர் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட இடம் இருந்தால்தான் போகவும் முடியும். காலியாக்கப்பட்ட உயர்த்தப்பட்ட இடம் காலியாகத்தான் இருக்கும். அந்த இடம் டவுன் கிரேடு ஆகாத நிலையில் தான் இருக்கும்.

*திரு. செ. முத்துசாமி :* தலைவரவர்களே, ஹையர் கிரேடு பணியிடத்தில் பணி புரிந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களை, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்தி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அதையே பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடமாக அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். ஆனால் அதே ஆசிரியர்கள் ராஜிநாமா செய்துவிட்டு தனியார் பள்ளிக்குச் செல்லும்போது அவர்களுக்கு ஹையர் கிரேடு இடத்தில்தான் நியமிப்பு செய்யப்படுகிறது. ஆதலால் அவர்கள் உயர்த்தப்பட்ட பதவியிலே செகண்டரி கிரேடில் ஒரு முறை உயர்வு பெற்றிருந்தால், அவர் அடுத்த பள்ளிக்குச் செல்லும்போது அல்லது செகண்டரி கிரேடு இடத்திலே நியமிக்கப்படும்போது அவருக்கு மீண்டும் செகண்டரி கிரேடு ஊதியம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இன்னொரு பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது, அந்தப் பள்ளிக்கூடத்தில் அதே செகண்டரி கிரேடு பதவியிடம் காலியாக இருக்க வேண்டும். அதே இடத்தில் போய் அவர்கள் சேர்ந்து கொள்வதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் அவர்கள் காலி செய்கிற இடம் டவுன் கிரேடு ஆகாது. அந்த இடம் செகண்டரி கிரேடாகத்தான் இருக்கும்.

*திரு. கே. எஸ். கணபதி :* தலைவரவர்களே, பணியிடங்கள் உயர்த்தப்படும் போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியார் பள்ளிக்கு, பஞ்சாயத்துப் பள்ளிக்கு என்று தகுதியான இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளைப் பூர்த்தி செய்யாமல், ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால், அவைகளை ' 'Surrender' செய்து விடுகிறார்கள். மாற்ற முடியவில்லை. எனவே இந்த மாற்றும் அதிகாரத்தை D.E.O க்களுக்கு வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, அதுபற்றித் தகவல்கள் இல்லை. அதுபற்றி ஆராய்ந்து எப்படிப்பட்ட முறைகள் மேற்கொண்டால் அதைச் சீர்படுத்த முடியும் என்று காணலாம்.

## *First Grade Tamil Pandits*

* 4. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether First Grade Tamil Pandits have been appointed as Headmasters in Secondary Schools; and

(*b*) if not, whether there is any proposal with the Government to appoint them?

## *முதல்நிலைத் தமிழாசிரியர்கள்.*

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடுநிலைப் பள்ளிகளில் முதல்நிலைத் தமிழாசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் பெற்றுள்ளனரா?

(இ) இல்லையெனில், நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* (அ) ஆம். முதனிலைத் தமிழாசிரியர்கள் நடுவர் நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*திரு. வி. வெங்கா :* தலைவரவர்களே, தமிழாசிரியர்களை நியமிக்க சில பள்ளிகளிலே தகுதியிருந்தும், போஸ்டுகள் சாங்ஷன் இல்லை என்ற காரணத்திற்காக, அங்கு அந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றார்கள் என்பதை இந்த அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, புதிதாக மாணவர்கள் வருகைக்கு ஏற்ப அனுமதியளிக்கப்படும். பணியிடங்களின் எண்ணிக்கை வரம்புக்கு உட்பட்டு இருப்பதால், அதிக எண்ணிக்கையில் தமிழாசிரியர்களை நியமிக்க வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. அவர்களுக்கு அளிக்கப்படும் இடைநிலைப்பள்ளி இடங்களில் எதிலாவது தமிழாசிரியர்களை நியமனம் செய்ய விருப்பம் தெரிவித்தால், அந்த நியமனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட பள்ளிகளில் இருப்பவர்களிலே 7 பேர்கள் தலைமையாசிரியர்களாக இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, உயர் தொடக்கப் பள்ளிகளிலே, வகுப்புகளுடைய எண்ணிக்கை மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் இல்லாமல், 6வது, 7வது வகுப்புகளில் சொல்லித் தருவதற்கு என்று தமிழாசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா? அதே போல தனி வகுப்புகள் இருந்தாலும், தமிழாசிரியர்கள் தனியாக நியமிப்பது போல நடுநிலைப் பள்ளிகளிலே அதே கொள்கை அமுலாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கொள்கை மெல்ல மெல்ல நிறைவேற்றப்பட்டு வருகிறது என்றாலும்கூட, நிதி நிலைமை காரணமாக எல்லா இடங்களிலும் நிறைவேற்றுவதற்கு இப்போது வாய்ப்பில்லை.

## *Percentage of Passes in Government Colleges*

* 5. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that there are less than 25 per cent of passes in University examinations in some of the Government Colleges;

(b) if so, the names of those Colleges wherein there were less than 25 per cent of passes in P.U.C. and Degree Classes during the year 1972–73; and

(c) the action proposed to be taken thereon?

### அரசினர் கல்லூரிகளில் தேர்ச்சி சதவீதம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் கல்லூரிகள் சிலவற்றில், பல்கலைக் கழகத் தேர்வுகளில் 25 சதவீதத்திற்கும் குறைவாக மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், 1972-73-ல் புகுமுக வகுப்பிலும், பட்ட வகுப்புகளிலும், 25 சதவீதத்திற்கும் குறைவாக மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ள கல்லூரிகள் எவை?

(உ) அதையொட்டி, மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவை முன் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 128–130 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(உ) 1972 ஆம் வருடத்தில் புகுமுக வகுப்பில் எத்தனை சதவீத மாணவர்கள் தேர்ச்சியடைந்துள்ளார்கள் என்று அரசாங்கம் ஆய்வு செய்தது. அப்பொழுது குறைந்த தேர்வு முடிவுகள் கண்ட கல்லூரிகளின் முதல்வர்களிடமிருந்தும் அந்தந்தப் பாடங்களை நடத்திய ஆசிரியர்களிடமிருந்தும் விளக்கங்கள் கேட்டு அவர்கள்மேல் தக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசு கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கியது. அதன்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் இதன்மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

(பிற்பகல் 4-10)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்போது எத்தனை அரசாங்கக் கல்லூரிகள் இருக்கின்றன? இந்த அரசாங்கக் கல்லூரிகளைப் பார்க்கிறபோது, கிட்டத்தட்ட 27 கல்லூரிகளில் 25 சதவீதத்துக்கும் கீழாக தேர்வு பெற்றதாகத் தெரிய வருகிறது. அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன். இரண்டாவது, சில கல்லூரிகளில் 6 சதவிகிதம், 7 சதவிகிதம் கூட அவர்கள் தேர்ச்சி பெறக்கூடிய நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா? மாணவர்கள் எல்லாம் ஸ்ட்ரைக் செய்வது தான் காரணமா, அல்லது ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சரியாகப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கவில்லையா, அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 25 சதவீதத்துக்குக் குறைவாக தேர்வு பெற்ற அரசினர் கல்லூரிகள் 51. அதிலே 2 புகுமுக வகுப்புக் கல்லூரிகள். இரண்டு புகுமுக வகுப்புக் கல்லூரிகள் போக, 49 கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே தேர்வு பெற்றிருக்கிறார்கள். பட்ட வகுப்பில் 10 கல்லூரிகளில் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே தேர்வு பெற்றதாகத் தெரிகிறது. இதை விரைந்து தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். கல்லூரிக் கல்வி இயக்குநர் அந்தந்தக் கல்லூரி முதல்வர்களுடன் தொடர்பு கொண்டு தக்க அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். பிறகு அந்தந்தக் கல்லூரியினுடைய முதல்வர்கள் அந்தந்தப் பாடங்களை போதிக்கும் பேராசிரியர்களை விளக்கங்கள் கேட்கும்போது, அதற்குக் காரணம் ஒருவரே ஒரு ஆண்டில் தொடர்ந்து அந்தக் கல்லூரியில் இருப்பதில்லை என்று தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தனை காரணங்களும் உண்டு. ஆகவே அந்தக் குறைகளைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்

எங்கெங்கு தேர்வு மிகவும் குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் 'எக்ஸ்ட்ரா கிளாஸ்' முறைகளைக் கையாள வேண்டுமென்றும் கல்லூரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, அதிக சதவிகிதம் தேர்வு பெற்ற கல்லூரியினுடைய சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏதேனும் போனஸ் அல்லது பரிசு கொடுப்பதன் மூலம் ஆசிரியர்கள் உழைத்து பிள்ளைகள் நல்ல முறையில் தேர்வு பெறுவதற்கு ஆசிரியர்களை ஊக்கப்படுத்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களையும் சரியான முறையிலே கொண்டுவர வேண்டும் என்பதே நம்முடைய விருப்பம். ஊக்க போனஸ் என்பது நடைமுறைக்கு வருமேயானால், அனைவரும் நூற்றுக்கு நூறு எதிர்பார்ப்பார்கள். உதாரணமாக, கணக்குப் பாடத்தில் நூற்றுக்கு 120 வாங்க முடியும். மற்றைய பாடங்களில் வாங்குவதற்கில்லை. ஆனால் எந்தக் கல்லூரியினுடைய தேர்வும் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது தான் நம்முடைய எண்ணம். அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களுடைய நிலைமைக்கும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுடைய நிலைமைக்கும் வேறுபாடு உள்ளது. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஒரே இடத்தில் 30 ஆண்டுகள் அல்லது 35 ஆண்டுகள் இருக்கிறார்கள். அரசினர் கல்லூரிகளில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தொடர்ந்து இருக்கிறார்கள். சிலபல நேரங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலும் இருக்கிறார்கள். சிலர் வேலைக்குப் போய்ச் சேர்ந்தார்களா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க இரண்டு மூன்று வாரங்கள் ஆகின்றன. அவ்வாறு சிலர் வராமல் விடுப்பு எடுத்து, அவருக்கு பதில் வேறு ஒருவரைப் போட்டு நான்கு ஐந்து பேரை மாற்றுவதற்குள் மூன்று நான்கு மாதங்கள் ஓடிவிடுகின்றன. சில சமயங்களிலே துறைப் பாடங்கள் சரிவர நடைபெறாமல் போய் விடுகின்றன. கட்டாயம் ஒரு வாரத்திற்குள் போய்ச் சேர வேண்டும், இல்லாவிட்டால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்ல வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் நீக்கப்பட வேண்டும், நீக்கப்படுமென்ற முறையில் தான் எதிர்காலத்தில் இந்தக் குறைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி சமீப காலம் வரை மாநிலத்துக்கு மட்டுமல்லாமல் தேசத்துக்கு ஒரு வழி காட்டியாகத் திகழ்ந்து வந்த கல்லூரி. அம்மாதிரி ஒருசில கல்லூரிகளைப்



பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுத்து அந்த குறிப்பிட்ட கல்லூரிகளிலாவது தேர்வு சதவிகிதத்தை அதிகப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது போல், பல கருத்துக்களை உள்ளடக்கிய சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியை ஒரு போஸ்ட் கிராஜுவேட் கல்லூரியாக ஆக்க வேண்டுமென்ற கருத்தும் இருக்கிறது. மொத்தமுள்ள 183 அரசாங்கக் கல்லூரிகளிலே ஏதேனும் ஒரு கல்லூரியையாவது போஸ்ட் கிராஜுவேட் கல்லூரியாக, எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிக்கக்கூடிய ஒரு கல்லூரியாக ஆக்க வேண்டுமென்றால், அதற்கான முழுத் தகுதியையும் மாநிலக் கல்லூரி பெற்றிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், பல்கலைக் கழகத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். தமிழ் நாட்டிலுள்ள மற்ற எல்லாக் கல்லூரிகளையும்விட மாநிலக் கல்லூரி ஒன்றில் தான் அதிகமான பேர் எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிக்கிற காரணத்தினால், வெளி கல்லூரிகள், மற்ற இடங்களில் எல்லாம் இருக்கும் அனைத்து டாக்டரேட் பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் மாநிலக் கல்லூரிக்குக் கொண்டு வந்து டாக்டரேட்டுக்கு போதிப்பதற்கான முயற்சியிலே இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாணவர்கள் வேலை நிறுத்தம் தொடர்ந்து ஆண்டுக்காண்டு நடந்துகொண்டேயிருக்கிறது. அதுவும் நவம்பர், டிசம்பர் மாதங்கள் வந்தால், தொடர்ந்து வேலை நிறுத்தங்கள் நடந்து வருகின்றன. மாணவர்களுடைய வேலை நிறுத்தம் காரணமாக, தேர்வு சதவிகிதம் அதிகமாகக் குறையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடிப்பதால், அவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறது. கல்லூரியை மூடுவது மட்டும் இதற்குச் சரியான காரணமாகாது என்ற காரணத்தால், இதற்குத் தீர்வு காண அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி ஒரு வரியில் பதில் சொல்கிற மாதிரி இல்லை. ஒரே சட்டத்தில் நிறைவேற்றி விடவும் முடியாது. ஒவ்வொரு கல்லூரியிலும் தகராறு வருவதற்கு ஒவ்வொரு காரணம் இருக்கிறது. இதற்கு மாணவர்களுடைய பெற்றோர்கள், ஆசிரியப் பெரு மக்கள், கல்லூரி முதல்வர்கள் ஆகியோருடைய ஒருமித்த ஒத்துழைப்பின் அடிப்படையிலே தான் தீர்வு காண முடியும். பெரும்பாலான மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற நல்ல ஆர்வத்தில் தான் இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து வைத்திருக்கிறேன். ஸ்ட்ரைக்

நடத்துவதுபற்றி மாணவர்களை தனியாக அழைத்துப் பேசும்போது, அவர்கள் தங்கக் கம்பிகளாக இருக்கிறார்கள். கூட்டம் சேர்ந்த உடனேயே அவர்களுக்கு அசாத்திய தைரியம் வந்துவிடுகிறது. அந்த அசாத்தியமான தைரியம் எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டிலுள்ள 183 கல்லூரிகளில் 34 கல்லூரிகளில் தான் இப்படித் தகராறுகள் வருகின்றன. சென்னை நந்தனம் அரசினர் கல்லூரியை 4, 5 நாட்கள் திறந்து திரும்பவும் மூடியிருக்கிறார்கள். திரும்பவும் திங்கட்கிழமை திறக்கப்படவிருக்கிறது. அதற்குப் பிறகு தான் பார்க்க வேண்டும். மாணவர்கள் பிரச்சினையை நல்ல முறையில் தீர்ப்பதற்கு கல்லூரி முதல்வர்களும், பேராசிரியர்களும், ஆங்காங்குள்ள பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த மாணவர்கள் பிரச்சினை அகில இந்திய அளவில் மட்டுமல்லாமல், அகில உலகத்துக்கு ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அண்மையில் மேலை நாடுகளில், மலேசிய நாட்டில் கோலாலம்பூரிலும், பர்மாவிலும் மாணவர்கள் பிரச்சினையில் கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டுவிட்டதாகவும் பயங்கரமான கலவரங்கள் ஏற்பட்டு விட்டதாகவும் நாம் பார்த்தோம். ஆகவே எல்லோருடைய ஒருமித்த ஒத்துழைப்பின் அடிப்படையிலே தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, there is a feeling that the poor percentage of passes in Government Colleges and also in other Colleges in the Pre-University Class is due to the fact that the Pre-University Course is of one year duration. Many educational authorities have suggested that we might go back to the old system of Intermediate and in fact, the Hon. Minister has also mentioned that that is under the consideration of the Government. May I know, Sir, how long it will remain under the consideration of the Government and whether we can expect any decision which may effect some improvement in academic standards?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்து பற்றிய விளக்கங்களையெல்லாம் அவர்களே தனித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து சொல்லியிருக்கின்றார்கள். மேலும் இதுபற்றிய விளக்கங்களையெல்லாம் இதுபற்றிய தீர்மானத்தை வரும் 17-ம் தேதியன்று எடுத்துக் கொள்ளும்போது விரிவாக எடுத்துப் பேசலாம். அந்த நேரத்தில் அதுபற்றிய விளக்கங்கள் தரப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர்வர்களே, அரசினர் கல்லூரிகளிலேயெல்லாம் ஜூன் அல்லது ஜூலை மாதத்திலே கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்றால், அடுத்துவரும் டிசம்பர் அல்லது ஜனவரித் திங்களிலே தான் ஆசிரியர்களை



நியமிக்கின்றார்கள். நிர்வாகத்திலுள்ள கோளாறு காரணமாக இப்படிப்பட்ட காலத் தாழ்வுகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. இதை கல்வி அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டும் இருக்கின்றார்கள். எதிர்காலத்திலாவது இந்தக் குறைபாடுகளைக் களையும் வகையில் கல்லூரிகள் திறக்கப்படும்போதே வேண்டிய பேராசிரியர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கருத்தைத்தான் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்போது கல்லூரிகளில் நியமிப்பதற்கான பேராசிரியர்கள் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. அரசுக் கல்லூரிகளிலே இவ்வளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றது என்று அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, பிறகு அவர்கள் நடவடிக்கை எடுத்து, ஒரு ஆண்டு அல்லது ஒன்றரை ஆண்டு காலத்தில் நியமிக்கும் நிலைமை இருக்கின்றது. இடையிலே 10-ஏ (1) விதியின்படி பேராசிரியர்களை நியமிக்கிறோம். இப்போது முன்கூட்டியே எவ்வளவு காலி ஸ்தானங்கள் ஏற்படும் என்று கணக்கிட்டு, அதற்கேற்ப பேராசிரியர்களை சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறையை சர்வீஸ் கமிஷன் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் காரியங்களைத் தீவிரப்படுத்த அரசு முயலும்.

THIRU G. VASANTHA PAI : Sir, now that 27 years have passed after the attainment of Independence, will the Government do away with the reservations for admission to these colleges and admit students purely on merit? Then this problem may be solved.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு சமுதாயப் பிரச்சினையாக இருக்கின்றது. ஆகவேதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும் இவ்வளவு சதவிகிதம் என்று ஒதுக்கி மீதமுள்ளதை மற்றவர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் என்றுதான் கொடுக்கிறோம். பின் தங்கியவர்களுக்கு என்று சொல்லும்போது, அவர்களுக்கு இந்திந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும், மார்க்கும் போட வேண்டும் என்ற முறையில்தான் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக அரசுக் கல்லூரிகளிலே செயல்பட்டு வருகிறோம். அந்த வகையில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, in the Government Arts College, Cuddalore, the percentage of passes is 17 and in Vridhachalam and Tindivanam, it is even lower. The Hon. Minister mentioned that one of the reasons for this poor result is the frequency of transfers of the academic staff. Sir, as far as the

Government Arts College is concerned, from 1963 to 1974, over a period of 11 years, we have had 10 Principals who have been transferred by the Education Minister himself or by his Ministry. May I know Sir, why under these circumstances, the Government keep on transferring these gentlemen instead of allowing them to continue there at least till they complete three years? What are the difficulties that the Education Minister faces?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தவரையில், மூன்றாண்டு காலமில்லை, ஏழு, எட்டு அல்லது பத்தாண்டு காலம்கூட ஒருவர் முதல்வராக இருப்பதில் ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் இதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த நிலையில் ஒரு சிலரை மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மாணவர்களே சில நேரங்களில் அவர்களை மாற்ற வேண்டுமென்று கோருகின்றார்கள். சில நேரங்களில் ஒருவரை முதல் கிரேடு கல்லூரிக்கு மாற்ற வேண்டிய நிலையில் அவரை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வேலூரிலே, கும்பகோணத்திலே—இதுபோன்ற இடங்களிலே அதே தகராறுதான். கூடுமான வரையில் கல்லூரி ஆசிரியர்களை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை என்றே சொல்லலாம். காரணம் தனியார் கல்லூரிகளிலே 30 ஆண்டுக்காலம் 40 ஆண்டுக்காலம் பேராசிரியர்கள் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார்கள். பேராசிரியர் ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு நீண்ட காலம் ஒரு கல்லூரியில் இருந்து பணியாற்றுகின்றாரோ, அந்த அளவிற்கு மாணவர்களுடைய நம்பிக்கையையும் அன்பையும் பெறுகின்றார். ஆனால் அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த மட்டில் அப்படிப்பட்ட முறைகளை சில நேரம் கடைப்பிடிக்க முடியாத நிலைமைகள், சந்தர்ப்பங்கள் வந்துவிடுகின்றன. ஆனால் கூடுமானவரையில் கல்வி ஆண்டின் இடைக்காலத்தில் ஒருவரை மாற்றக் கூடாது என்று உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, மாற்றங்களைக் கூடுமான வரையில் கோடை விடுமுறைக் காலத்தில் செய்தால், இத்தகைய நெருக்கடி ஏற்படாது. எனவே அந்த முறையில் மாற்றங்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று அரசு உத்தரவினைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொதுவாக 'ஜெனரல் ட்ரான்ஸ்ஃபர்' என்பது அப்படிப்பட்ட விடுமுறைக் காலத்தில்தான் பண்ண வேண்டும், இடைக்காலத்திலே செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சங்கடம் ஏற்படுகின்றது. ஒருவரே இறுதிவரையில் சொல்லிக்கொடுத்தால்தான் சரியாக இருக்கும். இடையிலே ஆசிரியர்களை மாற்றிவிடுவதால், மாணவர்களும் சிரமப்படுகிறார்கள், ஆசிரியர்களுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. அது மட்டுமில்லை, ஆசிரியர்களுடைய குழந்தைகளின் படிப்பிற்கும் சங்கடம் ஏற்படுகின்றது. எனவே கூடுமான வரையில் ஆண்டு இறுதியில்தான் மாற்றம் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லலாம், முன்பு 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்று இருந்தது. இப்போது 'எழுத்தறிவித்தவன் எதிரியாவான்' என்று இருக்கின்றது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, யாருக்கு எதிரி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாணவர்களுக்கு.

*Liberalised pension.*

*6. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether liberalised pension has been granted at 3/12 to the teachers of Government Schools who have retired before 1st June 1970 ; and

(b) if so, whether the Government would come forward to sanction liberalised pension at 3/12 to the teachers of local bodies and aided schools also who have retired before 1st June 1970 ?

**தளர்த்திய ஓய்வூதியம்**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—6—1970-க்கு முன் ஓய்வு பெற்ற அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு 3/12 என்ற விகிதத்தில் தளர்த்திய ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், 1-6-1970-க்கு முன் ஓய்வு பெற்ற உள்ளாட்சி மன்ற மற்றும் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் 3/12 விகிதத்தில் தளர்த்திய ஓய்வூதியத்தை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1-6-1970-க்கு முன்பு (அதாவது 1-7-1960 முதல் 31-5-1970 வரை) ஓய்வு பெற்ற அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு 30/80 என்ற விகிதத்தில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 1—6—1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற உள்ளாட்சி (Panchayat Union) மற்றும் நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கட்கு, ஆசிரியர் ஓய்வூதிய விதிகளின்படி 30/120 என்ற விகிதத்தில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 14

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதிலே தனியார் பள்ளி ஆசிரியர்கள், பஞ்சாயத்து ஆசிரியர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கும் இந்த 30ன் கீழ் 80 என்ற அடிப்படையில் ஓய்வூதியம் அளிப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முப்பணம் திட்டத்தின் கீழ் 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஓய்வூதியம், வைப்பு நிதி, ஆயுள் காப்பு போன்ற சலுகைகளைப் பெற்றிருந்தார்கள். பின்னர் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு அதிகமான தொகை தரப்பட்டிருக்கிறது. தவிர அவர்கள் ஓய்வூதியத்திற்கான பணிக்காலத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் முப்பது ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால், அவர்களுக்கு முழுத் தொகை 30-ன் கீழ் 80 என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுத் தரப்படுகிறது. அவர்களுடைய பணிக்காலம் முப்பது ஆண்டுக் காலத்திற்குக் குறைவாக இருந்தால், அவர்கள் பணியாற்றிய காலத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அதற்கு ஏற்றவாறு ஓய்வூதியம் கணக்கிட்டுத் தரப்படுகிறது.

THIRU D. SANTOSHAM: Hon. Chairman, Sir, the additional expenditure involved in implementing this Liberalised Pension Scheme in the case of Aided School teachers also is not likely to be much. The teachers involved are so old and are in a state of utter misery. At least on compassionate grounds, will the Government consider extending the Liberalised Pension Scheme to the aided school teachers also who are old and suffering?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் அவர்கள் முப்பது ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால் அவர்களுக்கும் 30ன் கீழ் 80 என்ற அடிப்படையில் தரப்படுகிறது. அதற்குக் குறைவான காலம் அவர்கள் பணியாற்றியிருந்தால் அதற்கு ஏற்றபடி கொடுக்கப்படுகிறது. அந்த வகையில்தான் இது செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களைப்பற்றி திரு. சந்தோஷம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். 1-6-1970-க்கு முன்பு அவர்களுடைய ஓய்வூதியம் 1-ன் கீழ் நான்கு என்ற அளவில்தான் இருந்தது. அதற்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அளிக்கப்படும் சலுகைகள் 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கொடுக்கும்படி அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் சொல்வது 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்குத்தான். 1-6-1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கப்படுகின்றன. அதற்குப் பின் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு, தற்போது அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு அளிக்கப்படும் தாராள ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, 1—6—1970-க்கு முன் அரசுப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இந்த நிலைமை. ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த நிலைமை இல்லை. அவர்களுக்கு 1-ன்கீழ் 4 என்று தான் இருந்தது. அதிலும் பட்டதாரி ஆசிரியர்களாக இருந்தால் ரூ. 60-க்கு மேலே வாங்க முடியாது. தலைமை ஆசிரியர்களாக இருந்தால், ரூ. 75-க்கு மேலே வாங்க முடியாது. முதல்வராக இருந்தால், ரூ. 100-க்கு மேலே வாங்க முடியாது என்ற நிலைமை இருந்தது. இதை மறு பரிசீலனை செய்து அவர்கள் இறுதியாக ஓய்வு பெறும்போது பெற்ற ஊதியத்தில் 30-ன்கீழ் 80 என்ற அளவில் கொடுக்கப்படுமா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இரண்டாவது தமிழக ஊதிய நிர்ணயக் குழு, அதன் பல பரிந்துரைகளில் ஒன்றாக அப்போது இருந்து வந்த ஓய்வூதியம், மற்றும் வைப்பு நிதி, ஆயுள்காப்பு இவற்றின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகள் குறைவாக இருக்கின்றன என்று கருதி, தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் இப்போது 1—6—1970-க்குப் பின் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு, தற்போது அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படுகிறது. 1—6—1970-க்குப் பிறகு இந்த நிலைமை. ஆனால் அதற்கு முன்பு இருந்த நிலை 30 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால், அவர்களுக்கு முழுச் சலுகையாக 30-ன் கீழ் 80 என்ற ரீதியில் ஓய்வூதியம் தரப்படுகிறது. அவர்கள் 30 ஆண்டுக் காலத்திற்குக் குறைவாகப் பணியாற்றி ஓய்வு பெறுகின்றவர்களாக இருந்தால், அந்தப் பணிக் காலத்திற்கு ஏற்றவாறு ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அவர்கள் கேட்பது 1—6—1970-க்கு முன்பு தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்களுக்கும் இதைப் போல ஓய்வூதியம் தரக்கூடாதா? அவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில்தான் இருக்கின்றது. அவர்கள் அநேகமாக ரூ. 35 அல்லது ரூ. 40 என்றுதான் வாங்குகின்றார்கள். அவர்களுக்கும் இப்போதுள்ள இந்தத் திட்டத்தின்படி ஓய்வூதியம் நிர்ணயிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 14

## போலி மருந்து உண்டதால் இறந்தவர்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் கழிந்த மூன்றாண்டுகளில் போலி மருந்து உண்டதால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இதனைத் தடுப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தமிழ் நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் போலி மருந்து (Spurious drugs) உண்டதால் எவரும் இறக்கவில்லை.

1940-ம் ஆண்டு மருந்துகள் ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதன் மூலம், இங்கு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் மருந்துகளின் தரத்தை அரசு விழிப்புடன் முறையாகக் கண்காணித்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் டிரக்ஸ் அண்ட் காஸ்மெடிக்ஸ் ஆக்டை இன்னும் நல்ல முறையில் இயற்றுவதற்கு புதிய திட்டங்கள் ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்க மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகளில் ஏதேனும் சில குறைபாடுகள் இருந்தாலும், அவற்றை உடனே ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பும் முறை இருக்கிறது. இதற்காக 69 ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வட்டார வாரியாக மருந்து விற்பனை நிலையங்களிலுள்ள மருந்துகளை சோதனைக்கு அனுப்புகிறார்கள். மருந்துகள் உற்பத்தியாகும் நிலையங்களிலிருந்துகூட மருந்துகள் சோதனைக்கு அனுப்பப்படுகின்றன. ஒன்றிரண்டு சமயங்களில் தவறுதலாகத் தீய பொருள்களின் கலப்பு அறியாமல் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட கன்டாமினேட்டட் டிரக்ஸ் ஒன்றிரண்டு முறை கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்கு போடப்பட்டு, அவர்கள் உரிமம் பறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் தவற்றுக்கான காரண விளக்கங்கள் கிடைத்து, நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னால் வேண்டுமானால் அவர்களுக்குத் திரும்பவும் உரிமம் வழங்குவார்கள். ஆகவே, ஸ்பூரியஸ் டிரக்ஸ் என்று குறிப்பிடப்பட்டது. வேண்டுமென்றே போலி லேபில்கள் ஒட்டி, போலி மருந்துகளை விற்பனை செய்வது தவறான தொழில். பெரும்பாலும் தமிழகத்தில் இல்லை.



1974 டிசம்பர் 14]

THIRU D. SANTOSHAM : Hon. Chairman, Sir, after the re-introduction of prohibition, there is a large increase in the sale of Arishtams in the so-called Pharmacies. Do these also come under Drug Control and are samples being taken and if so, are they all found up to standard?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, அரிஷ்டத்திலே, 'பெர்சன்ட்டேஜ் ஆப் லிக்கர் கன்டென்ட்' அல்லது மயக்கம் தருகின்ற பொருள்களினுடைய சேர்க்கை இவ்வளவு இருக்கலாமென்று ஆயுர்வேத மருந்து முறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த பெர்சென்டேஜ்-க்கு மேலே கூடுதலாக இருக்குமானால் நடவடிக்கை எடுக்க முடியும். அதே பர்சன்டேஜிலே அவர்கள் தயாரித்துவிட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது கடினம். ஆனால், இவை பெரும்பாலும் தமிழ் நாட்டின் எல்லையோரப் பகுதிகளிலும், வேறு இடங்களிலும் அதிகமாக உற்பத்தியாகிறதென்று தெரிவிக்கிறார்கள். அவற்றுக்கு விற்பனை வரியைச் சற்று அதிகமாக்கியிருக்கிறோம். அந்த விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அவசியமில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மருந்துக்கு நூற்றுக்கு 10 மடங்குதான் பயன்படுகிறது. மிச்சம் 90 மடங்கு வேறு நோக்கத்திற்குப் பயன்படுகிறது என்று அறிவதால் விற்பனை வரியைக் குறைக்க அரசு மறுத்திருக்கிறது. எங்கோ வெளியே தயாரிக்கப்பட்டு, அவை இங்கே, தமிழ் நாட்டில் விற்கப்படுகின்றன. ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு வருவதைத் தடுக்க முடியுமா என்பதை, அரசு நிலையிலேயிருந்து பார்க்கும்போது, அது இயல்வதாகத் தெரியவில்லை.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, மருந்திலே போலி மருந்து இருக்கிறதென்று சொன்னதுபோல், போலியாகச் சர்க்கரை தயாரித்திருப்பது சுகாதார அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? சேலத்திலே அதுமாதிரி சர்க்கரையை விற்பனை செய்து கொண்டிருந்தபோது, அதைக் கைப்பற்றி போலீசாரிடம் ஒப்படைத்த தகவல் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அதைத் தலைவரவர்களுக்கும் நான் காட்டுகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member should not exhibit such things in the House. If the hon. Member wanted, he could have handed it over to me in the chamber and I would have passed it on to the concerned person.

THIRU A. BALASUBRAMANIAM : Thank you, Sir.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படி ஒரு விவரம் அரசுக்கு வரவில்லை. அதுவும் என்னுடைய துறைக்கு வர வேண்டிய அவசியமில்லை. இது குறித்து போலீசாருக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் ஒருவேளை அதை கெமிகல் எக்சாமினேஷனுக்கு அனுப்பி இருப்பார்களானால், அது பரிசீலிக்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டிருக்கும். ஆனால் என்னிடத்திலே வர வாய்ப்பில்லை. அப்படி சர்க்கரையிலும் கலப்படம் இருந்தால், அதையும் கவனிக்குமாறு அந்தத் துறையினருக்குத் தெரிவிக்கலாம்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, சர்க்கரையில் கலப்படம் இல்லை. சர்க்கரை என்ற பெயரிலே வேறு ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) The way of manufacturing is separate.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இனிப்பாக இருக்கிறதா ?

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** பார்ப்பதற்கு சர்க்கரை மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு. திரு. க. அன்பழகன் :** உணவுப் பொருள்கள் கலப்படச் சட்டத்தின்கீழ் அல்லது உணவுப் பொருள்களைப் போலியாகத் தயாரிப்பது குற்றமென்று கருதுகிற அந்தச் சட்டத்தின்கீழ் அதற்கான நடவடிக்கையை அந்தத் துறையினர் எடுப்பார்களென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Construction of Culverts and Road Repairs in Tiruchirappalli District*

* 9. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government requesting to construct culverts across Kizhavattankurichi, Aranmanaikurichi roads, Ariyalur Taluk, Tiruchirappalli District; and

(*b*) if so, the action taken thereon ?

### திருச்சி மாவட்டத்தில் சிறு பாலங்கள் கட்டுதலும், சாலையைப் பழுது பார்த்தலும்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:



(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், கீழவட்டாங்குறிச்சி, அரண்மனைக்குறிச்சி சாலைகளின் குறுக்கே பாலங்கள் கட்டித் தருமாறு தமிழ்நாடு அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இச்சாலையில் கி.மீ. 10/6-ல் கீழவட்டாங்குறிச்சிக்கு அருகில் குழாய்கள் பொருந்திய தாம்போகி ஒன்று ரூ. 20,000 செலவில் அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. அரண்மனைக்குறிச்சிக்கு அருகில் உள்ள தரைப்பாலத்திற்குப் பதிலாக ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு தலைவரவர்களே, அந்தப் பாலம் மிகவும் ஆழமாக இருப்பதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த ஓராண்டில் 7, 8 வண்டி மாடுகளும், ஆட்களும் செத்திருக்கிறார்கள். மேலும் தண்ணீர் தேங்குவதால், அங்குள்ள குடியிருப்புகளுக்கும் மிகவும் ஆபத்தாக இருக்கிறது. எனவே அந்தப் பாலம் அமைப்பதுபற்றி அரசு மீண்டும் ஆராயுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்த உயர் மட்டப் பாலம் அமைக்க 8 லட்சம் ரூபாய் தேவைப்படுமென்று மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. தற்போது பாலம் அமைக்கின்ற பட்டியலில் அது சேர்க்கப்படவில்லை. ஆதலால் அது அமைப்பது பற்றி இப்போது யோசனையில் இல்லை. அரசாங்கத்தின் நிதி நிலைமை சரியான பிறகு, அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

* 10. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government requesting to undertake repairs to the Thirumazhappadi-Kilapazhuvur road, Ariyalur Taluk, Tiruchirappalli District ; and

(*b*) if so, the action taken thereon?

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் உள்ள திருமழப்பாடி, கீழப்பழூர் சாலையைப் பழுது பார்த்துத் தருமாறு அரசிற்குக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) இச்சாலையில் கி.மீ. 2/6 முதல் 4/6 வரையுள்ள பகுதியை தார்ச் சாலையாக மாற்றியமைக்க நெடுஞ்சாலைத்துறையால் நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது. இச்சாலையில் கி.மீ. 4/8-ல் குழாய் பொருத்திய தாம்போதி அமைக்கப்பட்டுள்ளது.

## Silk-worms.

*11. Q.—Thiru L. BALARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the areas suitable for growing Mulberry Trees needed for rearing silk-worms and producing silk in Tamil Nadu;

(b) the action taken by the Government for further development and to open new production units; and

(c) the places, the extent in acres and the quantum of silk that the Government propose to produce in North Arcot District?

## பட்டுப் பூச்சிகள்

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கான முசுக்கட்டை செடியையும், பட்டையும் உற்பத்தி செய்வதற்கு எந்தெந்தப் பகுதிகள் தகுதி வாய்ந்ததாக உள்ளன?

(இ) மேலும் அபிவிருத்தி செய்யவும், புதியதாக உற்பத்தி செய்யவும் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) வட ஆற்காடு மாவட்டத்தில், எப்பகுதியில் எவ்வளவு ஏக்கரில், எவ்வளவு பட்டு உற்பத்தி செய்யலாம் என ஆராய்ந்து அரசு உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) தமிழ் நாட்டில் முசுக்கட்டை செடிகள் பயிர்செய்து பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள்வதற்கு தர்மபுரி, கோயம்புத்தூர், வட ஆற்காடு, சேலம், மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் தகுதி வாய்ந்தவைகளாக உள்ளன.

(இ) முன்னோடி சாருபடித் திட்ட நிலையங்கள் (Pilot-*cum*-Extension Centres) தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை என்னும் இடத்திலும், சேலத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரத்திலும்,





மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு என்னும் இடத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் 13,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கட்டை மரங்கள் பயிரிடு வதற்கான விரைவுத் திட்டம் ஒன்றை அரசு மத்திய பட்டு வாரியத்தின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறது. தமிழ் நாட்டில் அதிக அளவில் முசுக் கொட்டை செடி வகைகளை பெருக்குவதற்கு நாற்று பண்ணைகள் துவக்கப் பட்டு உள்ளன.

(உ) வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 120 ஏக்கர் அளவில் நீர்ப்பாசன வசதியுடன் விவசாயிகளால் பட்டு கூட்டுகள் உற்பத்தி செய்யப் பட்டு வருகின்றன. ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆரணி, குடியாத்தம் முதலிய வட்டங்களில் சுமார் 2,000 ஏக்கர் அளவில் முசுக் கொட்டைச் செடிகளைப் பயிர்செய்து பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொண்டு சுமார் 30,000 கிலோ வரை கச்சாப்பட்டு உற்பத்தி செய்வதற்கு அரிய வாய்ப்புள்ளது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் விவசாயிகளின் ஊக்கத்தைப் பொறுத்துள்ளது.

(பிற்பகல் 4.40)

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் தேவைக் கேற்ப இந்த 30,000 கிலோ பட்டு உற்பத்தி போதுமானதாக இருக்கிறதா? மேலும் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மானியம் விவசாயிகளுக்குத் தரப் படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நம்முடைய தேவைக் கேற்ற அளவுக்கு தமிழ் நாட்டில் உற்பத்தியில்லை. பெங்களூர் கிளைமேட்டில் நன்றாக வருமென்று சொன்னதாக நினைவு. இப்பொழுது எல்லா மாவட்டங் களிலுமே அதை உற்பத்தி செய்வதிலே வெற்றி கண்டிருக்கிறோம். குறிப்பாக காஞ்சிபுரம் பட்டு என்ற ஒரு ரகத்தை காஞ்சீபுரத்தில் உற்பத்தி செய்ய முடியுமென்று நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள். அங்கே ஒரு கூட்டுறவு சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்க முடிவு செய்திருக் கிறோம். கும்பகோணத்திலும், ஆரணியிலும் இம்மாதிரி முயற்சி மேற் கொள்ளப்பட நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். மேலும், அரசாங்கம் 4 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் போட்டு, மத்திய பட்டு வளர்ச்சி வாரியத் திற்கு அதை அனுப்பியிருக்கிறோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருமானால், விரைவில் பயன் கிடைக்கும்.

**திரு. எல். பலராமன்:** ஒரு ஏக்கரில் பயிர் செய்தால், விவசாயிகளுக்கு சராசரி என்ன வருமானம் கிடைக்கும் என்று அரசாங்கம் கணக்கிட்டிருக் கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். மேலும், அப்படி போலீஸ்காரர்கள் செய்யாமலிருக்க அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, போலீஸ்காரர்கள் அல்ல. டிரைவர் தவருகச் செய்துவிட்டார். மேலும், போலீஸ்காரர்களே அவர் மேல் நடவடிக்கை எடுத்து, கைது செய்து வழக்கும் போட்டிருக்கிருர்கள். அந்த டிரைவர் கூட விஷம் அருந்தி இறந்து விட்டார்.

**திரு. வி. வெங்கா :** தலைவர் அவர்களே, 58 லட்சம் ரூபாய் செலவு செய்தும், பரவலாக எல்லை இருக்கிற காரணத்தால் கடத்தல் தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றி நிரந்தரமாக தடுப்புச் சுவர் எழுப்ப அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படித்தான் சைனுவில் 1400 மைல் நீளமுள்ள ஒரு சுவர் எழுப்பினுர்கள். அது தற்போது உலக ஏழு அதிசயங்களிலே ஒன்ருக இருக்கிறது. அது மாதிரி எழுப்ப வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற நமது மொத்த வருமானத்தைச் செலவு செய்தால் கூட, அப்படிப்பட்ட ஒரு தடுப்புச்சுவர் அமைக்க முடியாது. அது அவ்வளவு பெரிய நீண்ட பாதையாக இருக்கிற காரணத்தால், அது கஷ்டம்.

*Marketing Facilities for Mangoes and other Fruits.*

* 14 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether it is a fact that at present, there are no proper marketing facilities for good quality mangoes and other fruits grown at the foot of the Western Ghats from Rajapalayam to Watrap in Ramanathapuram District; and

(b) if so, whether there is any proposal to start a Co-operative Fruit Marketing Society or a Co-operative Fruit Canning Industry in that area?

**மாங்கனிகளுக்கும், பிற கனிகளுக்கும் முறையான விற்பனை வசதிகள்.**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், இராஜபாளையத்திலிருந்து வத்திராயிருப்பு வரை மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் விளையும் நல்ல தரமான மாங்கனிகளுக்கும், பிற கனிகளுக்கும் முறையான விற்பனை வசதிகள் தற்போது இல்லையா ?



(இ) ஆமெனில், அப்பகுதியில், பழ விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் அல்லது பழங்களை டப்பியில் அடைக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) இல்லை.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, last year there was a bumper yield of mangoes in this area in respect of Rajapalayam Chappattai, otherwise called Banganapalle. In spite of that, the cultivators could not benefit, because of the steep fall in prices. Will the Government consider starting a Fruit Processing Industry, so that these cultivators may be benefited, employment can be provided and much-needed foreign exchange can also be earned?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, அங்கு 1,500 ஏக்கர் பரப்பளவில்தான் மாம்பழம் விளைகிறது. அதிலே ஒரு ஏக்கருக்கு 10,000 மாம்பழம்தான் கிடைக்கிறது என்று புள்ளிவிவரம் தந்திருக்கிருர்கள். மேலும், அவ்வளவு பழமும் அந்தப் பகுதியிலேயே செலவழிந்து போகிற நிலைமையும் இருக்கிறது. மே மாதம் 15 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி வரை தான் விளைகிறது. அந்த 1500 ஏக்கரில் விளைகின்ற பழத்துக்கென்று ஒரு ஆலையைத் துவக்கினுல், அந்த ஆலைக்குப் போதிய அளவுக்குப் பழம் கிடைக்காது. மூன்று மாதங்களுக்குக் கூட பழம் கிடைக்காது. வேலூரில் தற்போது ஒரு ஆலை கூட்டுறவுத் துறையில் இருக்கிறது. இந்தப் பழங்களை எடுத்து வேலூரிலுள்ள அந்த ஆலைக்குப் பயன்படுத்தலாம் என்ற ஒரு யோசனையும் இருக்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** தலைவர் அவர்களே, அங்கு பலாப்பழமும், வாழைப் பழமும் அதிகமாக உற்பத்தியாகிறது. எனவே ஒரு 'இன்டஸ்ட்ரி' ஆரம்பித்தால், அந்தப் பழங்களையெல்லாம் அந்த ஆலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, தற்போது அங்கு 460 ஏக்கரில்தான் பலாப்பழம், எலுமிச்சம்பழம், கொய்யாப் பழம் ஆகிய மூன்று பழங்களும் விளைகின்றன. இந்த மூன்று பழங்களையும் ஒன்று சேர்த்து எதுவும் செய்ய முடியாது. தனித்தனியாக அவைகளுக்கு இயந்திர ஆலையை அமைப்பது மிகவும் கஷ்டம். அப்படி ஆரம்பித்தாலும்கூட அதில் வருமானம் வருமா என்று பார்த்தால், கஷ்டமாக இருக்கிறது. வேலூரில் ஆலை அமைத்ததில்கூட, வெளிநாட்டுக்கு அனுப்பிய பிறகுதான் தமக்கு நஷ்டம் வராமல் இருக்கிறது. ஆகவே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற நிலைமை ஏற்படுமானுல். அதைப்பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த மூன்று பழங்களையும் சேர்த்து பஞ்சாமிர்தம்தான் செய்யலாம்.

## Properties belonging to Religious Institutions.

*15. Q.—Thiru A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether there is any proposal with the Government to exempt the properties belonging to Religious Institutions from the provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960); and

(b) if so, the stage at which the matter now stands?

## சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு, தமிழ்நாடு, 1960 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) (தமிழ்நாடு சட்டம் 18/1960) சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து விலக்களிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், இது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) ஆம். இந்து, கிறித்தவ, முகம்மதிய சமயப் பொறுப்புக் கழகங்களுக்கும், அறநிலையங்களுக்கும் சொந்தமான கட்டிடங்கள் அனைத்துக்கும், தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் அனைத்து விதித்துறைகளினின்றும் அரசு விதி விலக்கு அளித்துள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know, in view of the representations that have been made by the public regarding the enormous and exorbitant increase in rent charged by the religious institutions, whether the Government will consider the desirability of imposing a ceiling to the extent of increase that can be given to such rent?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அதிகமான வாடகை வசூலிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். அதிகமான வாடகை வசூலித்து அற நிலையங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் பல ஆண்டுக் காலமாக வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். ஏதோ சில இடங்களிலேதான் இவ்வாறு இருக்குமே தவிர, பரவலாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



THIRU A. R. DAMODARAN: Sir, may I draw the attention of the Hon. Minister to the fact that when the Select Committee considered the Lease and Rent Control Bill, a specific provision regarding the exemption of religious institutions was discussed and the Members of the Select Committee felt that no such exemption should be granted to religious institutions? In view of this positive recommendation of the Select Committee, may I know what inspired the Government to relax this by an executive order instead of consulting the legislators about it?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 1965-66-லே 'எஸ்ட்டிமேட் கமிட்டி' இதற்காகப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். பல்வேறு மத ஸ்தாபனங்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டமே அதற்குப் பிறகு எடுத்த முடிவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, accepting for a moment that this has been done with the best intention in the world to increase the remunerative enterprises belonging to religious institutions, may I once again request the Government, in view of the fact that in some temples, small shop-keepers have been affected very badly by the increase of rent from Rs. 20 to Rs. 150 per month, to protect these small shop-keepers who are paying a monthly rent of Rs. 20 or Rs. 30 by imposing a ceiling—let it be 100 or 200 per cent? I request the Government to consider whether this can be done.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சிறிய அளவிலுள்ள கடைக்காரர்களைப் பாதுகாப்பதற்கு ஏற்ற முறையிலே வேண்டுமானால் நாம் வழிமுறைகளை ஆராயலாம். ஏற்கெனவே இருந்த முறையில் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள்கூட அப்படிப்பட்ட விதிவிலக்குகளைப் பயன்படுத்திக்கொண்டு பல தவறுகள் நடந்த காரணத்தால்தான், நாம் இந்த முடிவுக்கு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்வது போல, சிறிய கடைக்காரர்களைப் பொறுத்தவரையில், நாம் அவர்களுக்குப் பாதுகாப்பும், சலுகைகளும் அளிக்கும் வகையிலே என்னென்ன சாத்தியக்கூறுகளைச் செய்யலாம், சலுகைகள் அளிக்கலாம் என்று ஆராயலாம்.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிவிப்பு.

#### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3 p.m. on 13th December 1974, the following programme of business has been decided upon :

| | | |
|---|---|---|
| 14th December 1974 (Saturday) | ... | Discussion on Food Situation. |
| 15th December 1974 (Sunday) | ... | Holiday. |
| 16th December 1974 (Monday) | ... | 1. Presentation of the Second Statement of Supplementary Expenditure for 1974-75.<br>2. Further discussion, if any, and reply to the Debate on Food Situation. |
| 17th December 1974 (Tuesday) | ... | Private Members' Day. |
| 18th December 1974 (Wednesday) | ... | Discussion on the Second Statement of Supplementary Expenditure for 1974-75. |
| 19th December 1974 (Thursday) and 20th December 1974 (Friday) | | Government Bills. |

Further programme of business will be decided later. The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

(பிற்பகல் 4.50)

### 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

#### மாநிலத்திலுள்ள வறட்சி நிலைமை, உணவு நிலைமை, விலைவாசி உயர்வு ஆகியவை குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. கே. ராஜாராம், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் அதேபோன்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.



THIRU G. SWAMINATHAN : Sir, I will read the adjournment motion. " I hereby give notice of the following motion under rule 44 of the Tamil Nadu Legislative Council Rules, namely, that this House do adjourn to discuss a definite matter of urgent public importance, namely, the grave food situation that is prevailing in Tamil Nadu and the distress caused to the people due to the failure of the Government to tatke appropriate steps for distribution of foodgrains."

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அதே மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானம் என்னுல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

" I hereby give notice of the following adjournment motion under rule 44 of the Tamil Nadu Legislative Council Rules :—

'That this House be adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the drought situation, scarcity of foodgrains and abnormal rise in prices prevailing in the State.'

MR. CHAIRMAN : What is the stand of the Government?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இன்று மேலவையில் உணவு நிலை பற்றிய ஒரு விவாதத்திற்காக நம் மாண்புமிகு உணவமைச்சர் அவர்கள் இங்கே இன்றைக்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிய இருக்கின்ருர்கள். அதிலேயே பேசுவதற்கு வாய்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் வரக்கூடும் என்ற காரணத்தால், அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று, தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, முழு விவாதமே வருவதற்கான ஒரு அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் கொடுத்திருப்பதனுல், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லையாதலால், இதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN : Sir, I do not press the adjournment motion.

### 4. மாற்றுத் தலைவர் பட்டியல்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்ட மன்ற மேலவையின் 49-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் நான் நியமித்துள்ளேன் என்று தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் நான் அவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. வி. வெங்கா
2. திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
3. திரு. ஜி. சுவாமிநாதன்.
4. திரு. அ. அய்யணன் அம்பலம்.

### 5. அரசின் தீர்மானங்கள்

**(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23(1)-வது விதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, 14—12—1974 சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொள்ள இந்த அவை தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23(1)-வது விதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, 14—12—1974 சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொள்ள இந்த அவை தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) மாநிலத்திலுள்ள உணவு நிலைமை**

**மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே,

"இம்மாநிலத்திலுள்ள உணவு நிலைமை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, நம் மாநிலத்தில் உணவு நிலைமையை விளக்கி மன்ற உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். தென் மேற்குப் பருவ மழை ஆறு வார காலம் தாமதமாக வந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. இம் மழையை நம்பி நடக்கும் வேளாண்மை ஓரளவு பாதிக்கப்



பட்டு, சாகுபடியாகும் நிலப்பரப்பு சுமார் இரண்டு இலட்சம் ஏக்கரா வரை குறைந்து விட்டது. வடகிழக்குப் பருவ மழையும் இதுவரை பொய்த்து விட்டது. இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்களில் பெரும் பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன. பருவ மழை தவறியதன் காரணமாக சாதாரணமாக சம்பா சாகுபடியின்கீழ் வரும் 37 இலட்சம் ஏக்கராவுக்குப் பதிலாக 27 இலட்சம் ஏக்கராக்கள்தான் பயிரிடப்பட்டுள்ளன. இதிலும் விளைச்சல் திருப்திகரமாக இராது. தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளிலும் மழை யின்மையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. தாளடி பயிர் நிலைமையும் நம்பிக்கை ஊட்டுவதாய் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய் வாரிய உறுப்பினர்கள், மற்ற அதிகாரிகள் ஆகியோருடன் நாம் இந்நிலைமையைப் பற்றி விரிவான விவாதங்கள் நடத்தியுள்ளோம். நமது தற்போதைய மதிப் பீட்டின்படி உணவு தானிய உற்பத்தியில் பெரும் துண்டு விழும் என்று அஞ்சு கிறோம்.

[மாற்றுத் தலைவர் திரு. அ. அய்யணன் அம்பலம் தலைமை]

நம்முடைய பிரச்சினையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நம் தேவைகளை நிறைவு செய்ய, கோதுமை மட்டுமல்லாமல், அரிசியையும் சிறு தானியங்களையும் இயன்ற அளவு அதிகமாக ஒதுக்கித் தர வேண்டுமாய் மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

அதே சமயத்தில் கொள்முதலை தீவிரப்படுத்தவும், நியாயமான ஒழுங்கான விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் நாம் முடிவு செய்துள்ளோம். இந்த நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால், இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும், பெரிய, சிறிய நிலச்சுவான்தாரர்களும், கூட்டுறவு நிறுவனங்களும், அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தருவது இன்றியமையாதது.

அரிசி கொள்முதலை தீவிரப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன:—

(1) கிணறு மற்றும் சிறிய நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள நிலங்களில் ஒரு ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு "லெவி" கொள்முதலிலிருந்து பூரண விதிவிலக்கு அளிக்கப்படும்.

(2) ஆற்றுப் பாசனத்தில் 50 சென்ட் வரை நிலம் வைத்திருப்பவர் களுக்கும் லெவி கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். ஆற்றுப் பாசனத்தில் 50 சென்ட்டுக்கு மேலாக ஒரு ஏக்கரா வரை நிலம் வைத்திருப் பவர்கள், 75 கிலோ நெல்லை அரசாங்கக் கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டும்.

(3) ஒரு ஏக்கராவுக்கு மேலுள்ள நிலங்களைப் பொறுத்தவரையில் லெவி விகிதங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது,

(4) லெவி முறையின் கீழ் நிர்ணயிக்கப்படும் விலையில் விவசாயி கொடுக்க வேண்டிய நெல்லை 'சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்' எல்லா பகுதிகளிலும் கொள்முதல் செய்யும். உபரிப் பகுதிகளில் மட்டும் லெவி முறையின்கீழ் கொள்முதல் செய்யப்படுகிற நெல் போக, உபரி நெல்லை அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்க ஏற்பாடு செய்யும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் விலையைவிட சற்று அதிகமான விலையைக் கொடுத்து உபரி நெல்லை வாங்கும். இந்த உபரி பகுதிகளில் தனிப்பட்ட வியாபாரிகள் நெல் மொத்த வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

உணவு தானிய விநியோகத்தை ஒழுங்கு செய்யக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன—

(1) பற்றாக்குறைப் பகுதிகளில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு அரசாங்க அமைப்பின் மூலம் இப்போது செய்யப்பட்டு வரும் உணவு தானிய விநியோகம் தொடர்ந்து நடக்கும்.

(2) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விலைக்கு வாங்கப்படும் உபரி நெல்லைக் கொண்டு தேவைப்படும் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படும்.

(3) மத்திய அரசு நமக்குத் தரும் அரிசி, கோதுமை, சிறுதானியங்கள் தேவைப்படும் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும்.

(4) மாநிலத்தில் பகுதிவாரியாக அரிசி, நெல், வியாபாரத்திற்கு மொத்த விலை, சில்லறை விலை ஆகியவற்றிற்கு உச்சவரம்பு நிர்ணயித்து அரசு உத்தரவு வெளியிடும். இந்த உத்தரவை மீறுபவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

(5) சிறு தானியங்களைப் பொறுத்தவரையிலேகூட உற்பத்தி குறைந்து, அவை, தற்போது கிராமப் பகுதிகளில் உள்ளூரிலேயே பெரும்பாலும் உபயோகப் படுத்தப்படுவதால், அவற்றைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் உத்தேசம் அரசுக்கு இப்போது இல்லை. இந்தத் தானியங்களைப் பொறுத்த வரை நமது மாநிலத்திற்குள்ளே அவற்றின் நடமாட்டத்தின் மீதோ, தனிப் பட்டோர் வியாபாரத்தின் மீதோ, தற்போது தடை எதுவும் விதிக்கப்படாது.

(6) பருவ மழை பொய்த்த நிலைமையையும் மின் ஆற்றல் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அதிகப்படியான 'டீசல்' எண்ணெய் பெற்றுள்ளோம். டீசல் பம்ப் செட்டுகள் வாங்குவதற்கு விவசாயிகளுக்குக் கடன்கள் அனுமதித்து வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிவாரண நடவடிக்கையாகவும் டீசல் பம்ப் செட்டுகள் வாங்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் முறையிலும், டீசல் பம்ப் செட்டுகள் வாங்குவோர்க்கு ஒரு பம்ப் செட்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நெருக்கடியை





முன்னிட்டு சில தொழிற்சாலைகளுக்கான மின்சார விநியோகத்தைக் குறைத்துக் கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான மின்சார வசதிகள் தடையின்றி வழங்கப்படுமென்று இம்மாமன்றத்திற்கு உறுதி கூற விரும்புகின்றேன். 60,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பை விரைவிலே வழங்க மின் வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(7) தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக நெல் சாகுபடி பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளில் பயறு வகைகளையும் சிறுதானியங்களையும் சாகுபடி செய்யு மாறு விவசாயிகளை ஊக்குவிக்குமாறு விவசாய அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(8) உணவு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு இதுகாறும் எடுத்து வந்துள்ள முனைப்பான நடவடிக்கைகளின் முழுப்பலனும் நமக்குக் கிட்டாமல் போகும் வகையில், மாநிலத்தில் பல இடங்களில் பருவ மழை பொய்த்து வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையை உறுதியாகச் சமாளிக்க நாம் துரிதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசியத்திலுள்ளோம். மாவட்டங்களிலுள்ள நிலைமையை நேரில் சென்று ஆய்வு செய்து விரிவான அறிக்கையை உடனடியாக அனுப்புமாறு வருவாய் வாரிய உறுப்பினர்களை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. வருவாய் வாரியத்தின் அறிக்கை அரசுக்கு இன்னும் இரண்டு வாரங்களில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிக்கை வந்த பின்பு அதைப் பரிசீலனை செய்து உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகளுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடும். இப் பணிகளுக்காக இப்போதைக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்க அரசு உத்தேசித் துள்ளது. இந்தத் தொகையிலிருந்து உடனடியாகக் குடிதண்ணீர் நிலைமை யைச் சீர்செய்ய வேலைகளை மேற்கொள்ள ஒரு கோடி ரூபாயையும், சிறுபாசனத் திட்டங்களை மேற்கொள்ளவும், கால்வாய்களைப் பழுது பார்க்கவும், இன்னும் ஒரு கோடி ரூபாயையும் அரசு உடனடியாக வழங்கி இந்த இரண்டு கோடி ரூபாயையும் மாவட்டங்களுக்குப் பகிர்ந்து அளித்துள்ளது. வறட்சி நிலைமை யைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்க அரசு உறுதி கொண்டுள்ளது. எதிர்பாராத இவ்வகையில் மிகக் கணிசமான செலவை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை முன்னிட்டு, மாநில அரசுக்கு மத்திய அரசு வறட்சி நிவாரணத்திற்கு நிதி உதவி செய்ய முன்வர வேண்டு மென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(9) இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க அரசு உரிய காலத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளது. இப்பொழுதுள்ள நிலைமையில் உற்பத்தியைப் பெருக்கவும், கொள்முதலை தீவிரமாக்கவும், ஒழுங் கான விநியோகத்துக்கு வகை செய்யவும், அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்குவது இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. அய்யாணன் அம்பலம்) :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

" இம்மாநிலத்திலுள்ள உணவு நிலைமை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

(பிற்பகல் 5-00)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தற்சமயத்திலே உணவு நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதை எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொல்கின்ற அதே நேரத்தில், அரசாங்கத் தரப்பிலும் முதலமைச்சர் அவர்களும் உணவு அமைச்சர் அவர்களும் அதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய நிலைமை இன்னும் மோசமாகக் கூடியதாக இருக்கிறது என்று நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய இப்போதைய நிலைமையை எப்படி திருப்திகரமானதாக ஆக்குவது என்பதைப் பற்றித்தான் எல்லோருக்கும் கவலை. ஆனால், இன்னும் மோசமாகப் போகும் என்று சொல்லுகின்றபோது, நாட்டு மக்களிடையிலேயும் இன்னும் கவலை அதிகமாகிக்கொண்டுதான் போகிறது என்று சொல்லத் தேவையில்லை. இப்போது தஞ்சை மாவட்டம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அதிக விலைக்கு உணவு விற்கக்கூடிய நிலைமையையும், சாதாரண மக்களாக இருக்கக்கூடியவர்கள் அதை வாங்கிச் சாப்பிட முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையிலே இருப்பதையும் நாம் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். சென்ற ஆண்டு விளைச்சலில்கூட கிட்டத்தட்ட 2 லட்சம் டன் அளவிற்கு நம் மாநிலத்தில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று நேற்றைய தினம் சட்ட மன்றத்திலே எடுத்துக் காட்டினார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 400 கிராம் வேண்டுமென்றும், ஒரு சிறுவர், சிறுமிக்குக் கிட்டத்தட்ட 200 கிராம் வேண்டுமென்றும் ஒரு கணக்கு இருக்கிறது என்றார். அந்தக் கணக்குப்படி பார்க்கும்போது, கிட்டத்தட்ட 57 லட்சம் டன் நமக்கு வேண்டும். அதிலே 55 லட்சம் டன்தான் இருந்தது. சென்ற ஆண்டிலே மத்திய அரசுக்கு 50 ஆயிரம் டன், வெளி மாநிலங்களுக்கு இன்னும் ஒரு 50 ஆயிரம் டன் என்று இப்படியெல்லாம் கொடுத்தது போக, போன ஆண்டே நமக்கு 3 லட்சம் டன் குறைந்திருக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டைப் பார்க்கிறபோது, மொத்தத்தில் சம்பாவில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்குகூட குறையக்கூடும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான உணவு இவ்வளவு என்று நிர்ணயம் செய்துவிட்டு, அதாவது நமக்கு



57 லட்சம் டன் தேவை என்று நிர்ணயம் செய்துவிட்டு, அதில் கிடைக்கக் கூடியதும் 45 லட்சம் டன் ஆகிவிட்டது. அதிலேயும் எவ்வளவு டன் என்று சொல்லவில்லை. அவர்கள் கிட்டத்தட்ட 45 லட்சம் டன் கிடைக்கலாம் அல்லது 48 லட்சம் டன் கிடைக்கலாம் என்று சொல்கிறார்கள். எவ்வளவுதான் கிடைக்கும் என்று நிச்சயமாக அவர் சொல்லவில்லை. உணவு அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் எதிர்பார்க்கிறார்கள் என்று இன்றையதினம் சொல் வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் சம்பாவிலே இவ்வளவு ஏக்கர் உற்பத்தி என்றும், 37 லட்சம் டன் என்றும் என்னென்னமோ சொன்னார்கள். அதிலேயும் 27 லட்சம் டன் குறையலாம் என்று கணக்குச் சொன்னார்கள். ஆகவே, தானிய அளவிலே, நெல் அளவிலே எவ்வளவு குறையும் என்பதை அவர்கள் தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறவில்லை. ஓரளவுக்குத் தோராயமாக நம்முடைய உணவமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். மக்களுக்குத் தேவையான உணவு இவ்வளவுதான் என்று முடிவு செய்து விட்டோம் என்று சொன்னால், அதை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் முக்கியமான காரியம். அதை நிறை வேற்றுவதுபற்றிக் குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, மத்திய அரசாங்கத்திடம் நெல்லும் உணவு தான்யங்களும் கேட்டிருக்கின்றோம் என்று சொன்னார்கள். ஒருவருக்கு இவ்வளவு உணவு வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகு. அந்த உணவைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டுவிட்ட பிறகு, அதைக் கொடுக்க வேண்டும். வேறு எந்த விவகாரமாக இருந்தாலும், அதைக் குறைத்துக் கொள்ளலாம் என்று சொல்ல முடியும். ஒருவருக்கு மூன்று வேளையாவது உணவு வேண்டுமென்ற ஒரு நிலைமை, 'ஸ்டேடிக் டிமாண்ட்' என்ற அளவிலே இருக்கிறது. அவர்களுடைய அந்த நிலையான தேவையையாவது ஈடு கட்ட வேண்டிய அவசியத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அப்படி ஈடுகட்ட வேண்டு மென்று சொன்னால், அரசாங்கம் என்ன செய்வதாக இருந்தாலும்கூட, இப்போது இருக்கின்ற பற்றாக்குறை நிலைமையைப் பார்க்கின்றபோது, அந்தப் பற்றாக்குறை நிறைவு ஆகிற வரையிலே, ஏதோ உப சாந்தி என்று சொல் வார்களே, அதைப்போல அவ்வப்போது ஏதோ ஓரளவுக்குச் செய்ய முடியுமே தவிர, ஒரு நிரந்தரமான பரிகாரம் காண முடியாது என்பதைத்தான் முதலிலே எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமக்கு வேண்டியது 7 லட்சம் டன் என்று சொன்னால், அந்த உபரி உணவு மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு வந்தால், மொத்தத்தில் 55 லட்சம் டன் அளவுதான் உணவு நம்மிடம் இருக்கும். அந்த உணவைத்தான் எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்க முடியும். நம்முடைய அரசாங்கம் என்ன யோசனை செய்துகொண்டிருக்கின்றது என்றால், அந்தப் பற்றாக்குறை உணவை எப்படி விநியோகம் செய்வது என்பது தான். இப்போது ஆங்காங்கே மில்காரர்கள், வியாபாரிகள் ஏதோ சரிக்கட்டி விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அது மாதிரி ஓபன் மார்க்கெட்டிலே

விநியோகம் நடந்து கொண்டிருக்கின்றது. இன்னொரு சாரார் அந்த மாதிரி விநியோகம் நடத்திக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அதிகப்படியான விலை ஏறக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். ஏனென்றால் பற்றாக்குறை நிலைமை வந்து விட்ட பிறகு, அதன் பின்னர் சாதாரணமாக அறுவடை ஆன பிறகு சற்று விலை குறையும். அறுவடை முடிந்து ஜூன், ஜூலை மாதங்களிலே, நெல் தேவையாக இருக்கின்றபோது, விலை அதிகமாகும். அப்போது யார் அந்த நெல்லைத் தேக்கி வைக்க முடியுமோ அவர்கள், பெரிய மிராசுதாரர்களாக இருக்கக்கூடியவர்கள், அந்த நெல்லை இருப்பு வைத்துக் கொள்ள முடியும். அவர்களுக்குத் தான் புகலிடம் என்று சொல்வார்கள். தஞ்சையிலே இப்போது யார் பதுக்கல் காரர்கள் என்று நம்முடைய உணவு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். யார் தங்களுடைய வயலிலிருந்து அறுவடை செய்து, தங்களுடைய வீட்டிலே தானியங்களைக் கொண்டு வந்து வைத்திருக்கின்றார்களோ, அவர்களுடைய பெயர், நம்முடைய அகராதிப்படி 'பதுக்கல்காரர்கள்'. ஏதோ வெளிநாட்டில் இருக்கின்ற கள்ளக்கடத்தல் காரர்கள் என்பது போலச் சொல்கின்றார்கள். என்னுடைய நிலத்திலிருந்து நான் கொண்டுவந்து, வீட்டிலே வைத்துக்கொண்டிருக்கின்ற என்னுடைய நெல்லுக்கு ஏதோ கொஞ்சம் கூட விலை வரும் என்று இருக்கின்ற நிலை. ஏனென்றால் அரசாங்கம் கொடுக்கின்ற விலை போதாது என்ற நிலைமையிலே இருக்கின்றோம். இங்கேயும் பல பேர்கள் அப்படி இருக்கின்றார்கள். மத்திய அரசாங்கத்திலே 51 ரூபாய் கொடுத்தார்கள். இப்போது நம்முடைய அரசாங்கத்திலும் 51 ரூபாய் மூட்டைக்குக் கொடுக்கிறார்கள். மத்திய அரசாங்கம் தற்போது ரூ. 44.50 கொடுக்கின்றார்கள். எங்களுக்கு இன்றைக்கு மூட்டைக்கு ரூ. 60 அல்லது ரூ. 57 வந்தால்தான் கட்டும். ஏனென்றால் அவர்கள் செலவு செய்வதற்கும், அவர்களுக்குக் கிடைப்பதற்கும் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது, நஷ்டம் ஏற்படும் என்ற நிலையைப் பார்த்துத்தான், ஒரு மூன்று ரூபாய் அல்லது நான்கு ரூபாய் அளவிலாவது கிட்டும் என்று எண்ணி ஒரு 100 மூட்டைகள் வைத்திருந்தால், உடனே அவர்கள் பதுக்கல்காரர்கள், ஆகவே, வீட்டில் வைத்திருக்கின்றார்கள் என்கிறார்கள். அங்கு ஆர்.டி.ஓ. ஜப்தி செய்து விடுகிறார்கள். போலீஸ் அல்லது மிலிட்டரியை வைத்துக்கொண்டு செய்கின்றார்கள். பிறகு ரூ. 10,000 மதிப்புள்ள மூட்டைகளை எடுத்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லக்கூடிய நிலைமையிலே ஒரு சாரார் இருக்கின்றார்கள். கொஞ்சம் நெல்லை தங்கள் தங்கள் வீட்டிலே அப்படி நிலச்சுவான்தார்கள் வைத்திருக்கலாம். சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டு குறுவையிலே நடைபெற்றது போல, லட்சக்கணக்கான ரூபாய் போட்டு புரட்டி வியாபாரம் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

இரண்டுவிதமான வியாபாரிகள் இருக்கின்றார்கள். ஒரு சாரார் ஏதோ ஒரு 200 மூட்டை வாங்கி வைத்து ரொடேஷன் முறையில் 4 நாட்கள், 5 நாட்கள் என்ற அளவில் வைத்து, அதிலே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்ற



அளவில் லாபம் கிடைக்கட்டும் என்று வியாபாரம் செய்பவர்களும் உண்டு. இதையே 2 மாதங்கள், 3 மாதங்கள் என்று வாங்கி வைத்து, கடந்த மாதங்களைப் போல, மூட்டைக்கு ரூ. 50 வீதம் லாபத்தில் விற்று லட்சக்கணக்கான ரூபாய்கள் சம்பாதிக்கக்கூடியவர்களும் இருக்கின்றார்கள். இப்போது ஓபன் மார்க்கெட்டிலேயே நிச்சயமாக இந்த வியாபாரிகள் பெருத்த லாபம் அடைவதற்குரிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இப்போது நம்முடைய அமைச்சர் சொல்லியிருப்பதைப் பார்த்தால், பற்றாக்குறை நிலைமைதான் ஏற்படும். தஞ்சையிலே இந்தக் குறுவை அறுவடையிலே என்ன நடந்தது என்று சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய நெல் வெளியிலே செல்லக்கூடாது என்று உத்தரவு இருந்தது. தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுக்கு அல்லது எப்.சி.ஐ.க்குத்தான் விற்க வேண்டும் என்றும், ரூ. 51-க்கு விற்கலாம் என்றும் முடிவு செய்தோம். அந்த ரூ. 51-ல் மாயிஸ்டர் கட் என்றும் எவ்வளவு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அப்புறம் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் சொன்னபோது, மாயிஸ்டர் கட் என்றெல்லாம் இருக்க வேண்டியதில்லை. அப்படியே வாங்கலாம் என்று சொன்னார்கள். ஓரளவுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து பர்மிட்டுகள் வாங்கிக்கொண்டு நெல் வாங்குவதற்கான வசதிகளைச் செய்தார்கள். வெளி வியாபாரிகள் வந்த பிறகு அந்த (தண்ணீர்) ஈரம் எவ்வளவு என்று பார்க்காமல் ரூ. 54, ரூ. 56, ரூ. 58 வரையிலே கூட வெளி வியாபாரிகள் வாங்கிக்கொண்டு சென்றார்கள்.

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, தனி வியாபாரிகளுக்கு பெர்மிட் கொடுப்பதில்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நாங்கள் மொத்தமாக 'அலாட்மெண்ட்' இவ்வளவு என்று போட்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு மேலே 'ஹல்லிங் ஏஜெண்ட்ஸ்' என்று சிலரைப் போட்டு அவர்களை வைத்து வாங்கச் சொல்லுகின்றார்கள். ஆகவே தனிப்பட்ட வியாபாரிகளுக்கு, தனியார் வியாபாரத் துறையில் கொடுப்பதில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நான் சொல்ல விரும்புவது "வெளியிலிருந்து வாங்கிக்கொள்ளலாம்" என்று அங்கே உள்ள ஆட்சித் தலைவர் இங்கே உள்ள ஆட்சித் தலைவர்கள் மூலம் அரசாங்கக் கணக்கில்தான் வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத்தான். அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருப்பது, அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை ரூ. 51. அதற்கு மேலே பதினைந்து சதவிகிதம் மாய்ஸ்சர் கண்டெண்ட் என்று இருக்கின்றது. ஆனால் அவர்கள் என்ன விலைக்கு வாங்கிக்கொண்டு போயிருக்கின்றார்கள் என்று பார்த்தால், இதைவிட அதிகமாகக் கொடுத்து வாங்கிக் கொண்டு போகின்றார்கள். இப்படி அரசாங்கத்தின் கணக்கில் வாங்கும்போது இந்த விலையைக்

கொடுத்து வாங்கிக் கொண்டு போகின்றார்களே, இதற்கு அரசாங்கத்தில் பெனல்டி என்று என்ன போட்டிருக்கின்றார்கள் என்று கேட்டதற்கு அவர்கள், "அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு மேலே அவர்கள் போனால் 50 சதவிகிதம் ஃபைன் போடக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கின்றது" என்று சொன்னார்கள். நான் திருப்பிக் கேட்டேன், இங்கே அவர்கள் ரூ. 51-க்கு வாங்கிக்கொண்டு கோவையில் ரூ. 141-க்கு விற்றால், அரசாங்கத்தின் கணக்கில் எழுதுவதுபோக அவர்களுக்கு மூட்டைக்கு ரூ. 75 லாபமாகக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அந்த முறையில் அவர்கள் வாங்கிக்கொண்டு போயிருக்கின்றார்கள் என்றால், இறுதியில் என்ன நடைபெறும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று அதைப்பற்றிப் பொதுவாகத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அதையெல்லாம் முன்னெச்சரிக்கையாக யோசித்துத்தான், அவர்கள் வாங்கும்போது சொந்தமாக வாங்குவதற்கு அனுமதிப்பதில்லை என்று போட்டிருக்கிறோம். அவர்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலமாகத்தான் வாங்க வேண்டும் என்று போட்டு அந்த நெல்லைத்தான் அவர்களுக்குப் போடுகிறோம். அதைக்கூட அங்கிருந்து கோவைக்கோ அல்லது அடுத்து வேறு ஒரு மாவட்டத்திற்கோ எடுத்துச் செல்லும்போது, லாரியில் ஏற்றி கட்டியபிறகு சீல் வைத்துத்தான் அனுப்புகிறோம். இறக்கும் இடத்திலும் அதிகாரிகள் அந்த சீல் உடையாமல் இருக்கின்றதா என்று கவனிக்கின்றார்கள். ஏதாவதொரு இடத்தில் எங்கேயாவது தனிப்பட்ட முறையில் யாராவது ஏமாற்றி வாங்கியிருந்தால், அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கலாம். பொதுவாக நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அப்படி இருக்க முடியாது. இங்கேயிருந்து சீல் வைத்து லாரிகளிலே அனுப்புகின்றார்கள். எடுத்துக்கொள்ளும் இடத்திலும் அதிகாரிகள் அந்த சீல் சரியாக இருக்கிறதா, எடை சரியாக இருக்கின்றதா என்று பார்க்கின்றார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தீர விசாரித்துத்தான் சொல்லுகின்றேன். இதைப்பற்றி மாவட்ட வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில்கூட கலெக்டர் முன்பு எடுத்துச் சொன்னேன். இப்போது அவர்கள் நேரடியாகவே வந்து கிராமத்திலே வாங்கிக்கொண்டு போகின்றார்கள். லாரிகளோடு கிராமங்களுக்கு வந்து வாங்கிக்கொண்டு போகின்றார்கள். அது ஓரளவிற்கு நிலச்சுவான்தாரர்களுக்கும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றது. ஏனென்றால் நிலச் சுவான்தாரர்கள் தாங்களாக வண்டிகளைக் கட்டிக்கொண்டு நெல்லை சிவில் சப்ளைஸ் கிடங்குகளுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகின்றது. அந்த அளவில் அதை அவர்கள் வரவேற்கின்றார்கள். ரூபாய் 51 என்று வாங்கிக்கொண்டு போகின்றார்கள். அவர்கள் அதிகமாக நெல்லை வாங்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் வாங்கும் நெல்லை





அரசாங்கக் கிடங்குகளுக்குக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையில்தான் வாங்கிக் கொண்டு போகின்றார்கள். ஆனால் அப்படிக் கொண்டுபோகும் போது . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தனிப்பட்ட முறையில் அவர்கள் நெல்லை வைத்துக்கொள்ள முடியாது. அவர்களை 'ஹல்லிங் ஏஜெண்ட்ஸ்' என்றுதான் கலெக்டர்கள் நியமித்திருக்கின்றார்கள். கலெக்டர் ரிஸ்க்கில்தான் அந்த நெல் இருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அரசாங்கத்தின் ரிஸ்க்கில்தான் அது இருந்தது, முன்பு. அப்படி இருக்கபோதுதான், தஞ்சை மாவட்டத்தில் அது காணாமல் போய்விட்டது. அரசாங்கக் கிடங்குகளில் வைத்து சீல் போட்டுத்தான் வைத்திருந்தார்கள். ஆனால் திறந்து உள்ளே பார்க்கும்போது, அரசாங்கக் கிடங்குகளில் 40 சதவிகிதம் நெல் இருக்க வேண்டும் என்று இருந்து, உள்ளே பார்க்கும்போது, அது இல்லாத நிலையில் லட்சக்கணக்கில் நெல் காணாமல் போய்விட்டதைப் பார்த்தோம். அதே நிலைதான் இன்னும் நீடிக்கிறது. அதே நிலைமையில்தான் இப்போதும் அதை வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொதுவாகத்தான் இதைச் சொல்லுகிறேன். அவர்கள் செய்து விட்டார்கள் என்று சொல்லவில்லை. எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். காரணம், சென்ற முறை நடந்ததற்கும் இப்போது நடைபெறுவதற்கும் அதிக வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் அதிகப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு போகின்றார்கள் என்றால், தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் என்ற தைரியத்தில்தான் அதை வாங்கிக்கொண்டு போகின்றார்கள். தஞ்சை மாவட்டத்தை சீல் செய்து விட்டோம், தஞ்சை மாவட்டத்தை அடைத்து விட்டோம் என்றெல்லாம்கூட அதிகாரிகள் சொன்னார்கள். "நிலச் சுவான்தாரர்கள் என்ன செய்ய முடியும்?" என்றெல்லாம்கூட கேட்டார்கள். ஆனால் பரிதாபத்திற்குரிய நிலைமை என்னவென்று பார்த்தால், கொள்முதல் இரண்டு லட்சம் டன் அரிசி என்று போட்டார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த நிலவரத்தில், 1.4 அல்லது 1.33 லட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. போடப்பட்டதற்கும் கிடைத்ததற்கும் சம்பந்தமே இல்லாது இருக்கிறது. இதை சென்ற ஆண்டு நிலவரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சென்ற ஆண்டு இருந்த நிலைமைக்கும் இப்போது இந்த ஆண்டு இருக்கும் நிலைமைக்கும் அதிகமான வித்தியாசம் இல்லை. சென்ற ஆண்டு 1.2 லட்சம் என்று இருந்தால், இப்போது 1.33 என்று இருக்கிறது. என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால், தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் வெளியே போகக் கூடாது என்று போட்டார்கள். அது உபரி மாவட்டம். உபரி மாவட்டமா அல்லது உபரி நெல்லா? ஆக தஞ்சை மாவட்டம் ஒன்றைத் தவிர வேறு எந்த

மாவட்டமும் நாடு மாநிலத்தில் பெரியதாக இல்லை. பற்றாக்குறை மாவட்டங்களுக்கு உபரி மாவட்டத்திலிருந்துதான் போக முடியும். அப்போதுதான் பிற மாவட்டங்களிலே விலையும் குறையும். அரிசியும் கிடைக்கும். ஆனால் உபரி மாவட்டத்திலிருந்து வெளியே போகக்கூடாது என்றால், வேறு மாவட்டங்களிலே ஆறு, எட்டு, ஒன்பது ரூபாய் என்ற அளவிற்கு ஏறிக்கொண்டே போகிறது. பிற மாவட்டங்களிலே 'ஸ்கேர்ஸிடி கண்டிஷன்' ஏற்படுகிறது. அது அரசாங்கமே ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலைமை. அதற்குப் பொறுப்பு அரசாங்கமே. அந்த நிலைமை தானாக ஏற்பட்டுவிடவில்லை. அதிலும் குறுவை அறுவடை நடைபெறுகிறது. அந்த நிலையில் நெல்லும் பிற மாவட்டத்திற்குப் போகக்கூடாது என்று தடுக்கப்பட்டது என்ற நிலையில், மற்ற மாவட்டங்களிலே ஆறு ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலைமை மாறி, எட்டு ரூபாய்க்கு விற்கின்றது என்ற நிலைமை வருகின்றது. அரசாங்கமே நெல்லை வெளியே விடாமல் முடக்கி வைத்திருக்கின்றார்கள். பதுக்கல்காரர்கள் முடக்கி வைத்திருக்கின்றார்கள் என்று முன்பு சொன்னார்கள். ஆனால் இப்போது அரசாங்கமே அதைச் செய்திருக்கிறது. தனியார் செய்தால் என்ன, அரசாங்கம் செய்தால் என்ன? நெல்லை வாங்கி அரசாங்கக் கிடங்குகளில் வைத்திருக்கின்றார்கள். தேக்கி வைத்திருப்பது முடக்கப்பட்ட நெல்தான். மக்களுக்குப் போக வேண்டிய நெல்லை,—'பைப் லைன்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்,—அப்படி மக்களுக்குப் போக வேண்டிய நெல்லை அரசாங்கக் கிடங்குகளிலே தேக்கி வைத்திருக்கின்றார்கள். இப்படிச் செய்தால் ஏற்படும் விளைவுகள் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலைமையில், விலை ஏறும்போது, ஜனங்கள் என்ன கேட்கின்றார்கள்? நியாய விலைக் கடைகளை அரசாங்கம் திறக்க வேண்டும், 'ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ்' வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

The natural corollary of this kind of attitude of the Government will be that people will cry for more fair price shops.

ஏனென்றால் வெளியிலே அரிசி விற்கும் விலையில் 'ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ்' வேண்டும் என்று கேட்கின்றார்கள். இப்படிப்பட்டதொரு துர்பாக்கியமான நிலைமை அரசாங்கத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. 'ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ்' திறக்க வேண்டும் என்றாலும், அதிலும் பல சங்கடங்கள் அரசாங்கத்திற்கு இருக்கின்றன. அரசாங்கம் தவறு செய்ததால் தான் இந்த நிலைமை. தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு எப்போதும் போய்க் கொண்டுதான் இருந்தது. அப்படிப் போய்க்கொண்டிருந்த நேரத்தில், தஞ்சை விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைத்தது. வெளி மாவட்டங்களுக்கும் அரிசி கிடைத்தது. ஆனால் சென்ற வருஷம் 25 சதவிகிதம் லெவி என்று வைத்தார்கள் அரசாங்கத்தில், வியாபாரிகளுக்கு. உடனே 25 சதவிகிதம் போதாது, இன்னும் 15 சதவிகிதம் 'அன் அஃபிஷியலாக' வேண்டும் என்று அதையும் கொடுத்தார்கள். பிறகு அதுவும் போதாது என்று 25 சதவிகிதம் அரசாங்கம் நிர்ணயித்தது. அதோடு அன்-அஃபிஷியலாக மேலும் 25 சதவிகிதம்





ஆக 50 சதவிகிதம் லெவி என்று போட்டார்கள். எதற்காக அப்படிப் போட்டார்கள்? இவ்வளவு என்று ஒரு டார்ஜெட்டை நிர்ணயம் செய்து கொண்டார்கள். அரசாங்க அதிகாரிகள் டார்ஜெட்டில்தான் இருக்கின்றார்கள். அரசாங்கத்திற்கு இவ்வளவு நெல் கிடைக்க வேண்டுமென்று நிர்ணயித்துக் கொண்டு, அதை எப்படியாவது அடைய வேண்டும் என்பதற்காக 50 சதவிகிதம் என்று போட்டால், சீக்கிரம் கிடைத்துவிடும் என்று அந்த அபிப்பிராயத்தோடு தான் போட்டார்கள். லெவி என்று போட்டவுடன், அங்கே உள்ள நெல்லெல்லாம் லெவிக்குத்தான் போய்விட்டது. லெவி மாவட்டங்களுக்குப் போகவில்லை. பிற மாவட்டங்களிலே பயங்கரமான அளவிற்கு விலை ஏறிவிட்டது. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு, எனக்குத் தெரியும், லெவி நெல்லைக் கொள்முதல் செய்வதில்தான் தீவிரமாக இருந்தார்கள். வேறு இடத்திற்கு சொந்தத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று 'நோ அப்ஜெக்ஷன் ஸெர்டிஃபிகேட்' கொடுத்தால்கூட, அதைப்பற்றி முடிவு செய்யாமல் அப்படியே நெல்லைத் தேக்கி வைத்தார்கள். லெவி நெல்லைக் கொடுக்கத் தயாராக இருந்தாலும்கூட, அவர்களுக்கும் 'நோ அப்ஜெக்ஷன் ஸெர்ட்டிஃபிகேட்' கொடுக்கவில்லை. இப்படியெல்லாம் செய்துவிட்டு, விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்று சொன்னவுடன் என்ன செய்வது என்று தெரியாமல் திடீரென்று ஒருநாள் கட்டிய அணையை அப்படியே திறந்து விடுவதைப்போல தஞ்சையிலிருந்து நெல் போனால் விலை குறையும் என்று மாவட்டத்தைத் திறந்து விட்டார்கள். இது தான் நடந்த நிலைமை. ஒரே சீராகத் திறந்துவிட்டிருந்தால் இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்காது. அரசாங்கம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டுவந்து இதைப்பற்றிப் பேசினார்கள். கடந்த நான்காண்டு காலமாக நல்ல முறையில் நடந்துகொண்டிருந்த திட்டத்தை அவர்களே விட்டுவிட்டு இந்த நிலையை ஏற்படுத்தியது ஒரு துர்பாக்கியமான நிலைமை என்றுதான் சொல்ல வேண்டும். ஒன்று அரசாங்கத்தின் மூலம் செய்யலாம், அல்லது வியாபாரிகள் மூலம் செய்யலாம். ஆனால் இப்போது எல்லாம் ஒரே குழப்பமாகி விட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று சொன்னதைப்போல, ரேஷனிங் கொண்டு வர வேண்டும் என்றால், என்ன நடைபெறும் என்று பார்க்க வேண்டும். தஞ்சை உபரி மாவட்டம். அங்கே லெவி போட்டிருக்கின்றார்கள். ஒரு ஏக்கருக்கு பதினெட்டு மூட்டை நெல் என்று போட்டிருக்கின்றார்கள். பத்து மூட்டை விளையும் என்றால், பதினெட்டு மூட்டையைக் கொடு என்றால், எங்கேயிருந்து கொடுப்பது? வாங்கித்தான் கொடுக்க வேண்டும். அதிலும் என்ன

(பிற்பகல் 5-20)

விலைக்குக் கொடுக்க வேண்டும்? நீங்கள் கேட்கிற 42 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும். குறுவை நெல்லை 52 ரூபாய்க்கு விற்றுவிட்டு, சம்பா நெல்லை 42 ரூபாய்க்குக் கொடுங்கள் என்றால், எப்படிக் கொடுப்பார்கள்? அதுவும் அதிகாரிகள் படுத்துகிற பாடு சொல்ல முடியாது. கட்டி வைத்து, அடித்து

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 டிசம்பர் 14

விட்டு, எடுத்துக்கொண்டு போகிறார்கள். டால்மியாபுரத்தில் அரிசி அதிக விலை விற்கிறது; எனவே திருவையாறுக்கு அரிசி வாங்க சிலர் வருகிறார்கள். தஞ்சையில் 55 ரூபாய்க்கு மூட்டை கிடைக்கிறது. ஆனால் திருச்சியில் 120 ரூபாய்க்குக் கிடைக்கிறது. எனவே 4, 5 பேர்கள் வருகிறார்கள். திருவையாற்றுக்கு வந்து அரிசி வாங்குகிறார்கள். அப்போது ஒரு சிறிய அதிகாரி என்ன செய்தார், தெரியுமா? நாலு பேரையும் பிடித்து, பின்கட்டாகக் கட்டி, தெரு முழுவதும் அடித்து, அவர்களை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து, அங்கும் அவர்களை அடித்திருக்கிறார்கள். அவர்கள் செய்த பாவம் என்ன? அவர்கள் 4 அல்லது 5 படி அரிசி வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் ராமநாதபுரம் போன்ற வறட்சியான மாவட்டங்களிலிருந்து பக்கத்திலுள்ள தஞ்சை மாவட்டத்திற்கு அரிசி வாங்க வருகிறார்கள். அங்கே பஞ்சம் ஏற்பட்டு, வருகிறார்கள். இங்கே வந்து வேலை செய்துவிட்டு, கொஞ்சம் கொஞ்சம் அரிசி எடுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்களைப் பிடிக்கிறார்கள். மேலும் அப்படிப் பிடிக்கிற அரிசி எங்கே போகிறதென்று தெரியவில்லை. சில சமயங்களில் அந்த அரிசி அதிகாரிகள் வீட்டுக்குப் போகிறது. ஆயிரம் நடக்கிறபோது இரண்டு அநியாயங்களும் நடக்கும். தனிப்பட்ட முறையில் விரோதமாக நடக்கிறார்களென்று சொல்லவில்லை. அந்த பாலிசி தவறு என்றுதான் சொல்கிறேன். அங்கே இருக்கக்கூடிய அந்த நிலச்சுவாந்தார்கள் இன்னும் 50 ரூபாய் கிடைக்காதா என்று எதிர்பார்த்து ஏற்பாடுகளைச் செய்துகொண்டு போகிறார்கள். நிலச்சுவாந்தார்களை, 'ஸ்மக்ளர்', 'பதுக்கல்காரர்' என்று பெயர் வைத்துப் பிடிக்கிறோம். நேற்று முதலமைச்சரவர்கள் சொன்ன மாதிரி நிலைமை ஏற்பட்டால், தஞ்சை மாவட்டத்தில் லெவி போட்டு அந்த மாவட்டத்திலுள்ள லட்சக்கணக்கான பட்டாதார்களிடம் நேரடியாகப் போய் அதிகாரிகள் நிற்கப்போகிறார்கள். சிறிய சிறிய பட்டாதார்களிடம் லெவி கேட்கப் போகிறார்கள். 7½ ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிறவர்கள் பெரிய மிராசுதார்களென்று சொல்லுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே 15 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள்கூட பெரிய மிராசுதாரர்கள் இல்லை. சிறிய நிலச்சுவாந்தார்களிடம் போய் 2 மூட்டை வாங்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் 4 மூட்டை கொடுங்களென்று கேட்பார்கள். இவ்வளவு லெவி வாங்க வேண்டுமென்ற கணக்கை அதிகாரிகளிடம் கொடுத்துவிடுவார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 'ப்ரொட்யூசர் லெவி' போட்டதால்தான் அவர்களுக்குக் கெட்ட காலம் வந்தது. இந்த 'ப்ரொட்யூசர் லெவி'–யால்தான் இந்திரா காந்தி அம்மையாருக்கு உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கெட்ட பெயர் வந்தது. அவர்கள் கோதுமையை ப்ரொட்யூசர் லெவி போட்டு எடுத்தார்கள். பிறகு அது முடியாதென்ற நிலைமைக்கு அவர்கள் வந்தார்கள். அவர்கள் செய்ததைத்தான் இந்த அரசினர் செய்கிறார்கள். அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரைத்தான் ப்ரொட்யூசர் லெவி ஏற்படுத்தும். 44 ரூபாய்க்குக் கொடுங்களென்று சொன்னால், அவர்கள் வயிறு எறிந்துதான் கொடுப்பார்கள். உங்களுடைய அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டாரிடமே கேட்டுப்



1974 டிசம்பர் 14] [திரு. ஜி. சுவாமிநாதன்]

பாருங்கள். 53 ரூபாய்க்கு விற்றால்கூட, 2 அல்லது 3 ரூபாய் கிடைக்காது. கோவையிலும், சென்னையிலும் இருக்கக்கூடியவர்களுக்காக, தஞ்சையில் இருக்கும் நிலச்சுவாந்தார்கள் நஷ்டப்பட்டு, அவர்கள் பணத்தை எடுத்துக் கொண்டுபோய் ஃபேர் ப்ரைஸ் ஷாப்புக்குக் கொடுத்தால், அது நியாயமல்ல. மேலும் சர்ப்ளஸ் என்று சொல்லுகிறார்கள். சர்ப்ளஸ் எதுவும் இருக்காது. மேலும் ஓரளவுக்கு சர்ப்ளஸ் இருந்தால் இருக்கலாம். அதில் ஒரு ரூல் போட்டிருக்கிறார்கள். 20 குவின்டால்தான் வைத்துக்கொள்ளலாமென்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் லெவிக்குப் போட்டுவிட்டார்கள். பிறகு, ஓபன் மார்க்கெட்டில் கூட விலை வருகிறதென்று, ஓபன் மார்க்கெட்டில் போட்டு லாபம் சம்பாதிக்கலாம். இப்போது அதுவும் கூடாதென்ற நிலைமை இருக்கிறது. இப்போது 20 குவின்டால் அளவுக்குத்தான் வைத்துக்கொள்ளலாமென்ற கணக்கு வைத்திருக்கிறார்கள். ஒன்று, லெவி போடுங்கள். லெவியைக் கொடுத்துவிட்டுப் போகட்டும். பாக்கியை வெளி மார்க்கெட்டில் விற்றுக் கொள் என்று சொன்னால், அவன் ஓரளவுக்கு லாபம் சம்பாதிக்கலாம். லெவியையும் கொடுக்க வேண்டும்; 20 குவிண்டாலுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். மூன்றாவதாக, நேற்று முதலமைச்சரவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பாக்கி இருப்பதை விற்றுக்கொள்ளலாமென்று வைத்துக்கொண்டால், அதற்கும் சீலிங் பிக்ஸ் பண்ணப் போகிறோமென்று சொல்கிறார்கள். கோதுமைக்கு மத்திய அரசு சீலிங் பிக்ஸ் பண்ணினார்கள். கோதுமையை 150 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு இடத்திலும் கோதுமை கிடைக்கவில்லை. ஆனால் கள்ள மார்க்கெட்டில் நிறைய கோதுமை கிடைத்தது. ஓபன் மார்க்கெட்டில் கோதுமை கிடைக்கவில்லை. அப்படி சீலிங் பிக்ஸ் பண்ணினால் ஓபன் மார்க்கெட்டில் ஒன்றும் கிடைக்காது. கள்ள மார்க்கெட்டில்தான் கிடைக்கும். மேலும் மூன்று மார்க்கெட்டுகள் இருக்கும். ஒன்று, ஓபன் மார்க்கெட். இரண்டு, அரசாங்க மார்க்கெட்; மூன்று கள்ள மார்க்கெட். அடுத்து, ஓபன் மார்க்கெட்டிலே ஒன்றுமே வராத நிலைமை ஏற்பட்டால் ஊரிலே உள்ளவர்கள் ரேஷன் போடு என்று கேட்பார்கள். அரசாங்கத்திற்கு ரேஷன் போட வேண்டிய நிலைமை ஏற்படும். இப்போது 300 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குப் போட்டோம்; பிறகு 500 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குப் போடுகிறோம். சென்னையிலே இருக்கிறவர்கள் வெளியிலே வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது எல்லா உபரி நெல்லையும், அரிசியையும் எடுத்துக்கொண்டுவிட்டால், அடுத்தபடியாக ஒருவருக்கும் வெளி மார்க்கெட்டில் அரிசி, நெல் கிடைக்காது. எல்லோரும் எங்களுக்கு அரிசி, நெல் வேண்டுமென்று கேட்பார்கள். இருப்பது 45 லட்சமென்று சொல்கிறார்கள். அதை எல்லோருக்கும் பகிர்ந்து, 6 அவுன்ஸ் கொடு என்று சொல்லி, அப்படிக் கொடுக்கும் நிலைமை ஏற்படும். 6 அவுன்ஸ் என்று யாரைச் சொல்லிக்கொண்டிருந்தோம் என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். அந்த

மாதிரி நிலைமை தமிழகத்தில் ஏற்படும். இங்கே இருக்கும் 4½ கோடி மக்களுக்கும் ரேஷன் போட ஆரம்பித்தால், என்ன நிலைமை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். கொஞ்சம் பேருக்குப் போடும்போதே எவ்வளவு ஊழல், எவ்வளவு பிரச்சினைகள் வருகின்றன என்பது தெரியும். தமிழகம் பூரா வுக்கும் ரேஷன் போட வேண்டுமென்று சொன்னால், அரசாங்கத்தினுடைய பெயர் கெட்டு விடுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே என்ன செய்வது? இப்போதிருக்கும் நிலைமையில் ரேஷன் போட முடியாது. ஓபன் மார்க்கெட்டிலும் விற்க முடியாது. இதற்கு முன்பு அரசாங்கம் நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருந்தது. டியூயல் பாலிசி என்பது நல்லதொரு பாலிசி என்பது என் எண்ணம். அதை மத்திய அரசிலும் சர்க்கரைக்கு வைத்திருக்கிறார்கள். சர்க்கரையை வாங்க முடியாத, சக்தியில்லாத ஜனங்களுக்கு அவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; வாங்க சக்தி உள்ளவர்களுக்கு ஓபன் மார்க்கெட் இருக்கிறது. அந்த முறை 4 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அந்த 'டியூயல் பாலிசி'-யைக் கெடுத்தது யார்? உற்பத்தியாளர்கள் அதிக விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்லி, 140 ரூபாய், 150 ரூபாய் என்று விற்க ஆரம்பித்ததால் தான் அந்தப் பாலிசி கெட்டதேயல்லாமல், அரசாங்கத்தால் அல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் நான் சொல்லும்போது இங்கேயில்லை. நான், கெடுத்தது யார் என்று சொன்னேன். இப்போது வெளிப்படையாகச் சொல்கிறேன். அதிகாரிகள் கெடுத்தார்கள். அதனால் அரசாங்கம் என்று சொன்னேன். சில அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் சில காரியங்களைச் செய்தார்கள். நெல் வெளியே போகவில்லை. ஊரில் இருக்கிறவர்களெல்லாம் நெல் அதிகம் வேண்டுமென்று கேட்டார்கள். உடனே திறந்துவிட்டோம். அது வெளியே வந்தவுடன் ஆபத்து வந்தது. அரசாங்கத்திடம் ஸ்டாக் இல்லை. ஸ்டாக்கை உண்டு பண்ண வேண்டுமென்று சொன்னோம். அதற்கு மில்லர்ஸ் லெவி போடலாமா என்று பார்த்தோம். அதைவிட ப்ரொட்யூசர் லெவி நல்லதென்று, அதைப் போட்டோம். இப்படி அடுத்து அடுத்து நிலைமைகள் வந்தன. தஞ்சாவூர் மாவட்டம் உபரி மாவட்டம். தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து அரிசி எடுக்க வேண்டும். 25 சதவிகிதம் வைத்துக்கொள்ளுங்கள்; அல்லது 50 சதவிகிதம் வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மில்லர்ஸ் லெவி போட்டுக்கொள்ளலாம். அப்போது விவசாயிகளிடம் சென்று நேரடியாக 41 ரூபாய்க்கு வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. வியாபாரிகள், விவசாயிகளிடத்திலே போய் வாங்குவார்கள். வியாபாரிகளுக்குப் பெர்மிட் கொடுத்தால், லெவிக்குக் கொடுத்தது போக, மீதியை வெளியிலே அதிக விலைக்கு விற்க முடியும். அவர்கள் 50 அல்லது 53 ரூபாய்க்கு வாங்குவார்கள். 60 ரூபாய்க்கு விற்பார்கள். அப்போது நிலச் சுவாந்தார்களுக்கும், அரசாங்கத்திற்கும் மோதல் ஏற்படாது. உங்களுக்கு



வேண்டியதை மில்லர்ஸ் லெவி மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது விவசாயியிடம் நேரடியாக அரசாங்கமே வாங்கலாமென்று சொல்லியும், வாங்க முடியவில்லை. அதனால் கெட்ட பெயர்தான் ஏற்படும்; லெவியும் கிடைக்காது. இப்படிப்பட்ட நிலைமைதான் ஏற்படும். ஆனால், நீங்கள் 50 சதவிகிதம் லெவி போட்டு, அதை வியாபாரியிடம் லெவியாக வாங்கிக்கொள்ளலாம். நீங்கள் போட்டிருக்கிற சட்டம் நல்ல சட்டம்தான். வியாபாரி இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாமென்று சொல்லுகிறோம். பெரிய வியாபாரி 300 மூட்டை வைத்துக் கொள்ளலாம் . . .

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 50 சதவீதம் லெவி வாங்கியதனால்தான் முடக்கிவிட்டார்கள் சர்க்கார், அதனால் வெளி மாவட்டங்களில் விலையேறிவிட்டது என்று சொன்னார்கள், இப்பொழுது ஏதோ 'ப்ரொட்யூசர் லெவி'—வியாபாரிகளுக்குக் கொடுக்கின்ற லெவியிலே 50 சதவிகிதம் போடலாம் என்று சொல்கிறார்கள். சரிதானா?

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, 50 சதவீதம் வாங்கி முடக்கி வைத்துவிட்டார்கள். வெளி மாநிலங்களில் விட வில்லை. கிட்டத்தட்ட ½ மாதம் . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்பொழுது லெவி வாங்குகிறது. சர்க்கார் கொள்முதல் பண்ணுகிறது. உபரியான காலங்களில் கொள்முதல் பண்ணுகிறது. பற்றாக்குறை காலத்தில், பற்றாக்குறை ஏற்படுகிற மாவட்டங்களுக்கு அனுப்புவதெல்லாம், இதை வாங்கிச் சேமித்து வைப்பது . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : நேராகப் பார்த்தால், உங்களுக்குத் தெரியும். இது உபரியும் அல்ல. நமக்கு 55 லட்சம் டன் தேவைப்படுகின்ற சமயத்திலே 60 லட்சம் டன் விளைந்திருந்தால் 5 லட்சம் டன் உபரி. அடுத்த ஆண்டு 50 லட்சம் டன் ஆனால் இந்த 5 லட்சத்தை விடவேண்டும். ஆனால் நமக்கே இப்போது பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. நமக்கு விளைகிறது பற்றாக்குறை. இந்தப் பற்றாக்குறையை நாம் உபரி என்று எடுக்கிறோம்.

பைப் லைன் ஸ்டாக் என்று சொல்வார்கள். ஒன்று கோடவுனில் உள்ள ஸ்டாக் இருக்கிறது. இன்னொன்று பைப் லைனில் இருக்கிற ஸ்டாக். அதை ஸ்டாக்கிலே நாம் எடுக்கிறோம்.

திரு. இராஜாஜி அமைச்சராக இருந்தபோது, இதே பிரச்சினை வந்தது. அவர் உதாரணம் சொன்னார். இராஜாஜி என்ன சொன்னார்? ஒரு 'பேஷன்ட்'-க்கு 'அனீமியா' நோய் வந்ததென்று சொன்னால், அதாவது ஒரு

நோயாளிக்கு இரத்த சோகை வந்ததென்றால், அந்த நோயாளிக்கு என்ன செய்ய வேண்டும்? வெளியேயிருந்து இரத்தம் கொண்டு வந்து செலுத்துகின்ற போதுதான். அந்த நோயாளிக்கு நல்ல நிலைமை ஏற்படும். அதை விட்டுவிட்டு அவரது வலது கையிலிருந்து இரத்தம் எடுத்து இடது கையில் போட்டால் நோயாளிக்கு 'அனீமியா' போகாது. அதேபோல உணவுப் பற்றாக்குறை இருக்கிற நிலைமையிலே, உபரி இல்லாத நிலைமையிலே, இப்படி அரசாங்கம் எடுத்துக்கொண்டு போய்விட்டால், என்ன நடக்கும்? இன்றையதினம் 4 ரூபாய், 6 ரூபாய் விற்கக்கூடிய அரிசி பின்னால் 12 ரூபாய்க்கு மாறுகிற நிலை ஏற்பட்டு, பின்னால் 6 ரூபாயில் 'மெய்ன்டெயின்' பண்ணுவதே மிகக் கஷ்டமாகிவிடும். அவ்வளவுதான் முடியும். இந்தத் தவறைத்தான் மத்திய அரசாங்கமும் செய்து கொண்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யாமல், இருப்பதையும் வாங்கி 'கோடவுனிலே' வைத்துக் கொண்டிருக்கிறது. இதை, யார் செய்தால் என்ன? வியாபாரி செய்தால் என்ன, அரசாங்கம் செய்தால் என்ன? மொத்தத்தில் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உணவுத் தானியங்கள் கோடவுனுக்குப் போய் விடுகின்றன.

இத்தகைய காரணங்களால்தான் வெளி மாநிலங்களுக்குக் குறைந்த விலையிலே விற்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. அதனால்தான் நம்முடைய வியாபாரிகளைப் பொறுத்தவரையில், இவ்வளவுதான் வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் என்று நான் சொல்கிறேன். அதைப் போல நம்முடைய நிலச்சுவாந்தார்களைப் பொறுத்தவரையில், இப்பொழுது 20 குவிண்டால் வைத்துக்கொள்ளலாம் என்று இருப்பதை, கொஞ்சம் கூடுதலாக வைத்துக்கொள்ளலாம் என்று வகுத்து, நிலச்சுவாந்தார்களுக்கு ஒரு முடிவு செய்யுங்கள். அப்படிச் செய்யும்போது உபரி நெல் மார்க்கெட்டுக்கு தானாக வந்துவிடும். ஒரு நிலைமை ஏற்படும். அதன் விளைவாக நெல் வெளி மாவட்டங்களுக்குப் போகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டு, சீர்திருத்தம் ஏற்படும் என்பதை நான் உண்மையாகவே உணருகிறேன்.

இரண்டாவதாக, பிக்சட் அக்ரிகல்சுரல் பாலிசி இருக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் அடிக்கடி கொள்கைகளை மாற்றிக்கொண்டிருக்கக் கூடாது. 'புட் பாலிசி', 'அக்ரிகல்சுரல் பாலிசி' போன்றவற்றை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தால், நிலச்சுவாந்தாரர்களுக்கு, தங்களுக்கு எவ்வளவு, கிடைக்கும் என்று உறுதியாகத் தெரியாது. திடீரென்று மழை பெய்யவில்லை என்று அரசு கொள்கையை மாற்றும் நிலைமை ஏற்படும். பொதுப்படையாக, அரசாங்கத்தின் கொள்கை நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, நம்முடைய உணவு அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் பம்ப்செட் ப்ரோக்ராம் பற்றிச் சொன்னார்கள. நிச்சயமாக 3,000 பம்ப்செட் போடலாமென்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவுக்கு, 3,000 பம்ப்செட் உடனடியாகப் போட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். நேற்றைய தினம் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அதிலேகூட ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். அதிகப்படியாக பம்ப்செட் போட வேண்டுமென்று திட்டமிட்டும், அது முடியாத நிலைமை உள்ளதென்று அதிலே சொல்லப்பட்டுள்ளது. எனவே, அதை எவ்வளவு விரைவாகப் போட முடியுமோ, அவ்வளவு விரைவாகப் போட்டால், தஞ்சை மாவட்டத்திற்கு நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஒரு உணவு ஆலோசனைக் குழு போட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில அளவில் அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கிறார்கள். உடனடியாக நிலச்சுவாந்தாரர்கள் அந்த முடிவு தவறு என்று சொல்லுகிறார்கள். மூன்று மாதத்திற்கு வேண்டிய அளவுதான் நிலச்சுவாந்தாரர்களாக இருப்பவர்கள் ஸ்டாக் வைத்துக் கொள்ளலாமென்று முதலில் ஒரு உத்தரவு போட்டார்கள். நம்முடைய மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் ஒரு விவசாயி. அவர் அங்கிருந்து ஒரு அறிக்கை விட்டார். ஆறு மாதத்துக்கு வேண்டிய அளவாவது ஸ்டாக் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இரண்டு மாதம் கழித்து, ஆறு மாத அளவு வைத்துக்கொள்ளலாமென்ற நிலைமையை ஏற்படுத்தினார்கள். இப்போது சம்பா வருகிறது. தஞ்சையிலே உள்ள நிலச்சுவாந்தார்கள் ஒரு ஆண்டுக்கு சம்பாவை வைத்துக்கொள்வார்கள். குறுவையைப் போடாத நிலச்சுவாந்தாரர்களும் தஞ்சையில் உண்டு. சில விஷயங்கள் அரசாங்கத்திற்கு நேரடியாகத் தெரியக்கூடிய வாய்ப்பு இல்லை. அதிகாரிகளுக்கு எல்லாம் தெரியுமென்றும் நினைக்கக் கூடாது. சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து பேச வேண்டும். நிலச்சுவாந்தாரர்கள் முதலமைச்சரவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதைப்போல ஒவ்வொரு தரப்பாரும் சொல்லுகிறார்கள். வியாபாரிகள், நிலச்சுவாந்தாரர்கள், எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய விவரம் தெரிந்தவர்கள்—எல்லோரும் சேர்ந்து ஒரு உணவுக் கவுன்சில்—ஸ்டேட் புட் கவுன்சில்—ஒன்றை மாநில அரசு அமைத்தால், நல்ல ஆலோசனைகளைச் சொல்ல உதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியில் செய்ய வேண்டிய அவசியமில்லை. இது எல்லோருக்கும் பொதுவான விஷயம். அரசியலுக்கு இது அப்பாற்பட்டதென்ற நிலைமையிலே எல்லோரும் அரசாங்கத்திற்கு உதவத் தயாராக இருக்கிறார்களென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முடிவாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு சொசைட்டி மூலம் எப்படி வாங்கப்போகிறார்களென்று தெரியவில்லை. மண்ணெண்ணெயை கூட்டுறவு மூலம் வாங்குவதென்று வைத்தார்கள். எங்கும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டத்திலே டி.சி.எம்.எப்.-லே கொஞ்சம் வாங்கினார்கள். 50 லட்சம் அதிகம் அவர்கள் கொடுத்து வாங்கி, பின்னர் அந்தக் கடனை அரசாங்கத்திற்குக் கொடுக்கும் போது, அவர்களுக்கு நஷ்டம் வந்தது. கூட்டுறவு சொசைட்டிகள் எப்படி வாங்கப் போகிறார்கள்? எந்த சொசைட்டி மூலம் வாங்கப் போகிறார்கள்; அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் யார் பொறுப்பு; அரசாங்கம் பொறுப்பா அல்லது சொசைட்டி பொறுப்பா என்பதுபற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னதுபோன்று, இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இல்லாததொரு நிலைமை. நல்ல முறையில் இருக்கும் மனிதனுக்கு திடீரென்று நோய் வந்துவிட்டால், அவனுக்கு கடவுள் மேல் நம்பிக்கை வருவது வழக்கம். அதுவரையில் என்னைப் போல் யார் இருக்கிறார்களென்று சொல்லுவதுதான் மனிதனின் வழக்கம். அதுபோல நாட்டுக்கும் இதுபோன்ற ஒரு நிலைமை வரும்போது, நாம் கடவுளை வேண்டிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்பட்டது. அப்போது அவர்கள் நாட்டு மக்கள் அனைவரையும் வேண்டிக்கொண்டார்கள், 'ஆண்டவனை வேண்டிக்கொள்ளுங்கள். நல்ல மழை பொழிய வேண்டுமென்று' என்று, கோவில்களில் அர்ச்சனை, அபிஷேகம் நடத்துங்கள் என்றும் சொன்னார்கள். அதே அறிவுரையை, அந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற வகையில் நான் முதலமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். நாட்டிலே இருக்கிற மக்கள் ஆண்டவனை வணங்கி, மழை பெய்வதற்கு வேண்டிக்கொள்ள வேண்டும். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் கோவில்களிலே அர்ச்சனை, அபிஷேகம் நடைபெற ஏற்பாடு செய்து, மழை பொழிந்து, நாட்டிலே சுபிட்சம் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நானும் நாட்டிலே சுபிட்சம் வர வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. கோ. சு. மணி :** மாமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடியைப்பற்றி இந்த மாமன்றத்தில் விவாதிப்பதற்கான வாய்ப்பு தந்து, இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, "உணவுப் பிரச்சினை—உணவுப் பிரச்சினை" என்று விவாதிக்கின்ற நேரத்தில் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும், தற்போது இருக்கிற





நிலைமை விலையேறியிருக்கிறது என்ற பிரச்சினைதான். இந்த ஒரு பிரச்சினை மீதுதான் விவாதம் நடக்கின்றது. அரிசியே கிடைக்கவில்லை என்ற ஒரு விவாதம் தொடங்கி, பற்றாக்குறை என்று பேசி, விலை அதிகம் இருக்கிறது என்று தான் முடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் "ஆளுக்கு அரை லிட்டர் அரிசியாவது கிடைக்காதா" என்ற ஒரு நிலைமை கொஞ்சகாலம் இருந்த வரலாற்றை நம்மால் மறக்க முடியாது என்றே நினைவூட்டுகிறேன். இப்போது உணவுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கிறோம். சட்ட மன்றத்தில் விவாதிக்கிறோம். மேலவையில் விவாதிக்கிறோம். முடிந்த வரையில் வெளியிலே பலமாதிரியாக விவாதிக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட நிலைமையில் இந்தப் பிரச்சினையைப்பற்றி எடுத்துக்கூறி விவாதிப்பதற்கு இவ்வளவு வாய்ப்பைப் பெற்றிருக்கிற இந்த மாமன்றத்தைப் பாராட்டுவதற்கு ஆளில்லை.

என்றாலும், ஒரு காலத்தில் ஆளுக்கு அரை லிட்டர் அரிசி தா என்று அத்தனை கட்சிகளும் ஏகோபித்து குரல் விட்ட காலத்தில், இப்படியெல்லாம் உட்கார்ந்து ஒரு அரை மணி நேரம், ஒரு மணி நேரம் விவாதிக்கின்ற ஒரு பாக்கியத்தை இந்த மன்றத்திலே நாம் பெற்றிடவில்லை. ஒத்திவைப்புப் பிரேரணையைத்தான் மறுத்தார்கள் என்றாலும், அவர்களுக்கு பரிசீலிக்கும் வாய்ப்பு இருந்தும் அவர்களும் பரிசீலிக்காமல், அதே நேரத்தில் அந்த வாய்ப்பு நமக்குத் தரப்படவில்லை. இவ்வாறு நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் அப்படிப்பட்ட நேரத்தில் சட்ட மன்றப் பேரவையில் நான் இருந்து அந்தப் பிரச்சினைகளில் கலந்துகொண்டேன். இப்பொழுது மேலவையில் இருந்து கொண்டு நான் பார்க்கிறேன், கேட்கிறேன். நான் இதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்த நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம் என்பதற்காக மட்டுமே, அடித்தளத்து மக்களில் ஒருவராக, முதலமைச்சர், உணவு அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதால், நான் இன்று இந்தக் கருத்து வெகுவாக விவாதிக்கப்பட்டு, திசை திருப்பப்பட்டு, இதற்கு மாற்று உருவம் எல்லாம் கொடுக்கப்பட்டு, பேசக் கூடாதது எல்லாம் பேசப்பட்டு, இருக்கிற பிரச்சினை மறைக்கப்படுகிறது என்று என்னைப் பொறுத்தவரையில் நான் கருதுகிறேன். அதில் எவ்வளவோ வேறு விஷயங்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் என்னுடைய அறிவுக்கு எட்டியது என்னவென்றால், பேசவேண்டிய பிரச்சினையை ஆரம்பித்து முடிகிற தருவாயில் திசை திருப்பப்படுகிறது என்பதுதான்.

நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இப்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விளைந்த நெல்லை விரைவாக வெளியில் அனுப்பியிருந்தால், வெளியே

விற்கின்ற விலை எல்லாம் குறைந்திருக்கும் என்று குறிப்பிட்டார்கள். "நீங்கள கவர் வைத்ததைப் போல வைத்துவிட்டீர்கள். இந்த நிலச்சுவாந்தார்கள் எல்லாம் எங்களுக்குத்தான் கொடுப்பார்கள் என்று எண்ணி அரசாங்கமே இந்தக் கொள்முதல் பொறுப்பை ஏற்றது. ஆனால், அது உங்களுக்குக் கிடைத்ததா?" என்ற ஒரு சவாலை விட்டார்கள். உள்ளபடியே கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். "நிலச்சுவாந்தார்களை அரசாங்கம் கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் என்று சொல்கிறார்கள். இது நியாயமா, அவனுடைய சொந்த நிலத்தில் அவனே உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்கலாம் என்று தேக்கி வைத்திருக்கிறவனை கள்ளமார்க்கெட்காரன் என்று சொல்கிறார்கள். இவ்வாறு சொல்வது நியாயமா?" என்ற ஒரு கேள்வி கேட்டார்கள். அதே நேரத்தில் தஞ்சையில் விளைகின்ற நெல்லை வெளியில் விரைவாக அனுப்பாத காரணத்தால், தடுத்து நிறுத்திய காரணத்தால், வெளி மாவட்டத்தில் விலையேறி விற்கிறது என்று அவரே சொன்னார். வெளியே விலையேறி விற்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விளைகிற இடத்திலிருந்து அரிசியை வெளியே கொண்டு செல்லவேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகளும், பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்தவை. வெளியில் அரிசி கிடைக்கவில்லை என்று பேசுபவர்களுக்கு கிடைக்கின்ற மாவட்டத்திலிருந்து வாங்கிக் கொடுக்கிற பொறுப்பை அரசாங்கம்தான்

(பிற்பகல் 5-40)

Sir, another thing I wish to dwell on is about the preservation of food. I find that very often our godowns are there for keeping rice or paddy or whatever it is but the protection for the foodgrains is so limited that rodents find their way inside the godowns. Sir, in regard to this, I want to bring to the notice of this House one thing. When I went to Simon-Fraser University, I met one Thiru K. K. Nair who had originally been working in the Atomic Energy Commission at Trombay. This gentleman told me that under the UNESCO programme he had agreed to work on a project to protect foodgrains by disinfestation by radiation and he had got 20 lakhs of rupees sanctioned by the UNESCO. As there are party bickerings here, there was also some bickering and a major portion of the money was taken away to some other project by two persons

who also belonged to Tamil Nadu. They took away a large portion of the sum, with the result he was left with only one lakh of rupees. Just as in the case of Thiru G. N. Ramachandran of A. C. College, our wonderful Vice-Chancellor Thiru N. D. Sundaravadivelu would not forward his paper on getting cellulose from farm produce to the Ministry of Agriculture of the Central Government and he resigned and went to Chicago, similarly this gentleman Thiru K. K. Nair resigned and went to Simon-Fraser University. When I met him, I requested him "Why don't you come back and help in this important measure of preventing 25 per cent of our foodgrains from being eaten away by rodents every year?" To that, he said: "If the Government want me, I will come back; but I cannot come back immediately, because I have to serve in Canada for the next three years". We have lost the services of a respected scientist who is holding a very high office in the Simon Fraser University and his main research in Canada as well as in Scandinavia where he will go on deputation is to protect food by disinfestation with radiation. His services would have been very valuable to us for this purpose. Unfortunately, such people are discouraged and they run away from this country where they could contribute their skill and knowledge. I would request the Government to give merit its due place and see that such people are encouraged and their technical knowledge is harnessed for solving the food problem of this country.

Sir, another thing I want to mention is that even in a place like Bangkok which is a country poorer than ours, mechanised agriculture is slowly taking the place of bullocks and ploughs, with the result that the people who were using these ploughs did not lose employment on account of the mechanisation of agriculture but they improved the cultivation by use of these implements given to them by the Department or by the Co-operatives on loan basis and returned. We were told that this had solved their food problem to a great extent and that their production had increased ten times at least after the introduction of mechanised agriculture. I, do not see any reason why our Government should not do it. Why should we depend on bullocks and hand-ploughs? I would request the Government earnestly to consider this aspect of the matter also. Then, Sir, about providing pesticides and also fertilisers, I find from the Plans as well as several speeches made on the floor of this House that this Government have been right earnest about it and also about irrigation wells and pumpsets: and I must compliment them on all the efforts they are taking



in this direction. But I must once again request the Government to have a Food Council at the State level and to have on it good people, knowledgeable people, retired as well as existing in service, from different localities, to take prominent interest in the matter and also Members of the Legislature irrespective of party complexion, representing the people and not representing any political party. With these few words, Sir, I thank you for the opportunity given to me and also thank the Hon. Minister in anticipation and I hope he will implement the suggestions I have made.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த உணவுப் பிரச்சினை தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாமன்றத்தில் இன்றைக்கு மிகச் சிறப்பான கருத்துக்களை ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கேட்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தினுடைய நிலைமையை மனதிலே வைத்துக்கொண்டு தமிழக அரசுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆண்டுதோறும் தொடர்ந்து தஞ்சை மிராசுதாரர்களுடைய பாராட்டுக்களைப் பெற்று வரும் நம்முடைய திரு. சுவாமிநாதன் அவர்கள் தங்களுடைய இதயத்திலே வைத்திருக்கின்ற ஒரு கொள்கைக்குக் குந்தகம் ஏற்படாமல் அவருடைய பேச்சின் மையமாக தஞ்சை விவசாயிகளையும், தஞ்சை மிராசுகளையும் வைத்து, தஞ்சை தமிழ்நாட்டின் உணவுக் களஞ்சியமாக விளங்குவதாகப் பேசினார்கள். இந்த மாவட்டத்தில் விளைகின்ற உபரி நெல் சம்பந்தமாக இந்த அரசு விநியோக முறையிலும், கொள்முதல் முறையிலும் ஆரம்பமுதல் பல்வேறு கட்டங்களில் தவறிழைத்து விட்டது என்று சொன்னார்கள். நம்முடைய திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு இடத்தில் ஒப்புக்கொண்டு சொன்னார்கள். 'கடந்த 4 ஆண்டுக் காலம் இந்த அரசு பின்பற்றி வந்த உணவுக் கொள்கை மிகச் சிறப்பாக அமைந்தது', என்று சொல்லிவிட்டு. அந்தக் கொள்கை இன்று தோற்றுவிட்டது என்பதற்கும் அவர்கள் காரணம் சொன்னார்கள். நாலாண்டுக் காலம் முறைப்படி செயல்பட்டு வந்த இந்த உணவுக் கொள்கை திடீர் என்று இந்த ஆண்டு மாறுவதற்கு யார் காரணம்? அதுபற்றிய உண்மை அவர்களுக்குத் தெரிந்திருந்தும், ஏனோ இந்த மன்றத்தில் அதைச் சொல்ல மறுக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். கொள்முதல் வியாபாரிகள், தனியார் குறிப்பிட்ட காலத்திலே பதுக்கலில் ஈடுபட்டு, தமிழ் நாட்டில் உணவுப் பிரச்சினையில் எவ்வளவு பயங்கரமான நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார்கள் என்பது தெரியும். 4 ஆண்டுக்காலம் நேர்மையாக இந்த அரசு பின்பற்றி வந்த கொள்கைக்கு, இந்த வர்த்தகர்கள் குந்தகம் ஏற்படும் அளவில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். அதை அவர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆக

வேண்டும். நமது அரசாங்கம் அனுபவ பூர்வமாக இந்தக் கொள்கையை நல்லது என்று ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தது. இந்த ஆண்டு மாற்றுவதற்குக் காரணமே, வியாபாரிகளுடைய விபரீதமான திட்டங்களும், அவர்கள் குறுக்கு வழிகளில் கள்ள மார்க்கெட்டு, பதுக்கல் இவைகளில் ஈடு பட்டிருப்பது என்பதை யாராலும் மறுக்க முடியாது. நம்முடைய திரு. சுவாமி நாதன் அவர்களும், மற்றைய உறுப்பினர்களும் ஒரு உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சட்டமன்றப் பேரவையில் இன்றைக்கு ஏற்பட்டி ருக்கின்ற பிரச்சினை, ஒரு பர்னிங் ப்ராப்ளம், தமிழ் நாட்டினைப் பொறுத்த மட்டில், ஒரு மிகப் பயங்கரமான பிரச்சினை. கடுமையான வறட்சியிலே தமிழகம் சிக்கிக்கொண்டிருக்கின்றது. இந்தத் தருணத்திலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஒரு உண்மை தெரிந்தும் இங்கே அதை மறைக் கின்றார்கள். அகில இந்திய கட்சிகள் என்று சொல்லப்படுகின்ற கட்சிகளெல்லாம் இங்கு இன்றைக்கு இந்த விவாதத்தில் அங்கம் வகிக்கின்றன. ஆனால் இந்த அகில இந்திய கட்சிகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தில் உணவுப் பிரச்சினையைப்பற்றி வாதிக்கும்போது, இந்திய நாட்டினுடைய பொருளா தாரத்தைப்பற்றி தங்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, மனம் திறந்து பேசுகிறார்கள். நாடாளுமன்றத்தில் இந்த உணவுக் கொள்கைக்கு அல்லது இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் க்ஷீணம் அடைந்ததற்குக் காரணமே மத்திய அரசாங்கக் கொள்கைதான் என்கின்றார்கள். இதை மத்திய அரசில், சுதந்திரக் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி இவைகள் எல்லாம் நாடாளுமன்றத்திலே ஒப்புக்கொள்கின்றன. அந்த உண்மையை அந்தக் கட்சிகள் எல்லாம் நாடாளுமன்றத்திலே ஒப்புக்கொண்டு, இங்கே சட்டமன்றப் பேரவையிலே, மேலவையிலே பேசுகிறபோது, இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு, விலையேற்றத்திற்கு, உணவுச் சிக்கலுக்கு அல்லது உணவுப் பற்றாக்குறைக்கு இந்த அரசுதான் காரணம் என்று சொல்வது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல இருக் கின்றது. இதை இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் திட்டமிட்டுச் செய்கின் றார்கள். அவர்களுக்கே தெரியும் இயற்கையின் உற்பாதங்கள். இயற்கை நம்மை ஏமாற்றிவிட்டது தெரியும். நாம் எல்லாம் பார்த்தோம். ஒரு நூற் றாண்டுக் காலத்தில் இப்படி ஒரு வறட்சி ஏற்பட்டதில்லை என்பதும் தெரியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, முழுப் பூசணிக்காயை மறைக்கும் அளவுக்கு சோறு இல்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** உறுப்பினர் அவர்களுக்குக் கூடவா சோறு இல்லாமல் போய்விட்டது? நம்முடைய நண்பர் தஞ்சாவூர்காரர் என்ற காரணத்தால் சொன்னேன். அப்படி ஒரு நிலைமை. இன்றைக்கு அதை



யெல்லாம் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அந்த நிகழ்ச்சியை to fish in troubled waters ' என்று சொல்லுவார்களே, குழப்பிய குட்டையில் மீன் பிடிப்பார்களே, அதுபோல் நம்முடைய படித்த அல்லது பண்பான அரசியல் கட்சி நண்பர்கள் பலர் இன்றைக்கு எடுத்துச் சொல்லவில்லை. நிலைமையை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். வான் பொய்த்தாலும் காவிரி பொய்க்காது என்று சொல்லுவார்கள். ஆனால் இன்றைக்கு வானும் பொய்த்திருக்கிறது. காவிரியும் பொய்த்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திலே மத்திய அரசு ஒரு மாநில அரசிற்குக் கை கொடுத்து உதவ வேண்டும் அல்லது கட்சிக் கண்ணோட்டத்திற்கு அப்பால் நின்று பிரச்சினையை அணுக வேண்டும். இந்த மாநிலத்தை ஆளுகிற அதிகாரம் இரண்டு அரசாங்கத்துக்கும் உண்டு. நாம் வாக்களிக்கும்போது, ஒரு வாக்கை சட்டமன்ற உறுப்பினருக்கும் மற்றொரு வாக்கை நாடாளுமன்றத்திற்கு நிற்கும் நபருக்கும் அளிக்கிறோம். இந்த வாக்கைப் பெற்ற நபர்களால் தான் இரண்டு அரசாங்கங்களும் கட்டிக் காக்கப்படுகின்றன. உங்களுக்குத் தெரியும், ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அண்டை மாநிலமான கேரளத்தில் இதைவிட பயங்கரமான ஒரு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்பொழுது அங்கு இருந்த எதிர்க் கட்சிகள் எல்லாம் மாநில அரசைக் குறை கூறுவதை ஒரு டார்கெட்டாக, குறிக்கோளாக வைத்துக்கொள்ளவில்லை. வேண்டுமானால் இரண்டொரு நாளைக்கு அதை பிரசாரத்துக்கு அல்லது சட்ட மன்றத்தில் பேசுவதற்கு வைத்துக்கொண்டு, அத்தனை கட்சிகளுமே தனி நாளுக் குழுவாக டில்லிக்குச் சென்று இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முடிவு காண வேண்டும். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறைக்கு, நீங்கள் கூடுதல் உணவு தானியங்கள் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்து கிறீர்கள். அந்த மனப்போக்கு இன்றைக்கு இல்லை. இன்றைக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அரசாங்கத்துக்கு ஏதாவது ஒரு நெருக்கடியை உருவாக்க முயலுகிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்ல வேண்டும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசாங்கம் எடுத்த முயற்சிகள், முற்போக்கான திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு போட்ட சட்டங்கள் போன்றவற்றில் எந்தவிதமான குறைபாடோ, அல்லது சொத்தையோ இருக்கிறது என்று சொல்ல முடியுமா? இருந்தால் சொல்லட்டும், உடனடியாக அந்தக் காரியத்தில் ஈடுபட்டு திருத்திக்கொள்ளலாம். உணவுப் பிரச்சினையை இந்த அரசாங்கம் ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, போர்க் காலங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் போன்று இதில் கவனமாகச் செயலாற்றுகிறது. உபரி மாவட்டங்களில் கொள்முதல் செய்வது தனியார் கையிலிருந்து பறிக்கப் பட்டு இன்றைக்கு கூட்டுறவுத் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் அது இன்றைக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு ஏஜென்ஸி, ஒரு

ஸ்தாபனம் என்பதாலேதான். கூட்டுறவுத் துறையினர் எல்லாத் துறைகளிலேயும் பரவலாக இருக்கிற காரணத்தினால் ஓரளவுக்கு அரசினுடைய கண்காணிப்பு. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அதற்கு இருக்கும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் கொள்முதல் செய்யும்போது, தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் உண்மையைத்தான் சொன்னார்கள். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். அரசாங்கத்தினுடைய கஜானாவிலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது. தனியார் அரசாங்கத்தின் சார்பிலே கொள்முதல் செய்தார்கள். ஆனால் அவர்கள் அரசுக்குத் தெரியாமலே கூடுதலாகப் பணம் கொடுத்தார்கள். அங்கே 'மாய்ஸ்ச்சர் கட்' கூடப் பார்க்காமல் கூடுதலாகவே பணத்தைக் கொடுத்து வாங்கி வந்தார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், அவர்கள் இங்கே வந்து 'ஹல்லிங் மில்லில்' அவியல் பாங்கில் நெல்லை ஒரு முறை வைத்தால் 5 கிலோ ஒரு மூட்டைக்குக் கூடும் என்ற அடிப்படையிலே அந்த நெல்லை 'ஹல்லிங் மில்லில்' இரண்டு முறை போட்டால் 10 கிலோ கூடுகிறது. கூடிய உடனே வினியோக அதிகாரிகளிடத்திலே அன்றைக்கே மார்க்கெட்டுக்கு அனுப்புகிற கெட்டிக்காரத்தனம் இருக்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு அவர்களுடைய கையிலேயிருந்து அதிகப் பணம் போட்டு வாங்கியும் கூட, அந்தச் செலவை நிறைவு செய்து கொண்டு அதற்கு மேலும் லாபம் பெறக் கூடிய தன்மையில் நிலைமை இன்று இருக்கின்றது. இன்றைக்கு வாங்குகின்ற உரிமையை கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்துவிட்டாலும் கூட, 'ஹல்லிங் மில்லிலுள்ள' முறைகளிலே நாமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உலர்ந்துவிட்டாலும் நெல் கொடுக்கிறபோது, ஒரு 10 கிலோ அல்லது 5 கிலோ குறைந்துக் கட்டுகிற மூட்டையிலே ஒரு எலுமிச்சம் பழத்தை அறுத்து அதில் ஒரு கால் பகுதி போட்டால், அது மறுநாள் 5 கிலோ அல்லது 10 கிலோ கூடுகிறது. இன்னொரு உண்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டும். திரு. வசந்த பாய் அவர்கள் சொன்னார்கள். அது நடைமுறையில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கொடுத்துவிட்டோம், அது நியாயமாக நடந்து விடும் என்ற எண்ணத்திலே. இருக்கின்ற தவறுகள் நம்மைப் பாதிக்கின்றன. இன்னொன்றைக் கூற விரும்புகிறேன். விருதுநகருக்குப் பக்கத்திலே அருப்புக்கோட்டையிலே அரிசி ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளிலே பல்வேறு ரகமான அரிசி இருப்பதுபோல, 'வைட்டி ஆப் சான்ட்ஸ்' அரிசியைப் போன்று தோற்றமளிக்கும் பல்வேறுவிதமான கற்கள் வைத்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு மூட்டையிலிருந்து எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு எடுத்து விட்டு கற்களைச் சேர்க்கிறார்கள். எங்கோ வினியோக அதிகாரிகள் உத்தரவிட்டு விடுகிறார்கள். பொருள்களை அதிகமாக கூட்டுறவு சங்கங்கள் மூலம்தான் அரசாங்கம் வாங்குகிறது. எல்லாவற்றையும் பார்த்துப் பரிசீலித்து வாங்க முடியாது. ஆகவே நாம் ஒவ்வொரு கட்டத்திலும் ஜாக்கிரதையாக



இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நம்முடைய வினியோக முறையில், நம்முடைய திரு. சுவாமிநாதன் அவர்கள் போற்றுகின்ற அளவுக்கு, கூட்டுறவு ஸ்தாபனங்கள் சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால் அதை விற்கிறபோது, கூட்டுறவு சொசைட்டிகள் இடைக்காலத்தில் ஏற்படுகின்ற செலவை ஈடுகட்ட வேண்டும். இன்றைக்கு 10 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கூட்டுறவு சொசைட்டி இருக்கிறது. இந்தக் கூட்டுறவு சங்கங்கள் கடன் மனுக்களை வாங்கவும், கடன்களைக் கொடுக்கவும் ஆன காரியங்களில் ஈடுபட்டிருந்தன. இன்றைக்கு சீனி விற்கிற வேலை வந்திருக்கிறது. இப்பொழுது புதிதாக மண்ணெண்ணெய் விற்கிற வேலை வந்திருக்கிறது. அது இல்லாமல் தனியாரிடமிருந்த வினியோகமும் இவர்களுக்கு வந்திருக்கிறது. இவர்களுக்கு இருக்கிற எல்லை அதிகமாக இருக்கிறது. இந்த சொசைட்டிகள் 10 மைல் அல்லது 5 மைல் தூரத்தில் இருக்கின்றன. இந்தக் கூட்டுறவு ஸதாபனங்களுக்கு வந்து தங்களுக்கு வேண்டிய இரண்டு படி அரிசி அல்லது அரைக் கிலோ சீனி வாங்குவதற்கு மக்கள் மிக்க சிரமத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வசதிக்காக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அல்லது ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களுக்கு இது போய்ச் சேரத்தக்க அளவுக்கு முறைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். அதற்கான வழிமுறைகளைக் கண்டாக வேண்டும். அந்த அளவுக்கு நல்ல முறையில் கூட்டுறவு சொசைட்டிகள் இயங்கினால், உண்மையிலேயே லாபகரமாகவும், கெட்டிக்காரத் தனமாகவும் இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னொரு முக்கியமான பிரச்சினை, கூட்டுறவுத் துறையை நம்பி நாம் பல காரியங்களைச் செய்யும்போது சில தவறுகள் ஏற்படுகின்றன. கூட்டுறவுத் துறை கூடாது என்று சொன்னால், வேறு எந்த வகையை நாம் பின்பற்ற முடியும்? தனியார் இன்றைக்கு நமக்குக் கசப்பான அனுபவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு மாவட்ட அளவுக்கு மேலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், மிகத் திறமையுடன் அது செயல்படுகிறது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஆனால் வட்டார அளவில், தாலுக்கா அளவில் இருக்கிற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ....

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தனியார் என்ன கசப்பான அனுபவத்தைக் கொடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவர் அவர்களே, பதுக்கி வைத்துவிட்டு ஸ்கேர்சிட்டியை உண்டுபண்ணிவிட்டு, கூடுதல் லாபத்திற்கு, கொள்ளை லாபத்திற்கு விற்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும்.

பிறகு, எல்லாவற்றையும் திறந்து விட்டோம். அதனால் அங்கே இருக்கிற விலைக்கும் இங்கே இருக்கிற விலைக்கும் அதிக வித்தியாசத்திலேயே விற்கக்கூடிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவேதான் அதை நாம் செய்த தவறு என்று சொல்ல விரும்புகிறேன். அப்படி வெளியே விட்டபோது, என்ன ஆயிற்று? அந்த விலை குறைந்ததா என்று கேட்டோம். அங்கே விலை குறைந்துவிடும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 6-50)

வெளி மாவட்டங்களிலே குறைய வேண்டும் என்றால், அதை முறையாக, படிப்படியாகச் செய்ய வேண்டும். அப்படியில்லாமல் திடீரென்று, கட்டிய ஒரு அணையைத் திறந்து விட்டதைப் போலத் திறந்துவிட்டார்கள். வியாபாரிகளிடமிருந்து மக்கள் தப்ப வேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போது அரசாங்கத்திடமிருந்தும் மக்கள் தப்ப வேண்டும் என்ற நிலைமை வந்துவிடக் கூடாது என்றுதான் ஆலோசனையாக இதைச் சொல்லுகிறேன். நான் குற்றம் சொல்ல வேண்டும் என்று இதைச் சொல்லவில்லை. இதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்து ஒரு நல்ல முடிவிற்கு வரவேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லையென்றால், அதனால் வரும் விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும் என்று எச்சரிக்கையாகவே இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்களே 50 சதவிகிதம் லெவி போட்டதால் வந்த விளைவு என்று சொன்னார்கள். இப்போது இப்படிச் சொல்லுகின்றார்கள். வெளியே கம்ப்ளீட்டாக அனுப்பாமல் இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதன் தேவைகளைப் பார்த்து அங்கங்கே கலெக்டர்களிடமிருந்து என்.ஓ.சி. பெற்று அதையெல்லாம் அனுப்பிக்கொண்டே இருந்தோம். இப்போது விலை இறங்க வேண்டுமென்ற யோசனை காரணமாக மறுபடியும் திறந்துவிட வேண்டும் என்று முப்பது நாட்களுக்கு முன்னதாகவே இப்போது திறந்திருக்கிறோம். வேறு ஒன்றுமில்லை.

**திரு. கோ. சு. மணி:** தலைவரவர்களே, கொள்முதலை, அரசாங்கம் லேட்டாக விட்டதால், இந்த நிலைமை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்று கருதுகிறேன். நான் கேட்கிறேன், வியாபாரிகள்தான் செய்யலாம், அரசாங்கமே இந்த ஜில்லாவிலிருந்து வாங்கி, கேட்கும் ஜில்லாவிற்கு விற்பது தவறாக இருக்க முடியுமா என்பதை உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும், ஒன்று. இரண்டாவது, வியாபாரிகளையும் பொது மக்களையும் சேர்த்துக் காப்பாற்றக்கூடிய யோசனை இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சொல்லட்டும். இரண்டு பேரையும் ஒரே நேரத்தில் காப்பாற்ற முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம்





**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அரசாங்கத் தரப்பில் விவசாயிகளிடம் போய் 44 ரூபாய் என்று விலை கேட்டு, அதனால் வரும் கெட்ட பெயரைத் தவிர்த்துக் கொள்ளுவதற்காகத்தான் அதைச் சொன்னேன். வெளி மார்க்கெட்டில் வியாபாரிகள் மூலம் 50 சதவிகிதம் லெவி என்று போட்டு, அதன் மூலம் கிடைப்பதில் ஒரு பகுதியினை மக்களின் ஒரு பகுதிக்கு அந்த விலையில் கொடுக்கலாம். பாக்கிப் பகுதி மக்களுக்கு 'ட்யூயெல்' பாலிஸி என்ற அடிப்படையில் சற்றுக் கூடுதலான முறையில் கொடுக்கலாம் என்று எல்லாவற்றையும் யோசித்துத்தான் சொன்னேன். ஆலோசனை செய்யாமல் அதைச் சொல்லவில்லை என்று சொல்லிக்கொண்டு, அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்போது, வெளி மார்க்கெட்டு என்று இருக்காது. ஒன்று லெவி மார்க்கெட்டு அல்லது கூட்டுறவு மார்க்கெட்டு என்றுதான் இருக்க முடியும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ரூ. 44-க்கு விற்றுவிட்டு, அந்த நஷ்டத்தை ஈடுகட்ட வெளி மார்க்கெட்டு என்று இருக்கக் கூடாது என்று இருந்தால், இந்த இரண்டும் வரும்போது, ரேஷன் என்ற ஒரு துர்பாக்கியமான நிலைமைதான் வரும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஆகவே, திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் எப்படிப் போனாலும், சுதந்திராக் கட்சியினை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். வியாபாரிகள் தவறு செய்யவில்லை என்று வாதாடுவதன் மூலம் தம்முடைய கருத்திற்கு வலிவூட்ட எண்ணுகின்றார் அவர். ஆனால் என்றைக்கு வியாபாரிகள் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு மேலும் கொடுத்து வாங்குகின்றார்களோ, அன்றைக்கே அவர்கள் தவறிழைத்தவர்கள்தான். நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் வெளி மாவட்டங்களுக்கு மட்டுமில்லை, வெளி நாட்டிற்கே சென்றது என்று குறிப்பிட்டார்கள். நான் கேட்க விரும்புவது, வியாபாரிகள் இல்லாமல் அப்படிப் போக முடியுமா? ஆகவே அதெல்லாம் தெரிந்த உண்மைதான். இதையெல்லாம் பார்த்துத்தான் இப்போது பரிகாரத்தைக் காண முயற்சித்துக்கொண்டிருக்கிறோம்.

தலைவரவர்கள் எனக்குக் கூடுதலாக இரண்டு நிமிடங்கள் பேச அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவன். பருவ மழை கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக அங்கே சற்று நிம்மதியாக இருந்தது. எனவே அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல பிரச்சினைகள் இருந்தாலும்கூட சென்ற ஆண்டு வரையில் அங்கே நிம்மதி இருந்தது. ஓரளவிற்கு நிறைவு பெற்றிருந்தது. இப்போது தானைத் தலைவரவர்களே, எங்கள் மாவட்டத்தின் பிரச்சினைகளைப் புதிய கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் இரண்டு பகுதிகளாக, கிழக்கு இராமநாதபுரம் என்றும் மேற்குப் பகுதி என்றும் இருக்கின்றது. கிழக்குப்

பகுதியில் ஏராளமான கண்மாய்கள் இருக்கின்றன. அங்கே அப்படி இருந்தாலும் கூட அந்தப் பகுதியில் ஒரு போக சாகுபடிதான் செய்ய முடிகிறது. அதிலும் ஐந்தாறு மாதப் பயிர்தான் வைக்க முடிகிறது. அடுத்த போகம் கிடையாது. எனவே அந்த ஒரு போகப் பயிரில் வரும் வருமானத்தில்தான் அங்கே பயிரிடுகின்றவர்கள் ஆண்டு முழுவதையும் தள்ளியாக வேண்டும். இப்போது பருவ மழை பொய்த்துப் போய்விட்டதால், அந்த மாவட்டம் பெரும் அளவிற்கு சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்விற்கும் வழி இல்லாமல் பெரும் தொல்லைக்குள்ளாகியிருக்கின்றார்கள். எனவே அந்த மாவட்டத்தில் உடனடியாக சில தீவிர அவசரப் பணிகளை, நிவாரணப் பணிகளைத் துவக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, இரண்டு விதமான காரியங்களைச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிவாரணப் பணிகளை ஏற்று நடத்தும்போது, வேலையில்லாது அவதிப்படும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சில திட்டங்களை உருவாக்குகின்றார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும் பள்ளிக் கட்டிடம் கட்டுதல் அல்லது சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளை ஏற்று நடத்துகின்றார்கள். இன்னும் ஏரிகளில் தூர் வாருதல் என்று டீ-ஸில்டிங் வேலைகளையெல்லாம் ஏற்று நடத்துகின்றார்கள். இப்படி யார் எந்தெந்த வேலைகளில் ஈடுபட்டு பிழைத்து வந்தார்களோ அவர்களுக்கெல்லாம் அந்த வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் நான்கைந்து ஏக்கர் நிலத்தை வைத்துள்ள சிறு சிறு விவசாயிகள் இருக்கின்றார்களே, அவர்களுக்கு இப்படிப் பட்ட நிவாரணப் பணிகளின் நன்மைகள் கிட்டாது. எனவே அவர்களுக்கும் உதவி செய்யத்தக்க விதத்தில் அவர்களுக்கு தக்காவிக் கடன்கள் தாராளமாகக் கொடுப்பதன் மூலம் அவர்கள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்த உதவி செய்யலாம். வேறு எந்தவிதமான தக்காவிச் சான்றுகளையும் கேட்காமல், சாதாரணமாகக் கேட்கும் புள்ளிவிவரங்களையெல்லாம் அவர்களிடமிருந்து கேட்காமல் இப்படிப்பட்ட பண உதவிகளைத் தாராளமாகச் செய்யலாம். மேலும் இன்று அந்தப் பகுதியில் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்களோ அதைவிட இன்னும் கடுமையாக அங்குள்ள மாடுகளுக்குத் தீவனம் இல்லாது அவை மிகவும் கஷ்டப்படுகின்றன. அவற்றையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அங்குள்ள கிணறுகளை ஆழப்படுத்தி அங்கெல்லாம் சிறு தானியத்தை உற்பத்தி செய்ய அவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மேற்கு இராமநாதபுரத்தில் கிணற்றுப் பாசனத்தின் மூலம் சிறு தானியத்தைப் பயிர் செய்யத் தயாராயிருக்கின்றார்கள். எனவே நெல் சாகுபடிக்குத்தான் உரம் கொடுப்பது என்ற நிலை மாறி, சிறு தானியத்திற்கும் உரம் கொடுப்பது என்ற உத்திரவினைப் போட்டால், அவர்கள் இன்னும் சற்று ஆர்வத்தோடு அவற்றைப் பயிரிடுவார்கள். அந்த முறையில் நமது அரசின் பணித் திட்டங்கள் அமைய வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன். இதிலே எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு, அரசியல் கண்ணோட்டத்திற்கு அப்பால் நின்று, தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பணியாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். பசி, பஞ்சம் என்று இயற்கையின் சீற்றத்தினால் மக்கள் பாதிக்கப்படும் நேரத்தில், பிற மாநிலங்களிலே உள்ள தலைவர்கள் அனைவரும் ஆளும் கட்சி, மாற்றுக் கட்சி என்பதையெல்லாம் மறந்து பணியாற்றுகின்றதைப் பார்க்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட முகவை மாவட்டத்தில் திருமங்கலம் தாலூக்காவைச் சேர்ந்தவர்கள்தான். அவருக்கு அந்த மாவட்டத்தின் கஷ்டங்கள் அனைத்தும் தெரிந்திருக்கின்றன. எனவே அவர்களுடைய கஷ்டங்களுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டும். கொடுக்கப்படும் பரிகாரம் மக்கள் கைக்குப் போய்ச் சேர வேண்டும். எனக்கு ஒரு பயம். கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது தாலூக்கா மட்டத்தில் உள்ள சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டு, ஏற்கெனவே உள்ள ரெவின்யு டிபார்ட்மெண்டின் ஒரு அங்கமாகத்தான் இருக்கின்றது. நான் விரும்புவதெல்லாம், சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில், தாலூக்கா மட்டத்தில், உள்ள அதிகாரிகள், காம்போஸிட் அதிகாரிகளாக இருக்க வேண்டும். போலீஸ் அதிகாரி அல்லது ஒரு கூட்டுறவு அதிகாரி அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஒரு அதிகாரி என்று இருக்க வேண்டும். இப்போதுள்ள முறையில் அதிலே ஏராளமான தவறுகள் ஏற்பட இடமேற்படுகிறது. ஆகவே தாலூக்கா மட்டத்திலாவது காம்போஸிட் அதிகாரிகளைப் போட்டு அதைச் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போன்றே இந்த நிவாரணப் பணிகளையும் செயலாக்க வேண்டும், அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் பலன்களை நாம் பெற முடியும் என்று கூறி என் உரையினை முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 16—12—1974 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-58)

[1974 டிசம்பர் 14

## இணைப்பு I

[1 ஆம் பக்கத்தில் 1 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

மாநிலத் திட்ட ஆணைக் குழு 17—6—1971-ல் தொடங்கப்பட்டதிலிருந்து 31—12—1973 முடிய தனது அலுவல்களை நடத்துவதற்காக, 143 முறைகள் கூடியது. திட்ட ஆணைக் குழுத் தலைவர்/முதலமைச்சர் கலந்து கொண்ட நான்கு கூட்டங்கள், நீண்ட காலத் திட்ட ஆவணத்தைத் தயாரிப்பது தொடர்பாக மத்தியத் திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த குழுவினர் கருத்து பரிமாறிக் கொண்ட ஒரு கூட்டம், மத்தியத் திட்ட அமைச்சர் திரு. டி. பி. தார் அவர்கள் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டம் ஆகியவை இதிலடங்கும்.

விரிவான விவாதம் நடத்திய பின்னர், இந்த ஆணைக் குழு நீண்ட காலத் திட்ட ஆவணம் வகுப்பது தொடர்பாகக் கீழ்க்காணும் நான்கு வழி முறைகளை வகுத்துள்ளது :—

(i) மாவட்டத் திட்டங்கள்.

(ii) துறைவாரியான விவரங்கள்.

(iii) வட்டாரத் திட்டங்கள்.

(iv) பகுதி வாரியாக தொழில் தொகுதி வாரியாக ஆய்வுகள்.

நிதித் துறையின் (மாநிலத் திட்ட ஆணைக் குழு) 4—3—1972 நாளிட்ட 335 ஆம் எண் அரசு ஆணையில், மாவட்டத் திட்டமிடும் பிரிவுகளை அமைப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் திட்டமிடும் பணிக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தேவையான புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கான மாதிரிப் படிவங்களுடன் கூடிய விரிவான நெறிமுறைக் குறிப்புகளைத் திட்ட ஆணைக் குழு தயாரித்துள்ளது. இந்த நெறிமுறைக் குறிப்புகளும் மாதிரிப் படிவங்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாநிலத் திட்ட ஆணைக் குழு, கடிதத் தொடர்பு மூலமும், ஆணைக் குழு உறுப்பினர்கள், தொழில் நுட்ப அதிகாரிகள் ஆகியோர் சென்று பார்வையிடுவதன் மூலமும் மாவட்டத் திட்டமிடும் பிரிவின் பணியை மேற்பார்வையிட்டு, அப்பிரிவு பணிகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டி வந்துள்ளது. சிறப்பு ஆய்வுக் கூட்டங்கள் மூலம் மாநிலத் திட்ட ஆணைக்குழு குறித்த காலத்திற்கொருமுறை அப்பணியை மறு ஆய்வு செய்கிறது. துறைவாரியான



1974 டிசம்பர் 14]

விவரங்களுக்காக, ஆணைக்குழு 15 பணிக் குழுக்களை அமைத்துள்ளது. பணிக் குழுக்களில் பெரும்பாலானவை தங்களது பணியை முடித்து தங்களது அறிக்கைகளை ஆணைக் குழுவுக்குப் பணிந்தனுப்பியுள்ளது.

மாநிலம் முழுவதற்கும் வட்டாரத் திட்டங்கள் வகுக்கும் பணி, நகரமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்ட ஆணைக் குழுவும், மாவட்ட திட்டமிடும் பிரிவுகளும் நகரமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்து வருகின்றது. வட்டாரத் திட்டங்கள், நீண்ட காலத் திட்ட ஆவணத்தின் முக்கியமான அங்கங்களுள் ஒன்றாக இருக்கும்.

திட்ட ஆணைக் குழு, தமிழ் நாட்டின் 1972-84-க்கான நீண்ட காலத் திட்ட அமைப்பின் முதல் வரைவைத் தயாரித்துள்ளது. அந்த வரைவு 25—8—72-ல் சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

மாநிலத் திட்ட ஆணைக் குழு மாநிலத் துறைக்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவைத் தயாரித்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொகுதி வாரியான திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாக மாநிலத் திட்ட ஆணைக் குழு உறுப்பினர்கள், பணிக் குழுக்களின் செயலாளர்களுக்கு நெறி முறைக் குறிப்புகளைக் கொடுத்துள்ளனர்.

31—12—1973 வரையிலான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. | |
|---|---:|---:|
| மாநிலத் திட்ட ஆணைக் குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 17—6—71 லிருந்து 30—9—71 வரை | 88,000 | 00 |
| 1—10—1971 லிருந்து 31—3—72 வரை | 3,30,000 | 00 |
| 1—4—72 லிருந்து 31—3—73 வரை | 14,32,000 | 00 |
| 1—4—73 லிருந்து 31—12—73 வரை | 10,72,600 | 00 |
| மொத்தம் | 29,22,600 | 00 |

இணைப்பு II

(48-ஆம் பக்கத்தில் 5-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.

## PERCENTAGE OF PASSES IN P.U.C. IN 1973—LESS THAN 25 PER CENT.

| *Serial number.* | *Name of the colleges wherein there were less than 25 per cent of passes in P.U.C.* | *Percentage.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | Government Arts College, Coimbatore .. | 24 |
| 2 | Government Arts College, Cheyyar .. | 23 |
| 3 | Rani Annadurai Government Arts College for Women, Tirunelveli .. .. | 22 |
| 4 | Government Arts College, Tiruppur .. | 22 |
| 5 | Government Arts College, Tiruvannamalai .. | 21 |
| 6 | Rajeswari Vedachalam Government Arts College, Chingleput .. .. | 21 |
| 7 | Dr. Kalaigner Karunanidhi Government Arts College, Salem .. .. .. | 21 |
| 8 | Arignar Anna Government Arts College for Women, Walajapet .. .. .. | 20 |
| 9 | Government Arts College, Gudiyatham .. | 19 |
| 10 | Government Arts College, Karur .. .. | 19 |
| 11 | Thiruvalluvar Government Arts .. .. College, Rasipuram | 19 |
| 12 | Government Arts College, Melur .. .. | 19 |
| 13 | Sri Subramaniswamy Government Arts .. College, Tirutani | 19 |
| 14 | Government Arts College, Mannargudi .. | 19 |
| 15 | Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvarur .. .. .. | 18 |
| 16 | Government Arts College, Cuddalore .. | 17 |
| 17 | Goverment Arts College, Ariyalur .. | 17 |
| 18 | Government Arts College for Men, Nandanam. | 17 |
| 19 | Lokanathanarayanaswamy Government Arts College, Ponneri .. .. .. | 15 |
| 20 | Government Arts College, Virudhachalam .. | 15 |



## PERCENTAGE OF PASSES IN P.U.C. IN 1973—LESS THAN 25 PER CENT—*cont.*

| *Serial number.* | *Name of the colleges wherein there were less than 25 per cent of passes in P.U.C.* | *Percentage.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 21 | Arignar Anna Government Arts College for Men, Nannilam .. .. .. .. | 15 |
| 22 | Arignar Anna Government Arts College for Men, Musiri .. .. .. .. | 15 |
| 23 | Government Arts College, Ramanathapuram. | 13 |
| 24 | Government Arts College, Krishnagiri .. | 12 |
| 25 | Arignar Anna Government Arts College, Attur. | 11 |
| 26 | Periar E.V.R. College, Tiruchirappalli .. | 75 |
| 27 | Thiru A. Govindaswamy Government Arts College, Tindivanam .. .. .. | |

## PERCENTAGE OF PASSES IN DEGREE COURSES—LESS THAN 25 PER CENT.

| *Serial number.* | *Name of the colleges wherein there were less than 25 per cent in degree classes* | | *Percenta* |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 | Government Arts College, Mannargudi | .. | 17 |
| 2 | Government Arts College, Krishnagiri | Maths. | 5 |
| 3 | Government Arts College, Karur | Maths. | 11 |
| 4 | Government Arts College, Cuddalore | English | 16 |
| 5 | Government Arts College, Coimbatore | History | 14 |
| | | English Litt. | 16 |
| 6 | Periyar E.V.R. College, Tiruchirappalli | English Litt. | 17 |
| | | Maths. | 17 |
| | | Physics | 17 |
| | | Chemistry | 16 |
| | | Botany | 23 |
| 7 | Presidency College, Madras .. .. | Politics | 24 |

PERCENTAGE OF PASSES IN DEGREES COURSE LESS THAN 25 PER CENT—*cont.*

| *Serial number.* (1) | *Name of the colleges wherein there were less than 25 per cent in degree classes.* (2) | | *Percentage.* (3) |
|---|---|---|---|
| 8 | H.H. The Rajah's College, Pudukottai | Maths. | 23 |
| | | Physics | 17 |
| 9 | Arignar Anna Government Arts College for Men, Namakkal. | B. Com. | 10 |
| 10 | Government Thirumagal Mills College, Gudiyatham. | Maths. | 23 |

## இணைப்பு III

[58-ஆம் பக்கத்தில் 7 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக்காண்க]

*1972 ஆம் வருடத்தில் சென்னை நகரில் செய்யப்பட்ட மொத்த பிணைப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 1,124 ஆகும்.*

*அதே ஆண்டில் மாவட்டங்களில் செய்யப்பட்ட பிணைப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 8,283 ஆகும். இதில் மாவட்ட வாரியான எண்ணிக்கை கீழ் வருமாறு :—*

| | |
|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 826 |
| 2. கோவை மாவட்டம் | 1,901 |
| 3. கன்னியாகுமரி மாவட்டம் | 404 |
| 4. செங்கற்பட்டு மாவட்டம் | 334 |
| 5. திருநெல்வேலி மாவட்டம் | 726 |
| 6. சேலம் மாவட்டம் | 723 |
| 7. தர்மபுரி மாவட்டம் | 275 |
| 8. மதுரை மாவட்டம் | 886 |
| 9. நீலகிரி மாவட்டம் | 113 |
| 10. தென் ஆற்காடு மாவட்டம் | 557 |
| 11. தஞ்சை மாவட்டம் | 505 |
| 12. இராமநாதபுரம் மாவட்டம் | 427 |
| 13. வட ஆற்காடு மாவட்டம் | 606 |
| மொத்தம் | 8,283 |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

## திங்கட்கிழமை, 1974 டிசம்பர் 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4. மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்களின் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*Regularisation of Temporary Services of Junior Assistants.*

* 16 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal with the Government to regularise the services of temporary employees working as Junior Assistants in Government Offices who have put in three years of continuous service?

இளநிலை உதவியாளர்களின் தற்காலிகப் பணியை முறைப்படுத்தல்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசு அலுவலகங்களில் தொடர்ந்து மூன்றாண்டுகளாகப் பணியாற்றி வரும் இளநிலை உதவியாளர்களின் தற்காலிகப் பணியை முறைப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, போர்ட் ஆப் ரெவின்யூவில் லேண்ட் ரெவின்யூ துறையிலே சர்வீஸ் கமிஷன் மூலம் நியமிக்கப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தால், அவர்களை வேறு இலாக்காக்களில் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலாளர்களை முறைப்படுத்துவது பற்றி கேட்கப்பட்ட கேள்வி. உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களை அளிக்கலாம்.

*Relaxation of Upper Age Limit*

* 17 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any representations have been received during the years 1972 and 1973, for relaxation of the upper age limit for appearing for Group II Services Examinations conducted by the Tamil Nadu Public Service Commission ; and

(b) if so, the action taken thereon ?

உயர் வயது வரம்பைத் தளர்த்துதல்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் II ஆம் தொகுதிப் பணிக்கான (Group II Services) தேர்வுகள் எழுதுவதற்குரிய உயர் வயது வரம்பைத் தளர்த்துமாறு கோரி 1972, 1973 ஆண்டுகளில் முறையீடுகள் ஏதும் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தால் 2-வது தொகுதிப் பணிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகள் எழுதுவதற்காக வயது வரம்பு குறித்த விதியைத் தளர்த்த வேண்டுமெனக் கேட்டு 1972-இல் 15 முறையீடுகள் வந்தன. வயது வரம்பு குறித்த விதியைத் தளர்த்த வேண்டுமெனக் கேட்டு 1973-ஆம் ஆண்டில் புதிய முறையீடு எதுவும் வரவில்லை.

(இ) 1972-இல் வரப்பெற்ற முறையீடுகளில் ஒன்றைத் தவிரப் பிற யாவும் தள்ளப்பட்டன. ஒரு நேர்வு மட்டும் சிறப்பு நேர்வாகக் கருதப்பட்டு அந்நேர்வில் வயது வரம்பு குறித்த விதி தளர்த்தப்



பட்டது. அதே நபர் 1973-லும் வயது வரம்பு குறித்த விதியைத் தளர்த்துமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அவரது வேண்டுகோள் மறுக்கப்பட்டது.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether relaxation has been given in the case of the Secretariat Service in the Secretariat? வயது வரம்பு செக்ரடேரியட் சர்வீசில் உள்ளவர்களுக்குத் தளர்த்தப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கேட்டிருக்கின்ற இந்தக் குறிப்பிட்ட கேள்வியைப் பொறுத்தவரையில் 1972-ம் ஆண்டில் வயது வரம்பு குறித்த விதியைத் தளர்த்தக் கோரி 15 பேர்கள் விண்ணப்பித்தார்கள். அதில் ஒருவருக்கு—எம்.எஸ்சி. படித்தவர் என்பதனால் ஒரு முறை தளர்த்திக் கொடுக்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, 1973-ஆம் ஆண்டில் தமிழ்நாடு செக்ரடேரியட் சர்வீசில் உள்ளவர்களுக்கு இந்த வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) 1973 ஆம் ஆண்டு வயது வரம்பு தளர்த்திக் கொடுக்கப் பட்டிருக்கிறது. Relaxation has been given in the case of the Secretariat Service. அவர்களிடமிருந்து ரெப்ரசென் டேஷன் வந்து பிறகு தளர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முறை யீடு வந்த பிறகு, செக்ரடேரியட் சர்வீசில் உள்ளவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படி யாருக்காவது கொடுக்கப்பட்டு, தகுதி படைத்தவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், அதை எடுத்துக் காட்டினால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதுமாதிரி வயது வரம்பினை உயர்த்துவதற்கான திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனை யில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். பதினைந்து விண்ணப்பங்களில் ஒரு விண்ணப்பம் கவனிக்கப்பட்டதென்று சொன்னேன். ஒரு முறை [illegible] விலக்கு தரப்பட்டது. அவர்கள் மீண்டும் தேர்வு அடையா[illegible] அடுத்த ஆண்டு விலக்கு கேட்டபோது தர மறுக்கப்பட்டது.

[1974 டிசம்பர் 16

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, அரசு அலுவலகங்களில் தற்காலிகமாக 5, 6 ஆண்டுகள்கூட சில பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வயது 27, 28 ஆகிறது. 26-க்கு மேலே மாநில, மத்திய அரசு வேலைகளுக்கு வர முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில், ஓரளவுக்கு வயது வரம்பைத் தளர்த்திக் கொடுத்தால், சௌகரியமாக இருக்காதா என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, செக்ரடேரியட் சர்வீசில் இருக்கின்றவர்களுக்கு மட்டும் வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் லெஜிஸ்லேச்சர் சர்வீசிலே இருப்பவர்களுக்கு அந்த வயது வரம்பு தளர்த்திக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, லெஜிஸ்லேச்சர் சர்வீசில் உள்ளவர்களுக்கும் அந்த வயது வரம்பு தளர்த்திக் கொடுக்கப்படுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதல் கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்தில் வராத காரணத்தால், இரண்டு கேள்விகளையும் சேர்த்துக் கேட்கும் தந்திரத்தைக் கையாள்கின்றார். அது இப்போது தான் எனக்குப் புரிந்தது. செக்ரடேரியட்டைப் பொறுத்தவரையில், சர்வீஸ் கமிஷன் எழுதிய பிறகுதான் முறைப்படுத்த இயலும். தற்காலிகமாக இருக்கிறவர்களை முறைப்படுத்த இயலாது. ஏனென்றால் சர்வீஸ் கமிஷன் எழுதி பாஸ் செய்ய வேண்டுமென்று இருப்பதால், சர்வீஸ் கமிஷன் எழுதுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளித்து, அதில் அவர்கள் தேர்வு அடைவார்களானால், செக்ரடேரியட்டைப் பொறுத்த அளவுக்கு அவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தலாமென்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற அடுத்த விவகாரம் அதன் தொடர்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

## *Opening of a Medical College at Tiruchirappalli*

* 18 Q.—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to L.C. Question No. 23 on 23rd August 1969—

(a) whether the Government will come forward to open a Medical College at Tiruchirappalli out of the amount allotted for that from the amount collected in Tiruchirappalli district for the World Tamil Conference held in Tamil Nadu ; and

(b) if so, when this will be established?



1974 டிசம்பர் 16]

## திருச்சிராப்பள்ளியில் வைத்தியக் கல்லூரி அமைத்தல்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :- மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 23—8—1969-ஆம் நாளன்று 23-ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்காக திருச்சி மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகையில் வைத்தியக் கல்லூரிக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையைக் கொண்டு, அரசு அங்கே, அதனை அமைக்க முன்வருமா?

(இ) ஆமெனில், எப்போது அது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மீதப்பட்ட தொகையில் விவசாயப்பண்ணை ஏற்படுத்தவும், விளையாட்டரங்கம் கட்டவும், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளதால், மருத்துவக் கல்லூரி திறக்க நிதி ஒதுக்கீடு செய்வதற்கில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்கென வசூலிக்கப்பட்ட தொகையானது வைத்தியக் கல்லூரிக்கு என்று டிக்கட் அச்சடிக்கப்பட்டு, அந்த டிக்கட்டுகள் விற்பனையானதால், அதை வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாட்டுச் செலவிற்கு வழங்கவும், எஞ்சியிருக்கும் தொகையை திருச்சி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி கட்டவும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நிதி வசூலிக்கப்பட்டது. அந்த வகையிலே நிதி வசூலிப்பதற்கு முன்பு, அந்த மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று அரசாங்கத்தைக் கலக்கவில்லை. மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று அந்தக் குழுவினர் விரும்பினார்கள். அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா என்று பார்க்காமல், தங்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று அவர்களாகவே திட்டமிட்டார்கள். பக்கத்தில் தஞ்சையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. மருத்துவக் கல்லூரியிலுள்ள இடங்களைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் வந்து, சென்ற ஆண்டு அதைக் குறைக்கலாமா என்று பார்த்து, குறைக்க வேண்டாம், இருப்பது நீடித்தால் போதுமென்று

முடிவு செய்து, புதிய கல்லூரிகள் இப்போது வேண்டாமென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆகவேதான் இப்போது திருச்சிக்கு மருத்துவக் கல்லூரி தேவையில்லை என்று முடிவு செய்து, அந்தப் பணத்தை மக்களுக்குப் பயன்படும் வகையிலே செலவழிக்கலா மென்று மாவட்ட ஆட்சித் தலைவரும், அந்தக் குழுவினரும் முடிவு செய்ததற்கு இணங்க, நான் முதலில் கூறியபடி அந்தத் தொகை பல் வேறு வகைகளில், அந்த மாவட்ட மக்களுக்குப் பயன்படும் வகையில் பயன்படுத்த இருக்கிறார்கள். ஆராய்ச்சிப் பண்ணைக்கு 14 லட்சம் ரூபாயும், ஸ்டேடியம் கட்ட $1\frac{1}{2}$ லட்சம் ரூபாயும், பள்ளிக்கூடங்கள் கட்ட 2 லட்சத்து 17,000 சில்லரை ரூபாயும், க்ஷேமநல நிதிக்கு 1 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தைக் கேட்டுவிட்டு அந்த டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டனவா அல்லது அரசாங்கத்தைக் கேட்காமல் தனிப் பட்ட முறையில் மருத்துவக் கல்லூரிக்கென்று டிக்கட் அச்சடிக்கப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாடு மொழி ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக நடத் தப்பட்டது. அரசாங்கம் அதற்கு உதவி செய்கின்ற அளவுக்கு இருந்தது. அந்த மாநாட்டை தனியான அமைப்பு நடத்தியது. மாவட்டத்திற்கு மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர்களை, தலைவர் களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு நிதி வசூலிக்கப் பட்டது. எனவே முழுக் கணக்கையும் ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கூறப்பட்டது. அந்தக் குழுவினர் இதோடு, மருத்துவக் கல்லூரி கட்டுகின்ற நல்ல காரியத்தையும் சேர்த்து நிதி வசூலிக்கலாமென்று முடிவு செய்து, அவர்களாகவே நிதி வசூலித்தார்கள். அதற்குப் பிறகுதான் அங்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமா அல்லது வேண்டாமா என்ற பிரச்சினை வந்து, கல்லூரி வேண்டாமென்ற நிலை ஏற்பட்டு, அந்தப் பணத்தை நல்ல பணிகளுக்குச் செலவழிக்கலாமென்ற நிலை ஏற்பட் டிருக்கிறது. இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த நிதி —10 லட்சம் ரூபாய்—தனியாக டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. ஹவுசிங் போர்டில் 7 லட்சம் ரூபாயும், கரூர் ஸ்பின்னிங் மில்லில் 2 லட்சம் ரூபாயும், பரோடா பாங்கில் 1 லட்சம் ரூபாயும், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் 50,000 ரூபாயும் டெபாசிட் செய்திருக்கிறார்கள்.



THIRU G. VASANTHA PAI: Sir, today's papers have got a news that persons who have no medical qualifications are requested by the Central Government to be enlisted as doctors. In view of the answer to this question, Sir, is it not contradictory to find that persons with no qualification should be enlisted as doctors? Has such representation been received by Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது இந்தக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியல்ல. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இந்தக் கேள்விக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தகுதி பெறாதவர்கள் "அலோபதி" மருத்துவ முறையிலே பதிவு செய்துகொள்வதற்கு எந்த ஒரு முறையையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. வேறு சில மாநிலங்களில் இப்படிப்பட்ட மருத்துவம்தான் கிடைக்கிறது என்பதனாலும், அதில் தேர்ச்சிபெற்றவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள் என்பதனாலும், ஏதாவது ஒரு முறையிலே பதிவு செய்து ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டுமென்று அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நாம் அந்த நிலையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

*Appointment of Headmasters in Singanallur Municipal High Schools in Coimbatore district*

* 19 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any complaint was received by the Education Department to the effect that the Headmasters working in Singanallur Municipal High Schools, Coimbatore district have not been appointed as per the orders issued in G.O. Ms. No. 1722, Education, dated 6th October 1971; and

(b) if so, the action taken thereon?

கோயம்புத்தூர் மாவட்டம், சிங்கநல்லூர் நகராட்சிப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் நியமனம்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்;

[1974 டிசம்பர் 16

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்கநல்லூர் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், 6—10—1971 ஆம் நாளிட்ட கல்வித் துறை, அரசு ஆணை எண் 1722-ன்படி நியமிக்கப் படவில்லை என்ற புகார் கல்வி இலாகாவிற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளை ஒட்டி, 6—10—1971-ம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண் 1722-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை அமுல்படுத்துவதை அரசு தற்காலிக மாக நிறுத்திவைத்துள்ளது. ஆதலின், மேற்கண்ட அரசு ஆணையை அமுல்படுத்தும்படி சிங்கநல்லூர் நகராட்சி மன்ற ஆணையர் தற்போது கேட்டுக்கொள்ளப்படவில்லை.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரசு ஆணை 1722-ன்படி போடப்பட்ட உத்தரவு எப்படி அமுல் படுத் தப்பட வேண்டுமென்று 1324 ஆம் எண்ணுள்ள உத்தரவு 1973 ஆம் ஆண்டிலேயே போடப்பட்டது. அதற்குப் பின், இந்த இரண்டு உத்தரவுகளையுமே அமல்படுத்த வேண்டாம் என்று நிறுத்திவைக்கப் பட்டது. அப்படி நிறுத்தி வைக்கப்பட்டு, ஓராண்டுகாலமாக இன்னும் அதுபற்றிய பிரச்சினையின் மீது முடிவு எடுக்கப்படாத காரணத்தால், ஏராளமான தலைமையாசிரியர்கள் சீனியாரிட்டி போட்டு நியமிக்கப்படாத காரணத்தால், சம்பளம், டியூட்டி அலவன்ஸ் இவையெல்லாம் பெறுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அரசு வழங்கியிருக்கும் இந்த நல்ல சலுகைகளைப் பெற, இந்தத் தடை உத்தரவை நீக்கி சரியான உத்தரவைப் போட அரசு விரைவில் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி மனுக்கள் வந்ததன் காரணமாக, இந்த உத்தரவுகளில் தெளிவாக ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காக நிறுத்திவைக்கப்பட்டது. ஆனால் விரைவிலேயே அதுபற்றிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்று பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இருக்கிற நிலைமைக்கேற்ப விரைவிலேயே அதுபற்றி ஒரு முடிவு எடுத்து ஆணைகள் பிறப்பிக்கலாம்.



1974 டிசம்பர் 16]

*Accident in Thanjavur High School.*

*20 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a student was killed and a few others were injured due to the bursting of steam engine while the practical demonstration was going on in a class room of a High School in Thanjavur during March 1974;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken thereon?

தஞ்சாவூர் நடுநிலைப் பள்ளியில் விபத்து

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1974 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், தஞ்சாவூரில் உள்ள ஒரு நடுநிலைப் பள்ளியின் வகுப்பறையில் பாடம் நடக்கும்போது நீராவி இயந்திரம் வெடித்து ஒரு மாணவன் இறந்தான் என்பதும், சிலர் காயமடைந்தனர் என்பதும் உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். தஞ்சாவூர் செயின்ட் பீட்டர் உயர்நிலைப்பள்ளியில் 12—3—1974 அன்று நீராவி இயந்திரம் செயல்படும் விதத்தினை விளக்குவதற்கு மாதிரி இயந்திரம் ஒன்றினை வைத்து விளக்கிக் கொண்டிருக்கும் பொழுது, அது வெடித்து ஒரு மாணவன் இறந்ததாகவும், மற்றொரு மாணவன் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த விபத்திற்குக் காரணம் மாதிரி இயந்திரத்திலிருந்த தண்ணீர் முழுவதும் நீராவியான காரணத்தால், இயந்திரத்தின் இணைப்புகள் வெப்ப மிகுதியினால் விடுபட்டிருக்கும் என்று கருதப் படுகிறது.

(உ) அரசு கொதிகலன்களில் ஆய்வாளர் விபத்து நடந்த பள்ளிக்குச் சென்று விபத்தின் காரணத்தை ஆய்ந்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிக்கை அனுப்பினார். அதன் அடிப்படையில் இது போன்ற விபத்துகள் இனி நிகழாதிருக்க விரிவான அறிவுரைகளுடன் அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை பள்ளிக் கல்வி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

[1974 டிசம்பர் 16

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இயந்திரத்தை இயக்கியவர் அந்த இயந்திரத்தை இயக்குவதற்கு உரிய கல்வித் தகுதி பெற்றவர்தானா? ஆலைகளில் இப்படி ஆபத்து ஏற்படுத்துகிற இயந்திரங்கள் வைக்கிறபோது அவற்றை இன்ஷ்யூரன்ஸ் செய்வதற்கு ஒரு வழிமுறை இருப்பதைப்போல, கல்லூரிகளிலும், கல்வி நிலையங்களிலும் "கேஸ் பிளேன்ட்" இயந்திரத்தை வைத்து இயக்குகின்றபோது, அவைகள் மூலம் ஆபத்து ஏற்படுமானால், அந்த ஆபத்தில் உயிர் இழந்தவர்களுக்கும் அந்த இயந்திரத்தை இழந்த கல்வி நிலையங்களுக்கும் பணத்தை முழு அளவு கொடுக்கிற இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்கீழ் இதைக் கொண்டுவர சட்டவரையறை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிகளில் இப்படி பல ஆண்டுக் காலமாகச் செய்து காட்டுகிறார்கள். இது ஒன்றுதான் "ஆக்சிடன்ட்" என்ற அளவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. சொல்லிக் கொடுப்பவர்கள் அந்தத் துறையில் பல்லாண்டு காலமாக வல்லுநர்களாக இருப்பவர்கள் தான் என்று சொல்லப்படுகிறது. திரு. செல்லத்துரை என்பவர், 28 ஆண்டுக் காலமாகப் பணி புரிந்து வந்திருக்கிறார். அவர்தான் அன்று செய்துகாட்டியிருக்கிறார். மேலும் பல்லாண்டுகாலமாக இந்தச் சோதனை செய்து காட்டிக் கொண்டு வருகிறார்கள். எதிர்பாராத நேர்வில்தான் இந்த விபத்து ஏற்பட்டது. இந்நேர்வில் கொதிகலன் ஆய்வாளர், மாதிரி கொதிகலன் எவ்வாறு இருக்க வேண்டுமென்பது பற்றியும் தரக்கட்டுப்பாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றியும், வலியுறுத்திக்கூறிய அறிவுரைகளுக்கேற்ப பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் எல்லாக் கல்லூரிகளுக்கும் முன்னெச்சரிக்கையாக எப்படி இருக்க வேண்டும் என்பதுபற்றிச் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த நீராவி இயந்திரம் விஞ்ஞான கண்காட்சிக்காக தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டதா, அல்லது பாடத்திற்காக, சோதனைக்காகச் செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வகுப்பில் வைத்து சோதனை செய்து காட்டிக்கொண்டிருக்கும் போது தான் விபத்து ஏற்பட்டதென்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 16]

*Closing down sections in some Private Colleges in Tiruchirappalli town.*

* 21 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some of the Private Colleges in Tiruchirappalli town have decided to close down sections in Ist year Degree Course;

(b) the names of such colleges; and

(c) the action proposed to be taken by the Government thereon?

திருச்சிராப்பள்ளி நகரில் உள்ள சில தனியார் கல்லூரிகளில் உள்ள பிரிவுகளை மூடிவிடல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகரில் உள்ள சில தனியார் கல்லூரிகள் முதலாம் ஆண்டு பட்டப் படிப்பில் உள்ள பிரிவுகளை மூடிவிட முடிவு செய்துள்ளனவா?

(இ) அக்கல்லூரிகளின் பெயர்கள் யாவை?

(உ) அவை குறித்து, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். திருச்சி நேஷனல் கல்லூரியில் போதிய மாணவர் எண்ணிக்கை இல்லாததால் பி.ஏ. (பொருளாதாரம்) மற்றும் பி.எஸ்ஸி (கணக்கு) பட்டப் பிரிவு—முதல் வருட வகுப்புகள் 1974–75லிருந்து நிறுத்தப்பட்டன.

(உ) அரசு இவற்றில் தலையிடுவதற்கு இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளுக்கு மட்டும் போதிய மாணவர்கள் இப்போது இல்லாது போனதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். அந்த வகுப்பை மூடியதன் காரணமாக, எத்தனை விரிவுரையாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பி.ஏ. (எக்கனமிக்ஸ்) பொருளாதாரத்திலே இரண்டு பிரிவுகள்

இருக்கின்றன. பி.எஸ்ஸி. "மேத்தமாட்டிக்சில்" இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஆக இந்த இரண்டு பிரிவுகளுக்கும் போதுமான அளவுக்கு மாணவர்கள் வரவில்லை என்பதால் ஒரு பிரிவை மட்டும் ஒவ்வொன்றிலும் நிறுத்தியிருக்கிறார்கள். மற்றொரு பிரிவு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக வேலையிழப்பு என்பதுபற்றி ஒன்றும் தகவல் இல்லை. அதுபற்றிய தகவல்களை தனிக் கேள்வி கேட்டால் கூறலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இதே கல்லூரியில் சென்ற ஆண்டு "பிலாஸபி" செக்ஷனையும் மூடியிருக்கிறார்கள். தமிழகத்தில் இரண்டு கல்லூரிகளில்தான் "பிலாஸபி" பிரிவு இருக்கின்றது. அந்த அடிப்படையில் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் வேலையிழக்க நேரிட்டால், அவர்களை வேறு எந்தக் கல்லூரியிலும் எடுத்துக்கொள்ள முடியாது. கிட்டத்தட்ட அவர்கள் 15 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாக விண்ணப்பிப்பார்களேயானால், யோசிக்கலாம். ஒரு கல்லூரியில் புதிய வகுப்பைத் தொடங்க வேண்டுமானால், அதற்கு பல்கலைக் கழக அனுமதி வேண்டும். அது போன்று மூடுவதற்கும் பல்கலைக்கழக அனுமதி வேண்டும். அதற்கு உரிய காரணம் சொல்லிவிட்டுத்தான் மூட வேண்டும். அப்படி முடியதன் காரணமாக பல ஆண்டுக் காலம் பணியாற்றிய ஆசிரியர்கள் வேலையிழக்கவேண்டி வந்தால், அவர்களுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்பதைத் தனியாக ஆராயலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரிகளிலே போதுமான மாணவர்கள் சேர்வதாக இருந்தாலும், அந்த மாணவர்களைச் சேர்க்காமலேயே மூடுவதும் உண்டு என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? பல்கலைக்கழக நிலவரம் பூராவும் அவர்கள் அறிந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவது, தனியார் கல்லூரிகளில் வேலை செய்யக் கூடிய ஆசிரியர்களைப் பொறுத்து, பணிப் பாதுகாப்புக்கு அரசு ஏதாவது ஒரு சட்டம் கொண்டுவர யோசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எழுத்துக்களில் உள்ள கருத்துக்களைத்தான் நான் இங்கே கூறுகிறேன். எழுத்துக்களின் இடையிலே என்னென்ன இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அப்படிப்பட்ட நிலை இருக்கு



மானால், பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் மூலமாக பெற்றோர்களும், மற்றவர்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு செக்ஷனையும் ஒரு செக்ஷனாக வைத்துக்கொண்டு, ஒன்றை மூடியிருக்கிறார்கள். பல கல்லூரிகளில் புதிய புதிய வகுப்புக்கள் திறக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயமும் இருக்கிறது. வேறுசில கல்லூரிகளில் வாய்ப்பு இருக்குமானால், அங்கு இதுபோல இரண்டு வகுப்புகள் ஏற்படுத்த முடியுமானால், அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குரிய பதிலில், தனியார் கல்லூரிகளில் ஏன் பட்டப்படிப்புக்கான வகுப்புகள் சிலவற்றை மூடுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுபோன்ற ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், பேரவையிலே, ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அது உண்மையில் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் பழைய பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஒரு பணிப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் கல்லூரிகளுக்கும் ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு. இதுபற்றி முடிவு செய்ய வேண்டுமென்றால், பல்கலைக்கழகம், அந்த அந்த நிர்வாகங்கள், அரசு ஆகிய இந்த மூன்று பேரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்து ஒரு நிலைக்கு வர வேண்டும். வேறு சில மாநிலங்களிலே கல்லூரி ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு தரக்கூடிய அளவுக்கு சட்டங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் வாங்கும்படியாக கல்வித் துறைச் செயலாளர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கைகளையெல்லாம் வாங்கிப்பார்த்து விரைவிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அப்படி ஒரு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு அரசு தக்க முறையில் முயற்சி எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழ் நாடு அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய பள்ளிகளுக்கான சட்டத்தினுடைய வடிவை வைத்துக்கொண்டு, ஆந்திர அரசாங்கம் அவசரச் சட்டம் பிறப்பித்து ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது. மற்ற மாநிலங்களிலேயும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அப்படியே, இங்கேயும் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து, முதலிலே அவர்களுக்குப் பாதுகாப்பு தந்துவிட்டு, பிறகு முழுமையான சட்டம் கொண்டுவர முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 16

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவசரச் சட்டத்தைப் போடுவதற்கு அடிப்படைச் சட்டத்தையே நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, அவசரப்பட்டு எந்த ஒரு முடிவும் எடுக்கக்கூடாது. அவசரப்பட்டு ஒரு முடிவு எடுத்துவிட்டு, அதன் பிறகு அதிலே வருகிற கோளாறு களைச் சமாளிப்பதற்கு கஷ்டப்படுவதைவிட நாம் தெளிவாக இந்த இரண்டு, மூன்று மாநிலங்களை வைத்து, அவர்களுடைய அனுபவத் தைத் கண்டறிந்து, தீர ஆலோசித்து திட்டவட்டமாக, தெளிவாக ஒரு சட்டம் கொண்டுவருவோமானல், பின்னல் இழுக்கு ஏற்படாது. அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் மற்ற மாநிலங்களிலிருந்து அவற்றை வரவழைத்து, ஆராய்ந்து விரைவிலேயே அறிக்கை தர கல்விச் செயலாளரை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் இது போன்ற சட்டம் அவசியமில்லை, பல்கலைக்கழகமே தேவையான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக் கின்றது என்று கூறியிருக்கின்றார்கள். அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது வாதப் பிரதிவாதங்கள். ஆகவே இதை ஏற்றுக்கொள்வது என்பதை நீதிபதி நிலைமையில் இருந்துதான் நாம் கூற வேண்டும். இருக்கின்ற சட்ட திட்டங்களின்படி நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால், இந்த நிலை வந்திருக்காது. குறைபாடுகள் வருவதன் காரண மாகத்தான், அதற்கு என்று ஒரு தனிச் சட்டம் வேண்டுமென்ற தேவை வருகிறது, அந்த உணர்வு ஏற்படுகிறது. ஆகவே தான் இதைப்பற்றி ஆராய்ந்து பல்கலைக் கழகத்தையும் உள்ளடக்கி வைத்து, நிர்வாகங்களை உள்ளடக்கி வைத்து, தெளிவான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு இருக்கின்றது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, 1969-ல் டாக்டர் பால் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. பள்ளி ஆசிரியர் களுக்குரிய பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர என்று ஒரு குழுவை நியமித்தோம். அதுபோன்ற ஒரு குழுவை நியமித்தால், 3 அல்லது 4 ஆண்டுகளிலாவது நாம் ஒரு சட்டம் கொண்டுவர முடியும். அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தச் சட்டங்களைப் பார்த்தால், அவசரச் சட்டமே கொண்டு வரலாமா, அல்லது குழு அமைக்கலாமா, அந்தக் குழு விருவிருப்பாக, சுறுசுறுப்பாக பணியாற்றுமா, பணியாற்றுவதற்கு உறுப்பினர்கள் எல்லாம் உதவி செய்வார்களா என்பதையெல்லாம் பார்த்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது. ஆறு மாதம் இல்லை, 6 வருடத்தில் சட்டம் கொண்டுவரலாம். அது பணி புரிபவர்கள் தன்மைகளைப் பொருத்திருக்கின்றது. ஆனல் அது திட்டவட்டமாகவும், தெளிவாக வும் வெளியிடப்பட வேண்டும் என்பதுதான் என் நோக்கம்.

*Regulation of English Medium Primary and Nursery Schools.*

*22 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to regulate the functioning of the English Medium Primary and Nursery Schools in the State : and

(b) if so, the details thereof ?

ஆங்கிலப் பயிற்று மொழி தொடக்கப் பள்ளிகள், குழந்தைப் பள்ளிகள் ஆகியவைகளை முறைப்படுத்தல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள ஆங்கிலப் பயிற்று மொழி தொடக் கப் பள்ளிகள், குழந்தைப் பள்ளிகள் ஆகியவை செயல்படுவதை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலம் பூராவும், இந்த ஆங்கிலப் பயிற்சி மொழி தொடக்கப் பள்ளிகள் தனியார்களாலே நடத்தப்பட்டு வருகின்றன. பணம் சம்பாதிப்பதற்கு நல்ல வழியாக இருக்கின்றது என்ற அளவிலேதான் அவைகள் நடத் தப்பட்டு வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே அரசு அதனைத் தடுக்க, முறைப்படுத்த சட்டம் கொண்டுவர முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 16

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதை முறைப்படுத்திக்கொள்வதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. முதலிலே இது மாதிரி அங்கீகரிக்கப்படாத பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்களையெல்லாம் சேர்க்கக்கூடாது என்று கூட நாங்கள் சொன்னோம். ஆனால் அதன் காரணமாக பல்வேறு பள்ளிகளிலே இருப்பவர்கள் விண்ணப்பங்கள் கொடுத்து, அந்த முறை கூடாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கடைசியிலே 5-வது வகுப்பு வரையிலே இருக்கலாம் என்று முடிவு செய்தோம். அவர்கள் 6-வது வகுப்பு படிக்கும்போது, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலேதான் படித்திருக்க வேண்டும். அப்போதுதான் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டோம். அப்போதும் 7-வது, 8-வது ஏற்கெனவே பயிற்சி பெற்ற மாணவர்களை எந்தப் பள்ளியிலும் சேர்க்க முடியாதபடி அவதிக்கு உள்ளாகின்றார்கள் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு 7-வது 8-வது வகுப்பில் இருப்பவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று இருந்தது. 1974–75க்குப் பிறகு 5-வது வகுப்பு வரையிலே தனியார்கள் பள்ளிகளை நடத்தலாம், அதற்குப் பிறகு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் படித்த மாணவர்கள் தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் சேர்ந்துவிட்டால் தான் அவர்களுக்கு எதிர் காலத்தில் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று திட்டவட்டமாக ஒழுங்குமுறைப்படுத்தி உத்தரவிட்டிருக்கின்றோம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்த மாதிரிப் பள்ளிகளில் கொடுக்கப்படும் கல்வியின் தரம் சிறப்பாக உள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்தெந்த நோக்கத்தின் அடிப்படையிலே வைத்துப் பார்க்க வேண்டும் என்பதைத் தனியாகக் காண வேண்டும். அந்தக் கல்வி சிறப்பாகத்தான் இருக்கும். ரூ. 35, ரூ. 50, ரூ. 60 என்று பணம் கட்டி, சீருடைகள் வழங்கி, பிள்ளைகளை கவனிக்க ஆயாக்கள் வைத்து, இப்படியெல்லாம் படிப்பு சொல்லிக்கொடுத்தால், யாருக்கும் கல்வி நன்றாகத் தான் வரும். ஆனால் மாநகராட்சி, ஊராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிகளிலே மிகமிகச் சாதாரணமானவர்களை வைத்து நடத்தப்படும் கல்வியாக இருக்கின்றது. கல்வித் தரம் ரூ. 35, ரூ. 50, ரூ. 60 என்றால், சில இடங்களில் ரூ. 100 கூட வாங்கப்படுகின்ற இடங்களில் வாய்ப்பு வசதிகள் எல்லாம் இருக்கும், செய்தும் கொடுக்கின்றார்கள். அப்படிப்பட்ட வசதி வாய்ப்புகள் இருக்கின்ற இடங்களில் படிக்கக்கூடிய மாணவர்களின் கல்வித் தரம் உயர்ந்துதான் இருக்கும். ஆனால் எந்தெந்த வகையிலே தரம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆங்கிலத்திலே அவர்களுக்குத் தரம் இருக்கலாம். அந்தப் பள்ளிகளிலே தமிழ் தரம் உயர்ந்து இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.



1974 டிசம்பர் 16]

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, 6-வது வகுப்பிலே கொண்டுபோய்ச் சேர்க்கலாம் என்று அரசு அனுமதிக்கிறது. ஐந்தாவது வகுப்பு வரை அவர்கள் இப்படிப்பட்ட வியாபாரங்களை நடத்தலாம் என்று அரசு அனுமதிக்கிறது. இதனால் முதலீடு இல்லாமலேயே கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கக்கூடிய கல்வி நிறுவனங்களாக அவைகளை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆங்கில மோகத்தை அதிகமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் ஆர்வத்தைக் குறைக்கக்கூடிய சூழ்நிலையிலே இவர்கள் வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இதைக் கட்டுப்படுத்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலேதான் படிக்க வேண்டுமென்ற சட்டத்தை அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முதலிலேயே அப்படிப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் பல்வேறு விண்ணப்பங்கள், முறையீடுகள் வந்தன. அதற்குப் பிறகு அதற்கு இடமளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அப்படி தனிப்பட்ட பள்ளிகளாக இருந்து, அரசாங்கத்தின் உதவி பெறாமல், நாங்கள் பள்ளிகள் நடத்துகிறோம் என்று வருகிறபோது, அவர்களைத் தடுத்து நிறுத்த உரிமை இல்லை. நம்மிடம் பணம் வாங்காதவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு நமக்கு உரிமை இல்லை. எங்களுக்குப் பணம் தேவையில்லை என்று சொல்கின்றபோது, அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்தக் கூடாது என்று, அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால் பெற்றோர்கள் அப்படிப்பட்ட பள்ளிகளில் பிள்ளைகளைப் படிக்க வைத்துவிடுகிறார்கள். ஐந்தாவது வரை படித்தவர்களை எக்காரணம் கொண்டும் சேர்க்கக்கூடாது என்றால், அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. பெற்றோர்களும் வருந்துகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தால், மெல்ல மெல்ல கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம் என்ற அளவில் இருக்கிறோம். 8-வது 10-வது வகுப்பு வரையிலே அப்படிப்பட்ட பள்ளிகளிலே படித்தவர், ஒழுங்கு படுத்தப்பட்ட,

அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலே இடம் தேட வேண்டும் என்ற நிலையையும் மாற்றி, 5-வது வகுப்புக்கு மேல் வருகிறவர்களைச் சேர்க்கக்கூடாது என்று கடுமையான ஒரு உத்தரவைப் போட்டிருக்கின்றோம். அப்படிச் சொல்லிக் கொடுத்தாலும், இனிமேல் 5-வது வரையிலும் சொல்லிக்கொடுக்கலாம். 6-வது வகுப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடத்திற்கு வந்தால்தான் அவர்களுடைய எதிர் காலம் செம்மையாக இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில பள்ளிகள் நல்ல முறையிலே தரமாக நடத்தப்படுகின்றன. ஆனால் பல பள்ளிகள் தரமே இல்லாமல் நடத்தப்படுகின்றன என்று எனக்குத் தெரிய வருகிறது. அப்படி பல பள்ளிகளிலே போதுமான அளவுக்குப் பயிற்சி இல்லாத ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். வசதியில்லாத நிலைமையிலே பல குழந்தைகள் படிக்க வேண்டியிருக்கிறது. தரத்திற்காக ஒரு கட்டுப்பாடு வேண்டும். அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளவிலாவது ஒரு கட்டுப்பாட்டை அரசு விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன். கட்டுப்பாடே இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமையிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே எடுத்துச் சொன்னேன். நாம் மான்யம் வழங்காமல் கேட்பதற்கு நமக்கு உரிமையில்லை. அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுவது போன்று, அவை தரம் இல்லாத பள்ளிக்கூடங்கள்தானா என்று பார்க்க வேண்டியது பெற்றோர்களுடைய பொறுப்பு. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு தங்களுடைய பிள்ளைகளை அனுப்பக்கூடாது என்று அவர்கள் முடிவெடுக்க வேண்டும். அப்படி முடிவு செய்தால், அப்படிப்பட்ட பள்ளிகள் நடைபெறாது. வீட்டிலே பிள்ளைகள் தொல்லை கொடுக்காமல் இருந்தால் போதும் என்றும், அதுவே பரவாயில்லை என்றும் எண்ணி பல பேர் பிள்ளைகளை அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் அந்த வகையிலே கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். இப்போது இருக்கின்ற சூழ்நிலைகள், சட்டதிட்டங்கள் இவைகளின் அடிப்படையிலே தான் நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 4-30)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆங்கில மீடியம் பள்ளிகளிலே மாணவர்கள் இவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்ற உச்ச வரம்பு ஏதாவது இருக்கிறதா? எவ்வளவு வேண்டுமானாலும் அந்தப் பள்ளி ஆசிரியர்கள்





சம்பளம் பெறலாமா? அத்துடன் உத்தேசமாக எத்தனை பள்ளிகள் அந்தமாதிரி நம் மாநிலத்தில் இருக்கின்றன என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கணக்கெடுப்பதற்கு வாய்ப்பில்லை. அதைத் தான் கட்டுப்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். அப்படிக் கட்டுப்படுத்த இயலுமா என்பதைப்பற்றி சட்டத் துறை தான் அறிவுறுத்த வேண்டும். இவ்வளவுதான் வசூலிக்க வேண்டுமென்று வரையறுத்து எடுத்துச் சொன்னால், அதைக் கூடச் செய்வார்கள். பிறகு Good Friday, Sunday, Saturday என்று அதற்காக வெல்லாம் நிதி வசூல் செய்து பெற்றுக்கொள்வதற்கான தந்திரம் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வழி இல்லை. சட்டத்திலே இடம் இருக்குமானால், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. சட்டத் துறை அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க நமக்கு உரிமை இல்லையென்று சொல்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறையில் இருக்கும் பள்ளிகளை விடுத்து, இனிமேல் புதிதாக பள்ளிகள் துவக்கக் கூடாதென்று உத்தரவு போட்டால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முடியாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமையின்படி நமக்குத் தடுத்து நிறுத்த இப்பொழுது உரிமை யில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இது மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒரு விஷயம். இம்மாதிரி பப்ளிக் ஸ்கூல் களுக்கு அரசு கிராண்ட் கொடுக்கவில்லை. என்றாலும் கூட, அந்தப் பாடசாலைகளில் கல்வி போதனை சரியானபடி நடக்க வேண்டும். அந்தப் பாடசாலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அவைகள் சரிவர நடைபெறுவதற்கும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தான் இருக்க வேண்டுமென்ற விதிகளையாவது நாம் போட்டு உத்தரவிடக் கூடாதா? இதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு மானியம் தருவதில்லை. இந்த நிலைமையில் இப்போதிருக்கிற விதிப்படி கட்டுப்படுத்த உரிமையில்லை. ஆறாவது

[1974 டிசம்பர் 16

வகுப்பில் சேர்ப்பதானாலும் கூட, டெஸ்ட் வைத்து தான் மாணவர்களைச் சேர்க்கிறோம். மூன்று ஆண்டு, நான்கு ஆண்டு படித்திருந்தாலும் கூட, 6-வது வகுப்புக்கு வரும்போது சோதனை வைத்துத் தான் சேர்த்துக்கொள்ள விதி இருக்கிறது. அந்த விதியின்படி தான் சேர்க்க வேண்டும். கட்டுப்படுத்துவதற்கு வழி இல்லையென்று சட்டத் துறையினர் சொல்கிறார்கள். அதற்கு விதி இருக்குமானால், நாம் வகை செய்யலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்த நர்சரி வகுப்புகளிலே செல்வந்தர்கள் தங்களுடைய குழந்தைகளை அனுப்புகிறதை ஒரு பெருமை என்று நினைக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தில் தாங்கள் உயர்ந்தவர்களாயிருப்பதை எடுத்துக் காட்டுவதற்கு இதை ஒரு அளவு கோலாகவும் கருதுகிறார்கள். இந்த விதமாக அவர்கள் கருதும் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு 5-வது வகுப்பில் நாம் தேர்வு வைத்து எடுப்பதற்கு குறைந்த அளவு 100 ரூபாய் கட்டணம் கட்டி தேர்வு எழுத வேண்டுமென்ற ஒரு விதியைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதால், அவர்களிடம் அதிகப் பணம் இருப்பதால், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கட்டணமாக மாதந்தோறும் 35 ரூபாய் வரை கொடுத்து வருகிறார்கள். எனவே அப்படி ஏதேனும் சட்ட திட்டங்களை அரசு கொண்டு வர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதுவும் 5-வது வகுப்புக்கு வரும்போது 10 வயது ஆகியிருக்க வேண்டுமென்று வரையறை இருந்தாலும் கூட, அங்கு படித்து விட்டு 8-வது வயதில் இங்கு வந்து சேர்க்க முயல்கிறார்கள். மற்ற மாணவர்களை விட தங்களுடைய பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டுவர பணக்காரர்கள் முயலுகிறார்கள். அதைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த விதிமுறைகளைப்பற்றிச் சரியான தகவல் இப்பொழுது என்னிடம் இல்லையென்றாலும் கூட, ஓரளவுக்கு வயதிலே நாம் வரம்பு வைத்திருக்கிறோம். மேலும் எஸ்.எஸ்.எல்.சி. போன்றவற்றை எழுதும்போது, இந்த வயதைத் தாண்டினால் தான் எழுதலாம் என்ற வரையறை வைத்திருக்கிறோம். தேறுவதற்கு அப்படிப்பட்ட முறை வைத்திருக்கிறோமா என்பதுபற்றி என்னிடம் தகவல் இல்லை: தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். ஆனால் அப்படி இருக்கிறது என்பது தான் என்னுடைய கருத்து.



1974 டிசம்பர் 16]

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: துணைத் தலைவர் அவர்களே, 10 பேர் தொடர்புடைய எந்தப் பொதுப் பணியினையும் ஒழுங்கு படுத்துவதற்கு அரசுக்கு அடிப்படையான அதிகாரம் இருக்கிறது. மான்யம் வழங்குவது போன்ற பிரச்சினைகள் இருந்தாலும், பொது மக்களோடு தொடர்புடைய எந்த ஒரு பணியினையும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு நியாயமான அடிப்படை உரிமையிருக்கிறது. அரசு இதைக் கருத்தில் கொண்டு, அதை ஒழுங்கு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருகால் செய்ய முடியாது போனால், அரசுத் தரப்பிலாவது தரமான பள்ளிகளைத் தொடங்கி, அவைகளை தானே மூடும்படி செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளத்திற்கு நியாயமென்றுபடுகின்ற தன்மைகளை, சட்டப்படி இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டு, அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இப்பொழுது இருக்கிற பிரச்னை, நம்முடைய, உள்ளத்திற்கு நியாயமென்று படுகின்ற தன்மைகளை சட்டப்படி இப்பொழுது அமுலுக்குக் கொண்டு வருவதில் பிரச்சினைகள் இருக்கின்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எடுத்து-ச் சொல்லியது போல (அதற்கு நாம் செய்ய வேண்டிய மாற்று என்னவென்றால்) அவர்கள் சொல்லிய அதே அளவுக்குக் கட்டணம் விதித்து, கட்டுப்பாடோடு கூடிய நர்சரி பள்ளிகளை ஆரம்பித்து, இப்பொழுதுள்ள பள்ளிகளில் எண்ணிக்கை குறைந்து அதில் அதிக எண்ணிக்கையில் வந்து சேர்வார்களானால், அப்பொழுது அதற்கு ஒரு தன்மை வந்து, இப்பொழுது மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் மற்றப் பள்ளிகளுக்கும், அரசாங்கப் பள்ளிகளுக்கும் மற்றப் பள்ளிகளுக்கும், அரசாங்கக் கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் இடையே உள்ள. அதே வேறுபாட்டைத் தான் இங்கும் கொண்டுவந்து சேர்த்துவிடும். நம்முடைய நேரமும் பாழாகும். நம்முடைய பொருளும் பாழாகும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறும்போது, மான்யம் வழங்கப்படாத பள்ளிகள்மீது கட்டுப்பாடு விதிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை யென்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது கல்வித் துறையிலிருந்து ஒரு ஆணையில் ரிக்கனைஸ்டு அன்-எய்டட் ஸ்கூல் என்று மான்யம் வழங்காது கட்டுப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன, தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன ஆதலால் மான்யம் வழங்கவில்லை என்பதால், அதிகாரம் இல்லை

யென்று கூறாமல், இன்றைக்கு அரசு மான்யம் வழங்கி இதைக் கட்டுப் படுத்துவதற்கு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட மான்யம் வழங்கப்படாத பள்ளிகளை நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அவர்களாக நம் கட்டுப் பாட்டிற்குள் வருவதற்கு வழி உண்டு. படித்த மாணவர்கள் பின்னால் போக வேண்டாம் என்பதற்காக அவர்கள் மான்யம் வேண்டாம், அங்கீகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் நம் கட்டுப் பாட்டின்கீழ் வர வேண்டுமென்பதற்காக நீங்கள் அங்கீகாரம் பெற வாருங்கள், அங்கீகாரம் பெற்றே தீர வேண்டுமென்று அவர்களை வற்புறுத்த இப்பொழுது இருக்கும் சட்டத்தில் இடமில்லை என்பது தான் நம்முடைய பிரச்சினை.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, 1966-ஆம் ஆண்டு தனியார் கல்வி நிறுவனங்களை, டுட்டோரியல் கல்லூரிகளை வரன் முறைப்படுத்துவதற்கு ஒரு சட்டத்தை ஏற்படுத்தி, அது உயர் நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட்டு வரை போயிருக்கிறது. அந்தச் சட்டத்தில் இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளையும் ஒழுங்கு படுத்த வழி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தச் சட்டத்தை வெகு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வர அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலிருந்தே எடுத்துச் சொல்வது தனியார் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்த அரசியல் சட்டப்படி சிறு பான்மையோர்க்கும் மற்றவர்க்கும் முழு உரிமை இருக்கிறது. ஆனால் நாம் அங்கீகரிக்கும்போது, நாம் வேண்டுமானால் அவர்கள் கடைப் பிடிக்கும் வண்ணம் சில சட்ட திட்டங்களைப் புகுத்தலாம். நாம் அங்கீகரித்த பிறகு, அவர்கள் நாம் விதித்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு தான் ஆக வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு சொல்லியிருக் கிறது. யாரும் பள்ளிக்கூடம் நடத்தக் கூடாது என்றோ, அட்மினிஸ்ட்டிரேஷன் செய்யக் கூடாது என்றோ தடுத்து நிறுத்த உரிமை இல்லையென்று இரண்டு மூன்று வழக்குகளிலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பினுடைய நிழலிலே நின்று கொண்டுதான் இப்பொழுது பல பேர் இந்த மாதிரிப்பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.



THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether apart from complaints from the hon. Members of this House, the Hon. the Minister for Education has received any specific complaints from the general public and if he has received complaints from the general public, whether such complaints have been made by parents who have admitted their children to such schools or parents who have not admitted their children to such schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகள் பெற்றவர்களிடமிருந்து நேரடியாக வரவில்லை. பெற்றவர்களுடைய பிரதிநிதிகளிடமிருந்து தான். . . .

*Craft Instructors and Drawing Masters*

* 23 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that interview cards have not been sent to Craft Instructors and Drawing Masters who have applied for admission for the B.Ed. Course for the year 1974–75 ;

(b) if so, the reason therefor ; and

(c) whether they will be eligible for admission to the B.Ed. course during the subsequent years, even if they complete 35 years of age ?

கைப்பணி ஆசிரியர்களும், சித்திரக் கலை ஆசிரியர்களும்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1974–75-ல், பி.எட். பாடமுறையில் அனுமதிக்கப்படு வதற்காக விண்ணப்பித்துக் கொண்ட கைப்பணி ஆசிரியர்கள், சித்திரக்கலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு நேர்முகத் தேர்வு அட்டைகள் அனுப்பப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அவர்கள் 35 வயதைப் பூர்த்தி செய்த போதிலும், அடுத்துவரும் ஆண்டுகளில், பி.எட் பாடமுறையில் அனுமதிக்கப் படுவதற்கு அவர்கள் தகுதி உள்ளவர் ஆவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) வயதான பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிக்கு மனுச் செய்தால், அவர்களுக்குத் தனியாக விதிவிலக்கு அளிக்க இடமுண்டு.

Strength of students in the Sixth Standard in the High Schools located in Urban Areas

* 24 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that there is a shortfall in the strength of students in the Sixth Standard in the High Schools located in Urban Areas; and

(b) if so, the reasons therefor ?

நகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆறுவது வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆறுவது வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) கிராமப்புறப் பகுதிகளில் பல புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அங்கு கல்வி பயில வாய்ப்பு உள்ளதால், நகர்ப்புறங்களுக்கு வருவது குறைந்திருக்கலாம். மேலும் உயர் துவக்கப் பள்ளிகளில் சிறப்புக் கட்டணம் வசூல் செய்யாததால் அதிக மாணவர்கள் அங்கு சேர விரும்பலாம். இக்காரணங்களால் ஒரு சில நகர்ப்புறங்களில் 1973–74-ம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் 6-வது வகுப்பில் புதிதாகச் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை சிறிதளவு குறைந்திருக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, நகர்ப் புறத்தைப் பொறுத்தமட்டிலே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றி என்றுதான் சொல்கிறார்கள். மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்த காரணத்தாலே, அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுடைய பணி பாதுகாக்கப்படுமா, வேலை இழக்காமல் பணிப் பாதுகாப்பு கிடைக்குமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் வெற்றியாக இருந்தால், நாம் எல்லோரும் பெரு மகிழ்ச்சியடையலாம். ஏனென்றால் ஏற்கெனவே நகர்ப்புறங்களில் பல மைல்களுக்கு அப்பால்கூட பள்ளிகள் இல்லாமல் இருந்தன. இப்பொழுது இரண்டு மைல்கள், மூன்று மைல்களுக்குள்ளேகூட புதிய புதிய உயர்நிலைப் பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள் எல்லாம் துவங்கி விட்டன. ஏழு மைல், 8 மைல் தூரம் நகர்ப்புறத்திலே நடந்து படித்தவர்கள் எல்லாம் இன்று ஊருக்குப் பக்கத்திலே படிக்கின்ற நிலை வந்ததால்தான் ஆறும் வகுப்பிலே எண்ணிக்கை குறைந்தது. இப்பொழுது ஒரு தனியார் பள்ளியிலிருந்து மற்றொரு தனியார் பள்ளிக்குப் போகலாமென்றும் வழி ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்டவர்கள் வேறு பள்ளிகளிலே பணியாற்றும்படியான வாய்ப்புகள் ஏற்பட்டதன் காரணமாக, பல்லாண்டுகள் பணியாற்றிவர்களுக்கு வேலையை இழக்க வேண்டுமென்ற ஒரு நிலைமை வருமேயானால், சட்டப்படி பாதுகாப்பு ஏற்படுத்தித் தருவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள மாவட்ட கல்வி அதிகாரிகள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடும்படியாக கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, 6-ம் வகுப்பில் பரவலாக கிராமப்புறப் பள்ளிகளில் மாணவர்கள் தேறுவதில்லை என்ற ஒரு நிலை காணப்படுகிறது. படித்தாலும் வேலையின்மை என்ற ஒரு நிலை காரணமாகவும், படித்து என்ன செய்யப் போகிறோம் என்ற ஒரு அதிருப்தியின் காரணமாகவும் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்ற ஒரு நிலையிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை 5-ம் வகுப்பில் படிக்கிற மாணவர்களுக்கு இருக்குமானால், உள்ளபடியே இந்த நாடு எவ்வளவோ முன்னேறியிருக்கும். நம்முடைய நாட்டுக் கணக்கைப் பார்த்தால் நூறு பேர் முதல் வகுப்பில் போய்ச் சேர்கிறார்கள் என்றால், 51 பேர் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வகுப்பிலே "டிராப் அவுட்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு நின்று விடுகிறார்கள். பிறகு 49 பேர் தான் 6-வது வகுப்பில் வந்து சேர்கிறார்கள். அனைவரையும் ஒரு குறைந்த அளவு எட்டாவது வகுப்பு வரையிலாவது கொண்டு செல்ல வேண்டுமென்ற முயற்சியிலே நாம் ஈடுபட்டு அவர்களுக்கு மதிய

உணவுத் திட்டம், சீருடை வழங்கல், மற்றும் பல்வேறு வசதி வாய்ப்புகளை எல்லாம் செய்து கொடுத்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய திட்டமெல்லாம் குறைந்த அளவு எல்லா மாணவர்களும் எட்டாவது வகுப்பு வரையிலாவது பயில வேண்டுமென்பது தான். ஆனால் அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு 6-வது வகுப்பில் சேர வேண்டாமென்ற முடிவுக்கு இன்னும் வரவில்லை.

*Payment of full Pension and 80 per cent Death-cum-Retirement Gratuity immediately on Retirement.*

* 25 Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the declared policy of giving full pension and 80 per cent of Death-*cum*-Retirement Gratuity immediately on retirement, is being fully implemented in the case of retired teachers of Aided Schools; and

(b) if so, the number of pending cases as on date?

ஓய்வு பெற்றதும், முழு ஓய்வூதியமும், 80 சதவீத பணிக்கொடையும் உடனடியாக வழங்கல்

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பணியாளர்கள் ஓய்வு பெற்றதும் உடனடியாக முழு ஓய்வூதியமும், 80 சதவீத பணிக்கொடையும் அளிக்கப்பட வேண்டும் என்கிற அரசின் கொள்கை மானிய உதவி பெறும் பள்ளிகளில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் நேர்வில், முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆமெனில், நாளது வரையில் முடிவுறாமல் உள்ள நேர்வுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

21—3—1974 தேதியிட்ட அரசு ஆணை எண் 430-ல் (கல்வித் துறை) இதற்கான வழி செய்யப்பட்டுள்ளது.

(இ) இந்தத் தகவல்கள் ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெற வேண்டும். இவற்றைச் சேகரிப்பதற்குத் தேவையான காலமும், பிரயாசையும் அதனால் வரும் பொதுப்பயனுக்கு ஏற்றதாக இராது.





திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் கூட எப்படி 80 சதவிகிதம் ஓய்வூதியம் வழங்குவது என்ற முறை மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படவில்லை. அங்கு விண்ணப்பித்தவர்களுடைய விண்ணப்பமும் உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டு, அவர்களுக்கே திரும்பி வந்து விடுகிறது. அதனால் எத்தனை பேர் பெற்றிருக்கிறார்கள் என்ற கணக்கே வராது. எனவே மிகவும் தெளிவான உத்தரவை, எப்படி வழங்க வேண்டும், யார் வழங்குவார் போன்ற சில முறைகளை வகுத்து உடனடியாக உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உரிய அதிகாரிகளிடமிருந்து இது குறித்து விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநரகம் இது குறித்து துரித நடவடிக்கை எடுக்கும். 80 சதவிகித ஓய்வூதியம்பற்றி விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். விவரங்கள் உரியவர்களிடமிருந்து காலா காலத்தில் வராததால், காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினர் சொல்லுவது போன்று நிலைமைகளைத் தெளிவுபடுத்த இயக்குநரகம் முயலும்.

(பிற்பகல் 4-40)

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி முதன்முதலாக அறிவித்தபோது, நாட்டிலுள்ள பள்ளி ஆசிரியர்களும் உடனடியாக இதில் 80 விழுக்காடு பணிக்கொடைப் பணம் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அக்கவுண்டண்ட்-ஜெனரல் அலுவலகத்தில் கணக்குத் தலைமையாளர் அதிலே பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு இடங்களிலே பல்வேறு நிலையில் பணியாற்றி இருக்கும் காரணத்தினால், அவர்களுடைய பணிக்காலம், சம்பளம் பற்றிய விவரங்கள் கிடைப்பதில்லை என்று சொல்லி, அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். எனவே அடிப்படைக் கருத்தின்படி உடனடியாக எல்லா ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளியில் இருந்திருந்தாலும் வேறு பள்ளிகளில் இருந்திருந்தாலும், இது உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு அதுபற்றிய குறிப்பினை மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதிலே உள்ள சங்கடங்கள் என்ன என்பதை அறிந்து, அந்தச் சங்கடங்களை எப்படிப் போக்கலாம் என்பதையும் அறிந்து, பின்னர் அவர்கள் அவ்வளவு பேரும் இதை உடனடியாகப் பெறும் வழிமுறைகளைக் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றிய குறிப்புகளை மாவட்டக் கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்று அவற்றைச் செம்மையாக்குவதற்கு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு அறிவுரை கூற அரசு முயலும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களில் பலர் ஓய்வுபெற்று இதுகாறும் மூன்று நான்காண்டு காலமாகியும் அவர்களில் பலருக்கு இன்னும் பென்ஷன், கிராசுயிடி ஏதும் கொடுக்கப்படாமல் இருந்துவரும் நிலைமை இருக்கின்றது. இப்படி ஏதும் வழங்கப்படாமல் இருப்பவர்களுக்கு 80 சதவிகிதம் கிராசுயிடி, பென்ஷன் தொகையையாவது உடனடியாக வழங்குவதற்கும், இப்படி அவர்கள் ஓய்வு பெற்றவுடன் கொடுக்கும் தொகை போக எஞ்சியுள்ளதை பின்னர் முறையாகக் கணக்குப் பார்த்துக் கொடுப்பதற்கும் அரசு உத்தரவிடுமா? ஒரு மாவட்டக் கல்வி அதிகாரியே நான்காண்டு காலமாக ஓய்வூதியம் பெறாமல் இருக்கின்றார். அவர்கூட இன்றைக்கு வந்திருக்கின்றார். இதைப்பற்றி இயக்குநர் அவர்களிடமும் சொல்ல வேண்டியிருக்கின்றது. இதைப் பற்றி உடனடியாக அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இங்கே கொடுத்துள்ள குறிப்பில்

"In many cases, pension claims and DCRG are settled immediately after the retirement of the teachers and in cases of delay for want of complete particulars, anticipaory pension of 80 per cent is sanctioned to the retired teachers." என்று இருக்கின்றது. பெரும்பாலானவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்பட்டு விடுகிறது. சிலருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்றால், அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கக்கூடும். அதிலே ஏதாவது சங்கடங்கள் இருந்தால், அதைத் தீர்ப்பதற்கு வழி முறைகளைக் காணலாம். அவற்றுக்கான வழிமுறைகளைக் காண வேண்டும் என்று, அவை என்னென்ன என்பதைப் பற்றி கல்வித் துறை அதிகாரிக்கும் இயக்குநர் அவர்களுக்கும் எடுத்துச்சொல்லும் முயற்சியில் நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.



*Bachelor Degree and Diploma Course in Pharmacy.*

*26 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the students who have passed Bachelor Degree and Diploma Course in Pharmacy beyond April 1972, from the Madras and Madurai Medical Colleges, could not be registered by the Madras Pharmacy Council;

(b) if so, the number of students for whom such registration could not be done;

(c) the reason therefor; and

(d) the action proposed to be taken by the Government in the matter?

மருந்தியல் பட்டப் படிப்பு, பட்டயத் தகுதிப் படிப்பு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, சென்னை மருத்துவக் கல்லூரிகளில் பயின்று, 1972 ஏப்ரலுக்குப் பின்னர், மருந்தியல் பட்டப்படிப்பு, பட்டயத் தகுதிப் படிப்புகளில் தேறிய மாணவர்கள் தமிழ்நாடு மருந்தியல் மன்றத்தால் பதிவு செய்து கொள்ளப்பட இயலவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், எத்தனை மாணவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்ளப்பட இயலவில்லை?

(உ) அதற்கான காரணம் என்ன?

(எ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ)

| | 1972 | 1973 | மொத்தம் |
|---|---|---|---|
| மருந்தியல் பட்டப்படிப்பு | 81 | 48 | 129 |
| மருந்தியல் தகுதிப்பட்டயப் படிப்பு | 141 | 130 | 271 |

(உ) பதிவு செய்யும் காரியத்திற்காக 1972 ஏப்ரலுக்குப் பின்னர் இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்திய மருந்தியல் மன்றத்தால் ஏற்பளிக்கப்படவில்லை.

சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளின் மருந்தியல் தகுதிப் பட்டயம் பாடமுறைக்கும், பட்டப்படிப்புப் பாடமுறைக்கும் இந்திய மருந்தியல் மன்றம் தற்போது ஏற்பளித்துள்ளது. பதிவு தற்போது கீழ்க்கண்டவாறு செய்யப்பட்டு வருகிறது :—

(1) சென்னைப் பல்கலைக்கழகத் தகுதிப் பட்டயம்— 31—8—1975 வரை ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

(2) மதுரைப் பல்கலைக்கழகத் தகுதிப் பட்டயம்— 31—8—1976 வரை ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

(3) சென்னைப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு— 31—7—1976 வரை ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

(4) மதுரைப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு— 31—7—1976 வரை ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

(எ) இவ்வினா எழவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்னென்ன குறைபாடுகள் காரணமாக மருந்தியல் மன்றத்தினால் பதிவு செய்துகொள்ள மறுக்கப்பட்டது என்பதையும் அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் இதிலே, ஒவ்வொரு முறையும் இரண்டாண்டு காலத்திற்கு அல்லது மூன்றாண்டு காலத்திற்கு ரெகக்னைஸ் பண்ணுவது என்ற முறையை வைத்திருக்கின்றார்கள். அதிலே 1972 வரையில் அந்த அனுமதியினை வழங்கியிருக்கின்றார்கள். 1972-க்குப் பிறகு, அதை உடனடியாக வழங்கத் தவறியிருக்கின்றார்கள் என்றுதான் தெரிகின்றது. வேறு காரணங்கள் இருக்கும் என்றால், அது பற்றிய விவரங்களையறிய தனிக் கேள்வி போட்டால், அவற்றைப் பெற முடியும்.

*Family Planning.*

* 27 *Q*.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon the Minister for Health be pleased to state—

(*a*) whether contraceptive pills are distributed to women in all the Family Planning Centres and Government Hospitals in Tamil Nadu; and



(*b*) if not, whether arrangements will be made to distribute the same?

குடும்பக் கட்டுப்பாடு

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களிலும், அரசாங்க மருத்துவமனைகளிலும் பெண்களுக்குக் கருத்தடை மாத்திரைகள் வழங்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களில் பெண்களுக்கு கருத்தடை மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் யோசனையை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, this method of family planning requires a high degree of knowledge on the part of the participants. May I know whether Government will issue proper instructions because if these bills are not taken during certain periods, there is the danger of the ladies conceiving again and setting at nought the family planning programmes in the State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மாத்திரைகளைப் பயன்படுத்துவதில் அதிக அளவிற்குக் கண்காணிப்பு தேவைப்படுகிறது. இதைப் பயன்படுத்துவது என்றால், அதைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருப்பதால்தான், தெரிந்தெடுக்கப்பட்ட பதினான்கு நிலையங்களிலே மட்டும்தான் அது கொடுக்கப்படுகிறது. தமிழகத்திலே நூற்றுக்கணக்கான நிலையங்கள் இருந்தாலும், இந்தக் காரணத்தினால்தான் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த நிலையங்களிலே மட்டும் கொடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டுமென்று விரும்பிய நேரத்தில் முதல் கட்டத்தில் மாநிலத்திற்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தெரிந்தெடுத்து செயல்பட்டால் போதும் என்று மத்திய அரசு கருத்தினைத் தெரிவித்த நேரத்தில், அது பயன்படாது என்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 அல்லது 40 ஆரம்ப சுகாதார

நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு நிலையங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருந்தும், இப்போது இந்த பதினுன்கு நிலையங்களிலே கொடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் வழங்குவதில் குறைபாடுகள் ஏதேனும் இருந்தால், அவற்றைப் பரிசீலித்து தகுந்த வகையில் அறிவுரைகளை வழங்கலாம் என்று அரசு கருதுகிறது.

*X-Ray Units*

*28 *Q*.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to install X-Ray Units in all the Taluk Headquarters Government Hospitals of Tamil Nadu; and

(*b*) if so, the action taken thereon?

ஊடுருவு கதிர்ப் பிரிவுகள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழகத்தில் உள்ள எல்லா தாலுகா தலைமையிடங்களிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளிலும் ஊடுருவு கதிர்ப் பிரிவுகளை (X-Ray Units) ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மொத்தமுள்ள 97 தாலுகா மருத்துவ மனைகளில் 69 தாலுகா மருத்துவமனைகளில் ஊடுருவு கதிர் பிரிவுகள் உள்ளன. மீதமுள்ள 28 மருத்துவ மனைகளில் நிதி நிலைமைக்கு ஏற்ப ஊடுருவு கதிர் பிரிவுகள் படிப்படியாக அமைக்கப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இந்த யூனிட் இல்லாத மருத்துவமனைகளிலே ஏழைகள் மருத்துவத்திற்காகப் போனல், அவர்களை வெளியே சென்று எக்ஸ்-ரே படம் பிடித்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அப்படிப் பட்ட நிலைமைகளைப் போக்க மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் அதைக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அண்மைக் காலத்தில்தான் பல இடங்களிலே சுமார் 40 இடங்களிலே வாங்கப் பட்டிருக்கின்றது. அதற்கு முன்பு அப்படிப்பட்ட குறைபாடு இருக்கத் தான் இருந்தது. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் மற்ற மருத்துவமனைகளிலும் தொடர்ந்து அவற்றை ஏற்பாடு செய்ய ஆலோசனை இருக்கின்றது.

*Construction of a Small Reservoir in Tiruchirappalli District*

*29 *Q*.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the ryots have made any representation for the construction of a small reservoir at Vadakarai Channel area near Sri Ramasamudram, Cauveri basin, Tiruchirappalli District; and

(*b*) if so, the action taken thereon?

திருச்சி மாவட்டத்தில் சிறிய நீர்த் தேக்கம் அமைத்தல்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சி மாவட்டத்தில், காவிரிப் பகுதியில் ஸ்ரீராமசமுத்திரத்தின் அருகில், வடகரை வாய்க்கால் பகுதியில், சிறிய நீர்த்தேக்கம் அமைக்குமாறு விவசாயிகள் கேட்டுள்ளார்களா?

(இ) ஆமென்றால், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, வடகரை வாய்க்கால் பகுதியில் அந்த நீர்த்தேக்கம் அமைக்கும்படி அந்தப் பகுதியிலுள்ள மக்கள் விண்ணப்பங்களை அனுப்பியிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அதைத்தான் இல்லை என்று சொன்னேன். வடகரை வாய்க்கால் பகுதியில் பாசன வசதி இருப்பதாகவும், எனவே அங்கே அத்தகைய ஒரு நீர்த்தேக்கம் தேவையில்லை என்றும் தலைமைப் பொறியாளர் தகவல் தந்திருக்கின்றார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, வடகரைப் பகுதியில் மேட்டுப்பாங்கான இடங்களிலே உள்ளவர்களுக்கு நீர்ப் பாசன வசதி இல்லை என்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் நிலங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அத்தகைய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இல்லை என்று தெரிவித்தேன். அந்த அணைக்கட்டு தேவையில்லை என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கின்றார்.

*Scheme for Desilting and Deepening the Tanks and Lakes in the State*

* 30 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether there is any scheme with the Government for desilting and deepening the tanks and lakes in the State; and

(b) if so, the details thereof?

இம்மாநிலத்திலுள்ள குளங்களிலும், ஏரிகளிலும் தூர் எடுத்து அவற்றை ஆழப்படுத்துவதற்கான திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்திலுள்ள குளங்களிலும், ஏரிகளிலும் தூர் எடுத்து அவற்றை ஆழப்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) தற்போது தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 73 தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

Thiru G. SWAMINATHAN: Sir, it is said that if improvement is done, by way of desilting, to the Red Hills Lake near Madras, it may be able to help improve the water-supply position in Madras City. As such, may I know whether the Government are taking up any improvement scheme for Red Hills Lake?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கேள்வி "ரெட்ஹில்ஸ்" ஏரியைப் பற்றியது அல்ல. அதைப் பற்றிய விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வியாகக் கேட்டால்தான், தகவல்களைச் சேகரித்துத் தர முடியும். அதுகூட குடிநீர் பற்றியது. மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, எந்த மாவட்டத்தில் அதிகமான ஏரிகள் இருக்கின்றன? அதிலும் அரசாங்கக் கணக்குப் படியே மூன்று மாத ஏரிகள் எல்லாம் இப்போது ஒரு மாத ஏரியாகப் போயிருப்பதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்த மாவட்டத்தில் அதிகமான அளவிற்கு ஏரிகள் இருக்கின்றன என்று அறியவேண்டுமானால், தனியாகக் கேள்வி கேட்டால், விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கலாம். அதுவும் தேவைதானா என்று புரியவில்லை. இப்போது 66 இடங்களிலே சில காரியங்களைச் செய்து வருகிறோம். அதற்காக ரூ. 19.72 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.

(பிற்பகல் 4-50)

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சியின் காரணமாக, எல்லா ஏரிகளுக்கும், குளங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, அவற்றை தூர் வாருவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தினுடைய அங்கத்தினர்கள் இதைப்பற்றிப் பரிசீலிப்பதற்காகச் சென்றிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை வந்தவுடன், அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. வெ. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, "பெர்குலேஷன் பான்ட் ஸ்கீம்"-ஐ நடைமுறைப்படுத்துகிறபோது, அதன் மூலம் பக்கத்திலுள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் வர வாய்ப்பு இருந்தது. அதை மனதில் கொண்டு, எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த பெர்குலேஷன் பான்ட் ஸ்கீமுக்கு முன்னுரிமை தந்து, அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி இருக்கின்ற ஏரிகளை ஆழப்படுத்துவது பற்றியதாகும். அங்கத்தினரவர்கள் தனியாகக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரத்தினைச் சேகரித்துத் தருகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டாரத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியில் தூர் எடுக்கும் பணி நடைபெற இருக்கிறதா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன். தனித் தனி ஏரிகளைப்பற்றிக் கேட்டால் என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே,

My question is whether there is any scheme with the Government regarding desilting and deepening the tanks and lakes in the State.

பொதுவாக, குளங்கள், ஏரிகள் இவைகளைப் பொறுத்து தூர் எடுக்கும் பணி நடைபெற இருக்கிறதா என்று கேட்டிருக்கிறேன். அதிலே குளங்கள், ஏரிகள் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், இந்தக் குளங்களும், ஏரிகளும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே விவசாயத்திற்குப் பயன்படும் அளவுக்கு இருந்து வந்தன. அதிலே மழை நீரைத் தேக்கி வைத்து, பயன்படுத்திக்கொண்டார்கள். அண்மைக் காலத்தில் ஏரிகளையும், குளங்களையும் கவனிக்காததால், மழைத் தண்ணீரை அதில் சரியான முறையில் தேக்கி வைக்க முடியவில்லை. ஆகவே அரசு அதில் கவனம் செலுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதுதான் என்னுடைய கேள்வியின் கருத்தாகும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, துரிதமாக மராமத்து செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் தமிழக அரசு மூன்று கோடி ரூபாயை இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கியிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த விதிப்படி 300 ஏக்கருக்கு மேல் பாசனத்திற்கு உபயோகப்படுகிற ஏரிகளை மாத்திரம் ஹைவேஸ் எடுத்துச் செய்வதென்றும், மிச்சமிருப்பதை பொதுப் பணித் துறை செய்வதென்றும், ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் செய்வதென்றும் இருந்தது. நாம் அதை மாற்றி, 200 ஏக்கர் வரையில் கொண்டு வந்தோம். அதையும் திருத்தி 100 ஏக்கர் வரையில் பாசனம் தருகின்ற ஏரிகளை மராமத்து செய்வதென்று திட்டம் போட்டு, அதற்கு 1½ கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறோம். 100 ஏக்கருக்குக் கீழ் பாசனம் உள்ள ஏரிகளையும், குளங்களையும், "ஸ்டேன்டர்டைஸ்" செய்யும் திட்டம் போட்டு, அதற்கு 1½ கோடி ரூபாய் பணம் ஒதுக்கி, வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.



*Wine Manufacturing Plant in Madurai District*

* 31 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to establish a Wine Manufacturing Plant in Madurai District; and

(b) if so, the stage at which the matter now stands?

மதுரை மாவட்டத்தில், திராட்சை மது தயாரிப்புத் தொழிற்சாலை.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், திராட்சை மது தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 1972 ஜூலை திங்களில் திராக்ஷை ரசம் இறக்கும் தொழிற்சாலை மதுரை மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், அந்தத் தொழிற்சாலை நிறுவப்படவில்லை. 1974 செப்டம்பர் முதல் தேதியிலிருந்து நம் மாநிலத்தில் பூர்ண மதுவிலக்கு அமுலாக்கப் பட்டபடியால் அதற்கு இனி உரிமம் வழங்க இயலாது.

*Shifting of the North Arcot Collector's Office from Vellore*

* 32 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to shift the Collectorate in North Arcot District from the existing place; and

(b) if so, where and when it will be shifted?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேலூரிலிருந்து மாற்றல்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டாரத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியில் தூர் எடுக்கும் பணி நடைபெற இருக்கிறதா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன். தனித் தனி ஏரிகளைப்பற்றிக் கேட்டால் என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே,

My question is whether there is any scheme with the Government regarding desilting and deepening the tanks and lakes in the State.

பொதுவாக, குளங்கள், ஏரிகள் இவைகளைப் பொறுத்து தூர் எடுக்கும் பணி நடைபெற இருக்கிறதா என்று கேட்டிருக்கிறேன். அதிலே குளங்கள், ஏரிகள் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், இந்தக் குளங்களும், ஏரிகளும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே விவசாயத்திற்குப் பயன்படும் அளவுக்கு இருந்து வந்தன. அதிலே மழை நீரைத் தேக்கி வைத்து, பயன்படுத்திக்கொண்டார்கள். அண்மைக் காலத்தில் ஏரிகளையும், குளங்களையும் கவனிக்காததால், மழைத் தண்ணீரை அதில் சரியான முறையில் தேக்கி வைக்க முடியவில்லை. ஆகவே அரசு அதில் கவனம் செலுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதுதான் என்னுடைய கேள்வியின் கருத்தாகும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, துரிதமாக மராமத்து செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் தமிழக அரசு மூன்று கோடி ரூபாயை இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கியிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த விதிப்படி 300 ஏக்கருக்கு மேல் பாசனத்திற்கு உபயோகப்படுகிற ஏரிகளை மாத்திரம் ஹைவேஸ் எடுத்துச் செய்வதென்றும், மிச்சமிருப்பதை பொதுப் பணித் துறை செய்வதென்றும், ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் செய்வதென்றும் இருந்தது. நாம் அதை மாற்றி, 200 ஏக்கர் வரையில் கொண்டு வந்தோம். அதையும் திருத்தி 100 ஏக்கர் வரையில் பாசனம் தருகின்ற ஏரிகளை மராமத்து செய்வதென்று திட்டம் போட்டு, அதற்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறோம். 100 ஏக்கருக்குக் கீழ் பாசனம் உள்ள ஏரிகளையும், குளங்களையும், "ஸ்டேன்டர்டைஸ்" செய்யும் திட்டம் போட்டு, அதற்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் பணம் ஒதுக்கி, வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.



*Wine Manufacturing Plant in Madurai District*

*31 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to establish a Wine Manufacturing Plant in Madurai District; and

(b) if so, the stage at which the matter now stands?

மதுரை மாவட்டத்தில், திராட்சை மது தயாரிப்புத் தொழிற்சாலை.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், திராட்சை மது தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 1972 ஜூலை திங்களில் திராக்ஷை ரசம் இறக்கும் தொழிற்சாலை மதுரை மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், அந்தத் தொழிற்சாலை நிறுவப்படவில்லை. 1974 செப்டம்பர் முதல் தேதியிலிருந்து நம் மாநிலத்தில் பூர்ண மதுவிலக்கு அமுலாக்கப்பட்டபடியால் அதற்கு இனி உரிமம் வழங்க இயலாது.

*Shifting of the North Arcot Collector's Office from Vellore*

*32 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to shift the Collectorate in North Arcot District from the existing place; and

(b) if so, where and when it will be shifted?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேலூரிலிருந்து மாற்றல்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

(இ) ஆமெனில், எந்த இடத்திற்கு எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரிக்கு மாற்றும் திட்டம் உள்ளது. அத்திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதை மாற்றுவதன் நோக்கமென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதை மாற்றும் நோக்கம், வசதியான கட்டிடங்களைக் கட்ட வேண்டு மென்பதுதான். பல மாவட்டங்களில் உள்ள வசதிகள் போதுமான தாக இல்லை என்பதால், அரசாங்கம் ஒரு திட்டத்தின்கீழ் பல மாவட்டங்களிலும் இது போன்ற கட்டிடங்களைக் கட்ட அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் 12–6–1974 ஆம் தேதியில், வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கான புதிய கட்டிடத்திற்கு ஏற்பு அளித்த 10 லட்சம் ரூபாய் தள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இப்போது இருக்கக் கூடிய இடம் நகரத்தின் மையமாக இருக்கிறது. அது போன்ற பகுதியிலேயே இந்தப் புதிய அலுவலகத்தையும் கட்டினால், பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். அந்தமாதிரி இடத்தில் அந்தக் கட்டிடத்தைக் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே இவைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டுதான், இடம் தேர்ந் தெடுக்கப்பட்டது. இப்போது அந்தப் பிரச்சினை தள்ளப்பட்டு விட்டது. 30–10–1974 ஆணைப்படி அது தள்ளப்பட்டுவிட்டது. புதிய கட்டிடம் கட்ட சிமெண்ட் எல்லாம் இல்லையென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. எனவே கட்டிடம் கட்ட முடியவில்லை.

*Review Committee on the Panchayat Union Finances*

*33 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have accepted the recommendation of the Review Committee on the Panchayat Union Finances, that the teachers of the Elementary Schools should be appointed as Extension Officers (Education)?



ஊராட்சி ஒன்றிய நிதிநிலை ஆய்வுக் குழு

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

ஊராட்சி ஒன்றிய நிதிநிலை ஆய்வுக்குழு அறிக்கையில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு கல்வி விரிவாக்க அலுவலர் பதவிகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற சிபாரிசை இந்த அரசு ஏற்றுக்கொண்டதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தப் பதவிகள் ஏற்கெனவே ஆசிரியர் தொழிலில் இருக்கக்கூடியவர்களுக்கு வழங்கப் பட்டு வந்தன. இடையிலே தடை விதித்து, ஆசிரியர் தொழில் செய்யாதவர்களுக்கு அந்தப் பதவிகளை வழங்கும் நிலை இருக்கிறது. கல்வி விரிவாக்க அலுவலர்களாக இருக்கிறவர்கள் கல்வியைப் பற்றியும், போதனையைப்பற்றியும் அறிந்தவர்களாக இருந்தால், இந்தப் பள்ளிகளைப் பார்ப்பதற்கு அனுகூலமாக இருக்குமென்ற முறையில்தான் அந்த அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, அந்தப் பதவிகளை ஆசிரியர்களுக்குக் கொடுக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரிகள் பதவிகள் ஊராட்சி வளர்ச்சித் துறையிலேயே இருக்க வேண்டுமென்ற ஒரு நபர் குழு பரிந்துரையைக் கருத்தில் கொண்டு ஊராட்சி கல்வி நிதி விசாரணைக் குழுவின் பரிந் துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரிகளாக நியமிக்கும் வினா எழாது. கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரிகள் பதவிகள் சிறப்பு விதிகளுக்கு இணங்க, அப் பதவிகளுக்கு ஊர்நல உதவியாளர்கள் மட்டுமே தகுதியுடையவர்களாவார்கள்.

[1974 டிசம்பர் 16

*Allegation against the President, Punnavasal Panchayat*

*34 *Q*.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any petition containing allegations against the President of Punnavasal Panchayat, Kadaladi Panchayat Union, has been received by the Collector, Ramanathapuram District: and

(*b*) if so, the action taken thereon?

புன்னவாசல் பஞ்சாயத்துத் தலைவர் மீது புகார் மனு

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்...

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புன்னவாசல் Punnavasal பஞ்சாயத்துத் தலைவர் மீது குறை கூறும் மனு ஏதேனும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வரப் பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) புன்னவாசல் ஊராட்சித் தலைவர் திரு. செவத்தி வெள்ளித் தேவர் சுமார் ரூ. 70,000 கையாடல் செய்துவிட்டதாகவும், அதற்காக சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், ஆனால் அவர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் என்ற முறையில் தனது செல்வாக்கை உபயோகித்து ஆட்சேபணைகளைத் தள்ளிவிட்டார், என்ற புகார் மனு ஒன்றை கீழ் சாக்குளம் ஊராட்சித் தலைவர் திரு. கே. ராமசாமி, ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ளார். ராமநாதபுரம் உதவி கலெக்டர் 1960–61-ம் ஆண்டு முதல் 1968–69-ம் ஆண்டு வரை உள்ள தணிக்கை அறிக்கை ஆட்சேபணையின் பேரில் புன்னவாசல் ஊராட்சித் தலைவரிடமிருந்து ரூ. 70,370.95 தொகையை செலுத்த சர்சார்ஜ் நோட்டீஸ் விட்டிருப்பதாகவும், பின்னர் ரூ. 4,400 வரை சம்பந்தப்பட்ட ஒரே ஒரு ஆட்சேபணை தவிர மற்ற ஆட்சேபணைகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை ராமநாதபுரம் உதவி கலெக்டர் மேற்கொண்டுள்ளார்.



1974 டிசம்பர் 16]

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, புன்னவாசல் பஞ்சாயத்துத் தலைவர்தான் கடலாடி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருக்கின்றார். ஒன்றியத்தின் சார்பாக ஏதாவது கடுமையான குற்றச்சாட்டு அவர்மீது சுமத்தப்பட்டிருக்கிறதா? ஒன்றியத்தின் சார்பாக மிகப் பெரிய தவறுகள் இழைக்கப்பட்டதாக அரசாங்கத்திற்குத் தெரிய வந்து, அதன் மூலம் விசாரணை நடத்துவதற்கு அரசாங்கத்திலிருந்து உத்தரவு இடப்பட்டிருக்கிறதா? இவ்வளவு கடுமையான தவறு செய்தவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறதென்ற புகார் வந்திருக்கிறதே, இதுபற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அப்படி நடைபெற்றிருக்குமானால், கண்டிப்பாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினா 35 ஒத்திவைக்கப் படுகிறது. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (1) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்குத் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத் தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்குமூலம் நடைபெறும். இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது—

| | |
|---|---|
| நியமனத்தாள் வந்து சேர கடைசி நாளும், நேரமும். .. .. .. | 18—12—74 மாலை 5 மணி |
| நியமனத்தாள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும் .. .. .. | 18—12—74 மாலை 6 மணி |
| நியமனத்தாள்களை திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும் .. .. .. | 19—12—74 மாலை 5 மணி |
| வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான கடைசி நாளும், நேரமும் .. .. | 19—12—74 மாலை 6 மணி |
| தேர்தல் இருப்பின், அதற்கான நாளும் நேரமும் .. .. .. | 23—12—74 காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை |

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1974 டிசம்பர் 16

நியமனத் தாள்களும், தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் அகர வரிசைப் பட்டியலும், மேலவைச் செயலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## (2) நிகழ்ச்சி நிரலில் மாறுதல்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவை முன்னவருடன் கலந்து, கீழ்க்கண்டவாறு சட்ட மன்ற மேலவை நிகழ்ச்சி நிரல், திருத்தியமைக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை அவை ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன்.

| | |
|---|---|
| 16—12—1974 | 1974–75-ம் ஆண்டுக்கான இரண்டாவது துணைச் செலவு குறித்த விவர அறிக்கையை அளித்தல். |
| | மாநிலத்தில் உணவு நிலைமை குறித்து விவாதம். |
| 17—12—1974 | மாநிலத்தில் உணவு நிலைமை குறித்த விவாதத்திற்கு அமைச்சரின் பதில். |
| 18—12—1974 | தனி உறுப்பினர் அலுவல்கள். |
| 19—12—1974 | 1974–75-ம் ஆண்டுக்கான இரண்டாவது துணைச் செலவு குறித்த விவர அறிக்கையின் மீது விவாதமும், முதல் அமைச்சர் அவர்களின் பதிலும். |
| 20—12—1974, 21—12—1974, 22—12—1974 | கூட்டமில்லை. |
| 23—12—1974, 24—12—1974 | அரசின் சட்ட முன்வடிவுகள். |

சட்ட மன்ற மேலவை 23—12—1974 வரை, வழக்கம் போல் 4 மணி முதல் 7 மணி வரையும், 24—12—1974 அன்று காலையிலும் நடைபெறும்.



1974 டிசம்பர் 16]

(பிற்பகல் 5-00)

## 3. கவன ஈர்ப்பு

### வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதோடு, விவசாயக் கடன்களையும், மற்ற கடன்களையும் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் குறித்து.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"வட ஆற்காடு மாவட்டத்தில், பெரும் பகுதியில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக பருவமழை தவறியதனல், குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும், விவசாயம் செய்ய முடியாத நிலையில், விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையாலும், இவர்களுக்கு நிவாரணம் அளித்து, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதோடு, விவசாயக் கடன்களையும், மற்ற கடன்களையும் ஒத்தி வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் முழுவதும், குறிப்பாக செங்கம், திருவண்ணமலை, போளூர், அரக்கோணம் மற்றும் வேலூர் வட்டங்கள் பருவமழை பொய்த்துவிட்டதால் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் மொத்தம் 3.44 இலட்சம் ஏக்கர் நஞ்சை பரப்பளவில் 1.22 இலட்சம் ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டுள்ளது. 32,000 ஏக்கருக்கு மேல் உள்ள நிலப்பரப்பில் உள்ள பயிர்கள் வாடும் நிலையில் உள்ளது. 11,000 ஏக்கர் புஞ்சை நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட உணவுப் பயிர்களும் வாடும் நிலையில் உள்ளது. அறுவடையாகக்கூடிய நிலங்களில் மகசூல் குறைவாக இருக்கக்கூடும் என்று அறிக்கை வந்துள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இப்போதைக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் தொகையிலிருந்து உடனடியாகக் குடி தண்ணீர் நிலைமையைச் சீர்செய்ய வேண்டிய வேலைகளை மேற்கொள்ள ஒரு கோடி ரூபாயையும், சிறு பாசனத் திட்டங்களுக்காக இன்னும் ஒரு கோடி ரூபாயையும் அரசு உடனடியாக வழங்கி இந்த இரண்டு கோடி ரூபாயையும் மாவட்டங்களுக்கு வருவாய் வாரியம் மூலம் பகிர்ந்தளிக்க ஆணை பிறப்பித்து, வருவாய்த் துறை வாரியம் மாவட்டங்களுக்கு இத்தொகைகளை

ஒதுக்கி உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறது. மேலும், எல்லா மாவட்டங்களிலும் உள்ள வறட்சி நிலைமையை நேரில் சென்று ஆய்வு செய்து விரிவான அறிக்கை உடனடியாக அனுப்புமாறு வருவாய் வாரிய உறுப்பினர்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. வருவாய் வாரிய உறுப்பினர்கள் இவ்வேலையைத் துவங்கியுள்ளனர். வட ஆற்காடு மாவட்டத்திலும் வருவாய் வாரிய உறுப்பினர் வறட்சி நிலைமையை ஆய்வு செய்து அறிக்கை அனுப்புவார். வருவாய் வாரியத்தின் அறிக்கை இன்னும் சில நாட்களில் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த அறிக்கை வந்தவுடன் அதைப் பரிசீலனை செய்து உடனடியாக மேற்கொள்ளவேண்டிய நிவாரணப் பணிகளுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடும். விவசாயக் கடன்களையும், மற்றைய கடன்களையும் வசூல் செய்வதை ஒத்திவைப்பது பற்றி மேற்சொன்ன அறிக்கை வந்தபின் முடிவெடுக்கப்படும்.

வறட்சி நிலைமையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்க அரசு உறுதிகொண்டுள்ளது. வட ஆற்காடு உட்பட, தமிழ் நாடு முழுவதும் உள்ள வறட்சி நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

## 4. அரசினர் உறுதிமொழிக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கையை அளித்தல்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினர் உறுதிமொழிக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கையை அளிக்கிறேன்.

## 5. தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

"வேளாண்மைத் துறையின் 16—10—1971 நாளிட்ட 2766 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. எம். ஆறுமுகசாமி, எம்.எல்.சி. சட்ட மன்ற மேலவையினால், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;



மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின்கீழ் 15—10—1974 அன்று முடிவடைந்துள்ளதாலும்;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ் நாடு, 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினையொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"வேளாண்மைத் துறையின் 16—10—1971 நாளிட்ட 2766 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. எம். ஆறுமுகசாமி, எம்.எல்.சி. சட்ட மன்ற மேலவையினால், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 15—10—1974 அன்று முடிவடைந்துள்ளதாலும்;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினையொட்டி மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1974 டிசம்பர் 16

தமிழ் நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும். | 18—12—1974 மாலை 5.00 மணி |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும். | 18—12—1974 மாலை 6.00 மணி |
| நியமனத்தாள்களை திரும்பப் பெற, கடைசி நாளும், நேரமும். | 19—12—1974 மாலை 5.00 மணி |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 6. வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

"திரு. எம். இராமநாதன், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் முடிவடைவதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் "வகுப்பு-(II)ஏனைய உறுப்பினர்கள்" என்ற தலைப்பின் கீழ், (h) பகுதியையொட்டி, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்".



1974 டிசம்பர் 16]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"திரு. எம். இராமநாதன், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் முடிவடைவதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ் நாடு, 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் "வகுப்பு- II ஏனைய உறுப்பினர்கள்" என்ற தலைப்பின் கீழ், (h) பகுதியையொட்டி மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கென கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்து சேர கடைசி நாளும் நேரமும். | 18—12—1974 மாலை 5.00 மணி |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும் நேரமும். | 18—12—1974 மாலை 6.00 மணி |
| நியமனத்தாள்களைத் திரும்பப் பெற, கடைசி நாளும் நேரமும். | 19—12—1974 மாலை 5.00 மணி |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு, மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 7. 1974–75 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த இரண்டாவது விவர அறிக்கையை வெளியிடுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 13.43 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில், 11.11 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளிலும் சேரும்.

2. இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக அரசு அலுவலாளர்கள் திங்கள்தோறும் இதுவரை செலுத்தி வந்த 10 ரூபாய் பங்குத் தொகை, மறு அறிவிப்பு செய்யப்படும்வரை, விலைவாசி உயர்வை முன்னிட்டு, 1974 அக்டோபர் 1-ந்தேதி முதல் அரசால் நேரடியாகக் கொடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 4.08 கோடி ரூபாய் செலவாகும். முதற்கண் செலவு செய்வதற்காக, முன்பணமாக 68 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 11-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும், மானியம் பெறும் கல்விக் கூடங்களிலும் உள்ள ஆசிரியப் பணியாளர்களும் பிற பணியாளர்களும் திங்கள்தோறும் செலுத்தத்தக்க 10 ரூபாய் பங்குத்தொகையை அரசே ஈடு செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆண்டு முழுவதற்குமான செலவுத் தொகையான 1.18 கோடி ரூபாய், 17-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கி வரும் மதிப்பூதியத்தை 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ந்தேதி முதல், திங்களுக்கு 10 ரூபாய் உயர்த்திக் கொடுக்கவும் 11-வது மானியக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் ரூபாய் செலவாகும்.



4. சமூக நலத் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்திடும் நற்பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் இருந்து வருகிறது. இப்போது 1974 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழ்நாட்டுப் பொது மக்களின் நன்மைக்காக, குறிப்பாகக் குறைந்த வருமான முள்ளோரின், சொந்தத்தொழில் நடத்துவோரின் நன்மைக்காகவே இத் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில் சிறு தொகை ஒன்றை திங்கள் தோறும் செலுத்தி வந்தால், அதன்பின் கணிசமான தொகை ஓய்வூதியமாக அவருக்கு 30 ஆண்டு காலம் மாதாமாதம் கிடைக்கும். அந்த 30 ஆண்டுகளுக்குப் பின், மொத்தத் தொகை ஒன்றும் அவருக்குக் கூடுதலாகக் கிடைக்கும். இத்திட்டத்துக்குப் பரவலான வரவேற்பு கிடைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் அறிவர். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆகும் பணியாளர் செலவுக்கும், பிற செலவுகளுக்கும் இரண்டாவது துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 9-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. உடல் ஊனமுற்றவர்களுக்கான நல் வாழ்வுத் திட்டங்களும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: சக்கர நாற்காலிகள், மூன்று சக்கரசைக்கிள்கள் வழங்குதல்; தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் அலுவலகவியல் பயிற்சி வகுப்பு தொடங்குதல்; அரசுத் துறைகள், கழகங்களில் பயிற்சி அளித்தல்; தையல் தொழிலில் பயிற்சி அளித்தல்; உடல் ஊனமுற்று, கைவிடப்பட்டு 55 வயதும் அதற்கு மேற்பட்ட வயது அடைந்த முதியோர்களுக்கு, முதியோர் உதவித்தொகை வழங்குதல் ஆகியன. இவற்றுக்காக இந்த ஆண்டு மொத்தச் செலவு 46.48 இலட்சம் ரூபாய் ஆகும். 9-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தொகை, உடல் ஊனமுற்றவர்களுக்கான முதலமைச்சர் நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படும்.

6. அரிசன வீட்டு வசதிக் கழகம் மாநிலம் முழுவதிலும் அரிசனங்களுக்கு 10,000 வீடுகள் கட்டித்தருதல் என்னும் முதலாவது கட்டத்தை விரைவில் முடித்துவிடும். அரசு இந்தக் கழகத்திற்கு 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை வழங்கியது. 1974–75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை ஒதுக்கப்பட்டது. இவற்றுக்குக் கூடுதலாக 1 கோடி ரூபாய் மானியம் வழங்க 30-வது

## 7. 1974–75 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த இரண்டாவது விவர அறிக்கையை வெளியிடுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 13.43 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில், 11.11 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளிலும் சேரும்.

2. இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக அரசு அலுவலாளர்கள் திங்கள்தோறும் இதுவரை செலுத்தி வந்த 10 ரூபாய் பங்குத் தொகை, மறு அறிவிப்பு செய்யப்படும்வரை, விலைவாசி உயர்வை முன்னிட்டு, 1974 அக்டோபர் 1-ந்தேதி முதல் அரசால் நேரடியாகக் கொடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 4.08 கோடி ரூபாய் செலவாகும். முதற்கண் செலவு செய்வதற்காக, முன்பணமாக 68 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 11-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும், மானியம் பெறும் கல்விக் கூடங்களிலும் உள்ள ஆசிரியப் பணியாளர்களும் பிற பணியாளர்களும் திங்கள்தோறும் செலுத்தத்தக்க 10 ரூபாய் பங்குத்தொகையை அரசே ஈடு செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆண்டு முழுவதற்குமான செலவுத் தொகையான 1.18 கோடி ரூபாய், 17-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கி வரும் மதிப்பூதியத்தை 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ந்தேதி முதல், திங்களுக்கு 10 ரூபாய் உயர்த்திக் கொடுக்கவும் ...வது மானியக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. ...ற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் ரூபாய் செலவாகும்.





4. சமூக நலத் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்திடும் நற்பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் இருந்து வருகிறது. இப்போது 1974 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழ்நாட்டுப் பொது மக்களின் நன்மைக்காக, குறிப்பாகக் குறைந்த வருமானமுள்ளோரின், சொந்தத்தொழில் நடத்துவோரின் நன்மைக்காகவே இத் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில் சிறு தொகை ஒன்றை திங்கள் தோறும் செலுத்தி வந்தால், அதன்பின் கணிசமான தொகை ஓய்வூதியமாக அவருக்கு 30 ஆண்டு காலம் மாதாமாதம் கிடைக்கும். அந்த 30 ஆண்டுகளுக்குப் பின், மொத்தத் தொகை ஒன்றும் அவருக்குக் கூடுதலாகக் கிடைக்கும். இத்திட்டத்துக்குப் பரவலான வரவேற்பு கிடைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் அறிவர். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆகும் பணியாளர் செலவுக்கும், பிற செலவுகளுக்கும் இரண்டாவது துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 9-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. உடல் ஊனமுற்றவர்களுக்கான நல் வாழ்வுத் திட்டங்களும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன : சக்கர நாற்காலிகள், மூன்று சக்கரசைக்கிள்கள் வழங்குதல் ; தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் அலுவலகவியல் பயிற்சி வகுப்பு தொடங்குதல் ; அரசுத் துறைகள், கழகங்களில் பயிற்சி அளித்தல் ; தையல் தொழிலில் பயிற்சி அளித்தல் ; உடல் ஊனமுற்று, கைவிடப்பட்டு 55 வயதும் அதற்கு மேற்பட்ட வயது அடைந்த முதியோர்களுக்கு, முதியோர் உதவித்தொகை வழங்குதல் ஆகியன. இவற்றுக்காக இந்த ஆண்டு மொத்தச் செலவு 46.48 இலட்சம் ரூபாய் ஆகும். 9-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தொகை, உடல் ஊனமுற்றவர்களுக்கான முதலமைச்சர் நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படும்.

6. அரிசன வீட்டு வசதிக் கழகம் மாநிலம் முழுவதிலும் அரிசனங்களுக்கு 10,000 வீடுகள் கட்டித்தருதல் என்னும் முதலாவது கட்டத்தை விரைவில் முடித்துவிடும். அரசு இந்தக் கழகத்திற்கு 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை வழங்கியது. 1974–75 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மேலும் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை ஒதுக்கப்பட்டது. இவற்றுக்குக் கூடுதலாக 1 கோடி ரூபாய் மானியம் வழங்க 30-வது

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 1

மானியக் கோரிக்கையில் தொகை சேர்க்கப்பட்டுள்ளது. தாழ்த்து பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்க பட்ட பழங்குடியினர், ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களு கான அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கியிருக்கும் ஒவ்வொ மாணவருக்கும் மாதமொன்றுக்குக் கூடுதலாக ஐந்து ரூபாய் வழங்க அரசு அனுமதித்துள்ளது என்பதை அறிய இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வர். இந்த உயர்வினால் இந்த ஆண்டு ஆகும் செல 27.65 இலட்சம் ரூபாய் ஆகும். மேலும் அரிசன மாணவர்களுக் படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக மாணவரது பெற்றோ அல்லது காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பை 2,500 ரூபாயி லிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். அவ்வாறே பிற்படுத் தப்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியின ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவரது பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பை 2,000 ரூபாயிலிருந்து 2,50 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். இதற்காக ஏற்பட்டுள்ள செலவுக் வேண்டிய தொகையும் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்க பட்டுள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு இந்த ஆண்டில் 36.5 இலட்சம் ரூபாய் ஆகும்.

7. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், தொடக்கச் சங்கங்களும் கைத்தறித் துணிகள் விற்பனையில் வழங்கிய தள்ளுபடித் தொகைக ஈடு கட்டும் பொருட்டு, அரசு, இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்ட தில் ஏற்கெனவே ஒதுக்கியிருந்த 1.3 கோடி ரூபாயை 2 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. கூடுதல் செலவான 70 இலட்ச ரூபாய்க்கு 26-வது மானியக் கோரிக்கையில் இம்மன்றத்தின் ஒப்பளிப் வேண்டப்படுகிறது.

8. நடப்பு ஆண்டில் 26 தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதெ முடிவு செய்துள்ளோம். ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள் நிலையங்களும் இவற்றில் அடங்கும். இத்திட்டத்தின் முதல் கட் செலவிற்காக, முதலாவது துணை மதிப்பீட்டில் 7.22 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் பொருட் மேற்கொண்டும் செலவு செய்வதற்காக, 16-வது மானிய கோரிக்கையின் கீழ் 26.63 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

9. நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அரசின் உதவித் தொகை மாணவர் ஒருவர்க்கு ஒரு வேளை உணவுக்கு 6 காசு என வரையறு கப்பட்டிருந்தது. விலைவாசிகள் உயர்ந்துள்ளதையொட்டி, 1974 ஆ



1974 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல், அரசின் உதவித் தொகையை மாணவர் ஒருவர்க்கு ஒரு வேளை உணவுக்கு 10 காசு என உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் 18 இலட்சம் மாணவர் பயன்பெறுவர். நடப்பாண்டில் இதற்கு 59 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். ஓராண்டில் இதற்கு 1.17 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இதற்கு 17-வது மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு வேண்டப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம்.

10. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள, 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுடன் கூடிய சிறுபாசன வாயில்களையும் 100 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டை உடைய பொதுப் பணித் துறைப் பாசன ஏரிகளையும் மேம்படுத்துவதற்காக மொத்தம் 3 கோடி ரூபாய் செலவில், சிறுபாசன முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 35-வது மானியக் கோரிக்கையின் கீழ், இந்த ஆண்டு 1.75 கோடி ரூபாய் இதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. காளிங்கராயன் கால்வாயை நடுத்தரப் பாசனத் திட்டமாகக் கருதி அதனை சீரமைப்பதற்கான 60 இலட்சம் ரூபாய் திட்டத்திற்கு 50-வது மானியக் கோரிக்கையின் கீழ் ஏற்பளிப்பைப் பெற அரசு விழைகிறது.

11. கோடை காலத்தில் நீர் இருப்பு குறைந்து போனதை ஒட்டி சென்னை மாநகரில் கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் அமைத்த செலவுக்காக சென்னை மாநகராட்சிக்குக் கொடுப்பதற்கான 10 இலட்சம் ரூபாயும், துணை மதிப்பீட்டில் அடங்கும்.

12. முதல் துணை மதிப்பீட்டை முன் வைத்துப் பேசுங்கால் நான் குறிப்பிட்டதைப் போல், 1,500-க்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 11.94 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கான திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. தற்போதைய துணை மதிப்பீட்டின் 38-வது மானியக் கோரிக்கையில் நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கமான 1 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

13. 1.19 கோடி ரூபாய் செலவிலான சாலைப் பணிகள் குறித்த நிதி ஒதுக்கமும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த செலவுத் தொகை, இறுதியாக, மத்தியச் சாலை நிதியிலிருந்து பெறப்படும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 16

14. தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு அதன் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியதற்கு மேலாக மானியம் வழங்க சட்ட மன்றத்தின் ஏற்பளிப்பைப் பெறுவதற்காக 42-வது மானியக் கோரிக்கையில் 1.79 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

15. காவல் துறையை நவீனப் படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ் நாடு காவல் துறை வானொலி அமைப்பில் நுண் அலை முறையைக் கொண்டு வருவதற்காக 1 கோடி ரூபாய் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவு, சில ஆண்டுகளில் மத்திய அரசால் திருப்பித் தரப்படும். நடப்பாண்டுச் செலவு, வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திலிருந்து செய்யப்படும். 15-வது மானியக் கோரிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் சட்ட மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

16. மீன் பிடி படகுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 48 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், விசைப்படகுகள் கட்டும் செலவில், 15 சதவீதத் தொகையாக தமிழ் நாடு மீனள வளர்ச்சி நிறுவனத்திற்கு 34.37 இலட்சம் ரூபாய் அரசு வழங்குகிறது. படகுகள் கட்டுவதற்கு வேண்டிய எஞ்சிய தொகை வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும். இந்தத் தொகைகள் முறையே 21-வது மானியக் கோரிக்கையிலும், 56-வது மானியக் கோரிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

17. வேலூர், திருப்பத்தூர், கோயம்பத்தூர் சர்க்கரை ஆலை களின் பங்கு முதலீடு செய்வதற்காக 1.75 கோடி ரூபாய் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 55-வது மானியக் கோரிக்கையின் கீழ் இதற்காக சட்ட மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

18. அரசின் பல்வேறு நிறுவனங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை என்னும் வடிவில் வழங்கப்பட்டுள்ள விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தமிழ் நாடு கோழியின வளர்ச்சி நிறுவனம்—15 இலட்சம் ரூபாய்.

தமிழ் நாடு கரும்புப் பண்ணை நிறுவனம்—25 இலட்சம் ரூபாய்.

தமிழ் நாடு வனத்தோட்ட நிறுவனம்—30 இலட்சம் ரூபாய்.

19. போக்குவரத்துக் கழகங்களுக்கு 1.69 கோடி ரூபாய் வழங்கியது, தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு 50 இலட்சம்



1974 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

ரூபாய் வழங்கியது உட்பட, பல்வேறு நிறுவனங்களுக்கு 2.74 கோடி ரூபாய் அளவுக்கு வழி வகை முன்பணம் வழங்கப்பட்டது. இத் தொகைகளும் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

20. துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங் களின் முக்கியக் கூறுகள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் முன் வைக்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் இவை குறித்தும் ஏனைய இனங்கள் குறித்தும் மேற்கொண்டு விவரங்களை அளிக்கும். 1974–75-க்கான துணை மானியக் கோரிக்கை களை இந்த அவை ஏற்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

## 8. அரசின் தீர்மானம்.

### மாநிலத்திலுள்ள உணவு நிலைமை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உணவு நிலைமையானது நாளுக்கு நாள் அதிகமாகி, சொல்லப்போனால் நிமிடத்திற்கு நிமிடம் வேகமாகி தொந்தரவு கொடுத்துக்கொண்டே வருகின்றது. உணவுக் கொள்கையில் சர்க்காருடைய ஒரு போக்கானது மக்களிடையே அதிகமான பீதியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதுபோல விவசாயத்திலே ஈடுபட் டிருக்கும் உற்பத்தியாளர்களுக்கு உரக் கஷ்டம் ஒரு புறம், மழை இல்லாத கஷ்டம் ஒரு புறம் இப்படியெல்லாம் அவர்களுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல, நூறு வருடங்களாகப் பார்க்காத வறட்சி இப்போது வந்திருக்கிறது. 1964 ஆம் வருடத்திலே கூட பருவ மழை தவறியதனாலே உணவுக் கஷ்டம் ரொம்ப இருந்தது. அப்போது இருந்த அந்த சர்க்கார் அதைச் சமாளித்திருக்கிறார்கள். ஜனங்களுக்கு முக்கிய அடிப்படைத் தேவையான எல்லா ஐட்டங்களையும், உணவுத் தேவைகளையும், இன்னும் மக்களுக்கு எது தேவையோ அதை ஜனநாயக சர்க்கார் கொடுத்துத்தான் ஆக வேண்டும். வெளியில் இருக்கிறவர்கள் “ விலை ஏறி விட்டது. சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை ” என்று சொல்கிறார் கள். ஜனநாயகத்தில் மக்களுக்கு அடிப்படையான தேவை உணவு. நாங்கள் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் வெளியில் மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உணவுத் துறையில் சர்க்கார் பின் பற்றும் கொள்கை தான் இதற்குக் காரணம். உற்பத்தியாளர்களுக்குப்

பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன. உற்பத்தி இடங்களில் பாசன வசதியில்லாமை, மழை இல்லாமை, உரத் தட்டுப்பாடு, இன்னும் பல்வேறு காரணங்களால் உற்பத்தியாளர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டுள்ளது. உற்பத்தியாளர்களிடம் ஊக்கம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மழை ஒரு பக்கம் இல்லை. உரம் குறித்து, சென்ட்ரல் கோட்டா ஒதுக்கியதை 4, 5 மாநிலங்கள் எடுக்கவே இல்லை என்பதை நாம் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். நம் மாநிலத்திலே ஆங்காங்கு உரத் தட்டுப்பாடு இருந்து கொண்டேயிருக்கிறது. எந்த விதத்தில் உரத் தட்டுப்பாடு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். சர்க்கார் கிடங்கிலே நிறைய இருக்கலாம். கோவாப்பரேடிவ் சென்ட்ரல் சொசைட்டி கிடங்குகளிலும் உரம் நிறைய இருக்கலாம். அந்தக் கிடங்கிலிருந்து விவசாயிகளுக்கு, உற்பத்தியாளர்களுக்கு வந்து சேர்வதற்குக் காலதாமதம் ஆகிறது. பத்து நாள் கழித்துப் போட வேண்டிய உரம் இருபது நாள் தள்ளிப் போட்டால் உற்பத்தி குறையும் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதுமாதிரி குறையாகப் போவதை அனுபவத்திலே பார்க்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்னாலே உரம் தடையின்றி கிடைக்க வேண்டும். அக்ரிகல்சுரல் டைரக்டர் எத்தனை ஏக்கருக்கு அனுப்புவது என்று எங்களுக்குப் புள்ளி விவரம் தந்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். அந்த விவரப்படி ஒரு பகுதியை அனுப்பியிருக்கிறோம், இன்னொரு பகுதியை அனுப்பப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். உள்ளபடியே உற்பத்தியாளர்களுக்கு ரொம்பக் கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது. மேட்டூரிலிருந்து தண்ணீர் 6 நாளைக்கு ஒரு முறை வருகிறது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ரசாயன உரத்தை தண்ணீரின் அளவைப் பொருத்துத்தான் போட வேண்டும். உரிய முறையில் உரம் போட்டால் தான் "எபெக்ட்" இருக்கும். இப்பொழுது இருக்கும் நிலையைப் பார்த்தால், எனக்கு அச்சமாக இருக்கிறது. ரொம்பப் பேர் கடன் வாங்கி சர்க்காரிடம் உரம் வாங்குகிறார்கள். பிரைவேட் கம்பெனியிலிருந்து சர்க்கார் உரம் கிடைக்காவிட்டால் வாங்குகிறார்கள். அதில் கலப்படம் கூட இருப்பதாகச் சொல்கிறார்கள். மண் கூட கலந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட உரங்களைப் போட்டு சரியான முறையில் தானியங்கள் விளையவில்லையென்றால், குறுவைப் பயிர்கள் புகைந்து கூடப் போய் விடும். அந்த அளவுக்கு விவசாயிகளுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. இப்படிக் கஷ்டப்பட்டு, நெஞ்சுருகிக் கொண்டிருக்கும் விவசாயிகளைச் சர்க்கார் "நீங்கள் பதுக்கல்காரர்கள், விலைவாசியை உயர்த்தி





விற்கிறீர்கள் நாளுக்கு நாள்" என்று சொல்கிறார்கள். நாளுக்கு நாள் அவர்களுக்கு ஊக்கம் வருவதற்கு பதிலாக, இப்படிச் சொன்னால் என்ன உற்சாகம் வரும்? மூன்று மாதம், 6 மாதம் நண்டுக்கும், தேளுக்கும், பாம்புக்கும் பயந்து கொண்டு உற்பத்தியில் அக்கறை காட்டுகிறார்கள். பாட்டரி லைட்டுக்குக் கூட வசதியில்லாமல் அரிக்கன் லைட்டை முன்னாலே வைத்துக்கொண்டு இரவெல்லாம் தண்ணீர் வருகிறதா, தண்ணீர் வருகிறதா என்று பார்த்து உற்பத்தி செய்கிறார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளை அரசினர் பதுக்கல்காரர்கள் என்று சொன்னால், என்ன அர்த்தம்? ஒரு விவசாயியின் குடும்பத்தில் நிறைய குழந்தைகள் இருந்தால், அந்த விவசாயி என்ன செய்வான்? கொஞ்சம் நெல் வைத்திருக்க மாட்டானா? இப்பொழுது கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகள் உணவு தானியங்களை சப்ளை பண்ணுகின்றன. அவைகள் வழங்கும் தானியத்தினுடைய தரம் எப்படி இருக்கிறது? உன்னுடைய பலம் எல்லாம் யுத்தத்திலே என்று பகவான் பகவத் கீதையிலே சொன்னது போல், அவைகள் வழங்கும் அரிசியின் நிறம் பஞ்ச வர்ண கலரில் இருக்கிறது. இந்த அரிசியை மாலையில் வேலை முடிந்து வரும் ஜனங்கள் 5 அல்லது 6 மணிக்கு உலையில் வைத்தால், வேகுவதற்கு 2 அல்லது 3 மணி நேரமாகிறது. இப்படிப்பட்ட அரிசி எங்கிருந்து சப்ளை ஆகிறது என்று தெரியவில்லை. சிவில் சப்ளை கார்ப்பரேஷன் வணிகர்களிடத்திலே இந்த அரிசி எங்கிருந்து கிடைக்கிறது என்று கேட்டால், தஞ்சாவூரிலே செம்பனார் பகுதியிலிருந்து தான் கிடைக்கிறது என்று தகவல் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு அரிசி போகக் கூடாது என்று சொல்வது நியாயம் தானா? தமிழ் நாட்டினுடைய உணவு நிலைமை மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே உள்ளவர்கள் நூற்றுக்கணக்கான பேர் ரயிலிலே, பஸ்ஸிலே பாஸ் வாங்கி வைத்துக்கொண்டு அரிசி கொண்டுபோகிறார்கள். அவர்களில் நிலம் இல்லாதவர்கள் தான் நிறைய பேர் இருப்பார்கள். அவர்கள் வீட்டுக்கு வரும்போது, தங்களுடன் இரண்டு படி அரிசி வாங்கி வந்தால் போதும், அவர்கள் வீட்டில் பார்க்க வேண்டுமே சந்தோஷத்தை. இப்போதெல்லாம் வீட்டிலுள்ள பெண்களுக்குப் புடவை வாங்கிக் கொடுத்தால், சந்தோஷமில்லை. அவ்வளவு தூரம் அரிசிப் பிரச்சினை கொண்டுபோய் விட்டிருக்கிறது. பெரிய மூட்டைகளில் லாரிகளில் கொண்டு சென்றால், கடத்தல் என்று சொல்லலாம். தஞ்சையிலிருப்பவர்களும் தமிழர்கள் தான். திருச்சியிலிருப்பவர்களும் தமிழர்கள்தான். தமிழகத்தில் இருப்பவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான், வேறொரு மாவட்டத்துக்கு அரிசி போய் விடுமே

என்ற அச்சம் இருக்க வேண்டியதுதான். இப்படி சில பேர் குடும்ப உபயோகத்துக்காக, 4 அல்லது 5 நாள் உபயோகத்துக்காகக் கொண்டு போக வேண்டியதுதான். சில பேர் துணிவுடன் கொண்டு செல்கிறார்கள். அவர்களிடமிருந்து அதிகாரிகள் பிடுங்கி விடுகிறார்கள். சில மூட்டை அரிசி ரெயில்களில் தேங்கிக் கிடக்கின்றது. அதை அதிகாரிகள் கீழே தூக்கிப் போட்டு விடுகிறார்கள். சிறிய அளவில் வீட்டு உபயோகத்துக்குக் கொண்டு செல்பவர்களுக்கு ஒரு சலுகைக் காட்டி அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கலாம் என்கிற என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

லெவி சிஸ்டம் ஒரு மிகவும் முக்கியமான விஷயம். லெவி சிஸ்டத்தை நிர்ணயிக்கும்போது, அவர்களுக்குத் தேவை எவ்வளவு என்பதைச் சரியாக நிர்ணயிக்க வேண்டும். சர்க்கார் கூடங்களிலிருந்து வந்து வாங்குகிற போது விதியை நூற்றுக்கு அறுபது பேர் கையாள்வதில்லை. எப்போது தண்ணீர் வரும் என்று இரவு பூரா காத்திருந்து, கஷ்டப்பட்டு நீர்பாய்ச்சி உற்பத்தியைப் பெருக்கும் விவசாயியின் குடும்பத்தில் 4 பேர் இருக்கலாம். அவர் வீட்டிற்கு தேவையான நெல்லை வைத்திருக்கக்கூடாதா? அவர் அவ்வாறு வைத்திருந்தால், அது எங்கே போய்விடும்? ஒரு வீட்டில் எண்ணிக்கையில் சற்று அதிகமான பேர் இருந்து கொஞ்சம் தேவைக்கு அரிசியை வைத்திருந்தாலும், பதுக்கல்காரர், பதுக்கல்காரர் என்கிறார்கள். அவர்கள் அவ்வாறு வைத்திருந்தாலும், என்றைக்காவது ஒருநாள் வெளியிலே தான் கொண்டு வருவார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக விளைச்சல் இருக்கிறது. காவிரி நீர் பாயும் இடங்கள் போன்று செழிப்பான நிலங்களிலே தான் ஏக்கருக்கு 18 மூட்டை விளைச்சல் வரும். இப்பொழுது போட்டிருக்கிற உச்ச வரம்பு 18 என்கிறார்கள். இது மிகவும் கஷ்டம் என்பது என்னுடைய கருத்து. 10-க்கு மேலே போட்டால் மிகவும் கஷ்டமாகும். பஸ்ஸில் போனால் பிடிக்கலாம், ரெயிலில் போனால் பிடிக்கலாம், லாரியில் போனால் பிடிக்கலாம். சைக்கிளில் கொண்டு போனால், கீழே தூக்கிப் போடுகிறார்கள். விவசாயிகளுக்குச் சரியான வகையிலே இந்த சர்க்கார் உதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்னும் விசாலமான மனப்பான்மையோடு விவசாயிகளுக்குச் சலுகை

(பிற்பகல் 5-30)

காட்டும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். நான்கைந்து வருஷங்களாக பற்றாக்குறை இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த முறையைக் கையாண்டவுடன் பற்றாக்குறை, பற்றாக்குறை என்று போய்க் கொண்டே இருக்கின்றது.





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதிக உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிடங் களுக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப் பினர் பதினைந்து நிமிடங்களுக்கு மேலே பேசிக்கொண்டிருக்கின்றார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இருபது நிமிடங்கள்கூட சிலர் பேசியிருக்கின்றார்கள். அப்போது கட்டுப்படுத்தவில்லை. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: என்னுடைய துரதிர்ஷ் டம் நான் அதைச் செய்ய வேண்டியிருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ஆர்வம் இருக்கின்றது. நேரமில்லை. எல்லோருக்கும் வாய்ப்பினை அளிக்க வேண்டாமா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இன்னும் ஒரு நாள் கூட எடுத்துக்கொண்டால், சர்க்காருக்கு என்ன கெட்டுவிடும்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நாள் கூடக் கொடுப்பதற்காகத்தான் நான் நேரத்தைக் கட்டுப்படுத்தச் சொல்லுகிறேன். தயவு செய்து சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அடுத்து, நான் சொல்ல விரும்புவது, குடும்பக் கார்டுகள் கொடுப்பதில் எவ்வளவோ தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. குடும்பக் கார்டுகளை வைத்துக் கொண்டு அவர்கள் கடைக்குப் போய் அரிசியையோ சர்க்கரையையோ வாங்கப் படும்பாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஒரு கடையிலே ஏறத்தாழ இரண்டாயிரம் அட்டைகளைச் சேர்த்துக் கொடுத்திருக்கின்றார்கள். காலை 7 மணிக்குப் போனால் பெரிய க்யூவில் நின்றுகொண்டு தாய்மார்கள் படும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமில்லை. சாயங்காலம் 7 மணிகூட ஆகிவிடுகிறது அவர்கள் வாங்கும்போது. இப்படி இரண்டாயிரம் மூவாயிரம் கார்டுகள் ஒரு கடைக்கு என்று இல்லாமல் 500 கார்டுகள் என்று வைத்தால், ஜனங்கள், சற்று சௌகரியமாக வாங்குவதற்கு முடியும். இப்போது நகரங்களிலே மட்டும் குடும்பக் கார்டுகள் என்று வைத்து அரிசி போன்ற பண்டங்களைக் கொடுப்பதைப் போல கிராமங்களில் உள்ள வர்களுக்கும் கொடுக்க வேண்டும். அங்கேதான் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

அடுத்து, கூட்டுறவு, கூட்டுறவுச் சங்கங்கள்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கின்றார்கள். இனி கொள்முதல், வினியோகம் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்தான் என்று

சொல்லுகின்ருர்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே எவ்வளவு தவறுகள் நடைபெறுகின்றன என்பதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிருேம். கூட்டுறவு முறைதான் நல்லது என்று எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளுகின்ருர்கள். ஆனல் இப்போது நாட்டிலே கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கட்சிக்குள் போய்ப் புகுந்து கொண்டு விட்டன. கூட்டுறவுச் சங்கங்களுக்கான டைரெக்டர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலானது—சின்னத்தைத்தான் போட்டுக் கொள்ளவில்லை, முழுக்க முழுக்க கட்சித் தேர்தலைப், போல ஆகி விட்டது. இந்த நிலையில் அவர்களிடம் கொள்முதலைக் கொடுத்தால், அது ஒரு கட்சி செய்யும் கொள்முதலைப்போலத்தான் ஆகிவிடும். நான் சொல்லுவது கூட்டுறவுச் சங்கம் என்ருல், எல்லாக் கட்சியி லிருந்தும் ஒரு டைரெக்டரைப் போடுங்கள். அப்போதுதான் அவை நன்ருக நடக்கும்.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி</u>: கூட்டுறவுச் சங்கங் களிலே கட்சிக்காரர்கள் இருக்கின்ருர்கள் என்ருல், எந்தக் கட்சியில் இருப்பவர்கள் அதிகமாக இருக்கின்ருர்கள் என்று சொல்லு கின்றீர்கள்?

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u>: இப்போது நடைமுறையில் ஆளும் கட்சியினர்தான் நூற்றுக்கு 95 பேர் இருக்கின்ருர்கள்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்</u>: காங்கிரஸ் ஆண்ட நேரத்தில் எவ்வளவு பேர் கூட்டுறவுகளில் இருந்தார்கள்? அப்போது. . .

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u>: கூட்டுறவு ஸ்தாபனம் என்ருல், பத்து பேர் டைரெக்டர்கள் என்று இருக்கும்போது, மேலும் ஐந்து பேரை நாமினேஷன் என்று போட்டு பதினைந்தாக்கி விட்டால், என்ன பண்ண முடியும்? தேர்தல் என்று போட்டால், நான் கவலைப்படவில்லை. ஆனல் நாமினேஷன் என்ருல், என்ன செய்வது? தவறு சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. இருந் தாலும் குறைகள் ஏற்படும்போது, தவறுகளை எடுத்துக்காட்டுவதற்கு நான்கு கட்சிக்காரர்கள் இருந்தாலும், யாரும் குறை சொல்ல முடியாது. நாலு கட்சிக்காரர்கள் இருந்தால், பின்னல் குறைகளைச் சொன்னல், "அப்போது நீ அங்கேதானே உட்கார்ந்துகொண்டிருந் தாய்" என்று கேட்பார்கள். பயம் இருக்கும். இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்து, தஞ்சாவூர் ஜில்லாவில் 50 லட்சம் ரூபாய் ஸப்ஸிடி என்று சொன்னர்கள். இது நல்ல அறிக்கைதான். விவசாயிகளுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கும் நல்ல திட்டம் இது. ஆனல் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, அதற்கான நடைமுறை களை நல்லபடி வகுக்க வேண்டும். ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் இல்லை. 50 லட்சம் ரூபாய் என்ருல், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனக்குக் கொடுக்கவில்லை, உனக்குக் கொடுத்தார்கள், நான் சின்னவன், அவன் பெரியவன், இந்தக் கட்சிக்காரன், அந்தக் கட்சிக்காரன் என்று பல பிரச்சினைகள் வரும். அப்படிப்பட்ட பிரச்சினைகள் வராது இருப்பதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்க ஒரு வழிமுறையை ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் நிறைய இருக்கின்றது. துணைத் தலைவரவர்கள் முடித்துக்கொள்ள வேண்டும் என்கிருர்கள். இன்றுள்ள நிலைமையில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்ருல் நாம் எல்லோரும் வருணபகவான் பேரில்தான் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக இருந்து வருணபகவான் பேரிலேதான் அப்படிப்பட்ட ஒரு தீர்மானத் ரதைக் கொண்டுவர வேண்டும்.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
பினியோகத்திலுள்ள குறைபாட்டைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்
கிறது. ஏற்கெனவே நாம் கொள்முதல் செய்திருக்கிருேம் ஏராள
ான நெல்லை. ஆனல் அந்த நெல்லை அரிசியாக்கி கார்டுகாரர்களுக்
தக் கொடுக்கும்போது, என்ன விலைக்குக் கொடுக்கிருேம் என்ருல்,
சர்க்கார் ஒரு பெரிய வியாபாரியாகப் போய்விட்டதோ என்றுதான்
எண்ணவேண்டியிருக்கிறது. காரணம் நாம் விவசாயிகளுக்குக்
கொடுத்து வாங்கும் விலைக்கும் வாங்கிச் சாப்பிடும் கார்டுகாரர்
களுக்குக் கொடுக்கும் விலைக்கும் பார்த்தால், இரண்டு மடங்குக்கு
மேலே போய்விட்டது. அதோடு எல்லாவற்றையும் நிறுத்துத்தான்
கொடுக்கின்ருர்கள். தமிழ் நாட்டுப் பண்பாடு தானியத்தை அளந்து
கொடுப்பதுதான். ஆனல் அந்தப் பண்பாட்டையெல்லாம் வங்காள
குடாக்கடலில் போட்டாகிவிட்டது. இப்போது அளந்து கொடுக்க
வேண்டிய தானியத்தையெல்லாம் நிறுத்துக் கொடுக்கின்ருர்கள்.
இன்னும் கொஞ்ச காலம் போனல் ரூபாய்க்கு இத்தனை தானியம்
என்று எண்ணிக்கொடுப்பார்கள் போலிருக்கிறது.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி</u>: ஆரம்பித்துக்கொடுத்தது யார்?

[1974 டிசம்பர் 16

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அதைப்பற்றிக் கவலையில்லை. எவ்வளவோ சட்டங்களைப் போட்டிருக்கிறோம். எங்கள் நாட்டுக்கு இதுதான் தேவை என்று சொல்லியிருக்கலாமே? ஆக, நான் கொள்முதல் விலையையும் கார்டுகாரர்களுக்கு விற்கப்படும் விலையையும் பற்றிச் சொன்னேன். சர்க்கார் போடும் கொள்முதல் விலைக்கும் கார்டுகாரர்களுக்குக் கொடுக்கும் விலைக்கும் வித்தியாசம் இத்தனை பெர்ஸெண்ட்க்கு மேலே போகக்கூடாது என்று போட வேண்டும். இப்போது இரண்டு மடங்குக்குப் போய் விட்டது. அங்கே இரண்டு ரூபாய் என்றால், இங்கே நாலு ரூபாய் என்று இருக்கிறது. ஆகவே கொள்முதல் செய்யும் விலைக்கும் கார்டுகாரர்களுக்குக் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவு சதவிகிதத்துக்கு மேலே போகக்கூடாது என்று இருந்தால் தான் பயன்படும் என்று சொல்லிக்கொண்டு இதில் கலந்துகொண்டு பேச வாய்ப்பினை அளித்ததற்காக நன்றிகூறிக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : துணைத் தலைவரவர்களே, உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேசப்படும் விவாதத்தில் பங்கு கொள்ள வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் இங்கே பேசுவதற்கு முன்பு என்னிடம் வெளியே பேசிக் கொண்டிருந்தபோது உணவுப் பிரச்சினைபற்றித்தான் கவலையோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்போது சொன்னார்கள். "யார்மீது குறை சொல்லி என்ன பண்ணுவது? மழை பெய்ய வில்லையே?" என்று என்னிடம் சொன்னார்கள். அப்போது நான் நினைத்தேன், இவ்வளவு நியாயமாக சிந்திக்கக்கூடியவராக இருக்கின்றாரே நமது மதிப்பிற்குரிய திரு. தீக்ஷிதர் அவர்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர் இங்கே பேசியதைப் பார்க்கும்போது "உணவுப் பிரச்சினை தொந்தரவு பிடித்த பிரச்சினையாக இருக்கிறது. இப்போது உள்ள குறைகளுக்கெல்லாம் காரணம் அரசாங்கத்தின் கொள்கைதான்" என்ற முறையில் பேசும்போது, நான் ஆச்சரியப் பட்டேன். இருந்தாலும் அவருடைய மனச்சாட்சியின் குரல் அவரை விட்டுப்போக முடியவில்லை. எனவேதான் இறுதியில் "வருணபகவானுடைய ஒத்துழைப்பு இல்லையே?" என்று குறிப் பிட்டார்கள். அந்த அளவிற்கு இன்று உணவுப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டி யிருக்கிறது. [illegible]ற்குக் காரணம் மழை பெய்யவில்லை என்பதுதான்.



1974 டிசம்பர் 16] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

என் ஆயுள் காலத்தில் நான் பார்த்தமட்டில் காலாகாலத்தில் வருஷந் தோறும் மழை பெய்யும். மழைக் காலம், "ரெய்னி ஸீஸன்" என்றால் தொடர்ந்து நான்கைந்து நாட்கள், பத்து நாட்கள்கூட தொடர்ந்து மழை பெய்யும். ஆனால் இந்த வருஷம் தொடர்ந்து நான்கு நாட்கள் இல்லை, தொடர்ந்து நான்கு மணி நேரம் மழை பெய்யாததைத்தான் பார்த்தோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை என் ஆயுள்காலத்தில் நான் இதுவரையில் பார்த்ததில்லை. இப்படி மழையில்லாத காரணத்தினால், பெரும் சிக்கல் ஏற்பட்டது என்பது மட்டுமில்லை, காவிரி நீர்ப் பிரச்சினை வேறு, சிறிது காலம் நமக்கு இடைஞ்சல் செய்து வந்தது. இறுதியில் நமது அருமை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக, நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. அதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். சமீபத்தில் ஒரு பதினைந்து இருபது நாட்களாக பல மாவட்டங்களிலும் பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்தேன். என் கண்ணில் பட்ட பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களிலும் பயிர் நீர் இல்லாமல் பாழ்பட்டுப் போனதைப் பார்த்தேன். கண்ணில் பட்டது பல நூற்றுக்கணக்கான ஏக்கர் என்றால், கண்ணில் படாதது பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள். அவ்வளவு பயங்கரமான நிலைமைதான் இன்று இருக்கின்றது. மழை இல்லாமல் எல்லா இடத்திலும் பயிர் பாழாகிக் கிடப்பதைத்தான் பார்க்கிறோம். விலைவாசி ஏற்றமோ சொல்ல முடியாத அளவிற்கு இருக்கிறது. குறுவை அறுவடைக்குச் சற்று முன்பு தஞ்சையில் அரிசி, மிகவும் கீழ்த்தரமான

(பிற்பகல் 5-40)

அரிசி, ஏழு ரூபாய் படி. திருச்சியிலே ஏழு ரூபாய் படி. பல இடங் களில் படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய் விற்கின்றது. குறுவை அறு வடைக்குப் பிறகு விலை இறங்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. இன்றைக்கு குறுவை அறுவடை முடிந்துவிட்டது. இன்றைக்கு தஞ்சையிலே படி அரிசி 2 ரூபாய்க்கு விற்கிறது. உண்மையிலேயே தஞ்சையிலே படி அரிசி 2 ரூபாய்க்கு வாங்க முடிகிறது. தஞ்சைக்குப் பக்கத்திலுள்ள திருச்சியிலே படி அரிசி $3\frac{1}{2}$ ரூபாய், 4 ரூபாய்க்குக் கிடைக்கிறது. இன்னும் கொஞ்சம் தாண்டிப் போனால்—மதுரை என்று வைத்துக்கொள்ளுங்கள் அல்லது கோவை என்று வைத்துக் கொள்ளுங்கள்—இதே குறுவை அரிசி இன்றைக்கு 6 ரூபாய் அளவிற்கு விற்கிறது. ஆக, இந்த பார்டர் கிராசிங் அப்படியே கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் இப்படிக் கட்டுப்படுத்தப்பட்டதன்

காரணமாக, மாவட்டத்திற்கு மாவட்டம் இவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கின்றது. தஞ்சையிலிருந்து ஒரு மூட்டை அரிசியை திருச்சிக்கு எடுத்துக்கொண்டு வந்தால், 100 ரூபாய் லாபம் கிடைக்கும். அந்த நிலைமைதான் இன்றைக்கு நிலவுகிறது. இப்பொழுதும் சிறுசிறு அளவிலே கால் மூட்டை, அரை மூட்டை என்று கடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை அதிகாரிகளும் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். போன தடவை 2, 3 நாட்கள் தஞ்சையைத் திறந்துவிட்டவுடன், திடீரென்று எல்லா இடங்களிலும் விலைவாசி ஏறிவிட்டதென்று சொன்னார்கள். மறுபடியும் எல்லா மாவட்டங்களிலும் விலை குறைய வேண்டுமென்று நாம் விரும்பினோம். கட்டுப்பாட்டைக் கொஞ்சம் தளர்த்தினால், மீண்டும் எல்லா மாவட்டங்களிலும் விலை உயரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு நிலவும் பஞ்ச நிலைமையைப் பொறுத்த மட்டில், ஒன்றை நான் சொல்வேன். ஒரு சமயம், பஞ்சநிலை உருவான சந்தர்ப்பத்திலே இந்திரா காந்தி அம்மையாரை அழைத்து வந்து காட்டி, நாம் உதவியைப் பெற்றோம். அந்த நிலையைவிட இப்போது பயங்கரமான நிலைமை இருப்பதால், மறுபடியும் அம்மையாரை அழைத்து வந்து, உள்ள நிலவரத்தைக் காண்பித்து, கூடுதலான நிவாரண உதவியைப் பெற அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது தஞ்சையிலே நிறைய அரிசி இருக்கிறது. விற்க முடியவில்லை என்று தஞ்சைவாசிகள் கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இந்த அரசு அந்த அரிசியை திடீரென்று வெளியே அனுப்பினால், வியாபாரிகள் ஒத்துழைப்பு இல்லாத இந்த நேரத்தில், பல கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்த உபரி அத்தனையையும் அரசு ஓபன் மார்க்கெட்டில் கொள்முதல் செய்ய வேண்டும். அரசின் சார்பிலே எந்த அளவுக்குக் குறைந்த விலையிலே மற்ற மாவட்டங்களுக்கு வினியோகிக்க முடியுமோ, அந்த அளவுக்குக் கொடுத்தால், விலை திடீரென்று குறைந்து, நிலைமையைச் சமாளிக்க முடியுமென்று தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமை)

<u>திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:</u> மாற்றுத் தலைவரவர்களே, இந்த உணவுப் பிரச்சினையில் பல நண்பர்கள் அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்தப் பிரச்சினை தமிழகத்திலே எதிர்பாராதவிதமாக வந்துவிட்டது. இன்றைக்கு, இந்தப் பிரச்சினையை நாம் ஒரு பிரதானப் பிரச்சினை





யாகக் கருதிக்கொண்டிருக்கிறோம். இப்படி எதிர்பாராதவிதமாக வந்திருக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு முதல் காரணம் வறட்சிதான். மழை பொய்த்து விடுவதாலும் அல்லது பெரு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுக்கும் மத்திய அரசு முழுப் பொறுப்பு ஏற்று, அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும். அநேகமாக, அப்படி அவர்கள் சில இடங்களில் செய்துகொண்டும் இருக்கிறார்கள். எனவே நாமும் மிகவும் வற்புறுத்தி, அப்படிப்பட்ட உதவியை நமக்கும் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் கூற வேண்டும்.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்க, அரசு பல தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. மாநிலத்திலுள்ள மக்களுக்கு எந்த வகையில் சங்கடம் இல்லாமல் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்கள் செய்ய முற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அந்த நடவடிக்கைகள் எல்லாம் போதுமா என்று பார்க்க வேண்டும். இன்னும் போகப்போக எப்படிப்பட்ட நிலைமை இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமக்கு ஐயப்பாடாகத்தான் இருக்கிறது. இப்போது மழை இல்லை. மற்றப்படி அரசு மீது குற்றங் களையும், குறைகளையும் சுமத்தி, அதில் ஒரு அரசியல் லாபம் பெறும் சந்தர்ப்பத்தில் நாம் இல்லை. இருக்கின்ற நிலையிலே நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் கவனிக்க வேண்டும். மழை பெய்யாமல் பொய்த்துவிட்டது. விவசாயிகள் எல்லாம் அப்படியே ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்கள். வறட்சியின் காரணமாக பயிர்கள் எல்லாம் காய்ந்துகிடப்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதுதான் பிரச்சினை. அரசு மீது குற்றங் களையும், குறைகளையும் சுமத்திக்கொண்டு போவதில் பயன் இல்லை. இந்த நேரத்தில், போர்க் காலங்களில் எடுக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் பொறுப்பு அத்தனையும் மத்திய அரசுக்குத் தான் உண்டு என்பதையும் நாம் உணர்வோம். எனவே மத்திய அரசை வற்புறுத்தி, வேண்டிய உதவிகளைப் பெற வேண்டும். முதல்வரவர்கள் மாதத்திற்கு ஒரு லட்சம் டன் உணவு தானியத்தை இந்த மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருப்பதை பத்திரிகையில் பார்த்தேன். அவைகளெல்லாம் உடனடியாக வந்து சேர வேண்டும். அவை, மக்கள் கையில் போய்ச் சேர வேண்டும். மக்களுக்கு அந்த உணவு தானியங்கள் வந்து சேருமென்று கட்டாய மாக உதவி அளிக்க வேண்டும். இந்த உணவுப் பொருள்கள் கிடைக்க முழு முயற்சியையும் மாநில அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது நமது மாநிலத்தில் மழை இல்லாததால் பயிர்கள் காய்ந்து விட்டது அனைவருக்கும் தெரியும். மிச்சமிருக்கின்ற விவசாயமும் மின்சாரத்தினை நம்பிக்கொண்டிருக்கின்றன. விவசாயம்

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1974 டிசம்பர் 16

சம்பந்தப்பட்ட வரையில், மின்சார சப்ளை செய்வதில் எந்த வெட்டும்
ஏற்படாதென்று அரசினர் முன்பு சொன்னார்கள். விவசாயத்திற்கு
தாராளமாக மின்சாரம் சப்ளை செய்வோம் என்று அறிவித்தார்கள்.
ஆனால் இப்போது கடலூருக்குச் சென்றபோது, பகலில் 4 மணி
நேரமும், இரவில் 6 மணி நேரமும்தான் மின்சாரத்தை விவசாயத்
திற்கு உபயோகிக்க அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
மேலும், அதிலே மின்சார பிரேக்-டவுன், சப்ளை-கட் போன்ற பலவித
மான கோளாறுகள் இருக்கின்றன. இந்த நான்கு மணி நேரத்திலும்
மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை என்றால் பயன் இல்லை. இதை
நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பகலில் இறைக்கும்போது,
வாய்க்கால் வழியாக நிலத்தில் ஓரளவுக்குப் பாய்வதற்குள் 4 மணி
நேரமாகிவிடும். இரவு வரும்போது, மறுபடியும் மின்சார வசதி
கொண்டு இறைக்க ஆரம்பித்தால், பாதிவரைதான் பாயும் நிலை இருக்
கின்றது. மேலும் மழை பெய்யாததன் காரணமாக கிணறுகளிலும்
தண்ணீர் குறைந்துவிட்டது. இரண்டு மணி நேரத்தில் பாய்வது, 4
மணி நேரம் இறைத்தும் கூட, நிலம் முழுவதற்கும் தண்ணீரைக்
கொண்டு சேர்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்
பதை அரசு நன்றாகப் பரிசிலனை செய்ய வேண்டும். இன்னும் புதிதாக
60,000 பம்ப்செட்களுக்கு இணைப்புக் கொடுக்கப் போவதாக அரசு
அறிவித்திருக்கிறது. அதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால்
இருக்கின்றதைக் குறைத்து, எண்ணிக்கையில் அதிகமாகக் கொடுத்து
விட்டோம் என்று கூறுவதால், இருக்கும் மகசூலையும் அது அழித்து
விடுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர பிரியப்படுகிறேன்.
கொடுப்பதை 4 மணி நேரம், 6 மணி நேரம் என்று பிரிக்காமல்,
ஒரேயடியாக 10 மணி நேரம் இரவிலோ அல்லது பகலிலோ
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே,
மின்சார சப்ளையில் பல கோளாறுகள் இருக்கின்றன. அதனால்
எத்தனையோ பம்ப்செட்டுகள் கெட்டு, அவைகளைப் புதுப்பிப்பதற்கு
ஒரு ஏக்கரை 4,000 ரூபாய்க்கு விற்றுச் செய்ய வேண்டியிருக்கிறது.
எனவே மின்சாரத் துறை அலுவலர்கள் ஜாக்கிரதையாகவும்,
எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். பிரேக்-டவுன் ஆகின்ற நேரம்,
சப்ளை கட் ஆகிற நேரம்—இவைகளையெல்லாம் சீராகக் கண்காணித்
தால்தான், விவசாயிகள் நன்மை அடைய முடியும். அரசாங்கத்தி

(பிற்பகல் 5-50)

னுடைய அறிவிப்புப் பிரகாரம் பம்புசெட்டுகளை பயன் படுத்தி அதன்
அடிப்படையில் பல ஏக்கர்களை பாசனத்தின்கீழ் வைத்திருக்கிறார்கள்.
இப்பொழுது இன்னும் இரண்டு மாத காலத்திலே அறுவடையாகக்



1974 டிசம்பர் 16] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

கூடிய பயிர்கள் எல்லாம் முழுவதும் கெட்டுப்போகின்ற நிலைமையில்
இருக்கிறது. மின்சாரத்தின் நிலை என்ன, எவ்வளவு மின்சாரம் சப்ளை
செய்கிறார்கள் என்பதெல்லாம்கூட எங்களுக்குத் தெரியாது. இருக்
கின்றதை எந்த அளவுக்குப் பயன்படுத்தினால் முன்பு இருக்கும் பயிர்
களாவது பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதைப் பார்த்து
நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு
கிறேன். குறிப்பாக பயிர் வைக்கும்போதுகூட இவ்வளவு மின்சாரம்
தான் உங்களுக்குத் தர முடியும் என்று சொல்லிவிடலாம். இத்தனை
மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கும், அதற்கேற்றவாறு
இவ்வளவு பயிர் செய்து கொள்ளுங்கள் என்றும் சொல்லலாம்.
இவ்வாறுதான் மின்சாரத்தின் நிலைமை இருக்கும், இவ்வளவு நேரம்
தான் கொடுக்கப்படும் என்று விளம்பரப்படுத்தினால், விவசாயிகள்
அதற்கேற்றவாறு மாற்றிக்கொள்வார்கள் என்றும், அப்படிச் செய்
தால் மிகவும் நன்றாக இருக்குமென்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

மற்றப்படி, தற்போது வறட்சி நிவாரண வேலைகள் என்று பல
வேலைகள் துவங்குகிறோம். ரோடு போடுவது, குடி தண்ணீர் வசதி
செய்து கொடுப்பது, இவைகளில் எல்லாம் அந்தந்தப் பகுதிகளில்
இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுக்கும்படி செய்ய
வேண்டும். யாரோ, காண்டிராக்டர்களுக்கு அந்த வேலைகளைக்
கொடுத்துவிடுவதால் குறைந்த கூலிக்கு அவர்கள் ஆந்திராவிலிருந்தும்
மற்ற மாநிலங்களிலிருந்தும் ஆட்களைக் கொண்டுவந்து அந்த வேலை
களைத் தொடர்ந்து செய்துகொண்டு போகின்றார்கள். வீராணம்
டேங்க் வேலையையெல்லாம்கூட வெளி மாநிலங்களிலிருந்து ஆட்களை
வைத்துக்கொண்டு, முன்பே ஒப்பந்தம் செய்துகொண்டு வேலைக்கு
வைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் அந்தப் பகுதி மக்கள் வேலை
வாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இதைத் தடுக்க சட்டம்
இல்லாவிட்டாலும், அரசின் ஒரு தாக்கீது மூலமாக—காண்டிராக்டர்
களுக்கு அளிக்கும் திட்டங்களில், அந்தத் திட்டம் எந்தெந்த ஊரிலே
நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறதோ, அந்த கிராமத்திலுள்ள
மக்களுக்குத்தான் வேலை கிடைக்கவேண்டும். அந்த வேலைகளைச்
செய்ய அவர்களைத்தான் ஈடுபடுத்த வேண்டும் என்று அறிவிக்க
வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து
இந்த வேலைகளைச் செய்ய அனுமதிக்கக் கூடாது. வறட்சி நிவாரணம்
அளிப்பதென்றால், இவ்வாறு வேலை வாய்ப்புக்களை அந்தந்தப் பகுதி
களில் உள்ள மக்களுக்கு அளித்து, அதன் மூலம்தான் நாம் அவர்
களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே, இதை அரசாங்கம்
மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1974 டிசம்பர் 16

சம்பந்தப்பட்ட வரையில், மின்சார சப்ளை செய்வதில் எந்த வெட்டும்
ஏற்படாதென்று அரசினர் முன்பு சொன்னார்கள். விவசாயத்திற்கு
தாராளமாக மின்சாரம் சப்ளை செய்வோம் என்று அறிவித்தார்கள்.
ஆனால் இப்போது கடலூருக்குச் சென்றபோது, பகலில் 4 மணி
நேரமும், இரவில் 6 மணி நேரமும்தான் மின்சாரத்தை விவசாயத்
திற்கு உபயோகிக்க அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
மேலும், அதிலே மின்சார பிரேக்-டவுன், சப்ளை-கட் போன்ற பலவித
மான கோளாறுகள் இருக்கின்றன. இந்த நான்கு மணி நேரத்திலும்
மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை என்றால் பயன் இல்லை. இதை
நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பகலில் இறைக்கும்போது,
வாய்க்கால் வழியாக நிலத்தில் ஓரளவுக்குப் பாய்வதற்குள் 4 மணி
நேரமாகிவிடும். இரவு வரும்போது, மறுபடியும் மின்சார வசதி
கொண்டு இறைக்க ஆரம்பித்தால், பாதிவரைதான் பாயும் நிலை இருக்
கின்றது. மேலும் மழை பெய்யாததன் காரணமாக கிணறுகளிலும்
தண்ணீர் குறைந்துவிட்டது. இரண்டு மணி நேரத்தில் பாய்வது, 4
மணி நேரம் இறைத்தும் கூட, நிலம் முழுவதற்கும் தண்ணீரைக்
கொண்டு சேர்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்
பதை அரசு நன்றாகப் பரிசிலனை செய்ய வேண்டும். இன்னும் புதிதாக
60,000 பம்ப்செட்களுக்கு இணைப்புக் கொடுக்கப் போவதாக அரசு
அறிவித்திருக்கிறது. அதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால்
இருக்கின்றதைக் குறைத்து, எண்ணிக்கையில் அதிகமாகக் கொடுத்து
விட்டோம் என்று கூறுவதால், இருக்கும் மகசூலையும் அது அழித்து
விடுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர பிரியப்படுகிறேன்.
கொடுப்பதை 4 மணி நேரம், 6 மணி நேரம் என்று பிரிக்காமல்,
ஒரேயடியாக 10 மணி நேரம் இரவிலோ அல்லது பகலிலோ
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே,
மின்சார சப்ளையில் பல கோளாறுகள் இருக்கின்றன. அதனால்
எத்தனையோ பம்ப்செட்டுகள் கெட்டு, அவைகளைப் புதுப்பிப்பதற்கு
ஒரு ஏக்கரை 4,000 ரூபாய்க்கு விற்றுச் செய்ய வேண்டியிருக்கிறது.
எனவே மின்சாரத் துறை அலுவலர்கள் ஜாக்கிரதையாகவும்,
எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். பிரேக்-டவுன் ஆகின்ற நேரம்,
சப்ளை கட் ஆகிற நேரம்—இவைகளையெல்லாம் சீராகக் கண்காணித்
தால்தான், விவசாயிகள் நன்மை அடைய முடியும். அரசாங்கத்தி

(பிற்பகல் 5-50)

னுடைய அறிவிப்புப் பிரகாரம் பம்புசெட்டுகளை பயன் படுத்தி அதன்
அடிப்படையில் பல ஏக்கர்களை பாசனத்தின்கீழ் வைத்திருக்கிறார்கள்.
இப்பொழுது இன்னும் இரண்டு மாத காலத்திலே அறுவடையாகக்



1974 டிசம்பர் 16] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

கூடிய பயிர்கள் எல்லாம் முழுவதும் கெட்டுப்போகின்ற நிலைமையில்
இருக்கிறது. மின்சாரத்தின் நிலை என்ன, எவ்வளவு மின்சாரம் சப்ளை
செய்கிறார்கள் என்பதெல்லாம்கூட எங்களுக்குத் தெரியாது. இருக்
கின்றதை எந்த அளவுக்குப் பயன்படுத்தினால் முன்பு இருக்கும் பயிர்
களாவது பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதைப் பார்த்து
நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு
கிறேன். குறிப்பாக பயிர் வைக்கும்போதுகூட இவ்வளவு மின்சாரம்
தான் உங்களுக்குத் தர முடியும் என்று சொல்லிவிடலாம். இத்தனை
மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கும், அதற்கேற்றவாறு
இவ்வளவு பயிர் செய்து கொள்ளுங்கள் என்றும் சொல்லலாம்.
இவ்வாறுதான் மின்சாரத்தின் நிலைமை இருக்கும், இவ்வளவு நேரம்
தான் கொடுக்கப்படும் என்று விளம்பரப்படுத்தினால், விவசாயிகள்
அதற்கேற்றவாறு மாற்றிக்கொள்வார்கள் என்றும், அப்படிச் செய்
தால் மிகவும் நன்றாக இருக்குமென்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

மற்றப்படி, தற்போது வறட்சி நிவாரண வேலைகள் என்று பல
வேலைகள் துவங்குகிறோம். ரோடு போடுவது, குடி தண்ணீர் வசதி
செய்து கொடுப்பது, இவைகளில் எல்லாம் அந்தந்தப் பகுதிகளில்
இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுக்கும்படி செய்ய
வேண்டும். யாரோ, காண்டிராக்டர்களுக்கு அந்த வேலைகளைக்
கொடுத்துவிடுவதால் குறைந்த கூலிக்கு அவர்கள் ஆந்திராவிலிருந்தும்
மற்ற மாநிலங்களிலிருந்தும் ஆட்களைக் கொண்டுவந்து அந்த வேலை
களைத் தொடர்ந்து செய்துகொண்டு போகின்றார்கள். வீராணம்
டேங்க் வேலையையெல்லாம்கூட வெளி மாநிலங்களிலிருந்து ஆட்களை
வைத்துக்கொண்டு, முன்பே ஒப்பந்தம் செய்துகொண்டு வேலைக்கு
வைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் அந்தப் பகுதி மக்கள் வேலை
வாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இதைத் தடுக்க சட்டம்
இல்லாவிட்டாலும், அரசின் ஒரு தாக்கீது மூலமாக—காண்டிராக்டர்
களுக்கு அளிக்கும் திட்டங்களில், அந்தத் திட்டம் எந்தெந்த ஊரிலே
நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறதோ, அந்த கிராமத்திலுள்ள
மக்களுக்குத்தான் வேலை கிடைக்கவேண்டும். அந்த வேலைகளைச்
செய்ய அவர்களைத்தான் ஈடுபடுத்த வேண்டும் என்று அறிவிக்க
வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து
இந்த வேலைகளைச் செய்ய அனுமதிக்கக் கூடாது. வறட்சி நிவாரணம்
அளிப்பதென்றால், இவ்வாறு வேலை வாய்ப்புக்களை அந்தந்தப் பகுதி
களில் உள்ள மக்களுக்கு அளித்து, அதன் மூலம்தான் நாம் அவர்
களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே, இதை அரசாங்கம்
மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

[1974 டிசம்பர் 16

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மதிப்புமிகு அன்பர் அவர்கள் சொல்லியதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்த மாதிரி மண் வெட்டும் வேலையைச் செய்பவர்கள் எல்லாம் "ஃப்ளோட்டிங் பாப்புலேஷனாக" வந்துவிடுகிறார்கள். நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் ஸ்கேவெஞ்சர்களாக இருப்பவர்களும் அத்தகையோரே. இங்கிருப்போர் இத்தகைய வேலைகளைச் செய்ய முன்வருவதில்லை. ஒட்டர்கள்தான் முன்வருகிறார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருப்பதை மற்றொரு உறுப்பினர் ஆட்சேபிப்பதற்கு உரிமையுண்டா? அதைப்பற்றி ரூலிங் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: அந்தந்த ஸ்தலத்தில் உள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கு, நிவாரணப் பணி மூலம் உதவி செய்ய, பணம் கொடுப்பதற்கு பதிலாக, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். இந்த வேலை வாய்ப்பை "லோக்கல் கிராம மக்களுக்குத் தான்" கொடுக்க வேண்டும். இப்போது வீராணம் டேங்கில் இருக் கிற வாய்க்கால் வெட்டுகிற ஆட்கள் எல்லாம்கூட வெளி மாநிலங் களிலிருந்து வந்த ஆட்களாகத்தான் இருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அவர்களும் இங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள்தான். அவர்கள் பரம்பரையாக ஆயிரக் கணக்கான வருடகாலம் இங்கேயே இருக்கிறார்கள்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: லட்சக்கணக்கான வருடங்களாக இருக்கலாம். இந்த வேலையை தற்காலிகமாக அந்தப் பகுதி மக்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களை ஒதுக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமல்ல. எல்லோரும் மனிதர்கள்தான். கீழே உள்ள எல்லோரையும் நன்றாகத் தெரிந்தவன் நான். அவர்களுடன் நல்ல தொடர்புடையவன். அவர் களைத் துன்புறுத்த வேண்டுமென்பது என்னுடைய எண்ணமல்ல. ஆனால், தற்காலிகமாக, அந்தந்த இடத்திலுள்ள நிவாரணப் பணி களுக்கு அந்தந்தப் பகுதி மக்களையே பயன்படுத்த வேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து. அப்படியில்லாமல், அவர்களை வேலைக்கு வைத்துவிட்டு, சும்மாகூட கிராம மக்களுக்குப் பணத்தைக் கொடுக்க லாம். அதுவும் நல்லது என்று கூறி, தலைவர் அவர்களே, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



1974 டிசம்பர் 16]

* திரு. கே. எஸ். கணபதி: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான உணவு நெருக்கடியைப்பற்றி இந்த அவை உறுப்பினர்கள் விவாதிப் பதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தும் அதேநேரத்தில் இந்த உணவு நெருக்கடி பற்றிய பல விவரங்களை இந்த அவை உறுப்பினர் களுக்கு அரசாங்கம் கொடுத்திருக்குமானால், இந்த விவாதம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கமுடியும் என்று கூறிக்கொள்கிறேன். பத்திரிகையிலே வந்த குறிப்புக்களை, புள்ளிவிவரங்களை மட்டும் வைத்து நாங்கள் இங்கு விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதே தவிர, உண்மையான புள்ளிவிவரங்களை அறிய எங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை. எனவே, இனியேனும் நாங்கள் சரியான நிலைமையை உணர்ந்துகொள்ள அரசாங்கம் இதுபற்றிய தெளிவான ஒரு அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு மிகமிக முக்கியமான ஒரு காரணம் பருவமழை இல்லை என்பதுதான். கடந்த 100 ஆண்டுகளிலே இதுபோன்ற ஒரு நிலை ஏற்படவில்லை என்பதை நாம் எல்லோரும் உணருகிறோம். நாம் எல்லோரும் கட்சி மாச்சரியத் திற்கு உட்படாமல் மாநில அளவிலே நமது மக்களுக்கு உணவு கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த அவை முன் வைத் தால் மிகவும் நன்றாக இருக்கும்.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக நமது மாநிலம் தேவைக்கு மேலாக உணவு உற்பத்தி செய்து உபரி மாநிலமாக இருந்து வந்தது. அந்த ஒரு காரணத்தினாலேகூட இப்பொழுது நாம் எதிர்பார்க்கக் கூடிய நெருக்கடி மிகமிகப் பெரியதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டு, அரிசியிலே 53 லட்சம் டன்களும், சிறு தானியங் களிலே சுமார் 16 லட்சம் டன்களும் சேர்த்து மொத்தம் 69 லட்சம் டன்கள் உற்பத்திசெய்தோம் . நமது தேவை, ஐந்தாவது திட்டத் திலே கூறியபடி, வயது வந்த ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 18 அவுன்ஸ் என்று கணக்கிட்டு ஒரு ஆண்டுக்கு 187 கிலோ என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே நமது மாநிலத்திற்கு இந்த ஆண்டு தேவை 61.41 லட்சம் டன்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தவிர, நமக்கு விதைக்குத் தேவையானது $1\frac{1}{2}$ லட்சம் டன் என்பதைச் சேர்த்து ஏறத்தாழ 63 லட்சம் டன்கள் உணவு தானியம் இந்த ஆண்டு நமக்குத் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு நாம் எதிர்பார்த்ததோ

74.67 லட்சம் டன்கள். ஆனால் எதிர்பாராத காரணங்களால் சம்பா பயிர் பூச்சியால் பாதிக்கப்பட்டது. தாளடி பயிரும், புஞ்சை தானியங்களும், மிகவும் குறைவான மழையால் பாதிக்கப்பட்டன. இதுவெல்லாம் நம்முடைய உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டதற்கு முக்கிய காரணங்கள். எனவே, கணக்கிட்டுப் பார்க்கும்போது, இந்த ஆண்டு நம்முடைய உணவு உற்பத்தி 50 லட்சம் டன்களைவிட அதிகமாக இருக்காது என்று நாம் சொல்லலாம். எனவே, உற்பத்திக்கும் நமது தேவைக்கும் உள்ள இடைவெளி சுமார் 12.91 லட்சம் டன்களாகும். இந்த வித்தியாசத்தை நாம் ஈடுசெய்ய வேண்டும்.

(பிற்பகல் 6-00)

உற்பத்தியை நாம் பெருக்குவதற்கு வாய்ப்பிருக்குமானால் அதைச் செய்யலாம், இல்லாவிட்டால் வெளி மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

சிறு தானியப் பயிர்கள் பாசன வசதியுள்ள இடங்களில் தவிர மற்ற பகுதிகளில் முழுமையாகக் காய்ந்து விட்டன. இனி மழை பெய்தாலும் பயன் இல்லை. ஒரு 15 நாட்களுக்கு முன்னாலே, சிறு தானியப் பயிர்கள் காய்ந்துவிட்ட காரணத்தினாலே, சிறு தானிய உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. நல்ல காலமாக, மத்திய அரசு மாநிலங்களிடையே சிறு தானிய ஏற்றுமதிக்குத் தடை ஒன்றும் விதிக்காத காரணத்தினாலே, சுமார் 8 லட்சம் டன் தேவைக்கு சிறு தானியங்களை வெளி மாநிலங்களிலிருந்து நாம் இப்போதே வாங்கி வைத்துக்கொள்ளுவோமானால், நம்முடைய கிராம மக்கள் எளிதில் மிகக் குறைவான விலையில் விற்பனை செய்ய முடியும். அந்த அடிப்படையைக் கொண்டு உடனடியாக இந்த அரசு வெளி மாநிலங்களிலிருந்து சுமார் 8 லட்சம் டன் சிறு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நாம் செய்தால் பெரும்பான்மையான கிராம மக்கள் சமீப காலத்திலே சிறு தானியத் தட்டுப்பாட்டால் அரிசிக்கு வர இருப்பவர்கள் அரிசியை விட்டுவிட்டு சிறு தானியங்களை விரும்பி உண்ணுவார்கள். அந்த அடிப்படைக் காரணத்திற்காக உடனடியாக இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம், அண்மையிலே அகில உலக அடிப்படையிலே உணவு உற்பத்தி பற்றி கூடிய மகாநாடு இந்தியாவும், பங்களா தேசும் மிகவும் மோசமான நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது என்றும் உணவு நிலை இந்த நாடுகளில் கடுமையாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையிலே மத்திய அரசு மாநிலங்களுக்கிடையே சிறு தானியப் போக்குவரத்தைத் தடை செய்வதற்கு முன்னரே நாம் இதைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த யோசனையை வைக்கிறேன்.



அடுத்தபடியாக, நம்முடைய உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் மூன்றாவது சாகுபடியைப்பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆதரவளித்து ஊக்கம் அளிக்கத் தேவையானதைச் செய்வோம் என்று சொன்னார்கள். அவசியமானால் இந்த நேரத்திற்கு 3-வது சாகுபடியை வைத்துக் கொள்ளலாமே தவிர, எப்போதும் வைத்துக்கொள்ளக் கூடாது. தஞ்சை மாவட்டத்திலே மட்டும் 3-வது சாகுபடியை வெகுவாக இந்த ஒரு ஆண்டு மாத்திரம் அனுமதிக்கலாம் என்று கூறுகிறேன். இந்த 3-வது சாகுபடிக்கு சலுகைகள் வழங்குவதிலே பல சிக்கல்கள் ஏற்படும். பல மாவட்டங்களுக்கும் வழங்கப்படவேண்டியிருக்கும். சலுகைகள் வழங்குவதில் தவறு இல்லை. மாவட்ட வாரியாகப் பார்க்காமல் மாநில அளவிலேயே அனைவருக்கும் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். மூன்றாவது சாகுபடியைத் திறமையாகச் செய்ய வேண்டும். விவசாய அமைச்சர் இங்கே இப்போது இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்வது, குறிப்பாக 3-வது சாகுபடி பற்றி நாம் திட்டமிடுவோமானால், தேவையான விதையை நாம் இப்போதே தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். எந்தெந்த விதையைப் போடுவது என்று விவசாய இலாகாவிலே கேட்பதைவிட அதிலே அனுபவம் உள்ளவர்களைக் கேட்டுச் செய்வதுதான் சிறப்பு.

தலைவரவர்களே, குறிப்பாக என்னால் சொல்ல முடியும். "ரத்னா" விதைகள் 105 நாட்களுக்குள் பலன் அளிக்கக்கூடியது. அந்த நெல்லை 4 ஆண்டுகளாக உற்பத்தி செய்து வருகிறேன். நான் கேட்ட இடங்களிலே ரத்னா என்ற பயிர்பற்றித் தெரியவில்லை. நான் சென்ற ஆண்டும் அதைப் பயிரிட்டேன். அது ஒரு கோடைக் காலப் பயிர். ஆகவே இதற்கான வசதிகளை இப்போதே தயார் செய்ய அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

தஞ்சையிலே மட்டுமல்லாமல், 3-வது சாகுபடி செய்யத் தகுதியான வசதிகளைச் செய்தால், நாம் பெருவெற்றி காணலாம். நாம் இறக்குமதி செய்வதற்கும், நமது தேவைக்கும் இடையே உள்ள துண்டு 5 லட்சம். இந்தத் தேவையான நெல்லை ரத்னாவைக் கொண்டு பெற முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. கே. எஸ். கணபதி] [1974 டிசம்பர் 16

அடுத்தபடியாக, அரிசி விலை மிக அதிகமாக ஏறிவிட்டது. மக்களுக்காக நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று வெகுவாகப் பேசப்படுகிறது. இதிலே பல சிக்கல்கள் உண்டு. நமக்கு 11—6—74-ம் தேதி வரையில் நம்முடைய மாநிலத்திலிருந்து கடந்த 4 ஆண்டுகளுக்குக் கணக்கிட்டுப் பார்த்திருப்போமானால், அரிசி விலை வெகுவாக ஏறவில்லை என்று நினைக்கிறேன். இப்போது ஏறியதற்குக் காரணங்கள் பல உண்டு. குறிப்பாக நமது மாநிலத்திலே நாம் கடைப்பிடித்து வந்த கொள்கைதான் காரணம். ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு அரிசி எடுத்துச் செல்லும் முறையால் விலையை ஓரளவுக்குக் கட்டுப்படும்படியாக வைத்திருந்தது. சாதாரணமாக 1974 மார்ச் மாதத்திலே தஞ்சை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும் அரிசி விலையில் வேறுபாடு என்ன என்று பார்க்கும்போது, தஞ்சையிலே 57 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல் 48 ரூபாயாக விற்றுக்கொண்டிருந்த அந்த நேரத்திலே, திருச்சி மாவட்டத்திலே ரூ. 52, ரூ. 53 என்று இருந்தது. மொத்த விலைக்கும் விற்கும் விலைக்கும் வேறுபாடு என்ன என்று நாம் பார்ப்போமேயானால், லெவி விலையில் இவர்களுக்கு ஒரு குவிண்டாலுக்கு சன்ன ரகத்திற்கு ரூ. 78, வெளி மார்க்கெட்டில் ரூ. 85 என்று இருந்தது. குறிப்பாக வியாபாரிகளும் ஓரளவுக்கு லாபம் வைத்து விற்க வாய்ப்பு இருந்தது. அது போலவே குறுவையிலே திருச்சியிலிருந்து தஞ்சைக்குச் சென்ற அதிக நெல்லை வியாபாரிகள் வாங்கி அரைத்து விற்பனை செய்வது வ்ழக்கம். 1971 ஆம் ஆண்டு மத்தியில் குறுவை சாகுபடி இருக்கின்ற மாதத்தில் ஒரு லட்சம் டன் திருச்சிக்கு வந்தது. 1972 ஆம் ஆண்டு 49 ஆயிரம் டன், 1973-ல் 48 ஆயிரம் டன் வந்தது. 1974லிலே இதற்கு ஒரு தடைவந்துவிட்ட காரணத்தினாலேயும், அரிசி எங்கும் வராததினாலும் விலை அதிகமானது. அது மட்டும் ஒரே காரணம் அல்ல. 1974 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களிலே மத்திய அரசு உரத்திற்கான விலையை 100 சதத்திற்கும் உயர்த்தியது. இதன் அடிப்படையிலே நம்முடைய சாகுபடிச் செலவுகள் வெகுவாக உயர்ந்தன. சாகுபடிச் செலவுகள் உயர்ந்த காரணத்தினாலே, விற்பனை செய்யும் அரிசி விலை உயர்வதிலே தவறு ஒன்றுமில்லை. ஆக உயர்வதற்குச் சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்ட காரணத்தால், விலை விஷம் போல ஏறியது. தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியும் அதிகப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1969 ஆம் ஆண்டிலே Report of the Commission of Enquiry on the Agrarian Labour Problems of East Thanjavur District என்பதில் திரு. கணபதியா பிள்ளை அவர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அந்த விவரங்களை அறிந்து வந்திருக்கின்றார்கள். அவர் 1968 ஆம்



1974 டிசம்பர் 16] [திரு. கே. எஸ். கணபதி]

ஆண்டிலே ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். அவர் கணக்கிட்ட வகையில் இன்றுள்ள உர விலையை வைத்து நமது விவசாயத்திற்குச் செய்யும் செலவையும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தையும் கணக்கிடும்போது, ஒரு ஏக்கர் சாகுபடிக்கு சுமார் ரூ. 767 ஆகிறது. அந்த ரூ. 767-ல் உரத்திற்கு மட்டும் அவன் செலவு செய்வது ரூ. 325. ஆக மொத்தத்தில் 50 சதம் உரத்திற்காகவே செலவிடப்பட வேண்டியிருக்கிறது. எந்தவிதமான காரணமும் இல்லாமல், அரசு விலையை உயர்த்திவிட்டிருக்கிறது. நம்முடைய விவசாய இலாக்காவில் உரம் இடுவதற்குச் சொல்கிறார்கள். N.P.K. 50 : 20 : 20 என்று அவர்கள் சொல்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு யூரியா வாங்குவதற்கு மட்டும் 250

(பிற்பகல் 6-10)

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

ரூபாய் செலவு செய்ய வேண்டும். இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசு தான் என்று நான் சொல்வேன். உரத்தின் விலையை மத்திய அரசு உயர்த்திக்கொண்டேயிருக்கிறது. மத்திய அரசு உர விலையை 1973 ஆம் ஆண்டிலே 78 ரூபாய், 75 ரூபாய், 66 ரூபாய் என்று நிர்ணயித்திருந்தது. இன்றைக்கு அந்த உரத்தின் விலையை நூறு மடங்குக்கு மேல் ஏற்றியிருந்தாலும், ஒரு குவிண்டாலுக்கு நெல் விலையை உயர்த்தி நிர்ணயித்திருப்பது 8 ரூபாய்தான். ஒரு ஏக்கரில் சராசரி விளையக்கூடிய நெல் உற்பத்தி 900 கிலோகிராம் தான். ஆகவே ஒரு ஏக்கரில் விளையக்கூடிய நெல் உற்பத்தியில் கிடைக்கக்கூடிய அதிகம் 72 ரூபாய் தான். உரத்துக்கு மட்டும் செலவு செய்வது ஒரு ஏக்கருக்கு 140 ரூபாய் அதிகம். தமிழக அரசு உரத்துக்காக, நெல்லை நேற்று வரை ஒரு விகிதத்தில் அதிக விலையில் வாங்கி வந்தார்கள். இன்று அதையும் அகற்றி விட்டார்கள். ஏதாவது ஒரு முறை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் வகையில் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டும். அப்படி வழி இல்லாவிட்டால், (Bonus) முறையிலாவது கொடுக்க வேண்டும். மத்திய அரசு விலையை உயர்த்துவதற்கு சம்மதிக்காது என்று கருதுகிறேன். அப்படி மத்திய அரசு சம்மதிக்காவிட்டாலும், இதைத் தமிழக அரசு செய்ய வேண்டும். இதனால் விவசாயிகள் படும் கஷ்டமெல்லாம் நண்பர் திரு. பலராமனுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது, எவ்வளவு விலை நிர்ணயிக்கலாம் என்ற எந்த விதத் கருத்தும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் கட்சி சார்புடையவர்கள். கட்சிக்குக் கட்டுப்பட்டவர்கள். நான் எந்தக் கட்சிக்கும் கட்டுப்பட்டவனல்ல. உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திச்

[திரு. கே. எஸ். கணபதி] [1974 டிசம்பர் 16

செலவு ஏக்கருக்கு 767 ரூபாய். மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களுக்கே இது நன்றாகத் தெரியும். அறுவடைச் செலவு ஆறில் ஒரு பங்கு. அது மட்டுமல்ல. போரடிச் செலவு என்று ஒன்றும் உண்டு. தண்ணீர் பாய்ச்சுவதற்கு என்று தனியாக ஏக்கர் ஒன்றுக்கு ஒரு மூட்டை நெல் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நான் சொன்ன ரூபாய் 767-ல் மேற்கண்ட செலவினங்கள் எல்லாம் அடங்கவில்லை. சாதாரண மாக சம்பாவானால் ஒரு ஏக்கரில் 48 கலம் விளையும். மேற்கே வர வர "திட்டம்" என்றும் கிழக்கே போகப்போக "மேனி" என்றும் சொல்லுவார்கள். ஒரு ஏக்கருக்கு மூன்று மா. ஒரு மாவு 16 கலம். 24 படி கொண்ட கலத்திலே 48 கலம் ஒரு ஏக்கருக்கு விளையும். அதிலே கணக்கெடுத்துப் பார்த்தால், நிலுவையாக விவசாயிகளுக்குக் கிடைப்பது 1,040 கிலோ கிராம் எல்லாம் போகக் கிடைக்கும். மாய்ஸ்சர் கன்டென்ட் என்றெல்லாம் சொல்லுகிறார்களே அதெல் லாம் போக விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியது $9\frac{1}{2}$ குவிண்டால். இன்றைக்கு உள்ள விலையில் 790 ரூபாய்க்கு விற்கும். 767 ரூபாய் செலவு செய்த விவசாயிக்குக் கிடைப்பது வெறும் 790 ரூபாய். ஆறு மாதம் கஷ்டப்பட்ட விவசாயிக்கு இப்படிக் கிடைந்தால் எந்த விவசாயியாவது நெல் பயிரிட முன் வருவானா? இதே விலையை நிர்ணயித்து, அரசு விவசாயிகளைப் பார்த்து மூன்றாவது சாகுபடி செய்யுங்கள் என்று விவசாயிகளைக் கேட்டால், எந்த விவசாயியாவது மூன்றாவது சாகுபடிக்குத்தான் முன் வருவானா? உச்ச வரம்பு வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். எதை வைத்துக்கொண்டு உச்ச வரம்பு வைக்க வேண்டும்? நெல்லைப் பயிரிடுபவனுக்கு கட்டுப்படி யாகக் கூடிய விலையில் தான் உச்ச வரம்பு வைக்கலாம். ஒரு குவிண் டாலுக்கு 105 ரூபாயாக நிர்ணயிக்கலாம். அப்படி நிர்ணயித்தால், ஒரு ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிக்கு 200 ரூபாய் கிடைக்கும். எந்த ஒரு தொழில் செய்பவனும் 200 ரூபாய் வருமானம் வருவதற்காக 6 மாத காலம் கஷ்டப்பட்டு உழைக்க மாட்டான். ஒரு குவிண்டாலுக்கு 105 ரூபாய் என்று நிர்ணயித்தால், நிச்சயமாக பெருவாரியான விவசாயிகள் 3-வது போக சாகுபடி செய்ய முன்வரு வார்கள். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் 90 ரூபாய்க்கு மேல் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

மற்றொரு விஷயத்தையும் நான் இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே இன்று 69.3 லட்சம் ஏக்கரா நிலத்தில் நெல் சாகுபடியாகிறது. ஆனால் நாம் உற்பத்தி செய்வது 53 லட்சம் டன். எனவே சராசரி ஒரு ஏக்கராவில் கிட்டத்தட்ட 730



1974 டிசம்பர் 16] [திரு. கே. எஸ். கணபதி]

கிலோ கிராம் தான் விளைகிறது. ஆனால் அண்மையில் அரசு வெளி
யிட்ட லெவி உத்தரவை நாம் பார்ப்போமானால், மிக பயங்கரமாக
இருக்கிறது. அந்த உத்தரவிலுள்ள தவறுகளுக்குக் காரணம்
அதிகாரிகள் என்று நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். சாகுபடி
செய்யும் நிலத்திலிருந்து கிடைக்கும் நெல்லை அப்படியே அரசாங்கத்
துக்கு லெவியாகக் கொடுத்து விட்டால், விதைக்கு என்ன செய்வது?
அறுவடைக் கூலிக்கு என்ன செய்வது? அல்லது தண்ணீர் பாய்ச்சி
பயிரை வாடாமல் பார்த்தவனுக்குக் கூலிக்கு என்ன செய்வது?
உழவன் கணக்குப் பார்த்தால் உழவுக்குக்கூட மிஞ்சாது என்று
சொல்லுவார்கள். எனவே கட்டாயம் இந்தத் திட்டத்தை மாற்றி
யமைக்க வேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து. இதை மாற்றி
யமைக்க வேண்டியது இந்த அரசின் முதல் பொறுப்பு என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நிர்ணயித்தால், உண்மையிலேயே
இது நமக்குக் கிடைக்குமா என்ற அடிப்படையிலே நாம் கணக்குப்
போட்டுச் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்
கிறேன். $7\frac{1}{2}$ ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு
அளிக்க வேண்டியது ஒரு டன், அதாவது 10 குவிண்டால். அதுவும்
தஞ்சையிலே எப்படி விளையும்? ராமநாதபுரத்திலே என்றும் இல்லா
மல் ஒரு தடவை ஒருவேளை விளையலாம். 10 குவிண்டால் என்ன, 20
குவிண்டால் கூட விளையலாம். திருச்சி மாவட்டத்தில் பொதுவாக
சில இடங்களில் 15 குவிண்டால் விளையும். சில இடங்களில் 5 குவிண்
டால் கூட விளைகிறது. இப்படி ஆங்காங்கே இடத்துக்கு இடம்,
மாவட்டத்துக்கு மாவட்டம், நிலத்தின் செழிப்புக்குத் தக்கபடி
விளைச்சலும் இருக்கிறது. அதிகாரிகள் இதையெல்லாம் சரியாகக்
கணக்கெடுத்துப் பார்க்காமல், அரசுக்குத் தவறான புள்ளி விவரத்தைக்
கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்தை வைத்
துக்கொண்டு, அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்து உத்தரவு போடுவது
நல்லதல்ல என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்
கிறேன். உயர்ந்தபட்ச விலையை நிர்ணயிக்கும்போது (ceiling on rice
price) நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
விவசாயிகளுக்குப் பொருத்தமில்லாத வகையில் விலையை நிர்ணயித்
தால், அவர்களுக்கு, உற்சாகம் வெகுவாகக் குறைந்து விடும். பிறகு
அரசின் தவறான கொள்கைகளால் விவசாயிகள் கள்ளச் சந்தைக்
காரர்கள், பதுக்கல்காரர்கள் என்ற சொல்லுக்கு ஆளாக்கப்படு
கிறார்கள். இன்னொரு மிக முக்கியமான செய்தியை நான் இச்சந்தர்ப்
பத்தில் தெரிவிப்பது என் கடமையெனக் கருதுகிறேன். இன்று அரசு
கொள்முதல் செய்யும் விலைக்கும், சென்னை, கோயம்புத்தூர்,
கன்னியாகுமரி மற்றும் சில இடங்களிலே உள்ள நியாய விலைக்

[திரு. கே. எஸ். கணபதி] [1974 டிசம்பர் 16

கடைகளிலுள்ள விலைக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. அதை நான் கணக்கிட்டுச் சொல்ல முடியும். இப்பொழுது அரசு கொள் முதல் செய்து அதை விற்பனை செய்யும் அதே வேலையை ஒரு தனியா ரிடம் கொடுத்தால், இவ்வளவு கொள்ளை லாபத்தில் விற்பனை செய் வாரா என்றால் நிச்சயமாக இல்லையென்று என்னால் சொல்ல முடியும். அரசு கொள்முதல் செய்து விற்பனை செய்யும் இந்த வியாபாரத்தில் அரசுக்கு ஒரு டன்னுக்கு 450 ரூபாய் லாபம் கிடைக்கிறது. என்னால் புள்ளிவிவரங்களைக் கணக்குப் போட்டுக் காட்ட முடியும். இது விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் அரசு செய்யும் தவறு என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தவறு களுக்கெல்லாம் காரணம் அரசு கடைப்பிடிக்கும் முறை தான். எனவே அரசு உடனடியாக ஆடிட்டர்களும் வர்த்தகர்களும் அடங்கிய ஒரு உயர்மட்டக் குழுவை வைத்து மேற்கண்ட கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். இது அரசுக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்து

(பிற்பகல் 6-20)

கிறது. நாம் குறைந்த விலைக்கு வாங்கினாலும்கூட நியாயமான விலை யைக் கொடுக்கும்போது இந்த வித்தியாசம் இருக்கத்தான் செய் கிறது. நாம் எல்லா வகையிலும் ஒரு டன்னுக்கு இவ்வளவு அரிசி கிடைக்கும்—ஒரு டன்னுக்கு என்று பார்த்தால் 64 முதல் 68 வரையில் Out-turn கிடைக்கும் என்று சொல்லுவார்கள். அவற்றை யெல்லாம் கணக்கிலெடுத்துக்கொண்டுதான் சொல்லுகிறேன். மிக அதிகமான வேறுபாடு தெரிகிறது. நமக்குக் கிடைக்க வேண்டிய லாபம் எங்கே போகிறது, ஏன் நமக்குக் கிடைக்கவில்லை? விவசாயி களுக்கும் கிடைக்கவில்லை, பயன்படுத்துவோருக்கும் கிடைக்கவில்லை, அரசுக்கும் கிடைக்கவில்லை என்றால் இதை முக்கியமாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு அமருகிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, we in this House are grateful to the Hon. the Minister for Food for placing a very important topic for discussion, because if there is any situation that has developed into a very critical stage in our State today, it is the food situation and during the last session while I sympathised with the Hon. the Minister for Electricity for the deplorable state of power generation, I am sorry, Sir, that in this session we have to apply the same criticism to the management of the food portfolio which is likely to develop into a very serious stage during the course of the next two or three months.



1974 டிசம்பர் 16] [Thiru A. R. Damodaran]

My Friends, Thiru G. Swaminathan and Thiru Ganapathi have spoken about the need for ensuring a remunerative price to the farmer and on this issue, Sir, I should first like to air my views because I feel that the Government of Tamil Nadu are adopting a somewhat vague and ambivalent attitude in so far as ensuring a decent price to the producer of food is concerned. Sir, in 1966, a Government Committee was formed to go into the question of agricultural production and this Committee which consisted of very highly competent officials of the Government of Tamil Nadu mentioned, in its report, that the difference between a good season and a bad season would mean as much as a shortfall of one million tonnes in production. This was in 1966 and while we have stabilised irrigation sources over the past six years, I think we must take it as axiomatic, Sir, that in the year 1974–75, when Tamil Nadu has possibly had the worst North-East monsoon over the past 100 years—to quote a very reputed newspaper of our own State—" the difference is likely to be alarming and competent experts place the deficit at round about one million tonnes of foodgrains during the current season."

Now, Sir, we have had ample experience of a very bad food situation in our country in the year 1973 and the situation that Tamil Nadu faces today is almost identical to the situation that the Government of India faced in the year 1973. Some of the solutions which are said to be found by the Government of Tamil Nadu today are also almost identical to the kind of solution which the Government of India tried in 1973 and miserably failed.

Sir, I was referring to the fact that we wanted a remunerative price for the farmer and in this, Sir, I am sorry to accuse the Government of Tamil Nadu of not correctly working out the cost of production of paddy and of not fixing a sufficiently remunerative price for the farmer. I have good grounds for stating this, Sir, judging from the statements that have been issued by the Ministers of the Tamil Nadu Government themselves. Only two months ago, Sir, the Government of Tamil Nadu made such an announcement. Just two days before the Government of India announced the procurement prices for paddy and wheat, the Government of Tamil Nadu came out with the statement that they would fix the procurement price at a rate which was approximately Rs. 10 per quintal above that announced by the Government of India. Suddenly, when there was a change in the portfolio in

[Thiru A. R. Damodaran] [1974 டிசம்பர் 16

the Agricultural Ministry and when the Hon. Thiru Jagjivan Ram succeeded Thiru Fakhrudin Ali Ahmed—perhaps that is the reason why the Tamil Nadu Government decided to adopt the advice of the Hon. the Food Minister at the Centre—almost two days later, they came out with another statement that the Government of Tamil Nadu had accepted the rates suggested by the Government of India and hereafter the procurement price would be Rs. 84 per quintal whereas, originally, they had announced a price of Rs. 94 per quintal. Even today, there is considerable vagueness. The Hon. the Minister for Food says that as far as the Civil Supplies Directorate is concerned, they will procure at a price of Rs. 84 per quintal whereas co-operatives and other agencies may procure at Rs. 94 per quintal. All this ambivalence is leading to a considerable confusion amongst the producers who wish to have a remunerative price for their produce.

Sir, my friend Thiru Ganapathi quoted a large amount of statistics. I do not think it is necessary because the Hon. the Minister for Food himself was at least an agriculturist—I do not know if he continues to be an agriculturist but he was an agriculturist—and he knows very well that the price of paddy if it is to be procured at the present rate which has been fixed by the Government of India is singularly unremunerative, considering the cost of inputs that go into its production. In 1973, in the Budget Speech of the Hon. the Chief Minister, he mentioned a very important Committee which was going to be formed and all of us in this House also congratulated him when he said that an Expert Committee was being appointed to go into the cost of production of agricultural commodities and all of us hailed this as the first scientific step taken by any State Government to assess the cost of production of agricultural crops. May I ask the Hon. the Minister for Food, Sir, why this Committee has not been formed and why it has not yet come out with a clear-cut statement as to what exactly it costs us to produce in this State not only paddy but also other coarse grains ? Why has this Committee died a death, Sir—has it been because of the suggestion of the Government of India that only the Agricultural Prices Commission is entitled to fix the prices of paddy and coarse grains and that the State Government should not have a Committee which would create confusion in the matter of fixing prices ?



1974 டிசம்பர் 16] [Thiru A. R. Damodaran]

Sir, I would reiterate what many hon. Members have suggested —that unless you are able to enthuse the farmer to produce more, you are only creating an even more difficult situation and all these policy statements that you have mentioned of restricting wholesale trading in Thanjavur district to co-operatives and the Civil Supplies Directorate, and of not encouraging any movement at all of paddy from Thanjavur to other districts, are likely to create a very unwholesome situation in the whole State, because with the present bad monsoon if there is one district which has to provide foodgrains to other districts in Tamil Nadu, it is only Thanjavur district and if you impose artificial restrictions creating that bureaucratic approach which is inevitable when you have a system of controls, although I credit the Hon. the Minister for Food with the best of noblest intentions, undoubtedly, when it it translated into the field, we will find a great deal of harassment being resorted to against ryots. For example, with the recent procurement—levy system of procurement which has been announced, I know for a fact that not a bullock-cart with ten bags of paddy can move from any village centre to a marketing centre, because what happens is that the Government officials are so anxious to procure paddy and other crops that they stop each and every cart coming from the village roads and whether the man has paid his levy or has given some paddy to the Civil Supplies Directorate, what happens is that all the paddy is being confiscated by the Civil Supplies Directorate although he may be paid the procurement price. If you interfere with the movement of foodgrains in each and every taluk, if you place artificial curbs on the movement of paddy from taluk to taluk and even from district to district, you must have a very much more efficient administrative machinery than what you are having at present to control the movement as well as the prices of foodstuffs.

[பிற்பகல் 6-30]

Another dangerous policy which has been announced—I hope it will not be given effect to—is the fixation of ceiling prices for paddy in wholesale and retail trade. Sir, as my hon. Friend, Thiru Swaminathan pointed out, this was resorted to by the Government of India and had proved to be an abject failure. Throughout India, they fixed the ceiling price of wheat and they fixed it somewhere near Rs. 150 and they found that no wheat flowed from the producing centres of Punjab and Haryana to any of the deficit States and ultimately they had to give up this policy.

In formulating a food policy, my friends have suggested a Food Council. The Hon. the Chief Minister is known for his aptitude for convening all-Party meetings to decide very important matters like the Cauvery River Waters dispute. I feel, Sir, that even if the Government are not able to form a Legislature-Committee, in all matters regarding procurement, levy and fixing of remunerative price, it is better that we get the leaders of political parties as also the representatives of the farmers to discuss with the Food Minister what policy should be evolved in the next two or three months. If the Government frequently issue orders as was done in the last year, it will only create the worst confusion in the market and might result in the farmers developing a very antagonistic attitude to the Government. Hints have been thrown that we are in for rationing of foodgrains. Sir, if the situation becomes really bad, any Government which is responsible for maintaining an adequate food supply to the consumers will undoubtedly have to think of rationing. But if you are going to think of rationing in 1975 with the absolutely small buffer-stock of 2 to 3 lakhs tons, I may say that the Government will be placing themselves in a position where it will become the most hated authority not only amongst producers but also amongst consumers. I know, Sir, this suggestion is being made by the interested parties who want to force the Government into a position where they will be forced to adopt rationing. But I would suggest that if at all the Government think of rationing, the Government can do so only if they have a buffer-stock of 7 to 8 lakhs tons foodgrains and that can be ensured only if the Government are able to get it from the other States in India, which are in a position to spare it. We are in the unfortunate position to-day in India of not having a bufferstock of any foodgrains anywhere in India. In fact, even to-day we have read in the papers how we have to get 300 thousand tons of wheat from the United States. Sir, Thailand has enough rice and is willing to sell rice. But the only difficulty will be to provide enough foreign exchange. I believe that the step which the Government of Tamil Nadu have taken in appealing to the Centre to provide one lakh tons per month is the correct step. I think the Collectors have met and advised the Ministers that unless we are able to build up an adequate buffer-stock, this Government will not be able to discharge their responsibility in ensuring foodgrains even at the rates which they have announced recently. Sir, the step that has been taken in restricting the movement from Thanjavur requires considerable reconsideration from the point of view of the require-



ments of the other districts. There will certainly be a tendency for grains to be kept in Thanjavur district because the situation in the month of June-July is likely to be more difficult than what it is today. I would request the Hon. the Minister for Food to get in frequent touch with the Collectors of various districts to ensure that each district is provided with the minimum buffer-stock which will enable the Collectors to administer their districts at least for the next three to four weeks because it is my feeling that a feeling of scarcity would have been created all over the State and all sorts of bad elements are likely to take advantage and resort to the unsocial practice of hoarding foodgrains. Yesterday my hon. Friend Thiru Swaminathan referred to the need for declaring stocks that were available with the traders. This is one useful step which the Government can take and then the Government will be in a position to enforce the proper distribution when the whole State is faced with a very grim food situation and we would certainly welcome any move on the part of the Government to force the traders specially to declare their stocks. I really have no objection to asking the producers also to declare their stocks. But I am afraid all these policy measures are only on paper and very little action is taken to enforce them to see that beyond a certain quantity, neither a producer nor a trader should be allowed to keep stocks. The Government may not be able to have price control but if the Government keep the stocks moving and if the stocks keep coming into the market, that in itself will be a great measure of success, because with the limited grain that is available with us, we must ensure that hoarding is absolutely prevented and that the grain is brought to the market and sold at whatever price that exists in the market at that time.

Sir, the other question that has been raised which I think I should refer to, because I have some personal knowledge on the subject, is the question of power supply to agricultural pumpsets as well as diesel supply to agricultural pumpsets. I have noted that the Hon. the Chief Minister has mentioned a scheme whereby he thinks that a subsidy of Rs. 1,000 could be given for diesel pumpsets to be distributed on an emergency basis to ryots. I would like to caution him in this regard. Knowing the petroleum position, the months of January and February are going to be extremely difficult periods because the crop season starts in Punjab and Haryana. For the past 3 months, there has been no shortage

of diesel in Tamil Nadu. But when Rabi season starts in January, there is always a shortage and there is the tendency for the Government of India to yield to pressure from States which are very near Delhi and to increase the supply of diesel to those States. I think that this Government would be well advised to consider the requirements of the State as far as diesel is concerned, before the Government embark on the subsidy scheme, because the Government will have to face the same farmers coming and saying that they could not get diesel for the pumpsets supplied to them on the subsidy basis. The average monthly requirement of diesel oil is about 65 to 70 thousand kilo litres and I mention this because the Hon. the Minister for Food seems to have been satisfied with some figure of 10,000 or 15,000 kilo litres that would be required for agricultural pumpsets. I would like to inform him that my own estimate of the requirement of high speed diesel during the months of January to June is 75 to 80,000 kilo litres per month and I would request him to kindly ask his officials to prepare a proper estimate. When I say 75 to 80,000 kilo litres, I am referring to the total requirement of high speed diesel oil. The requirement for agriculture alone may be 12 to 16 thousand kilo litres. The Government should ensure the supply of diesel oil to the farmers, because when the Government give a subsidy of Rs. 1,000, the farmers will have to pay 3 to 4 thousand rupees for pumpsets, and the farmer will not be happy if he is not able to get back the investment made by him because he does not have diesel oil. I hope, therefore, that the Minister will ensure that at least during the next 6 months, because of the acute failure of rains and the emergency situation that faces us, proper supply of diesel is made to the State—to our State. My hon. Friend Thiru Ramasami Padayatchi referred to the fact that farmers were given power supply only during certain limited hours, four hours during day-time and 6 hours during night-time. Sir, I would appeal to the hon. Members to realise that we are facing a very critical situation in so far as electricity generation is concerned and we cannot expect normal supply of electric power just to keep our usual hours of business. When we are faced with the emergency, we must be prepared to sacrifice and we should be thankful that power at least is given between the hours of 12 midnight and 6 a.m. My only request to the Hon. the Minister for Electricity is to see that at least during the hours of supply, between midnight and 6 a.m. or between 10 a.m. and 2 p.m. at least during these hours, power is supplied in adequate measure,





without a fall in voltage, so that our motors do not get burnt. I can say that our farmers are quite prepared to get up at midnight and irrigate their fields, when we are faced with a critical situation. Perhaps in the month of March we may have a 40 per cent cut—why in the month of May, it may be even 60 to 80 per cent cut. We should be thankful that power is given on a priority basis for agriculture. We should not forget that even last month when there was an increase in power tariff, the agricultural sector was the only sector which did not have an increase in the power-tariff. When other tariffs have been increased, the agricultural tariff still remains at 12 paise per unit. I would, therefore, say that power, if it is given even at odd hours on an assured basis, the farmers in this State would be more than prepared to co-operate with the authorities.

[பிற்பகல் 6-40]

Sir, one more point and I have done. I have seen numerous reports about linking up fertiliser supplies with procurement of foodgrains. This requires a great deal of co-ordination and in fact, the farmer today would be very willing, I think, if the Government give him a bag of urea to part with two bags of paddy or three bags of paddy, whatever they think is reasonable. I would earnestly advise, in view of the serious situation that the Civil Supplies Directorate is likely to face in procuring foodgrains during a period of drought, and I would seriously suggest to the Government to think of a way of linking up the agreed supply of fertilisers with the procurement of paddy or foodgrains. I know it is a Herculean task; it requires a great deal of co-ordination. But if the Government are going to entrust co-operatives in Thanjavur District with wholesale procurement of paddy, I think it would be a splendid idea if they could arrange for the supply of fertilisers through these co-operatives to the ryots and see that some exchange or barter system is evolved so that the Government are able to build up an adequate stock of paddy in that district.

Sir, it is very difficult for us at this time to offer any concrete solutions for the very simple reason that we do not have the final crop position, the Samba harvest position and we do not know what the January harvest is going to be like. But there can be little doubt that for the next six months our State is going to face a very difficult situation and perhaps the Ministerial Benches may

[Thiru A. R. Damodaran] [1974 டிசம்பர் 16

have to have a warmer session during the Budget session. But, we have got to face these difficulties and I can assure the Hon. the Minister for Food on behalf of the farmers and on behalf of the consumers whom also I represent that so far as food-supplies to these sections are concerned, all that we require is a more efficient distribution of the available foodgrains and lessening of the long queues that have to wait in the fair price shops. It is impossible for a lower middle class family to stand in a queue for kerosene, in another queue for sugar and yet another queue for rice. If they stand in a queue for five days in the week, when will they have time to work and attend to other jobs? So, at least in view of the gravity of the situation, more fair price shops will have to be opened. It is an excellent idea to have a telephone service. The only difficulty is with our Madras Telephones which get so mixed up so often that we may get a wrong number. Therefore, I hope that you will not have only one telephone connection and that you will have at least half-a-dozen connections because emergency calls will be so frequent. I also hope that at least in the bigger urban areas like Madras, Madurai and Coimbatore and the Municipal areas, you will have some skeleton fair price organisations working because as I said, we can neither leave the trade entirely to private trade in view of the difficult situation nor entirely to State trade because there is not enough grain to distribute to undertake that responsibility. So, the Government have to have a flexible outlook and approach. They have to have a change in policy, if necessary, once in two months, depending on the arrival of crop in the market. I hope that in this the Government will meet the situation with determination because there can be no doubt whatsoever that we are going to face a very difficult situation.

I would only like to echo the appeal made by the Hon. the Chief Minister that it is absolutely imperative that we should have some grain allotted to Tamil Nadu for the next six months until we go to the next crop. Whether it is rice, whether it is wheat, whether it is coarse grains, whatever it is, I think we should accept it and build up an adequate buffer-stock so that we may be able to pass through this difficult situation.

Thank you.

* திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு உப-தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தச் சபையிலே உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். தஞ்சாவூர் ஜில்லாவைத்தான்



1974 டிசம்பர் 16] [திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்]

நம்முடைய தமிழ் நாட்டில் முக்கியமானதொரு உணவு சப்ளை ஜில்லாவாக வைத்திருந்தோம். அந்த ஜில்லாவிலேயே இந்த வருஷத்தில் சரியான மகசூல் கிடைக்கவில்லை என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. மேலும், இந்தச் சபையினுடைய கூட்டம் இங்கு மூன்று நாள் நடந்திருக்கிறது. இந்த மூன்று நாட்களும், உறுப்பினர்கள், அவரவர்களுடைய பொது நிலையிலேயே, அவரவர்களுடைய ஜில்லா நிலையிலேயே, தாலூக்கா நிலையிலேயே, பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கூறினார்கள். உரம் கிடைக்கவில்லை, மற்ற தேவைப்பொருள்கள் கிடைக்கவில்லை, மேலும், பல கோளாறுகளினாலே விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் உங்களிடத்திலே இப்போது கூறிக்கொள்வதெல்லாம், பாலுக்கு சீனி இல்லை என்பவனுக்கும் கூழுக்கு உப்பு இல்லை என்பவனுக்கும் துக்கம் ஒன்று மாதிரி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. பாலுக்கு சீனி இல்லையென்றாலும் அவனுக்கு துக்கம் தான். கூழுக்கு உப்பில்லை என்றாலும் துக்கம் தான். அதுமாதிரிதான் என்னுடைய நிலையும் இருக்கிறது. நான் ராமநாதபுரம் ஜில்லாவிலே உள்ள ஒருவன். இந்த ராமநாதபுரம் ஜில்லாவினுடைய நிலை என்ன என்பதை இன்றைக்கு ஒரு புள்ளிவிவரமாகப் பார்ப்பீர்களேயானால், உங்களுக்கு நன்கு விளங்கும். இந்த ராமநாதபுரத்தினுடைய நிலை தமிழ் நாட்டிலே வேறு எங்கும் இல்லை என்று நான் பார்த்த அளவுக்குத் தெரிகின்றது. தஞ்சாவூரை நம்பித்தான் ராமநாதபுரம் எந்தக் காலத்திலேயும் வாழ்வு நடத்திக்கொண்டு வருகிறது. நண்பர் அவர்கள் "நான் இப்போது ராமநாதபுரம் ஜில்லாவிலே எல்லா இடங்களிலும் போய்ப் பார்த்தேன்" என்று சொன்னார்கள். சில இடங்களில் பச்சை இருக்கிறது, சில இடங்களில் கருகிப்போய் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ராமநாதபுரத்தில் இப்போது பார்ப்பீர்களேயானால், எந்த இடத்திலேயாவது, எங்காவது எந்த நிலத்திலாவது ஒரு பச்சை இருக்கிறதா என்பது உங்களுக்குத் தெரியும். கட்சி பேசுவதற்காக, நான் சாதித்தேன், அங்கே பண்ணினேன், இங்கே பண்ணினேன், எல்லாம் நல்ல முறையிலே எங்கள் கட்சி நடத்துகிறது என்றெல்லாம் சொல்வதென்றால், பொருத்தமாகாது. இந்த நேரத்திலேதான் ராமநாதபுரம் ஜில்லாவை நீங்கள் காப்பாற்ற வேண்டும். நிலைமை அப்படி இருக்கிறது. வேறு ஒன்றுமே இல்லை. பொதுவாக கட்சியைப்பற்றி நான் பேசவில்லை. அமைச்சரவர்கள் குறைச்சலானவர்கள் என்றும் நான் சொல்லவில்லை. இந்த நேரத்தில் முதலமைச்சர் அந்த இடத்திற்குப் போக வேண்டும். அந்த வறண்ட பிரதேசத்தைக் கண்ணால் பார்க்க வேண்டும்.

[திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்] [1974 டிசம்பர் 16

பொதுவாக எங்குமே வறுமை இருக்கின்றது. இந்த நேரத்தில் சம்பாதிப்பவர்கள் தேவையான அளவுக்கு சம்பாதிக்க முயற்சி எடுப்பார்கள். அதுதான் தற்போது நடைமுறை அனுபவத்தில் தெரிகிறது. இந்தக் கஷ்டமான நேரத்தில், சம்பாதிக்கின்றவர்கள், ஏழைகளைப் பார்த்து, நிலத்தை எழுதித்தா, இல்லை ஏதாவது பண்ணு, உனக்கு அது தருகிறேன், இதைத் தருகிறேன் என்றெல்லாம் சொல்லி ஏழைகளை ஏமாற்றி சம்பாதிக்கிறார்கள்.

இப்பொழுது ராமநாதபுரம் மாவட்டம் ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறது. யார் தீ வைத்தாலும் வீடு வெந்து போய் விட்டது மாதிரி, யார் வைத்தால் என்ன, நல்லவர்கள் வைத்தாலும் சரி, கெட்டவர்கள் வைத்தாலும் சரி, வீடு எரிந்து போய்விட்டது மாதிரி, ராமநாதபுரம் ஜில்லா சுத்த சூன்யமாக, துப்புரவாக இருக்கிறது. அதிலேயும், கடற்கரைப் பகுதி ரொம்ப மோசமாக இருக்கிறது. குடிக்க தண்ணீர்கூட இல்லாமல் வறண்டுபோயிருக்கிறது. குடிக்கவும் தண்ணீர் இல்லை, உணவுக்கும் வழியில்லை. இந்த நிலையில் அதிகாரிகளோ சரியான முறையில் நடக்கவில்லை. எல்லா அதிகாரிகளையும் சொல்ல முடியாது. நல்லவர்களும் உண்டு.

சொசைட்டி மூலமாக ஒரு சில இடங்களில் அரிசி சப்ளை பண்ணச் சொல்கிறார்கள். அங்கேயும் சரியான முறையில் பங்கீடு நடைபெறவில்லை. ஏன் நடக்கவில்லை? நானும் ஒரு சொசைட்டி பிரசிடன்ட்டு தான். பல குறைபாடுகள் இருக்கின்றன. ஒரு மூட்டை அரிசி கொண்டு போனால் இரண்டு படி அரிசி குறைகிறது. அந்தக் குறையை சொசைட்டி கணக்கில் எழுத முடியாது. அவர் சில தப்புக்கள் பண்ணுகிறார். லாரி படுத்துவிட்டது, அதைத் தள்ளச் சொன்னோம், அதற்கு 10 பைசா செலவாகிவிட்டது என்று அதையும் சேர்த்து வாங்குகிறார்கள். இப்படியெல்லாம் குறைபாடுகள் இருக்கின்றன. உணவு அமைச்சர், முதல் அமைச்சர், நமது வருவாய்த் துறை அமைச்சர் இவர்கள் எல்லாம் அங்கே வர வேண்டும். வந்து பார்க்க வேண்டும். எல்லோரும் தான்—"எங்கள் ஊரில் பஞ்சம், எங்கள் ஊர் கெட்டுப் போய்விட்டது, எங்கள் ஊர் ரொம்பக் கஷ்டமான நிலைமையில் இருக்கிறது" என்று சொல்கிறோம். ஆனால், குடிக்கவும் தண்ணீர் இல்லாமல், உண்ண உணவு இல்லாமல் இருக்கிற ஒரு ஜில்லா ராமநாதபுரம் ஜில்லா தான். அதைக் கண்கூடாகப் பார்க்கலாம். இல்லாவிட்டால் ஒரு கமிட்டியைப் போடுங்கள். அந்த ஜில்லாவுக்கு என்ன செய்வது என்று எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுங்கள்.



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்ட் மெம்பரே பார்க்கப்போகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைக்கூட நாங்கள் நம்புவோம். அது மாத்திரமல்ல, இப்போது வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் அவர்கள் அங்கு போகிறார்கள். குறைகளையெல்லாம் தெளிவாக அவரிடம் சொல்லலாம்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்):** ராமநாதபுரம் ஜில்லாவைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலே உள்ள உண்மைகள் எல்லாவற்றையும் நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது என்ன செய்திருக்கிறீர்கள்? எல்லோரும் செத்த தற்குப் பின்னால்தான் அவர்களை கவனிக்கப் போகிறீர்கள், இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இந்த 5 கோடி ரூபாயில், 2 கோடி ஒதுக்கி உடனடியாக குடி தண்ணீருக்காக பணம் கொடுத்திருக்கிறார்கள். இதை போர்டு மெம்பர் "அலாட்" பண்ணியிருக்கிறார். அடுத்தபடியாக, 1 கோடி ரூபாய் எஸ். எம். இ. பி. ஸ்கீமிலே ஒதுக்கியிருக்கிறோம். அடுத்து, வேலை வாய்ப்புத் திட்டம் எல்லாம் அமுல்படுத்தலாம் என்று சொல்லி, திட்டமிட்டு வருகிறோம். இப்படி திட்டமிட்டுத்தான் காரியம் செய்ய வேண்டும். அதற்காக உடனடியாக இரண்டு கோடி ரூபாய் கொடுத் தாகிவிட்டது. 12 லட்சம் ரூபாய் இப்போது ராமநாதபுரம் குடி தண்ணீர் வசதிக்காகக் கொடுத்திருக்கிறோம். இன்னும் வருவாய்த் துறை வாரியத் தலைவர் அவர்களுடைய அறிக்கை வந்தவுடன், அதை வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(பிற்பகல் 6-50)

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** அமைச்சர்கள் அதிகாரிகளை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் நல்ல பலனைக் கொண்டு வருவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அமைச்சர்கள் எல்லாம் அங்கே வந்தால் இன்னும் விசேஷமாக இருக்கும். அங்கு தரம் மிகமிகக் குறைந்திருக்கின்றது. பல ஆக்க வேலைகளை இன்னும் துரிதமாக செம்மையாகச் செய்வார்கள். விவரங்களை நாங்களும்

சொல்லலாம் என்பதற்காகத்தான் உங்களைக் கூப்பிடுகிறேன். உணவு அமைச்சர் கூட்டுறவுத் தலைவராக இருக்கிறார். கோவாப்பரேடிவ்-ல் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் வந்து பார்க்க வேண்டும். யார் தப்புப் பண்ணுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். கிலோ ரூ. 1-90க்கு அரிசி விற்கச் சொன்னால் கிலோ ரூ. 2.30க்கு விற்கிறார்கள். அதற்கு அவர்கள் பல சாக்குப் போக்குகளைச் சொல்கிறார்கள். ஒரு செட்டியார் பார்த்து கொண்டு ரூ. 1.90 க்கு விற்கிறார். ஒருவர் ரூ. 2.50க்கு விற்கிறார். இதையெல்லாம் எடுத்துச் சொல்லலாம் என்பதுதான் என் எண்ணம். இப்போது அமைச்சர் அவர்கள் படிப்படியாகத் தான் செய்ய வேண்டுமென்று சொல்கின்றார்கள். படிப்படியாக எங்களை என்ன கடலிலே போட்டுவிட்டா செய்யப் போகிறார்கள்? அவர்கள் என்ன பாதகத்தை எங்களுக்குச் செய்து விட்டார்கள்? உடனடியாக அமைச்சர்கள் நேரடியாக வரவேண்டும் அவர்கள் வந்தால் அதிகாரிகள் பார்த்துச் செய்வார்கள்.

இந்த 11-ம் தேதி அன்றைக்கு "கிரீவன்ஸ் டே" நடந்தது. கலெக்டர் உடம்பு சுகமில்லாததால் வரவில்லை. அந்த ஆர்.டீ.ஓ. அதை "கண்டக்ட்" பண்ணினார். அவர்களிடம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட், "எங்கள் ஊரிலே குடி தண்ணீர் இல்லை. சென்ற வருடத்திலேயே எங்கள் ஊருக்கு வரி வஜா செய்திருக்கின்றீர்கள். விளைந்த நிலைமையில் உள்ள ரேஷன் ஷாப் வைத்திருக்கின்றீர்கள். ஆனால் விளையாத எங்கள் ஊருக்கு ரேஷன் ஷாப் வைக்கவில்லை. உடனடியாக வைக்கச் சொல்லுங்கள் என்று அந்தத் தலைவர் சொன்னார். என்னிடத்தில் ஜனங்கள் எல்லாம் வந்து கத்துகிறார்கள்" என்று சொன்னார். அதற்கு உங்களிடம் வந்து ஏன் கத்துகிறார்கள், என்னிடம் வந்து கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் பஞ்சாயத்துத் தலைவர் என்பதால் சொல்கிறார்கள் என்று சொன்னார். R.D.O. அவர்கள் பி.டீ.ஓ. இடம் போய்க் கேட்கவேண்டும் என்றார்கள். இந்த மாதிரி ஏதேச்சாதிகாரப் போக்கினை ஒடுக்க வேண்டாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுவாக குற்றம் சொல்லக்கூடாது. தனிப்பட்ட நபருக்கு தனிப்பட்ட நிலைமையில் குறைகள் இருக்கலாம். யார் அந்தக் குறிப்பிட்ட அதிகாரி, அவர் தவறு என்ன என்ற விவரங்களைத் தெரிவித்தால், விசாரிக்கலாம். மொத்தத்தில் சேர்த்துச் சொல்லக்கூடாது. விவரங்களை எழுதிக் கொடுத்தால் நாங்கள் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம்.



திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: விவரமாகத்தானே சொல்கின்றேன். கிரிவன்ஸ் டே அன்றைக்குக் கலெக்டர் வருவதற்குப் பதிலாக ஆர்.டீ.ஓ. "கண்டக்ட்" பண்ணினார். தேவகோட்டைக் கோட்டத்திலே, அவர் கிட்டே வந்து அந்த பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டாக இருந்தவர், பிச்சைக்குட்டி உடையார் என்பவர் ஜனங்களுடைய கஷ்டத்தைச் சொன்னார். போன வருடமே எங்கள் ஊர் வரி வஜா பண்ணிய ஊர். அடுத்த ஊர் விளைச்சலே இல்லாத ஊர். அரை வரி ரத்து செய்த ஊருக்கு ரேஷன் ஷாப் கொடுத்திருக்கின்றார்கள். எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் என்றால், பி.டி.ஓ.-ஐக் கேளுங்கள் என்று சொன்னார்கள். அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ, நான் அவர் மீது குற்றம் சாட்டவில்லை. அந்த இடத்திற்கு அமைச்சர் வந்தால் நிலைமை அறிய முடியும். அமைச்சர்கள் என்ன காமதேனுவையா கொண்டு வந்து விட்டுவிடப்போகிறார்கள். இப்போது மட்டும் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? படிப்படியாகத்தான் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எங்களையெல்லாம் சமுத்திரத்தில் போட்டுவிட்டா படிப்படியாகச் செய்யப் போகிறார்கள்? இப்போதே இருக்கின்ற நிலைமையைப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அதற்காகத்தான் அதிகாரிகளை அனுப்பிப் பார்க்கச் சொல்லியிருக்கின்றோம்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, முக்கிய அதிகாரியை அனுப்பியிருக்கின்றார்கள். அவர்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்வார்கள். இருந்தாலும் எங்களுக்கு ஒரு திருப்தி, அமைச்சர்கள் வந்தால் நல்லது. எங்களுக்கு அமைச்சர்களே வந்தார்கள் என்று திருப்தி இருக்கும். உடனடியாக நிவாரணம் செய்தார்கள் என்றிருக்கும். முதலமைச்சர் அவர்களே அங்கு முக்கியமாக வர வேண்டும். அதுதான் என்னுடைய விருப்பம். என் ஜில்லா அமைச்சர் அவர்கள் இருந்தார்கள். இப்போது அவர்கள் போய் விட்டார்கள் போல் இருக்கிறது. அவரையே பாருங்கள். தஞ்சாவூர் அமைச்சர் அவர்கள் எப்படி இருக்கின்றார் என்றும் பார்த்துக்கொள் ளுங்கள். விக்கோதம் தெரியும். நிலைமையை நேரடியாக விளக்கிச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் கூப்பிடுகிறோம். வேறொன்றும் இல்லை. அமைச்சர்கள் நேரடியாக வந்தால்தான் எங்களுக்குத் திருப்தியிருக்கும். அமைச்சர்கள் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கூப்பிட்டு விசாரித்துச் செய்தார்கள் என்றிருக்கும்.

விலையைக் குறைக்க வேண்டும். உரம் விலை ஏறிவிட்டது என்று பேசுகிறார்கள். எங்கள் பகுதியில் சவரம் பண்ணின மாதிரி பூமியை வைத்துக்கொண்டு, நாங்கள் இந்த நிலைமையிலே என்னதான் செய்ய முடியும்? அதற்காகத்தான் அமைச்சர்கள் வரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். யார் வர வேண்டும் என்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வரவேண்டும். அவர்கள் வந்தால் அதிகாரிகளும் வருவார்கள். ஏன் ஐயா ஊர் இப்படி இருக்கிறது, ஏன் சரியாகச் செய்யவில்லை என்று கேட்கலாம்.

எங்கள் பகுதியிலே இந்த மாநிலத்திலே ஒரு பெரிய கண்மாய் திருவாடானை தாலுக்காவில் R.S மங்கலம் இருக்கிறது. 18 மைல் நீளம். அந்த அளவு நீளமுள்ள கண்மாய் வேறு பகுதியில் கிடையாது, தமிழ்நாட்டிலேயே அது ஒன்று தான் இந்த மாநிலத்தில் 18 மைல் நீளம் இருக்கிறது. அது வரண்டு கிடக்கிறது. மாடுகள் புல் மேயக் கூட ஒன்றும் கிடையாது. அந்த நிலைமையை எல்லாம் அமைச்சர்கள் பார்க்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். வந்து உடனடியாக நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டும். கோட்டையிலே இருந்துகொண்டு நாங்கள் அணையைக் கட்டுகிறோம், 2 கோடி ரூபாய் செலவு செய்து சாதனைகளைச் செய்கிறோம் என்று சொல்ல, நாங்கள் அங்கே அணையை எல்லாம் உடைக்கிறோம் என்று நீங்கள் சொல்ல இது மாதிரி எல்லாம் கதை கட்ட வேண்டாம். எல்லாக் கட்சிக்காரர்களும் ராமநாதபுரம் தாலூக்காவுக்கு உடனடியாக நன்மை செய்ய ஒரு கமிட்டி போட்டு வந்து பாருங்கள். இது தான் என்னுடைய விருப்பம். இதை உங்கள் முன்னாலே இந்தச் சபையிலே வைக்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு அமைச்சர் அவர்கள் உணவு எல்லோருக்கும் கிடைக்கும்படி தான் செய்ய வேண்டும். உணவு எவ்வளவு கொடுக்க வேண்டும்? பட்டினியில் இருப்பவனுக்கும் ஒரு கிலோ, தின்று கொழுத்திருப்பவனுக்கும் ஒரு கிலோ. இரண்டு பேருக்குமே ஒரு கிலோதான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, வெயிட்டைப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள் போல் இருக்கிறது.

திரு எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரை, நான் வெயிட்டிலே ரொம்பக் குறைந்தவன். சாக வேண்டியதைத் தவிர. வேறு ஒன்றுமில்லை. நல்ல முறையிலே செய்ய வேண்டும். வெட்டுக் கேட்பதற்கு எப்போது போகாதீர்கள்! நிலைமையைச் சரிப்படுத்திக்கொண்டு அப்புறம் போகலாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.





* திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இன்றைக்கு அரிசிப் பிரச்சினை இந்த அரசில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அன்றைக்கு அரிசியை அரசியல் பிரச்சினையாக ஆக்கி இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் வந்திருக்கக் கூடியவர்களுக்கு இன்றைக்கு அரிசியே சவால் விடுகின்ற அளவிலே இருக்கின்றது என்பதைக் காணுகின்றோம். நான் இங்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு வருமுன் காப்பவனாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்திலே. இது வருமுன் காப்பவனாகவும் இல்லை, வந்த பின் காப்பவனாகவும் இல்லை என்பதை அரசு நிரூபித்துவிட்டது. இதற்குக் காரணம் என்னவென்றால், இன்று மக்களுக்கு நெல்லும் இல்லை, கால்நடைகளுக்குப் புல்லும் இல்லை என்ற நிலை உருவாகியிருப்பதைப் பார்க்கின்றோம். அன்றைக்கு ஆயிரம் ரூபாய் விற்ற கால்நடைகளை இன்றைக்கு சந்தையிலே கொண்டுபோய் ரூ. 400, 500க்குக்கூட விற்க முடியாமல் திரும்பு வதைப் பார்க்கின்றோம். இந்த நேரத்திலே குறிப்பாக மலை வாழ் மக்கள் அரிசியைக் கண்ணாலே பார்த்து 15 நாட்கள் ஆகிறது என்று சொல்கிறார்கள். இரவு நேரங்களிலே அவர்களுடைய கைக்குழந்தைகளை வீட்டிற்குக் கொண்டு வந்து ஒரு பிடி அரிசிச் சோறு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு கடுமையாகப் பஞ்சம் இருக்கிறது என்றால், அது இந்த அரசினுடைய கையாலாகாத்தனத்தைத் தான் காட்டுகிறது என்று சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் இந்த அவையிலே மட்டுமல்ல, சட்ட மன்றப் பேரவையிலே மட்டுமல்ல, வெளியிலேயும் கூட ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு முன்பாகவே தமிழகத்தைப் பெரிய பஞ்சம் கவ்விக் கொண்டிருக்கிறது, அரிசிப் பஞ்சம், உணவுப் பஞ்சம் நம்மை எதிர் நோக்கியிருக்கிறது என்று எங்கள் கட்சி சொன்ன போதெல்லாம், அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள், "எங்களிடத்திலே கையிருப்பாக இருக்கிறது. நாங்கள் தேவையான உணவு தானியங்களை எல்லா இடத்திற்கும் விநியோகிக்கிறோம்" என்று சொன்னார்கள். மார் தட்டிச் சொன்னார்கள். அவர்கள் அப்படிப் பேசியதாலே இன்று மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று பார்க்கிறோம். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற வார்த்தையை வாயாலே சொல்லிக் கொண்டிருந்தார்களே ஒழிய, உள்ளத்தாலே எடுத்துக் கொண்டிருக்கவில்லை. இந்தப் பிரச்சினையில் நாங்கள் பேசிய நேரத்தில் எங்கள் பேச்சிலே இருந்த சாரத்தை எடுத்துக்கொண்டிருந்தால், இன்று இந்த சோதனை வந்திருக்காது. ஆனால் எங்கள் வார்த்தையின் சாரத்தை எடுத்துக்கொள்ளாமல் அதன் சக்கையை எடுத்துக்கொண்டு அதற்கு வியாக்கியானம், விமரிசனம் செய்து

கொண்டிருந்தார்கள். அதனால் இன்று தமிழகத்திலே ஒரு அவதி யான நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் உங்களுக்குக் கூறிக் கொள்கின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் கூறியது போல, நானும் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். சென்ற சம்பா போகத்தில் எங்கள் பகுதியிலே ஒரு 4 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி நிலையில் இருந்தது. அப்போது நாவாய் பூச்சி என்ற ஒரு பூச்சி பயிரைப் பீடித்திருந்தது. அந்தப் பூச்சியினுடைய தன்மை என்னவென்றால், நெல்லை கதிர் வெளியே வருவதற்கு முன்பு அந்தப் பூச்சி கருவிலே உட்கார்ந்து கதிரைத் தாக்கி விடுவதாகும். ஆகவே அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அப்போது என்னிடத் திலே சொன்னபோது அன்றைக்கு நான் சட்ட மன்றத்தில் உறுப் பினராக இல்லை என்றாலும் கூட, அவர்களை நான் அழைத்துக்கொண்டு அந்த பகுதியிலே இருந்த திரு. சீனிவாசன், ஆர்.டீ.ஓ.-ஐ போயக் கேட்டேன். இப்போது நாவா பூச்சி வந்திருக்கின்றது. நாலாயிரம் ஏக்கர் பாழாகிவிடும், நாசமாகிவிடும், உடனடியாக மருந்து தெளிக்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அங்கே இருக்கின்ற மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கும் சென்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், இங்கு எங்களிடத்திலே மருந்து இல்லை, தெளிப்பதற்கு இயந்திரமும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நான்கு இயந்திரங்கள் இருக்கின்றன. அதுவும் ரிப்பேராக இருக் கின்றது என்றார்கள். இந்த அளவில் வேளாண்மை அலுவலகம் இருக் கின்றது என்று சொன்னால், இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாலாயிரம் ஏக்கர் நிலம் பாழாகிப்போகிறதே என்று அங்கே இருக் கக்கூடிய விவசாயிகள், "அரசாங்கம் ஒரு பைசா கூடச் செலவு செய்ய வேண்டியதில்லை, நாங்கள் விவசாயிகளிடத்திலே பணம் சேர்த்து வசூலித்துத் தருகிறோம், ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லியும், அவர்கள் [illegible] [illegible]ராக இருந்த காரணத் தினாலேதான், அந்தப் பகுதியிலே சென்ற சம்பா போகத்திலே, கடுமை யான பஞ்ச நிலை ஏற்பட்டது. அங்கு உற்பத்தியான நெல்லைக்கூட மகசூல் செய்ய முடியாத நிலையைப் பார்த்தோம். இன்றைக்கு

(பிற்பகல் 7-00)

சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், தண்ணீர்ப் பிரச்சினை மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஏறத்தாழ 100 அடி ஆழத்துக்கு கிணறு வெட்டினால் கூட, தண்ணீர் இல்லாத நிலை இருப்பதை நான் ஆங்காங்கு பார்த்தேன். கிணறு வெட்டுவதும் மிகவும் சிரமமாக இருக்கிறது. காரணம் சேலம் மாவட்டம் பூராவிலும் "ஹார்டு



ராக்" என்று சொல்லுவார்களே அந்தமாதிரி கடினமான பாறை காணப்படுகிறது. அது இருக்கும் இடங்களில் சாதாரணமாக கிணறு வெட்டும் முறைகளைப் பயன்படுத்தி ஆழமாகத் தோண்ட முடியாது. அதை தோட்டா வைத்து கம்பிரஷர் மெஷின் வைத்துத் தான் தோண்ட முடியும். சாதாரண மக்களும் வாங்கி உபயோகப் படுத்தும் அளவுக்கு ஒரு தோட்டா ரூபாய் 1.80க்கு விற்றது இப் பொழுது 12 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்கிறது. சாதாரண விவசாயி, ஏழை மக்கள் இன்றைக்கு 15 ரூபாய்க்கு அதை வாங்கி உபயோகப்படுத்த முடியுமா? தயவுசெய்து அமைச்சர் அவர்கள் ஒரு கணம் இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே இருப் பவர்களில் பலர் காவிரிக் கரையிலுள்ள வயல்களில் எளிதாக நீரைப் பாய்ச்சி பயிரிடுபவர்களுக்கு விலை போதவில்லை, அது போதவில்லை, இது போதவில்லையென்று பேசலாம். இங்கே இருப்பவர்களில் பலர் அரிசி கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திலுள்ள நிலைமையை நான் மிகவும் வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் பகுதியில் இதே நிலை நீடித்தால், அரிசி ஒரு உணவுப் பொருளாக இருக்கவே இருக் காது. வெறும் கண்காட்சிப் பொருளாகத்தான் இருக்கும். அவ்வளவு தூரம் அரிசி கிடைக்காமல் சாதாரண மக்கள் அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நகர் பஞ்சாயத்துக்கள் மூலம் அரிசி வினியோகிக்க வேண்டுமென்று உத்தரவிட்ட இந்த அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன். கிராமப் பஞ்சாயத்துக்களிலே இருக்கக் கூடிய மக்களுக்கும் உடனடியாக அரிசியும் மற்றப் பொருள்களும் வினியோகிக்கத் தகுந்த வகையில் ஆணை பிறப்பித்திட வேண்டு மென்று நான் அரசுக்குக் கோரிக்கையாக விடுகிறேன். இப்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சி மாதிரி காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, 1966லே ஒரு கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது இருந்த ஒரு நிலைமையை இப்பொழுது நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பையிலே பணமிருக்கிறது, அரிசி எங்கே இருக்கிறது, அரிசி எங்கே இருக்கிறது என்று போஸ்டர் ஒட்டினீர்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? தயவுசெய்து ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு கையிலே பணமும் இல்லை, கடையிலே அரிசியும் இல்லை. அன்றாடம் கடைத் தெருக்களிலே மக்கள் காலை, மாலை, வெயில் என்று பாராமல் நீண்ட கியூவிலே அரிசிக்காக நிற் கிறார்கள். அன்றைக்கு மக்கள் அரிசி வாங்குவதற்காக கியூவிலே நின்றபோது, எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்த நீங்கள் எப்படி யெல்லாம் பேசினீர்கள் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் என்ன சொன்

னாலும் "எதிர்க்கட்சிக்காரர்கள் சதி செய்வதற்கு முயல்கிறார்கள்" என்று நீங்கள் சொன்னாலும் அரிசிப் பிரச்சினை என்பது கட்சிக் கண்ணோட்டத்துக்கு அப்பாற்பட்ட பொதுப் பிரச்சினை என்பதை அனைத்துக் கட்சியினரும் மனதில் கொண்டு இதில் கவனம் செலுத்த வேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்பதுபோல் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுவதிலும் பொருள் உண்டு என்பதை மனதில் கொண்டு அவர்கள் சொல்லும் கருத்துக்களை உதாசீனப்படுத்தாமல் ஒத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே நான் சொன்ன தோட்டாக்களை கிணறு வெட்டு பவர்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக, குறைந்த விலைக்கு சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு உடனடியாக வினியோகிக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. காலை 8 மணி சுமாருக்கு வெளியே வந்தால், அங்கே ஐந்து பேர், எட்டு பேர் ஓடு எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஐயா 5 காசு கொடுங்கள், 10 காசு கொடுங் கள், கைப்பிடி அரிசி கொடுங்கள், எங்கள் குடும்பம் பட்டினி, என்று வந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நீங்களெல்லாம் பஞ்சம் என்பது ஒரு பிரச்சினை என்று சொல்லலாம். ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு பஞ்சம் கோர தாண்டவ மாடுகிறது. நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதில் தஞ்சை விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள பாதகங்களைப்பற்றியெல்லாம் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு தஞ்சைப் பகுதியிலே அவர்களுக்குக் காவிரித் தண்ணீர் வந்து சேர்கிறது. அவர்கள் விவசாயச் செலவு அதிகமில்லாமலே பயிரிட முடிகிறது. ஆனால் சேலத்தின் நிலைமை என்ன? 100 அடிக்குக் கீழே ஆழத்தில் கிணறு வெட்ட வேண்டும். கடின பாறைகள் நிறைந்த இடத்தில் 100 அடி வெட்டுவதற்கு எவ்வளவு செலவாகும்? ஒரு சாதாரண விவசாயி 100 அடி ஆழத்திற்குக் கிணறு வெட்டு வதற்கு எவ்வளவு செலவாகும்? அவன் கிணறு வெட்டக் கூடிய நிலைமையிலா இருக்கிறான்? எப்படியோ கஷ்டப்பட்டு வெட்டினால் கூட, தண்ணீர் இருக்குமா இருக்காதா என்பது சந்தேகம் தான். தண்ணீர் இல்லாவிட்டால், அவ்வளவு பணமும் வேஸ்ட். இதெல் லாம் போக தண்ணீர் இருந்தால் கூட, 100 அடிக்குக் கீழே இருந்து மின்சார மோட்டார் மூலம் அந்தத் தண்ணீரை மேலே கொண்டு வந்து நிலத்தில் பாய்ச்சுவதற்கு எவ்வளவு மின் சக்தி ஆகிறது என்பதையெல்லாம் அருள்கூர்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விவசாயப் பிரதிநிதியைக் கலந்





தாலோசித்துத்தான் நெல் விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து. அது தான் சரியும்கூட. ஏதோ ஒன்றிரண்டு பேரை வைத்துக்கொண்டு, விலையை நிர்ணயம் செய்தால், அது பொருத்தமல்ல. ஆகவே எல்லாவிதமான பிரச்சினைகளையும் மனதில் கொண்டு பிறகு தான் பிரச்சினைக்கு ஒருமித்த முடிவு காண வேண்டும். பருவமழை பொய்த்து விட்டது என்பது உண்மை தான். ஆறும் வகுப்பில் படிக்கும் கோபால் என்ற பையனைப் பார்த்து; "நீ ஏன் பெயில் ஆகி விட்டாய்?" என்று கேட்டால் அவன் "பக்கத்து வீட்டு இராமன் பெயில் ஆகி விட்டான், ஆகவே நானும் பெயில் ஆகி விட்டேன்" என்று சொல்லுவது மாதிரி அமைச்சர்கள், பொறுப்பு வாய்ந்தவர்கள் பேசுவது கூடாது. இந்த பயங்கரமான நெருக்கடிகளுக்கெல்லாம் காரணம் அரசாங்கம் ஆரம்பம் முதல் பின்பற்றி வந்த கொள்கை தான் என்ற குற்றச்சாட்டை நான் இத் தருணத்தில் தெரிவிக்கிறேன். நீங்கள் அன்றைக்கே திட்டமிட்டு பாசன வசதி செய்தல், உற்பத்தியை அதிகப்படுத்தல், உணவைக் கொள்முதல் செய்து சேமித்து வைத்தல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தியிருந்தால், இன்றைக்கு முறையாக இருக்கக்கூடிய பொருள்களை வினியோகம் செய்திருக்க முடியும். 1966-ல் அரிசி மட்டும் கிடைக்கவில்லையே தவிர, சிறு தானியங்களான சோளம், கம்பு, ராகி போன்றவை தாராளமாகக் குறைந்த விலையில் கிடைத் ததை இங்குள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். ஆனால் இன்றைக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லையே. விலையும் பல மடங்கு ஏறியிருக்கிறதே. ஒரு மூட்டை வெங்காயம் 100 ரூபாய்க்கு மேல் விற்கிறது. இவ்வளவு விலையில் சாதாரண மக்கள் வெங்காயம் போட்டு சாம்பார் சாப்பிட முடியுமா? யார் வாங்கிப் பயன்டுத்த முடியும்? சாதாரண மக்களுக்கு, (down trodden, என்று சொல்லு வார்களே, வாழ்க்கையில் அழுந்திக் கிடக்கும் மக்களுக்கு அன்றாடம் சாப்பிடுவது பெரும் கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் வாழ்க்கையை ஓட்டுவது என்பது அவர்களுக்கு ஒரு பெரும் போராட்டமாக அமைந்து விட்டது. பருவமழை பொய்த்து விட்ட தால் ஏற்பட்ட இந்தச் சிறிய உணவுப் பஞ்சமே நமக்கு பெரும் பஞ்ச மாக அமைந்து விட்டது. எதிர் காலத்தில் இன்னும் அதிகமான பஞ்சம் வந்தால், அதற்கு முன்னோடித் திட்டமாக அதை எப்படி சமாளிக்கலாம் என்பது போன்றவற்றில் அரசு முன் கூட்டியே திட்ட மிட்டு அதைத் திறமையாகச் செயல்படுத்த வழிவகை காண வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 16

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-05)

## 9. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

73. Notification issued with Roc. No. 853/74-E4, dated the 9th June 1974 in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Narasingapuram and Vennandur Town Panchayats in Salem district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

74. Notification issued with G.O. Ms. No. 2327, Home, dated the 30th August 1973 in regard to amendments to rule 155-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

75. Notification issued with G.O. Ms. No. 1096, Home, dated the 3rd May 1974, in regard to an amendment to rule 168-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

76. Notification issued with G.O. Ms. No. 1701, Revenue, dated the 18th April 1974 appointing all Joint Commercial Tax Officers and Deputy Commercial Tax Officers of the Inspector Squads, Intelligence Wing, the Entertainments Squads, and of the Central Intelligence Wing, Board of Revenue, to exercise within their respective jurisdictions the power of an Entertainments Tax Officer under the Tamil Nadu Entertainments Tax Rules. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

77. Notification issued with G.O. Ms. No. 1917, Home, dated the 31st July 1974 exempting the stage carriages plying exclusively within the Madras Metropolitan Area from the levy of surcharge at the rate of ten per cent of the tax leviable under clause (*b*) of sub-



1974 டிசம்பர் 16]

section (1) of section 9 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act with effect on and from the 1st October 1974. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

78. Notification issued with G.O. Ms. No. 1986, Revenue, dated the 9th May 1974 in regard to creation of checkposts at Aliyar in Pollachi-Commercial Taxes District and Kalipettai in Dharmapuri Commercial Taxes District. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

79. Notification issued with G.O. Ms. No. 2375, Revenue, dated the 6th June 1974 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 3987 (*b*) of 1971, dated the 7th September 1971 published at page 2 of Part II—Section 1 of he *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

80. Notification issued with G.O. Ms. No. 1161, Housing, dated the 1st December 1973 making the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Acquisition Rules, 1973. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971. (Tamil Nadu Act 11 of 1971).]

81. Notification issued with G.O. Ms. No. 62, Agriculture, dated the 21st January 1974 relating to regulation of trade in blackgram, chillies, tamarind, coconut, castor, cotton, redgram, cashewnut and cumbu in Chingleput district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

82. Notification issued with G.O. Ms. No. 2174, Revenue, dated the 23rd May 1974 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

83. Notification issued with G.O. Ms. No. 2961, Revenue, dated the 17th July 1974 in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 3987 (*b*) of 1971, dated the 7th September 1971 published at page 2 of Part II–Section 1 of the *Tamil*

*Nadu Government Gazette* Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. [Laid on the table of the House under section 18 (1) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

84. Notification issued with G.O. Ms. No. 2921, Public (Elections-IV), dated the 7th September 1974 in regard to an amendment to the Tamil Nadu Ministers' Travelling Allowance Rules, 1951. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

85. Notification issued with G.O. Ms. No. 1486, Home, dated the 17th June 1974 in regard to the tax payable in respect of the vehicle TMP 7050 belonging to the Family Planning Association of India, Madras Branch, being one-fourth of the normal tax payable so long as the vehicle is used solely for the Clinics and Mobile Unit run by this Association for Family Planning work. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

86. Seventh Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Argo Industries Corporation Limited for the year ended 31st March 1973. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

87. Annual Accounts of the Tamil Nadu State Housing Board for the year 1967–68 and the Audit Report of the Tamil Nadu State Housing Board for the year 1967–68. [Laid on the table of the House under section 125 (1) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

£ 88. Notification issued with G.O. Ms. No. 1966, Education, dated the 29th November 1974 making the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974. (Laid on the table of the House under section 57 (2) of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974).]

*B. Reports, Notifications and Other Papers.*

39. Notification issued with G.O. Ms. No. 1321, Revenue, dated the 25th March 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed in favour of the Swedish



Red Cross Rehabilitation Trust, Katpadi in respect of the lands specified in the Schedule in Dharapadavedu village, Gudiyatham taluk, North Arcot district.

40. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969:

*Returns as on 31st March 1974.*

1. Thiru K. Rajaram.
2. Thiru G. Vasantha Pai.
3. Thiru S. Narayanaswamy.
4. Thiru C. Russel Raj.
5. Thiru A. R. Damodaran.

*Returns as on 21st April 1974.*

6. Thiru Ku. Ma. Balasubramaniam.
7. Thiru S. Ramakrishna Thevar.
8. Thiru P. R. Thomas.
9. Thiru A. Balasubramaniam.
10. Selvi C. Tamizharasi.
11. Thiru D. V. D' Monte.

41. Twenty-Fourth Report of the Committee on Government Assurances of the Tamil Nadu Legislative Council.

* 42. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 As introduced in Lok Sabha.

* 43. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 As passed by Lok Sabha.

* 44. Lok Sabha Debate on the Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974.

* 45. Rajya Sabha Debate on the Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974.

* 46. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 As passed by the Houses of Parliament.

*47. Letter No. RS. 1/47/74-B, dated 19th September 1974 received from the Secretary-General, Rajya Sabha Secretariat, New Delhi addressed to the Secretary, Tamil Nadu Legislative Council, Madras.

---

* Circulated to all M.L.Cs. on 12th December 1974.

£ Laid on the table of the House on 14th December 1974.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

**செவ்வாய்க்கிழமை, 1974 டிசம்பர் 17.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (**திரு. சி. பி. சிற்றரசு**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Number of B.A. Graduates from 12-B, 13 Tamil Groups admitted in the Teachers' Training Colleges*

* 36 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state the number of B.A. Graduates from 12-B, 13 Tamil Groups who have been admitted in the Teachers' Training Colleges during the last three years?

**ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் 12-பி, 13 தமிழ் பி.ஏ. பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கடந்த மூன்றாண்டுகளில், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் இடம் பெற்ற 12-பி, 13 தமிழ் பி.ஏ. பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கடந்த மூன்றாண்டுகளில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் இடம் பெற்ற 12-பி, 13 தமிழ் பி.ஏ. பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை 172 ஆகும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு தலைவரவர்களே, பெருவாரியான மாணவர்களுக்கு அக் கல்லூரிகளிலே இடம் கிடைப்பதில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கின்றதா? பல கல்லூரிகளிலே தமிழாசிரியர்கள் பயிற்சிக்காக ஏற்பாடுகளைத் தொடங்கியிருந்தும் ஆசிரியர்கள் நியமிக்காததன் காரணமாக அப்படிப்பட்ட கல்லூரிகளிலே மாணவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை. அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் நூறு மாணவர்களும், தனியார் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் 72 மாணவர்களும், ஆக 172 மாணவர்களுக்கு இந்தப் பிரிவுகளில் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சேருவதற்கு எவ்வளவு பேர் விண்ணப்பங்களைப் போட்டார்கள், எவ்வளவு பேர் சேர்க்கப்பட்டார்கள் என்பது போன்ற தகவல்கள் இல்லை. அதுபற்றிய பிரச்சினை வந்தால், இடங்களை மேலும் கூட்ட வேண்டிய அவசியம் வந்தால், எங்கெங்கே கூட்டலாம் என்பதுபற்றி யோசிக்கலாம்.

## *Liberalised Pension*

* 37 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation for the extension of liberalised pension benefits even to those teachers who have retired before 1st June 1970 and who have put in more than 25 years of service; and

(b) if so, the action taken thereon?

## தளர்த்திய ஓய்வூதியம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—6—1970-க்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்று, 25 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றியுள்ள ஆசிரியர்களுக்குத் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயன்களை நீட்டிக்க வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அரசின் ஆய்விலுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே 1—6—1970-க்கு முன்பு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பல ஆசிரியர்கள்—தனியார் பள்ளிகளிலே கூட—1972 ஆம் ஆண்டு வரையில் பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில்தான் இருக்கின்றது. அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியம் மிகக் குறைவாக இருக்கின்றது. ஆகவே இரண்டாவது





தமிழ் நாடு சம்பளக் கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களுக்கும் முழுமையாக ஓய்வூதியம் அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப்போலக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1—6—1970-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்டு வருகின்றது. இருக்கும் பிரச்சினையே 1—6—1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான். சிலர் இதுபற்றி விண்ணப்பங்களை அனுப்பியிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் எவ்வளவு பேர் இருக்கக்கூடும், அதனால் அரசுக்கு எவ்வளவு கூடுதலான செலவேற்படும் என்பதைக் கண்டறிந்து பிறகு அதுபற்றி முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

## *Accommodating Teacher-Couples in one and the same place*

* 38 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any instruction to the Chief Educational Officers to accommodate teacher-couples in one place;

(b) if so, whether the same has been followed regarding teacher-couples working in Government Board High Schools in Thanjavur district; and

(c) if not, the reason therefor?

## கணவன்-மனைவியாக உள்ள ஆசிரியர்களுக்கு ஒரே இடத்தில் பணி செய்ய உதவுதல்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியத் தம்பதியர் ஒரே இடத்தில் பணிபுரியும் வாய்ப்பளிக்குமாறு தலைமைக் கல்வி அதிகாரிகளுக்குக் கட்டளைகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியத் தம்பதியர் தொடர்பாக இந்த உத்தரவு பின்பற்றப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில் அதற்கான காரணம் யாது?

[1974 டிசம்பர் 17

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ), (இ) & (உ) : பொதுவாக அனைத்து மாநில அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும் அரசு ஆணைகளின்படி நிர்வாக வசதிகளுக்கு உட்பட்டு கணவன் மனைவியர் ஆக உள்ள அரசு ஊழியர்களை கூடுமானவரை ஒரே இடத்தில் பணி செய்ய வகை செய்யவேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் இக்கோட்பாடு நிர்வாக வசதிக்கு ஒப்ப இயன்றவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், எவ்வளவு முறையீடுகள் வந்திருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தும், முறைப்படி உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டும், அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஓரளவிற்காவது, 'ஸிம்பதெடிக் கன்ஸிடரேஷன்' என்ற முறையில் முடிவுகளை எடுக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிக்கு அரசு சொல்லுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்பதைக் கணக்கெடுப்பது கொஞ்சம் கடினமானது. ஆனாலும் கூடுமானவரையில் கணவன்-மனைவிமார்கள் ஒரே இடத்தில் பணி புரிய வேண்டும், வேறு வேறு இடங்களிலே இருந்தாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்க வேண்டும், அவர்களைச் சேர்த்தே வைக்க வேண்டும் என்று எல்லா அரசு ஊழியர்களுக்கும், குறிப்பாக கல்வித் துறையில் உத்தரவுகள் இருக்கின்றன. அப்படி கணவன் இருக்கும் இடத்தில் அவரது துணைவியாரைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று வரும்போது, நடைமுறையில் சில சந்தர்ப்பங்களிலே சில சங்கடங்கள் வந்துவிடுகின்றன. இருப்பினும் கூடுமானவரையில் அதைச் செய்து வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவதொன்றைக் குறிப்பிட்டுக் காட்டினால், அதுபற்றிய நிலைமைகளை ஆராய்ந்து, அதுபற்றிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அந்த உத்தரவு பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அது பொருந்தக்கூடிய வகையில் தான் செய்யப்பட்டு வருகின்றது. ஏனென்றால் கல்லூரி ஆசிரியர்களிலும் கணவன்-மனைவியர் இருவரும் கல்லூரிகளில் பணியாற்றிடும் நிலைமைகள் இருக்கின்றன. அவர்களையும் ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற



1974 டிசம்பர் 17]

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில நேரங்களில் அப்படி ஒருவருக்கு இடம் தரவேண்டும் என்பதற்காக யாரையாவது வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவது என்ற நிலை வரும்போது, கணவன் எங்கே பணி புரிகின்றார், மனைவியார் எங்கே பணி புரிகின்றார் என்று பார்த்து, அவருக்கு அதிலே முதலிடம் தரப்படுகிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, கணவன் கிராமத்திலும், மனைவி நகரத்திலும் அல்லது கணவன் நகரிலும் மனைவி கிராமத்திலும் வேலை செய்தால், இப்படிப்பட்ட மாற்றங்களை அவர்கள் விரும்பும்போது, முக்கியமாக தம்பதிகள் கிராமங்களுக்குப் போக விரும்புகின்றார்களா அல்லது நகர்ப்பகுதியிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது அவரவர்களுடைய சௌகரியத்தைப் பொருத்திருக்கின்றது. அவர்கள் எங்கே போக விரும்புகின்றார்கள் என்பதைப் பார்த்து, கூடுமானவரையில் அவர்களுக்கு அது செய்து தரப்படுகிறது. சில நேரங்களிலே அதிலும் சில பல சங்கடங்கள் நேருகின்றன. உதாரணமாக கணவர் வழக்கறிஞராக இருந்துவிட்டால் அவருடைய மனைவியாரும் அதே ஊரில்தான் இருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. அப்போது முப்பதாண்டு காலம் ஒரே கல்லூரியில் இருக்க வேண்டும் என்ற நிலை வருகின்றது. அப்படிப்பட்ட சங்கடங்கள் வரும்போது தான், ஆறாண்டு காலம் அல்லது ஏழாண்டு காலம் ஒரே இடத்திலே வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட சங்கடங்களையெல்லாம் கூடுமானவரையில் சமாளித்து, அவர்களை ஒரே ஊரில் வைத்திருப்பது என்பது தான் அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, அந்த அரசு ஆணையில் பெரும்பாலான பகுதிகள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும், அத்தகைய மாற்றங்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கும் கல்வி அதிகாரிகள் பெரும்பாலானவர்கள் திருமணம் ஆகாதவர்களாக இருக்கும் காரணத்தினால், அந்த உத்தரவின் நோக்கத்தை அவர்கள் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்பதை 'ஸைகாலஜிஸ்ட்ஸ்' அவர்களிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

[1974 டிசம்பர் 17

### Tamil Pandits Promoted as Grade I Tamil Pandits from 5th January 1971

*39. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Tamil Pandits appointed in Government High Schools in Thanjavur District after 1st April 1970 and promoted as Grade I Tamil Pandits from 5th January 1971;

(b) whether it is a fact that they have not been given the appropriate scale of pay; and

(c) if so, the action proposed to be taken by the Government in this regard?

### 5—1—1971 முதல் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக உயர்வு பெற்ற தமிழாசிரியர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சை மாவட்டத்தில், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில், 1—4—1970-க்குப் பிறகு நியமனம் பெற்று, 5—1—1971 முதல், முதல்நிலைத் தமிழாசிரியர்களாக உயர்வு பெற்ற தமிழாசிரியர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) அவர்களுக்கு உரிய ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆமெனில், இது குறித்து, அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சுமார் 55 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் 25—2—1971-லும் அல்லது அதன் பின்னரும் முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டனர்.

(இ) ஆம்.

(உ) 16—5—1974 நாளிட்ட கல்வித் துறையின் அரசாணை எண் 765-ன் படி மேற்கண்ட தமிழாசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்தவும், அதன் பின்னர் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்.



**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் பலர் தங்களுக்கு முதல்நிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும், அப்படி இல்லாவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடப்போகிறோம் என்று அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் அப்படிக் கோருவது எந்த அடிப்படையில், அவர்கள் கோருவதில் நியாயம் இருக்கிறதா, அரசு அதைப் பரிசீலிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்கள் எந்த அடிப்படையில் கேட்கின்றார்கள் என்பதை அவர்களைத்தான் கேட்க வேண்டும். அவர்கள் கேட்பதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை. நியாயத்தின் அடிப்படையில், சில அடிப்படையில் இப்போதும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக மாற்றப்படுகின்றார்கள். அவர்கள் பத்தாம் வகுப்பு—எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்ச்சியுற்று இருந்தால், அவர்களை முதல்நிலைக்கு எடுத்துச் செல்லுகிறோம். தனியாகத் தேர்வுகளை எழுதி, அவர்கள் அந்தத் தகுதிகளைப் பெற்றால், உடனடியாக அவர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஆகலாம். ஆனால் அவர்கள் எந்த அடிப்படையும் இல்லாமல், தங்கள் எல்லோருக்கும் முதல்நிலை வேண்டும் என்று கேட்கின்றார்கள். அவர்கள் ஏதாவதொன்றில் தங்களை உள்ளாக்கிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், ஐந்தாவது படித்துவிட்டு, வித்துவான் தேர்ச்சி அடைந்தவர்களும் பி.ஏ.,பி.டி. படித்தவர்களும் சமம் என்று வைக்கும்போது, தகராறு வருகின்றது. அதைப் பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்க்கின்றார்கள். ஆகவேதான் அவர்கள் ஒரு வரைமுறைக்கு உட்பட வேண்டும் என்று சொல்லுகிறோம். பத்தாண்டு காலமாவது பணியாற்ற வேண்டும், அல்லது. இரண்டாண்டு காலத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்ச்சி பெற வேண்டும் என்று சொல்லுகிறோம்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று கூறுபவர்கள் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக, 400 அல்லது 500-க்கு மேல் இருக்கக்கூடும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, புலவர் பட்டத்தை டிகிரி ஆக்குவதுபற்றி அரசிடம் ஆலோசனை இருக்கிறதே, அது எந்த நிலையில் இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 17

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி பல்கலைக் கழகத்திடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம்தான் அந்தப் பட்டம் வழங்குவதுபற்றி விதிமுறைகளை வகுக்க வேண்டியிருக்கிறது. அவர்களிடமிருந்து விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது.

## *Bifurcation of 'B' Wing High Schools*

* 40 Q.—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that certain 'B' Wing High Schools where co-education was permitted, have been bifurcated into two schools, one under the 'A' Wing and the other retained under the 'B' Wing;

(b) if so, the number of such schools bifurcated during 1974–75; and

(c) the method adopted to utilise the posts withdrawn from the 'B' Wing Schools?

## 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளை இரு பள்ளிகளாகப் பிரித்தல்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கப் பட்டுள்ள குறிப்பிட்ட சில 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகள், இரு பள்ளி களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று 'ஏ' பிரிவின் கீழும், மற்றொன்று 'பி' பிரிவின் கீழும் இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) ஆமெனில், 1974-75 ஆம் ஆண்டில் அதுபோல் பிரிக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ?

(இ) 'பி' பிரிவு பள்ளிகளிலிருந்து திரும்பப் பெறப்பட்ட பதவிகளைப் பயன்படுத்துவதற்குப் பின்பற்றப்பட்ட முறை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) ஒன்று.

(இ) திருப்புவனம் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளியில் உண்டான அதிக மான ஆசிரியப் பணியிடங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவையுள்ள மற்றைய 'பி' பிரிவு பள்ளிகளில் பயன்படுத்தப்படும்.



1974 டிசம்பர் 17]

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இது போன்று ஒரு பள்ளியானது இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, அங்கே 'ஏ' விங்கைச் சேர்ந்தவர்களும், 'பி' விங்கைச் சேர்ந்தவர்களும் பணியாற்றுகிறார்கள். 'ஏ' விங் ஆசிரியர்களை மாற்றுவதற்கு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அதிகாரமில்லை என்பதால் 'பி' விங் ஆசிரியர்களைப் பணி மாற்றம் செய்கிறார்கள். இதைத் தடுக்க அரசு உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இனிமேல் புதிதாக நியமிக்கப்படுகிற ஆசிரியர்களெல்லாம் 'ஏ' விங் ஆசிரியர்களென்று தான் கருதப்படுவார்கள். ஆகவே, 'பி' விங் ஆசிரியர்களைத் தனியாக வைத்து, அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கிற வரையில், தனிப் பட்டியல் வைக்க இருக்கிறோம். மாறுதலைப் பொறுத்த வரையில், 'ஏ' விங் ஆசிரியர்களையும், 'பி' விங் ஆசிரியர்களையும் முதன்மைக் கல்வி அலுவலரே செய்யலாமென்ற உத்தரவு அண்மையில் இடப்பட்டதாகக் கருதுகிறேன். அதில் ஏதாவது சங்கடம் இருக்குமானால், அது குறித்து அரசாங்கம் தக்க முடிவெடுக்கும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, நீண்டகாலமாக 'ஏ' விங் கையும், 'பி' விங்கையும் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து, இரண்டையும் ஒன்றாக இணைக்க ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற எண்ணம் செய்ய முடியாததாக இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால்தான் ஒரே இனமாக ஆக்காமல் 'பி' விங் ஆசிரியர்கள் இருக்கும் காலம்வரை அவர் களைத் தனி லிஸ்டாக வைத்து, அவர்களுடைய பணி காப்பாற்றப்பட இருக் கிறது. இனி வரும் ஆசிரியர்கள் 'ஏ' விங் ஆசிரியர்களாகக் கருதப்படு வார்கள். ஒரு காலத்தில்—அதாவது 15, 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு— இரண்டும் ஒன்றாகும் நிலை ஏற்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 'ஏ' விங் பள்ளிகளையும், 'பி' விங் பள்ளிகளையும் இணைக்க முடியாது என்ற அடிப்படையிலே, அண்மையிலே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டு விங்குகளையும் ஒரே இனமாக ஆக்கலாமென்றால், இரண்டு சாராருக்கும் சிலபல சங்கடங்கள் வருகின்றன. இப்போது 'பி' விங் பள்ளிகளில் பணியாற்று பவர்கள், அந்த உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர்களாகி, ஓய்வு பெறும்

காலம் வரையிலும், அந்த லிஸ்டை வைத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். புதிதாக வருபவர்கள் 'ஏ' விங் ஆசிரியர்களாக வருவார்கள். இப்போது புதிதாக 'சி' விங் பள்ளிகள் வருகின்றன. நகராட்சிப் பள்ளிகளை 'சி' விங் பள்ளிகளாக்கும் நிலை இருக்கிறது. எனவே இந்த 'ஏ' விங், 'பி' விங், 'சி' விங் பள்ளிகளை இணைப்பதில் நாம் கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, இப்போது 'பி' விங் பள்ளியிலே ஆசிரியர் பணியிடம் ஏற்பட்டால், அந்த இடத்திற்கு நியமனம் எந்த அடிப்படையில் செய்யப்படுகிறதென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது 'பி' விங்குக்குரிய இடமாக இருந்தால், 'பி' விங் ஆசிரியர்கள்தான் மாற்றப்படுவார்கள்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, அப்படியானால், இதில் நீண்ட இடைவெளி இருந்துகொண்டுதானே இருக்கும்?

**மாண்புமிகு டாக்டர் இ** [illegible] **…ழியன் :** தலைவரவர்களே, 'பி' விங்
ஆசிரியர்கள் ஓய்வு பெறப் [illegible] …ந்துகொண்
டிருக்கும். 'பி' விங் ஆ [illegible]

*National* [illegible]

* 41 Q.—THIRU [illegible]
Minister for Educati[illegible]

(*a*) the numbe[illegible]
help from the Natio[illegible]
the years from 1970 [illegible]

(*b*) the numbe[illegible] 1086
years?

ஆ [illegible]

திரு. கே. எஸ். க [illegible] …ள் கீழ்க்
கண்ட வினாக்களுக்குப் [illegible]

(அ) ஆசிரியர்கள் [illegible] …தவி கோரி
1970–71 ஆம் ஆண்டிலி [illegible] …வர்ப்பெற்ற
விண்ணப்பங்கள் ஆண்டு [illegible]



(இ) அந்த ஆண்டுகளில், இந்தத் திட்டத்தால் பயனடைந்த ஆசிரியர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

| | | |
|---|---|---|
| (அ) | 1970 | 2,612 |
| | 1971 | 2,028 |
| | 1972 | 1,085 |
| | 1973 | 995 |
| | 1974 | இன்னும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுக்கொண்டிருக்கின்றன. |
| (இ) | 1970 | 467 பேர்கள் |
| | 1971 | 642 பேர்கள் |
| | 1972 | 613 பேர்கள் |
| | 1973 | 1,087 பேர்கள் |
| | 1974 | இதுவரை 375 பேர்கள். |

THIRU G. VASANTHA PAI : Sir, does the Foundation provide residential accommodation for teachers who are without it after their retirement?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட வசதிகள் இதன்மூலம் செய்து கொடுக்கப்படுவதில்லை. ஆனால், உடல் நலம் குன்றியவர்களுக்கும், பெரும் வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதிகச் செலவுக்கு ஆளாகிறவர்களுக்கும் 75 ரூபாய் அல்லது 100 ரூபாய் என்ற அளவுக்குத் தரப்படுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் அதிகமான எண்ணிக்கையுள்ள விண்ணப்பங்கள் வந்தும், அது உடனுக்குடன் பரிசீலிக்கப்படாமல், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பரிசீலிக்கப்படுகிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான குழு ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை கூடி, அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து வருகிறார்கள். நிதி வசதியைப் பார்க்கும்போது, கொ[illegible]கின்றபோது தொடர்ந்து பல ஆண்டுகளுக்குத் தர வேண்டியிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் மாதாமாதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சிலர் அந்த உதவியை நீட்டிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். முதலில் மூன்று ஆண்டு காலம்தான் தருவார்கள். அவர்கள் மீண்டும் கேட்கிறார்கள். அவர்கள் மே கொண்டு இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகளுக்குக் கொடுக்கிறார்கள் ஆங்காங்கு இருக்கிற மாவட்டக் கல்வி அதிகாரிகள் இது குறித்து விவரங்களைச் சேகரித்து வருகிறார்கள். அந்தக் குழு குறைந்த அளவு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று இருக்கிறது. சில சமயங்களில் ஆண்டுக்கு ஒரு தடவை கூடுகிறது.

### *Effluents discharged from the Paper Mills at Pallipalayam*

*42 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the effluents discharged from the Paper Mills at Pallipalayam, are being let into the river Cauvery; and

(b) if so, whether steps will be taken to stop the same?

### பள்ளிப்பாளையத்தில் உள்ள காகித உற்பத்திச் சாலையில் இருந்து வெளிப்படும் கழிவு நீர்

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிப்பாளையத்தில் உள்ள காகித உற்பத்திச் சாலையில் இருந்து வெளிப்படும் கழிவு நீர், காவிரி நதியில் விடப்படுகிறதா?

(இ) ஆமெனில், அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) கழிவு நீர் காவிரி நதியில் விடப்படுவதற்கு முன், இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் தீர்மானிக்கப்பட்ட தரத்தை ஒத்திருக்கும் வகையில் தூய்மைப்படுத்தப்பட்டே விடப்படுகிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, பள்ளிப்பாளையத்தில் காகித உற்பத்திச் சாலையிலிருந்து வெளிப்படும் கழிவு நீரானது பல நாட்கள் தேக்கப்பட்டு, அதனால் உண்டாகும் நச்சுத் தன்மையானது காவிரியில் பல மைல் தூரத்திற்கு வசிக்கும் பல ஆயிரக்கணக்கான மீன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதென்று விண்ணப்பம் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படிக் குறிப்பிடத் தக்க அளவுக்கு அதனால் பாதகம் ஏற்பட்டதென்ற விண்ணப்பம் இல்லை. தண்ணீரைத் தேக்கி வைப்பதென்பது, தூய்மைப்படுத்தும் ஒரு வழி. குட்டைகள்போல் அமைத்து இந்தத் தண்ணீரைத் தேக்கி வைக்கிறார்கள். இப்போது திருச்சியிலேகூட 'பான்ட்ஸ்' அமைக்கும் முறையிலேதான் திருச்சி டிஸ்டிலரியிலிருந்து தண்ணீர் விடுகிறார்கள். அந்தத் தண்ணீரையும், காவிரிக்குப் பக்கத்திலுள்ள வாய்க்கால் மூலமாகப் பாசனத்திற்கு விட வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அதைப் பாசனத்திற்கு விட முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். காவிரியில் கலக்க விடும்போது இந்தத் தண்ணீரின் அளவு குறைவாக இருப்பதாலும், ஓரளவுக்கு தூய்மைப்படுத்தி விடப்படுவதாலும், பாதகம் இல்லை என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். 1973 ஆம் ஆண்டிலேகூட அதற்காக ஒரு குழு போடப்பட்டு, அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, 'முன்னர் குட்டைகளில் தேக்கி வைத்துக்கொள்ளப்படலாம்' என்று ஜூலையில் தெரிவித்திருக்கிறார்களென்ற குறிப்பு இருக்கிறது. இது அவ்வப்போது பரிசீலிக்கப்படுகிறது. மேலும், அவ்வப்போது பரிசீலிக்கும்படியாக நலத் துறைக்காக அமைக்கப்பட்டுள்ள வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய ரிப்போர்ட்டை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. எனவே, இதைப்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்கிற காரணத்தாலே இதனால் தீமை அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. எல். பலராமன் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய தொழிற் சாலைகளிலிருந்து கழிவு நீரை பொதுவாக ஆறுகளில் விடுவதனால், அங்கே குடிதண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அரசுக்குப் பல தகவல் வந்திருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், வட ஆற்காடு மாவட்டத்திலே தோல் பதனிடும் தொழிற்சாலையின் மூலமாக பாலாற்றிலே கழிவுநீர் விடுவதனால் அந்த ஆற்று நீரே கெட்டு விடுகிறது, அடி நீரும் கெட்டுவிடுகிறது, விவசாயத்துக்கும் பாதகம் ஏற்பட்டுவிடுகிறது என்று பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதுபற்றி ஒரு முடிவான, நிலையான நடவடிக்கை எடுத்து, அதைப் பாதுகாப்பதற்கு திட்டங்கள் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, காவிரியில் ஏராளமான தண்ணீர் வருகிற ஒரு பகுதியாக அந்தப் பகுதி இருக்கிற காரணத்தாலேயும், அதிலே கலக்கிற தண்ணீர் அளவு குறைவாக இருப்பதாலும், அந்த

தண்ணீரைக் கூட பக்கத்திலே இருக்கிற ஒரு வாய்க்கால் மூலமாக நீர்ப்பா னத்துக்கு விட வேண்டுமென்ற அளவுக்கு சில கிராமத்து மக்கள் கேட் தாலும், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 'கண்ட்ரோல்' என் சொல்லத்தக்க அளவுக்கு பாதகம் இல்லாத அளவுக்கு தூய்மைப்படுத்தப்பட் தூய்மை பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும் தவறுகள் ஏற்பட்டால், அ கவனிப்பவர்கள் தேவையான ஆலோசனைகளை வழங்குவார்கள். வட ஆர்க்க மாவட்டத்திலே உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலேயிருந்து வரு கழிவுநீர் தூய்மைப்படுத்தப்படுகிற ஒரு 'ப்ராசஸ்' இல்லாமல் அப்படியே விட படுகிறது. அதனால் அது தேங்கிய இடத்தில் நாற்றம் வருவது மட்டுமல்ல, இடங்களிலே கிணற்று நீரைக் கூட பாதிக்கிறது. அப்படி பாதிக்கப்படு நிலையிலே என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராயலாம். மேலும், அவை எல்லாம் பெரிய தொழிற்சாலைகள் என்று பொருளாதார அடிப்படையி கூறப்படுவதற்கில்லை. அவை நடைமுறைத் தொழில்களாலே வளர்ந்த தொழி நிலையங்கள். ஆனாலும், அந்தத் தண்ணீரை பாதகமில்லாத வகையி வெளியே விடச் செய்வதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கலாம் என் ஆலோசனையில் இருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, இந்த ப பாளையம் கழிவு நீரானது 'ஹைடிரென்ட்', அதாவது பாசனத்துக்கு நி 20,000 க்யூசெக்ஸ், 30,000 க்யூசெக்ஸ் மேட்டூரிலிருந்து ரிலீஸ் ஆகிறபே அதனுடைய தன்மை மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஒரு 4 ம காலம், 5 மாத காலம் மேட்டூரிலிருந்து 3,000 க்யூசெக்ஸுக்குக் குறை ரிலீஸ் ஆகிற காலத்தில், கழிவு நீர் கலப்பதனால் தண்ணீரின் நிறமே மா அந்தத் தண்ணீர் சிவப்பாக மாறி வருகிறதனாலே, கால்நடைகளையும், மக் பாதித்திருப்பதால் கூடிய சீக்கிரத்தில் இன்னொரு வாய்க்கால் மூலம் அ பாசனத்துக்கு உபயோகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை ஏதாவது எடு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி ஆலோசனை இருக்கிறது. முடிவு தெரியவில்லை. முடிவு தெரிந்த பின்னர் நான் பதிலளிக்க முடியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அவர்களுக்கு ஈரோட்டுக்குப் பக்கத்திலே ஒரு பண்ணை இருக்கிறதே, பாதிக்கப்படவில்லையா அந்தத் தண்ணீர்?



**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, இதுமாதிரி, திருச்சி மாவட்டத்தில், உய்யக்கொண்டான் வாய்க்காலில் வரும் கழிவுநீரால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலம் பாதிக்கப்படுகிறது. அதுபோல இங்கேயும் ஏற்படுமோ என்கின்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், அதைத் தூய்மைப்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மேலும், ஏராளமான நிலங்களுக்கு ராட்சத பம்பு செட்டுக்கள் வைத்து தண்ணீர் கொண்டு போகிறார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ராட்சத பம்புசெட்டு என்று சொல் கிறீர்கள். ராட்சதனை நான் இன்னும் பார்த்ததில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, அதுமாதிரி, பம்பு செட்டு போட்டு, ஏராளமான 'ஸ்கீம்' போட்டு, 300 ஏக்கர் பாசனத்துக்குக் கொண்டு வருகிறார்கள். ஏதாவது வளைவு கட்டி, இந்தக் கழிவுநீரை ஒதுக்கி, பாசனத்துக்குக் கொண்டு போனால் கூட, தூய்மை கெடாமல், சுகாதாரம் கெடாமல் இருக்கும். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பெரிய நிறுவனங் களிலே அவர்களால் விடப்படுகிற கழிவுநீரைக் குறைக்க, அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகிற முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 9-7-1974-ஆம் நாளன்று கடைசியாக நடைபெற்ற பொதுச் சுகாதார வாரியத்தின் கூட்டத்தில் மேற்சொன்ன பொருள் குறித்து விவாதித்து, நீர், காற்று, மற்றும் நிலத்தின் தூய்மையைக் கெடுக்கக்கூடிய தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும் பணியை முடுக்கப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும். மேற்சொன்ன தீர்மானத்தை நிறைவேற்ற தேவையான செயற்குறிப்புக்களை அரசுக்கு அனுப்புமாறு இயக்குநருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நேர்வு தொடர்ந்து மூன்று மாதத்துக்கு ஒரு முறை பரிசீலனையில் இருந்துவரும். அது மிகத் தீமையாக இருக்குமானால், அங்கேயே அரசாங்க அலுவலர் ஒருவரை நியமித்து அந்தத் தண்ணீரால் பாதகம் ஏற்படாதவாறு செய்ய எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

THIRU S. NARAYANASWAMY : Are the Government aware, Mr. Chairman, that the effluent that comes out from Pallipalayam Paper Mills is chemically treated and treated through solar exposure till about 95 per cent of all the poisonous stuff is destroyed and only the balance is left into the River Cauvery and not the

**same** quantity as comes out of the factory. It is a very small quantity. Are the Government aware that they are chemically treating the effluent before it is let into the Cauvery?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது மிகக் குறைவான அளவுதான், 5 சதவீத அளவுதான் தூய்மை கெட்ட தண்ணீராக இருக்கிறது. 100 சதவீதம் அது கெட்டிருக்குமானால், அதில் 95 சதவீதத்தை இப்படித் தூய்மைப்படுத்தலாம் என்று சொல்கிறார்கள். ஆக, 5 சதவீதம் இருந்தாலும் சிலருக்கு ஆட்சேபணை இருக்கிறது. திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்லுவதைப் போல் சிலருக்கு அதனால் தீமை வருவதாக ஒரு எண்ணம் இருக்கிறது. அதனால் தீமையில்லை என்று மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலே தொடர்ந்து அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

*Drinking-Water facilities for Palaiyapadi Village, Tiruchirappalli District.*

* 43 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government requesting for the provision of drinking-water facilities for Palaiyapadi village, Tiruchirappalli district; and

(*b*) if so, the action taken thereon?

**திருச்சி மாவட்டம், பாலையப்பாடி கிராமத்திற்கு குடிநீர் வசதி.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், பாலையப்பாடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து தரும்படி அரசிற்குக் கோரிக்கை ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம். திருமானூர் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடமிருந்து பாலையப்பாடி மற்றும் 15 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி கோரி விண்ணப்பம் ஒன்று வந்தது.

(இ) மக்களுக்கு வேண்டிய குடிநீர், ஊராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட குழாய்களிலிருந்தும தனியாருக்கு சொந்தமான குழாய்களிலிருந்தும் கிடைக்கிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. எனவே, கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்தில் இவ்வூர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை.





*Match Manufacturing Units in Tamil Nadu*

* 44 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the number of Match Manufacturing Units functioning in Tamil Nadu;

(*b*) out of them, the number of Units functioning in their own buildings?

(*c*) the number of Units where fire accidents occurred during 1971–72 and 1972–73; and

(*d*) the names of those Units?

**தமிழ்நாட்டில் தீப்பெட்டி அலகுகள்.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் இயங்கும் தீப்பெட்டி அலகுகள் எத்தனை ?

(இ) அவைகளில் சொந்தக் கட்டிடம் பெற்றுள்ளவை எத்தனை ?

(உ) 1971-72, 1972-73-ஆம் ஆண்டுகளில், தீ விபத்துக்குள்ளானவை எத்தனை ?

(எ) அவற்றின் பெயர்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) தமிழகத்தில் 1,339 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) 62 தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குச் சொந்த கட்டிடம் உண்டு.

(உ) 8 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தீ விபத்துக்குள்ளாயின.

(எ) தீ விபத்துக்குள்ளான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பெயர்கள் பின்வருமாறு :—

1971—72.

(1) யூனிவர்சல் மாட்ச ஒர்க்ஸ், தாயில்பட்டி.

(2) அசோக் மாட்ச் இண்டஸ்டிரிஸ், சிவகாசி.

(3) அரசன் மாட்ச் ஒர்க்ஸ், சிவகாசி.

(4) ஸ்டாண்டர்ட் கலர் மாட்ச், திருத்தாங்கல்.

1972—73.

(1) பயனியர் ஒர்க்ஷாப், சிவகாசி.

(2) சன் மாட்ச் ஒர்க்ஸ், கீழ்திருத்தாங்கல்.

(3) உரிண்டு மாட்ச் லிமிடெட், சிவகாசி.

(4) ஸ்டாண்டர்ட் மாட்ச் ஒர்க்ஸ், சிவகாசி.

**திரு. கே. எஸ். ஆப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற் சாலைகள் ஜில்லா வாரியாக எத்தனை இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் 11, ராமநாதபுரம் மாவட்டம் 697, வடஆற்காடு மாவட்டம் 162, திருநெல்வேலி மாவட்டம் **459.**

*Employment Opportunities to Reformed Juvenile Delinquents*

* 45 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government will come forward to offer concession to the reformed Juvenile delinquents in the matter of employment opportunities?

**சீர்திருந்திய இளங்குற்றவாளிகளுக்கு வேலை வாய்ப்பு.**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

வேலை வாய்ப்பு அளிப்பதில் சீர்திருந்திய இளங்குற்றவாளிகளுக்கு சலுகை அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றி தக்க உத்தரவுகளை ஏற்கெனவே அரசு பிறப்பித்துள்ளது. அவை நடைமுறையிலுமுள்ளன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இந்த உத்தரவை என்ன விதத்தில் போட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டிலே அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அதிலே முன்னால் குற்ற வாளிகளாக இருந்து விடுதலை பெறுபவர்களுக்கு அரசுப் பணிகளில் வேலை





கொடுக்கலாம் என்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதற்கு மாறான விதிகள் இருக்குமானால், அந்த விதிகளுக்கு 'ரிலேக்சேஷன்' விலக்கு கொடுக் லாம் என்றும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி எடுக்கும்போது 'மாரல் டர்ப்பிட்டியூட் அஃபென்ஸ்' இல்லாமல் இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டி ருக்கிறார்கள்.

*Keezhakavattankurichi-Kallakudi Road*

* 46 Q.—THIRU M. K. D. NATARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to take over Keezhakavattankurichi-Kallakudi (via, Karaiavetti, Venganur, Sannavur) Road of Thirumanur Panchayat Union, Tiruchirappalli District, under Sugarcane Road Development Scheme?

**கிழக்காவட்டன்குறிச்சி—கல்லக்குடி சாலை.**

**திரு. மு. க. து. நடராசன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்சி மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தில் கீழ்க்காவட்டன் குறிச்சி—கல்லக்குடி (வழி-கரையவெட்டி, வெங்கனூர், சன்னாவூர்) சாலையை, கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தில் மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஆம்.

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவர் அவர்களே, கரும்பு செஸ் நிதியிலிருந்து போடுகிற சாலைகள், பாலங்கள் யாரால் தேர்ந் தெடுக்கப்படுகின்றன, கரும்பு ஆலைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனவா, அரசால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனவா, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, என்னென்ன ரோடுகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதுபற்றி அரசு முடிவு செய்கிறது. தேவைக்குத் தக்கவாறு அந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவர் அவர்களே, அரசு முடிவு செய்யும் முன்பு அந்த ஆலைகளிடமிருந்து ஏதாவது ரோடுகளின் பட்டியல்கள் பெறப்படுகின்றனவா? அப்படிப் பெறப்படுகிற பட்டியலிலிருந்து அரசு ரோடுகளைத் தேர்ந்தெடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 17

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இன்னின்ன ரோடுகள் என்று பட்டியல், ஆலைகளிலிருந்தும் பொது மக்களிடமிருந்தும் கிடைக்கிறது. கரும்பு உற்பத்தியாளர்களும் கொடுக்கிறார்கள். ஆனால் அவைகளிலே எதை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது பற்றி அரசு முடிவு செய்கிறது.

**திரு. எல். பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த கரும்பு செஸ் மூலமாக வரக்கூடிய பணம் காலாகாலத்தில் செலவழிக்கப்படவில்லை என்ற நீண்ட நாள் குறையை நிவர்த்திக்க ஏதாவது நீண்டகாலத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? வட ஆற்காடு மாவட்டத்தில்கூட இதுபோன்ற ஒரு நிலை இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இப்போது கரும்பு சாகுபடி மூலமாக வருகின்ற வருமானம் கரும்பு மேம்பாடு செய்வதற்காகவும், கரும்பாலையைச் சுற்றியுள்ள ரோடுகளையும், பாலங்களையும் மேம்பாடு செய்வதற்காகவும்தான் பயன்படுத்தப்படுகிறது. அது ஒன்றும் அதிகமாகத் தேங்கி நிற்கவில்லை. இப்போது கணக்கு தனித்தனியாக வைத்துவரப்படுகிறது. இந்த ஆலைக்கு இவ்வளவு வருமானம் என்று தனித்தனியாகக் கணக்கு வைக்கின்றபடியால், அந்தக் கணக்கில் இருக்கின்ற பணம் அவ்வப்போது செலவாகிக்கொண்டிருக்கிறது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, கோத்தாரி ஆலைக்குச் செல்லும் சாலையில் முக்கியமாக விவசாயிகள், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள், நிறைய கரும்பு கொண்டு போகிறார்கள். அப்படிக் கொண்டுபோகும்போது, அந்தச் சாலை சீர்திருத்தப்படாமல் இன்னும் கொஞ்சம் நாள் இப்படியே இருந்தால், விவசாயிகளுக்கு ஏராளமான நஷ்டம் வரும். எப்படியென்றால், 1 மைல், 2 மைல், 3 மைல், 4 மைல்கூட சுற்றிக் கொண்டு அந்த ஆலைக்குப் போகக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும். ஆகையால், அந்த சாலைக்கு சீக்கிரம் முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த சாலைப்பணியை ஏற்கெனவே எடுக்க ஆரம்பித்து இப்போது அது ஏறத்தாழ 1½ கிலோ மீட்டர் வரையில் முடிந்திருக்கின்றது. இப்போது பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.



1974 டிசம்பர் 17]

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது சர்க்கரை ஆலைகள் சிபாரிசு செய்யக்கூடிய ரோடுகளை எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். மோகனூரில் கோ-ஆப்பரேடிவ் ஆலையிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு விவசாயப் பகுதியிலே சாலைப்பணி செய்வதற்கான சிபாரிசு வந்திருக்கின்றது. அதை ஏற்றுக்கொண்டு செய்யப்போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, அதைப்பற்றி ஆராய வேண்டும். அந்த மனுவே நேற்றுத்தான் கிடைத்தது.

## *Fertilizers*

* 47. Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that adequate quantity of chemical fertilizers is not made available to Tamil Nadu;

(*b*) the quantity of fertilizers, variety-wise required during the year 1973; and

(*c*) the quantity of fertilizers, variety-wise, allotted by the Central Government?

## இரசாயன உரங்கள்

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிற்கு வேண்டிய அளவு இரசாயன உரம் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) 1973 ஆம் ஆண்டு தேவைப்பட்ட இரசாயன உரத்தின் அளவு தரவாரியாக எவ்வளவு ?

(உ) மத்திய அரசு ஒதுக்கீடு செய்த இரசாயன உரத்தின் அளவு தரவாரியாக எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, 1973 பிப்ரவரியிலிருந்து 1974 ஜனவரி வரை நமது தேவை 3,15,000 நைட்ராஜன் டன். மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது 1,96,044 நைட்ராஜன் டன். கிடைத்தது 2,01,977 நைட்ராஜன் டன்.

[1974 டிசம்பர் 17

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, இப்போது தமிழ் நாட்டில் நெல் பயிரிடுபவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 15 கிலோ கிராம்தான் கொடுக்க முடியும் என்று உத்தரவு இருப்பதாகவும், அதன்படிதான் இராமநாதபுரம் மாவட்டத்திலே கொடுப்பதாகவும் தெரிகிறது. அந்த அடிப்படையிலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதன் ஆட்சித் தலைவர் ஒரு ஏக்கருக்கு 15 கிலோ கிராம்தான் கொடுக்க முடியும் என்று சொல்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் விவசாய இலாகா அதிகாரிகள் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது யூரியா போட வேண்டும் என்று சொல்கின்றார்கள். இதில் முரண்பாடு இருக்கின்றது என்ற காரணத்தால், விவசாய இலாக்காவிலிருந்து முறைப்படுத்தப்பட்டபடி, இருக்கின்ற பயிரைக் காப்பதற்காகவாவது, இந்த உரத்தைக் கிடைக்கச் செய்வதற்கு அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கெனவே ஏக்கர் ஒன்றுக்கு 25 கிலோ யூரியா என்ற அளவிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது முறை கொடுக்கப்படுவது என்பது கையிருப்பைப் பொறுத்திருக்கின்றது.

**திரு. ஓய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன இந்தத் தேவையானது எந்த அளவிலே கணக்கிடப்பட்டது? தற்போது தமிழ் நாட்டிலே, தஞ்சை மாவட்டத்திற்கு 50 கிலோ, திருச்சி மாவட்டத்திற்கு 25 கிலோ, சேலம் மாவட்டத்திற்கு 30 கிலோ யூரியா என்று இப்படி மாவட்ட வாரியாக ஏற்றத்தாழ்வாக, எந்த அளவினைக் கொண்டு நிர்ணயம் செய்தார்கள்? இப்போது திருச்சிக்கு 25 கிலோ கொடுத்துக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அதுவும் தக்க சமயத்தில் வருவதில்லை. அந்த அளவில்தான் நிலைமை இருக்கின்றது. எந்த அளவைக் கொண்டு இதை நிர்ணயித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, வருடா வருடம் இரண்டு முறை மத்திய சர்க்காருடன் ஆலோசனை நடக்கிறது. 'ஸோனல் கான்பரன்ஸ்" என்று நடைபெறுகிறது. ஜனவரி மாதம் ஒன்றும், ஜூலை மாதம் ஒரு முறையும் நடக்கிறது. அப்போது நமது தேவைகளை நாம் எடுத்துச் சொல்கிறோம். நமது தேவை 3,15,000 நைட்ரஜன் டன். நைட்ரஜன் டன் என்பதை இரண்டால் பெருக்கிக்கொள்ள வேண்டும் யூரியா என்றால். 4 ஆல் பெருக்கிக்கொள்ள வேண்டும் கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் என்றால், 5 ஆல் பெருக்கிக்கொள்ள வேண்டும் அம்மோனியம் சல்பேட் என்றால்.



1974 டிசம்பர் 17]

நைட்ரஜன் டன் என்பது சூத்திரமான வார்த்தை என்பதால் சொல்கிறேன். மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது 1,96,044 நைட்ரஜன் டன். கொடுத்தது 2,01,977 நைட்ரஜன் டன். எப்படி கணக்குப் பார்க்கிறோம் என்றால், நைட்ரஜன் டன் கணக்குவைத்துப் பார்க்கிறோம். குறைந்தது 50 நைட்ரஜன் கிலோவாவது ஒரு ஏக்கருக்கு இருந்தால்தான், ஒரு பயிர் நெல் விளையும் என்று கணக்கிட்டுக் கேட்கிறோம். இடைப்பதையெல்லாம் கொடுத்துவிடுவதில்லை. குறையைத் தீர்த்துக்கொள்வதற்கு அடுத்த கேள்வியிலே சில பதில்களை வைத்திருக்கின்றேன்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether any Calcium Ammonium Nitrate has been allotted to this State and whether there is any resistance from the farmers to use this particular variety of fertilizer?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the farmers are now accustomed to using all kinds of fertilizers including Calcium Ammonium Nitrate. Calcium Ammonium Nitrate has got round about 25 per cent Nitrogen, as against 45 per cent Nitrogen in Urea or 20 per cent in Ammonium Sulphate. There is no resistance, as I could judge from the offtake of Calcium Ammonium Nitrate.

THIRU A. R. DAMODARAN : May I invite the attention of the Hon. Minister to the fact that in South Arcot district a number of Co-operative Societies have got heavy stock of Calcium Ammonium Nitrate and while I am thankful to the Hon. Minister for educating us on the percentage of Nitrogen of which we are well aware, may I know, Sir, whether it is a fact that farmers are reluctant and if he has not received any information, may I know from the Hon. Minister whether he will call for a report from the Collectors to find out the factual position in the districts?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the Hon. the Chief Minister is going to make a statement in the Assembly to-morrow about the exact position in various districts.

THIRU G. SWAMINATHAN : The Hon. the Chief Minister may make a statement in the Assembly. But that does not prevent us from getting information from the Hon. Minister.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : So far as South Arcot district is concerned, I would require notice.

MR. CHAIRMAN : If the Hon. Minister does not have definite information, he may say that the question will be answered tomorrow; but the privilege of the members cannot be curtailed. The Hon. the Chief Minister may make a statement tomorrow. Hon. Members in this House want the information now. If the Hon. Minister has no information, he may ask the Member to put a separate question. There is no harm in it.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I have asked the hon. Member to put a separate question in this matter.

THIRU G. SWAMINATHAN : The Hon. Minister informed the House that since the Hon. the Chief Minister would be making a statement on the subject of fertilizers, he was not willing to divulge the information in this House. That was the information the Hon. Minister gave us. We want information in this House from the Hon. Minister. If the information is being given in the Assembly, we cannot go to the Assembly to gather the information.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The question about the particular requirement or attitude of the South Arcot district farmers was raised by the hon. Member Thiru Damodaran. I said that generally Calcium Ammonium Nitrate is used by the farmers. So far as I could see, there is no resistance. He wanted particular figures regarding South Arcot district and for that, I would require notice.

MR. CHAIRMAN : Fertilizer is related to food situation, isn't it? The Hon. the Chief Minister is going to reply in the other House. The hon. Members in this House want information about fertilizers and the requirements in the districts. If the Hon. Minister has not got the information, he may ask the hon. Member to put a separate question. There ends the matter. Why should the matter be dragged on for long? I request the hon. Member to put a separate question.

(Thiru Y. Venkateswara Dikshidar rose)

MR. CHAIRMAN : The hon. Member may please be seated.



*Scarcity of Fertilizers*

* 48 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any special scheme with the Government to manufacture compost manure to meet the scarcity of fertilizers; and

(b) if so, the details thereof?

இரசாயன உரங்களுக்குப் பற்றாக்குறை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரசாயன உரங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால், இயற்கைக் குப்பைக் கலவை உரங்களைத் தயார் செய்ய அரசிடம் சிறப்புச் செயல் திட்டம் ஏதும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) மேலவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

*Christians of Scheduled Caste Descent*

* 49 Q.—THIRU GEORGE KOMAGAN (on behalf of THIRU D. V. D'MONTE) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government are aware that Christians of Scheduled Caste descent in the State, are denied even the concessions and benefits extended to the Backward Classes in the matter of admissions to professional colleges, reservation in services and economic assistance; and

(b) if so, the action proposed to be taken by the Government thereon?

---

@ 324 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 17

### அரிசனக் கிறித்துவர்கள்

**திரு. ஜார்ஜ் கோமகன் (திரு. டி. வி. டி'மான்டி சார்பில்):** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம் மாநிலத்திலுள்ள அரிசனக் கிறித்துவர்களுக்கு, தொழில் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளுதல், அரசுப் பணிகளில் இடம் ஒதுக்குதல், பொருளாதார உதவியளித்தல் போன்ற துறைகளில் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகளும், நன்மைகளும்கூட அளிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) & (இ) சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜார்ஜ் கோமகன்:** தலைவரவர்களே, தமிழக அரசு தந்திருக்கின்ற இந்தச் சலுகைகள் போன்று இந்தியாவில் பிற மாநிலங்களில் ஹரிஜன கிறித்துவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, இந்திய அரசியல் சட்டத்தின்படி எந்த அளவுக்கு அரிசனங்களுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும் என்று அரசு நினைக்கின்றதோ அந்த அளவுக்கு மேல் செய்ய முடியவில்லை. காரணம் இந்திய அரசியல் சட்டத்திலே முடிவு எடுத்துவிட்டார்கள். தமிழ் நாட்டில்தான் கிறித்துவர்கள் இந்து மதத்திற்கு வருவார்கள். ஒரு தலைமுறையில் வந்தவர்களுக்கு என்ன சலுகைகளை வழங்கிட முடியுமோ அந்தச் சலுகைகளைக் கொடுத்து வருகிறோம். மதம் மாறிய கிறித்துவர்களுக்கு நமது அரசாங்கம் கல்விச் சலுகைகள், உத்தியோகச் சலுகைகள்—உயர்வுகள் ஆகிய சலுகைகளை அளித்து வருகிறது. இப்போது மனைகள் கொடுப்பதிலும் வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் பாரபட்சமின்றி சலுகைகளைக் கொடுத்து வருகிறது.

@ 325–329-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 17]

### *Conducting of Special Coaching Centres*

* 50 Q.—THIRU K. S. GANAPTHI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the responsibility of conducting of special coaching centres for preparing Scheduled Castes and Scheduled Tribes students to appear for the Group-IV Examinations of the Tamil Nadu Public Service Commission has been entrusted to the District Collectors with effect from the year 1974; and

(*b*) if so, the reasons therefor?

### தனிப் பயிற்சி நிலையங்களை நடத்தல்

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன, பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவால் நடத்தப்படும் IV ஆவது தொகுதித் தேர்வுகளை எழுதுவதற்குத் தயார் செய்வதற்கான தனிப்பயிற்சி நிலையங்களை நடத்தும் பொறுப்பு, 1974 ஆம் ஆண்டிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாடு அரசானது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சர்வீஸ் கமிஷன் எழுதி அதில் தேர்வு பெற முடியவில்லை என்ற காரணத்தால், 1970 ஆம் ஆண்டு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதன் அடிப்படையில் ஆங்காங்கு பயிற்சி முகாம்கள் வைத்து அந்தப் பயிற்சி முகாம்கள் நடந்து வருகின்றன. பயிற்சிக் காலம் 3 மாதம், 4 மாதம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் இல்லை. மாணவர்கள் போடும் மனுக்களை மாவட்ட நல அதிகாரிகள் அந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளையும் மற்றும் இரண்டு அதிகாரிகளையும் கலந்து பரிசீலனை செய்து தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எந்த இடத்திலே அந்த ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திற்கு அருகாமையில் சென்று

மாணவர்கள் பயிலும் எண்ணம் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தந்த இடத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளை நடத்தி வருகிறார்கள்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நடத்தப்பட்ட முறைக்கும் இந்த ஆண்டு வகுப்புகள் நடத்தப்பட்ட முறைக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். முன்பு பணியில் இருந்தவர்களைக் கொண்டு 'ஹானரேரியம்' கொடுத்து மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு முதற்கொண்டு ஓய்வு பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. இதனால் அரசுக்குச் செலவு அதிகம் ஏற்படுமே தவிர, பயன் ஏற்படுவதில்லை. எனவே முன் மாதிரி வகுப்புகளை நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவர் அவர்களே, 'ஹானரேரியம்' என்று சொல்லும்போது எல்லாமே 'ஹானரேரியம்' ஆகப் போய்விடுகிறது. 'ஹானரேரியம்' பெறுபவர்கள் யாருமே கடமை உணர்ச்சியோடு பணியைச் செய்ய மாட்டார்கள். அவர்கள் முழு நேர ஊழியர் போல் வேலை செய்ய முடியாது. முழு நேரம் அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றிவிட்டு, பகுதி நேரத்தில் வகுப்பை நடத்துவதற்கு வரும்போது அவர்களுக்குக் களைப்பு மிகுதியாகிறது. எனவேதான் அவர்களால் திருப்திகரமாக வேலை செய்ய முடிவதில்லை. ஆகவே அதிகச் செலவானாலும், அதைப் பெரிதாக எண்ணாமல் ஓய்வு பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இந்த ஆண்டு முதல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அரசுக்கு அதிகச் செலவானாலும், அத்திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த சமூகத்தினுடைய நிலையைப் பார்த்தால், அப்படித் தேவையில்லையென்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].**



## 2. அரசின் தீர்மானம்

### மாநிலத்தில் உணவு நிலைமை குறித்து.

*** திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவர் அவர்களே, உணவு நிலை குறித்த விவாதத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டில் இன்று உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் இந்த அரசு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கத் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டை நான் முதன் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டில் இந்த அளவுக்கு பயங்கரமான பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் விவசாயிகளுடைய நிலையை அரசு சரிவரப் புரிந்துகொள்ளத் தவறி விட்டதும், அரசு அதிகாரிகள் விவசாயிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்ய விடத் தவறியதுமே காரணம் என்பதை நான் முதன் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு கிராமப் பகுதிகளிலும், நகரப் பஞ்சாயத்துக்களிலும் மட்டும் நியாய விலைக் கடை என்று வைத்து அரிசி விநியோகம் செய்கிறார்கள். முதலில் இந்த அரசினுடைய விநியோகத்தைப்பற்றி நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளிடமிருந்து லெவி கொள்முதல் செய்யும்போது, எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையிலே, ஒரு பொதிக்கு—எங்கள் ஜில்லாவிலே கிட்டத்தட்ட 4 மூட்டை கொண்டது ஒரு பொதி என்று சொல்வார்கள்—ஏறத்தாழ 200 ரூபாய் எங்களுக்குக் கிடைத்து வருகிறது. ஆனால் நியாய விலைக் கடைகளில் போடுகிற அரிசி கிலோ 2 ரூபாயிலிருந்து, ரூபாய் 2.30 அல்லது ரூபாய் 2.40 வரையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் விலைக்கும் அதை விநியோகம் செய்யும் விலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஏறத்தாழ சரிபாதி விலை அதிகமாகிறது. ஆனால் இந்த லாபம் யாரிடம் போய்ச் சேருகிறது என்பதுதான் புரியவில்லை. மூட்டைக்கு ரூபாய் 50, 57, 60 என்று கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் அரசு நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி விநியோகிப்பது கிலோ ரூ. 2, ரூ. 2.30, ரூ. 2.40 என்று விற்கிறார்கள். குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி அதிக விலைக்கு சாதாரண மக்களுக்கு அரிசியை விற்கிறார்கள். இந்தக் குறைகளுக்கெல்லாம் காரணம் என்னவென்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக நேற்று நண்பர் திரு. கணபதி பேசும்போது தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலுள்ள பிரச்சினைபற்றிக் குறிப்பிட்டார்கள். நான்கூட என் ஜில்லாவைப்பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நேற்றையதினம் அவர் பேசும்போது ஏக்கர் ஒன்றுக்கு 1,000 கிலோவுக்கு மேலாக நெல் உற்பத்தியாகிறதாகக் குறிப்பிட்டார். ஒரு ஏக்கருக்கு 2½ மூட்டை உரம் தேவைப்படுகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார். ஏக்கர் ஒன்றுக்கு உரத்திற்கு மட்டும் நாங்கள் 300 ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலை வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை, அப்படி அல்ல. ஏக்கருக்கு 2½ மூட்டை யூரியா தேவை என்று சொல்லும்போது, இப்போது கேள்வி நேரத்தின்போது, அமைச்சர் அவர்கள் சொன்னது போல், ஒரு ஏக்கருக்கு 25 கிலோ யூரியா என்று இருந்தால் விவசாயி தன்னுடைய நிலத்திற்குத் தேவையான உரத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? அதையும் தவிர விவசாயி முதலில் நாற்று நடும் போது, நிச்சயமாக காம்பிளக்ஸ் உரம் போட வேண்டும். காம்பிளக்ஸ் உரம் போடாமல் விவசாயி நடவு செய்ய முடியாது. ஒரு மூட்டை காம்பிளக்ஸ் உரத்துக்கு 135 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை ஒரு ஏக்கருக்கு 2 மூட்டை போடுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு சுமார் 1½ முதல் 2 மூட்டை வரை யூரியா போடுகிறார்கள். ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டிய நிலை விவசாயிக்கு ஏற்பட்டுள்ளது. நியாயமான விலையில் அரசு உரம் கொடுத்தால்தான், விவசாயி இவ்வளவு தொகை செலவு செய்ய முடியும். எல்லா இடங்களிலும்—நீர்ப்பாசனம் உள்ள இடங்களிலும், நீர்ப்பாசனம் இல்லாத இடங்களிலும்—ஒரே மாதிரியாக வினியோகம் செய்கிறார்கள். விவசாயிக்குப் போதுமான உரம் நியாய விலையில் கொடுப்பதுமில்லை. இவ்வாறு உரம் கிடைக்காவிட்டால், விவசாயி என்ன செய்வான்? அவன் கள்ள மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்கிப் போடுகிறான். இந்த நிலை இப்படியே நீடித்துக்கொண்டு போனால், எப்படி விவசாயி உற்பத்தியைப் பெருக்க முடியும்? விவசாயிக்கு இப்படி பாதகம் ஏற்பட்டால், நாட்டிலே பஞ்சம் வராமல் வேறு என்ன வரும்? 'உழவன் சேற்றிலே கால் வைத்தால் தான் மற்றவர்கள் சோற்றிலே கை வைக்க முடியும்' என்று சொல்வார்கள்.

உழவனுடைய பரிதாப நிலையைப்பற்றி இன்று நான் இன்னொன்றையும்கூட சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை மதிப்பீடு என்று கூட ஒன்றை நேற்று சபையிலே அளித்தார்கள். இந்தத் துணை மதிப்பீட்டிலே, நாட்டிலே நெருக்கடியான உணவு நிலைமை ஏற்பட்டிருக்கும் இந்த சமயத்திலே, விவசாயிகளுக்கு ஒரு நன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. எங்கள் ஜில்லாவில் படி அரிசி 3½ ரூபாய் முதல் 4 ரூபாய் வரை விற்கிறது. இந்த நிலை இன்னும் இப்படியே நீடித்தால், கிராமப் பகுதியில், நகரப் பகுதியில் வாழும் மக்கள் எப்படி உணவு அருந்த முடியும்? இன்னும் பல சலுகைகள்



முழு அளவில் ஒவ்வொரு விவசாயிக்கும் கிடைக்கக் கூடிய அளவில் வழி செய்திட அரசு உடனடியாக முன் வரவேண்டும். இந்த நோக்கில் அந்த வகையில் ஏதாவது செய்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

அடுத்து, நெல் கொள்முதல் விலைபற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை வாங்குவதற்கு குவிண்டாலுக்கு ரூ. 75 லிருந்து ரூ. 85 வரையில் அரசாங்கத்தில் நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். நமது நண்பர் திரு. கணபதி அவர்கள் குறைந்த பட்சம் ரூ. 105 ஆவது ஒரு குவிண்டாலுக்கு வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த விலை உண்மையிலேயே விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகக்கூடிய விலையா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் ஊக்கத்தோடு விவசாயம் செய்ய வேண்டுமென்றால், நிச்சயமாக அவர்களுக்கு விலையை உயர்த்தித் தரவேண்டும். விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதில் மாநில அரசாக இருந்தாலும் மத்திய அரசாக இருந்தாலும் பாரபட்சம் காட்டுகின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யும்போது, ரூ. 85 ஒரு டன்னுக்கு என்கிறார்கள். நெல்லுக்கும் அதே விலைதான். உற்பத்திச் செலவை யோசித்துப் பார்க்க வேண்டும். நாளுக்கு நாள் உற்பத்திச் செலவு அதிகரித்துக்கொண்டு வருகின்றது. விவசாயக் கூலி, இரசாயன உரங்களின் விலை இன்னும் விவசாயத்திற்குத் தேவையான மாடுகள், மற்ற சாமான்கள் எல்லாம் இப்போது எந்த அளவிற்கு விலை ஏறிவிட்டது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதையும் மனத்தில் கொண்டு நெல்லின் விலையை நிர்ணயம் செய்தால், உதவிகரமாக இருக்கும். ஆனால் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. இந்த நாட்டிலே ஒதுக்கித்தள்ளப்பட்டவர்கள் விவசாயிகள்தான் என்று சொல்ல வேண்டியிருக்கின்றது. விவசாயிகளின் கோரிக்கைகளை எப்போதும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுவதாகத் தெரியவில்லை. அதோடு வேலி பற்றியும் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நெல்லுக்கு நீங்கள் என்ன விலை வேண்டும் என்று கேட்கின்றீர்கள்?

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் என்னைக் கேட்கின்றார்கள். ஆனால் நேற்று நமது நண்பர் திரு. கணபதி அவர்கள் குறிப்பிடும்போது, 'நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவன் இல்லை' என்று சொல்லி, 'குவிண்டாலுக்கு ரூ. 105 வேண்டும்' என்று

கேட்டார்கள். நான் நினைக்கிறேன், கம்யூனிஸ்டு கட்சிகூட ரூ. 105 வேண்டும் என்றுதான் கேட்கின்றார்கள். என்னுடைய அபிப்பிராயம், இன்றைய உற்பத்திச் செலவுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், குறைந்த பட்சம் ரூ. 150 இருந்தால்தான் விவசாயிகள் பிழைக்க முடியும் என்று நினைக்கிறேன். ரூபாய் 150 என்று கொடுத்துவிட்டால்கூட, அவர்கள் ஒன்றும் பெரிய வாழ்வைப் பெற்றுவிட முடியாது. உதாரணமாகச் சொல்லு கிறேன், ஒரு ஜோடி மாடுகளை முதலில் வாங்க வேண்டுமானால், முன்பு 200 ரூபாய் இருந்தது இப்போது, குறிப்பாக கோவை ஜில்லாவில் கிட்டத்தட்ட ரூ. 2,000 அல்லது ரூ. 2,500 என்ற அளவிற்கு விற்கின்றது. மற்ற ஜில்லாக் களில் என்னவோ தெரியாது. கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில், அந்த விலைக்கு விற்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, குவிண்டாலுக்கு ரூ. 150 கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின் றார்கள். அதிகமாகக் கொடுத்தால், எனக்கு அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எனக்கும் அது விருப்பம்தான். ஆனால் ஒரு குவிண்டால் ரூ. 150 என்று கொடுத்தால், அதற்காகும் செலவு ரூ. 25, அதையும் சேர்த்து மொத்தம் ரூ. 175 ஆகும். இந்த ரூ. 175-க்கு 64 கிலோ அரிசி கிடைக்கும். அப்படி யானால், கிலோ அரிசி குறைந்த பட்சம் மூன்று ரூபாய் என்ற அளவில் விற்க வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் சம்மதம் தெரிவிக்கின்றாரா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: இன்றைக்குக்கூட அரசாங் கத்தில் கிலோ அரிசி இரண்டு ரூபாயிலிருந்து 2.75 வரையில் விற்றுக்கொண் டிருக்கின்றார்கள். இதை நண்பர் அவர்கள் அறிந்திருப்பார் என்றுதான் எண்ணுகிறேன். நாட்டிலே பஞ்சம் என்ற நிலை வரும்போது, ஏதோ மானியம் கொடுத்தாவது அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். வேறு என்ன சொல்ல முடியும்? இந்தமாதிரி நிலைமை எப்போதும் தோன்றியதில்லை. எப்போதாவது மழை பெய்யாமல், பெருமளவிற்கு உற்பத்தியாளர்களுக்கு பாதகம் ஏற்பட்டால், அப்போதெல்லாம் அரசாங்கம்தான் அந்த நஷ்டத்தை ஈடுசெய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து இன்னும் ஒன்று, உர விநியோகம்பற்றிச் சொல்ல வேண்டியிருக் கிறது. இப்போது ஏக்கருக்கு 50 கிலோ தஞ்சாவூரில், திருச்சியில் 25 கிலோ— திரு. அய்யம்பெருமாள் அவர்கள் குறிப்பிட்டார்கள், 15 கிலோ என்று— இப்படி இல்லாமல், நீர்ப்பாசன வசதி உள்ள பூமிக்கெல்லாம் ஒரே மாதிரியான





அளவிற்கு உரம் கொடுப்பது என்ற முறையிருக்க வேண்டும். தஞ்சையானாலும் திருச்சியானாலும் நீர்ப்பாசன வசதி உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக உரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதோடு நகரப் பஞ்சாயத்துகளில் சில ஊர்களிலே நியாய விலைக் கடைகளை வைத்து அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு வாரத்திற்கு குடும்பத் திற்கு மூன்று கிலோ என்று கொடுக்கப்படுகிறது. இது போதுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு நகரப் பஞ்சாயத்துகள், கிராமப் பஞ்சாயத்துகள் என்று பாகுபாடு செய்திருப் பதானது பொருத்தமானது இல்லை. ஏனென்றால் குறிப்பாக கிராமப் பகுதி யிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள், அரிஜனங்கள் இவர்களெல்லாம் வெளி மார்க்கெட்டில் சென்று அந்த விலைக்கு அரிசி அல்லது வேறு தானியத்தை வாங்க முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே எல்லாப் பகுதி மக்களுக்கும் அது கிடைக்க வழி செய்யும் வகையில் எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளை வைத்து அதை விநியோகம் செய்ய உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் உர விநியோகம்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உர வகைகள் இப்போது எல்லாப் பகுதிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் கொடுப்பது காலாகாலத்தில் கொடுக்கப் படாததுதான் பெரும் குறையாக இருக்கிறது. நடவு சமயத்தில் வேண்டு மென்று கேட்டால், அறுவடை சமயத்தில்தான் கிடைக்கிறது. நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். வேறு ஏதாவது பொருளானால், வைத்திருந்து பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயத்தைப் பொறுத்த மட்டில், நேரத்தில் கிடைத்தால்தான் அதற்கான பலன் கிடைக்கும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை வயலிலிருந்து தன் வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூட இப்போது பெரும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இரண்டு மைல் தூரத்தில் வீடு இருக்கின்றது. வண்டியில் எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்றால் இடையிலே பல சோதனைச் சாவடிகள். தன் சொந்த நிலத்தில் விளைந்ததை வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூட அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. எனவே பஞ்சாயத்து யூனியன் எல்லையைக் கொண்டோ அல்லது தாலுக்கா மட்டத்திலோ அந்தக் கட்டுப்பாடுகள் இருந்தால் போதும். அதோடு இன்னும் ஒன்று. கீழ்பவானி பகுதியில் அறுவடை நடக்கிறது. அறுவடைக்கு என்றும் வரும் தொழிலாளர்கள் பிற மாவட்டங்களிலிருந்து

வருகின்றவர்கள்தான். அவர்கள் தங்களுக்கு அறுவடைக் கூலியாகக் கொடுக்கப்படும் நெல்லை தங்கள் சொந்தக் கிராமத்திற்கு எடுத்துச் செல்ல முடியாமல், பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதை இங்கே விற்றுவிட்டு பணமாகத்தான் எடுத்துச் சென்று தங்கள் மாவட்டத்தில் இன்னும் கூடுதல் விலையைக் கொடுத்து அவர்கள் வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலையிருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட விவசாயிகள் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு 'அவர்களுக்கு விவசாயக் கூலியாக இந்த நெல் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்ற அளவில் ஒரு சர்டிபிகேட் கொடுத்தால், அவர்கள் அதைத் தங்கள் ஜில்லாவிற்கு எடுத்துச் செல்ல இயல வேண்டும். அந்தமாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறை கீழ் பவானி நீரை, இரண்டாம் முறைப் பாசனத்திற்கு இருக்கும் நீரை வைத்து, ஏதாவது ஒரு பகுதிக்காவது அல்லது முழுமையாகவாவது, பாசனத்திற்கு வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்று இந்த அவையிலே நாட்டின் அத்தியாவசியத் தேவையாக உள்ள உணவுப் பிரச்சினைபற்றி விவாதிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை முதலமைச்சர் அவர்களும் உணவுத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக மகிழ்ச்சி அடைகின்றேன்—அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை, குடிநீர்ப் பஞ்சம், விலைவாசி உயர்வு ஆகிய அனைத்துக் கொடுமைகளும் சாதாரண குடிமக்கள் தாங்கிக்கொள்ளும் நிலைமையைவிட பல மடங்கு தாண்டிப் போய்விட்டது என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. இதிலே, ஆளும் கட்சியினர் அல்லது எதிர்க் கட்சியினர் அல்லது ஆளும் கட்சியினருக்குத் தோழமையாக உள்ள கட்சியினர் என்றோ, இவர்களில் யார்—எதற்குப் பொறுப்பு என்று பிரித்துப் பேசும் அவசியம் இல்லை. இன்றுள்ள விலைவாசி உயர்வு, உணவுப் பஞ்சம், குடிநீர்ப் பஞ்சம் இவையெல்லாம் இன்றுள்ள அளவோடு நின்றால் பரவாயில்லை. ஆனால் இவை இன்னும் அதிகமாகக்கூடிய பயம் இருக்கின்றது என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இயற்கையால் ஏற்பட்டுள்ள கோளாறு உணவுப் பஞ்சம்--பருவ மழை தவறிவிட்டதன் விளைவு இது.



குடிநீர் விஷயத்தில் நேற்று திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை யாரும் குறைத்துச் சொல்ல முடியாது. உண்மையிலேயே பரிதாபத்துக்குரியது அந்த மாவட்டம். ஆனால், இவை எல்லாவற்றுக்கும் ஆட்சிதான் பொறுப்பு என்று எதிர்க் கட்சியினர் சொல்லிவிடுவது, அரசியல் புலமையையோ அல்லது நாட்டு மக்களிடம் அவர்களுக்குள்ள கடமை உணர்வினையோ எடுத்துக்காட்டுவதாக இந்த மன்ற உறுப்பினர்கள் யாரும் எண்ணமாட்டார்கள்—எண்ணவும்

(பிற்பகல் 5-00)

கூடாது. உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, இந்த மாநிலத்திலே உணவு நிலைமை எப்படி இருந்ததென்பது நம் எல்லோருக்கும் தெரியும். அந்த நிலைமையை மாற்றியமைக்க, உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளும் எல்லோருக்கும் தெரிந்தவையே. தரிசு நிலங்களை விளைவுக்குக் கொண்டுவர, விஞ்ஞான ரீதியில் விளைநிலங்களை வளப்படுத்த இந்த ஆட்சி பொறுப்பு எடுத்துக்கொண்டு நம் நாட்டில் பற்றாக்குறையைப் போக்குமளவுக்கு உற்பத்தியைப் பெருக்கியது. உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடையாக இருந்த உழவர்—நிலச்சுவாந்தார் தகராறைத் தீர்ப்பதற்கு இந்த அரசு காட்டிய அக்கறையும் மகத்தானது. உற்பத்தி பாதிக்கக்கூடிய வகையில் கிளர்ச்சிக்கு உழவர்களைத் தூண்டிவிட்டவர்களும் காரணமாக இருந்ததை மறக்க முடியாது. உழவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க, ஒரு கமிஷன் ஏற்படுத்தி, மிராசுதாரர்களோடு வாதாடி, வழக்காடி, தஞ்சை உழவர்களுக்கு நீதி வழங்கியிருக்கிறது இந்த அரசு. அப்படி நீதி வழங்கிய பின்னரும்கூட, போராட்டமென்று சொல்லி உற்பத்தியைத் தடுக்க முயன்ற அரசியல்வாதிகளிடமிருந்து உழவர்களைக் காப்பாற்றி, சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதில் இந்த ஆட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் நம் எல்லோருக்கும் தெரியும்.

இப்படிப் பலவகையிலும் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த மாநிலம்தான் உணவுப் பற்றாக்குறையைத் தீர்த்தது என்ற பெருமைக்கு உரியதாக இருந்தது. பற்றாக்குறையுள்ள பிற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் கடமையைக்கூட நாம் ஏற்றுக்கொண்டோம். இங்கு ஒரு மாநிலக் கட்சி ஆளுகிறது என்பதையும் மறந்து, அகில இந்தியக் கட்சியின் ஆட்சிக்குள்ள பொறுப்பை இந்த அரசு கொண்டு, வட புலத்து மாநிலங்களுக்குக்கூட அரிசி அனுப்பியதை நாம் அறிவோம்.

இவ்வளவு பொறுப்பினை ஏற்றுக்கொண்ட இந்த ஆட்சி, சந்தர்ப்ப வசத்தால், காலக் கட்டாயத்தால், பருவ மழை தவறியதால், ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு எல்லாவற்றுக்கும் ஆளும் கட்சிதான் பொறுப்பு என்று சொல்வதனால், இந்தக் குற்றச்சாட்டு எதிர் காலத்தில் தங்கள் மீதே திரும்பி வரும்—சுவற்றில் அடித்த பந்துபோன்று—என்பதை எதிர்க் கட்சியினர் மறந்து விடுவதற்கில்லை.

மற்றொரு குற்றச்சாட்டு. அங்கங்கே பதுக்கல், கடத்தல் ஆகியவை தாராளமாக அனுமதிக்கப்படுகின்றனவென்றும் சொல்கிறார்கள். நான் தினமும் பத்திரிகையில் பார்க்கிறேன்; பதுக்கலைக் கைப்பற்றுவது, கடத்தலைத் தடுத்து நிறுத்துவது பற்றிய செய்தி பத்திரிகையில் வராத நாளே கிடையாது. எங்கெங்கு கடத்தப்படுகிறதோ, அது ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறது. எங்கெங்கு பதுக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் பதுக்கிய பண்டத்தை வெளியே கொண்டுவரவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, பதுக்கல், கடத்தல் நடவடிக்கைகளில் இந்த ஆட்சி அசமந்தமாக இருக்கிறதென்ற குற்றச்சாட்டுகூட கொஞ்சம் அதிகமாகக் கூறப்படுகிறதென்பது என்னுடைய கருத்து. ஆனால், எங்கெங்கெல்லாம் பதுக்கப்பட்டிருக்கிறதோ, எங்கெங்கெல்லாம் கடத்தப்பட்டிருக்கிறதோ அத்தனையையும் இந்த ஆட்சி கைப்பற்றிவிட்டதென்றோ, எடுத்து விட்டதென்றோ ஆள்வோர்கூட சொல்ல முடியாதென்பது எனக்குத் தெரியும். ஆனால், எதிர்க் கட்சிக்காரர்கள், பதுக்கப்பட்டுள்ள இடம் அறிந்தவர்கள், அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், பதுக்கப்பட்ட இடத்தைச் சொன்னால், கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, அதைக் கைப்பற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறதென்று முதல்வரவர்கள் பல நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை மற்றவர்கள்தான் சொல்ல வேண்டும்—அரசு காத்துக்கொண்டிருக்கிறதென்பது அதற்குப் பொருளல்ல. "அரசுக்குரிய கடமையையும் செய்வோம். அதையும் மீறி கடத்தல்—பதுக்கல் இருக்குமானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்வோம்" என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். உணவுப் பஞ்சம்பற்றிக் கூட்டங்களில் பேசுவது, பத்திரிகைகளில் எழுதுவது, ஏன் சட்ட மன்றங்களிலே பேசுவதுகூட அளவு கடந்து மக்களைப் பயமுறுத்துவதாக இருக்கின்றதே ஒழிய, உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாக இருக்கவில்லை.





தஞ்சை மாவட்ட எல்லையில் மட்டும் தடையை நீக்கியவுடன் 9 லட்சம் டன் உணவுப் பொருள்கள் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்பட்டது என்று பேசப்பட்டது. அதைப்பற்றி முதல்வரவர்கள்—2 நாட்களுக்கு முன்பு—ஒரு கூட்டத்தில் சொல்கிறபோது, "9 லட்சம் டன் உணவுப் பொருள்களைக் கடத்த வேண்டுமானால், 50,000 லாரிகள் தேவை; அது சாத்தியம்தானா? நடக்கக் கூடியதுதானா?" என்று கேட்டார்கள். அதில் நகைச்சுவையான விஷயம் ஒன்று இருக்கிறது. தடையை நீக்கியவுடனே தஞ்சை மாவட்ட எல்லையில் மட்டும் 9 லட்சம் டன் அல்லது 8 லட்சம் டன் அல்லது 5 லட்சம் டன் உணவுப் பொருள்கள் கடத்தப்பட்டிருக்கிறதென்றால், லாரி ஊர்வலங்கள் போகிற நிலையிலேதான் கடத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால், எதிர்க் கட்சிக்காரர்கள் அந்த லாரிகளைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? நான் அகிம்சையில் நம்பிக்கையுடையவனாகச் சொல்கிறேன் நாட்டைப் பஞ்சத்தில் ஆழ்த்தி—அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் என்று வைத்துக்கொண்டாலும்கூட—கடத்தல்காரர்கள் செய்யும் இந்தக் கொள்ளை வியாபாரத்தைத் தடுத்து நிறுத்தி, அந்த லாரிகளின் குறுக்கே படுத்து, மறியல் செய்து, அதைத் தடுத்து நிறுத்தியிருந்தால், நான் அதை வரவேற்றிருப்பேன். எதிர்க் கட்சித் தலைவர்களுக்குத் தெரியும். அந்நியத் துணிக் கடைகளை அந்தக் காலத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் செய்தபோது, அந்தத் துணிகளை இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோனார்கள். லாரிகளின் மூலமாகக் கடத்தினார்கள். அப்படிக் கடத்தப்பட்ட ஒரு லாரியின் முன்னே, குறுக்கே படுத்து மறியல் செய்து அதைத் தடுத்தபோது, பம்பாயில் பாபுகனு என்ற தேசபக்தன் லாரி ஏற்றப்பட்டு கொல்லப்பட்டான். சட்டம் கை கொடுக்கவில்லை; நியாயம் கை கொடுக்கவில்லை; ஆளுவோருக்கு அக்கறையில்லை; அதன் விளைவாக லாரி லாரியாக உணவுப் பொருள்கள் கடத்தப்படுகிறதென்றால், அப்போது சட்டத்தைத் தங்கள் கையில் எதிர்க் கட்சிக்காரர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை—சத்தியாக்கிரகம் என்ற வரம்புக்கு உட்பட்ட முறையில் எதிர்க் கட்சிக்காரர்கள் அதை ஆட்சியின் கவனத்திற்கு ஏன் கொண்டுவரவில்லை? ஏனெனில், அவர்கள் சொல்லுவது அவ்வளவும் உண்மையல்ல என்பது அவர்களுக்கே தெரிந்த காரணத்தால்!

விலைவாசி உயர்வுக்கு இந்த ஆட்சிதான் காரணமல்ல என்று பலர் சொல்கிறார்கள். பல பொருளாதார நிபுணர்கள்—நாடாளுமன்ற எதிர்க் கட்சியினர் சொல்கிறார்கள், மத்திய அரசுதான் காரணமென்று. நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க் கட்சி இந்த மாநிலத்திலே எதிர்க் கட்சியாக இருந்தால், இந்த மாநில ஆட்சியைப் பார்த்து, 'நீ தான் பொறுப்பு' என்று சொல்லுகிறது. ஆனால், இதே கட்சி நாடாளுமன்றத்தில்—அங்குள்ள மத்திய ஆட்சியைப் பார்த்து,

"நாட்டிலுள்ள பொருளாதார சீர்கேட்டுக்கு நீ தான் காரணம்" என்று சொல்லுகிறது. ஒரே கட்சி, வெவ்வேறு மன்றங்களில் இருவேறு குரல் கொடுக்கும் போது, ஆங்காங்கு உள்ளவர்களை பொறுப்பாக்கக்கூடிய அந்தப் பேச்சில் என்ன உண்மை இருக்கிறதோ தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி; காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி; இன்றைய அரசியல் சட்டத்தின்கீழ் மாநில ஆட்சிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரப் பொறுப்பினை நினைத்துப் பார்த்துப் பேச வேண்டும். நாளையதினம் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி, பஞ்சம் போன்ற நிலைமைகள் ஏற்பட்டால், அதில் 75 சதவிகிதப் பொறுப்பினை மத்திய அரசும், 25 சதவிகிதப் பொறுப்பினை மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த 25 சதவிகிதத்தினையும் நீக்குவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லாததால், மாநில ஆட்சி செயல்பட முடியாததைப் பார்க்கிறோம். அரிசியின் விலை இன்று படி 6 ரூபாய் விற்கிறது. இந்த விலையை இன்னும்கூட உயர்த்திச் சொல்பவர்கள் இருக்கிறார்கள். ஊருக்கு ஒரு விதமாக இருக்கலாம்.

இன்றைக்கு மத்திய ஆட்சியிடம் மாநில ஆட்சி உணவுப் பொருள்களைக் கேட்டிருக்கிறது. என்ன தானியமாக இருந்தாலும் சரி; சிறு தானியமோ அல்லது பெருந்தானியமோ, எது கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறோம் என்று முதல்வரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பத்திரிகையில் படித்தபோது கண்ணீர் சிந்தினேன். தமிழ் நாடு சில மாதங்களுக்கு முன்புவரை பற்றாக்குறையற்ற மாநிலமாக இருந்தது. அப்போது பற்றாக்குறையுள்ள மாநிலங்களுக்கு நாம் உணவுப் பொருள்களை வழங்கினோம். இன்று தமிழக முதல்வரவர்கள் 'கொடுத்ததை வாங்கிக் கொள்கிறோம்' என்று டெல்லிக்கு மனுப் போட்டால், அது அக்கறையைக் காட்டவில்லையா? அரசின் கையாலாகாதத்தனம்; திட்டமிட்ட அசமந்தத்தனம்; வேண்டுமென்றே அக்கறையற்றதனம் தான் இன்றைய சூழ்நிலைக்குக் காரணமென்று பயங்கரமாகக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. மாநில முதல்வரவர்கள் கேட்ட பிறகும், மத்திய ஆட்சியிடமிருந்து பதில் இல்லை. நம்முடைய முதல்வரவர்கள், "எழுதியிருக்கிறோம்; இதுவரையில் பதில் இல்லை; இன்னும் எழுதப் போகிறோம்" என்று சொல்கிறார்கள்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், மிக அருமையாக, உண்மை உணர்ச்சியுடன் பேசினார். இந்தப் பஞ்சம் வருமென்று "ஒரு ஆண்டுக்கு முன்பே நாங்கள் எச்சரித்தோம்" என்று அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் இப்படி எச்சரிக்கலாம். மழை பொய்த்துப் போகுமோ என்று ஒவ்வொரு ஆண்டிலும் சந்தேகிக்க வேண்டியதுதான். அப்படியே மழை பொய்த்துப்



(பிற்பகல் 5-10)

போகாமல் இருக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கக்கூடியதுதான். இந்த நம்பிக்கையும், ஐயப்பாடும் ஆண்டுதோறும் இருக்கும். இதை ஆண்டுதோறும் சொல்லிக்கொண்டு வந்தால், "நாம் சொன்னபடிப் பொய்த்துவிட்டது; சொன்னதைக் கவனிக்கவில்லை" என்று எந்த எதிர்க்கட்சியும் சொல்லக் கூடியது ஒரு பொது சமாச்சாரம்தான். நான் ஒன்று கேட்கிறேன்.

சிறு தானியங்களை மாநிலத்திற்கு வெளியே கொண்டு போவதற்கு இருந்த தடையை நீக்கி, கொண்டு போகலாம் என்று மத்திய ஆட்சி உத்தரவு போட இசைவு கேட்டபோது, இந்த ஆட்சி மறுத்தது. அந்த மறுப்பையும் மீறி, மத்திய ஆட்சி சிறு தானியங்களைக் கொண்டு போக அனுமதித்தது. இதனால், "இந்த மாநிலத்தில் பஞ்சம் வரும்; இந்த மாநிலம் பாதிக்கப்படும்; மற்ற மாநிலங்களின் கேட்டுக்கு இந்த மாநிலத்தை ஆக்கும் எண்ணம் மத்திய ஆட்சிக்கு இருந்தாலொழிய, இந்தத் தடையை நீக்கியது சரியல்ல" என்று முதல்வரவர்கள் இதே மன்றத்தில் பேசியதைக் கேட்டோம். அந்த மன்றத்தில் பேசியதையும் கேட்டோம். அப்போது எதிர்க் கட்சியிலிருந்து சரியான எதிரொலி, சரியான கை கொடுத்தல் வரவில்லை.

இரண்டாவதாக, உரத்தினுடைய விலையை மாநில அரசைக் கேட்காமல் மத்திய அரசு தன் இஷ்டம்போல் உயர்த்திக்கொண்டு போனபோதும் முதலமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "இது உற்பத்தி செய்பவர்களைப் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தும்; அதனால் விலைவாசி உயரக்கூடிய நிலை ஏற்படும்" என்று பல முறை கண்டனக் குரல் கொடுத்து, எழுதியும் கூட மத்திய அரசு அதைச் சட்டை செய்யவில்லை. இங்கு நடப்பதைப் பார்த்தால், எதிர்க் கட்சிக்காரர்கள் எல்லாம் மத்திய அரசினுடைய குடி மக்கள் என்றும், ஆளும் கட்சிக்காரர்கள் இந்த அரசின் மாநில குடி மக்கள் என்னும் பிறர்க்குதவக்கூடிய ஒரு மனோபாவத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். எதிர்க் கட்சிக்காரர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன்; விலைவாசி உயர்வுக்கு மத்திய ஆட்சி எந்த அளவுக்குப் பொறுப்போ, அந்தப் பொறுப்பை நீங்கள் குறைத்து மதிப்பிடவும் வேண்டாம்; கூட்டியும் மதிப்பிட வேண்டாம். நியாயமான அளவில் எடுத்துக் கேட்பதாலே இந்த ஆட்சிக்குக் கைகொடுக்க வேண்டும். மத்திய அரசு உரத்தின் விலையை நிர்ணயித்தபோது—இந்த மாநில அரசு எதிர்த்த போது, அதன் குரலை இங்குள்ள எதிர்க் கட்சிகளுடைய மாநிலக் கமிட்டிகள் எதிரொலிக்கவில்லை. "உரத்தின் விலையைக் கூடுதலாக்கினால், இந்த மாநிலம் பாதிக்கப்படும்" என்று ஆட்சி கொடுத்த குரலை பிரதிபலிப்பதற்குத் தவறிப் போயிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; சிறு தானியங்கள் மாநிலத்திற்கு

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 டிசம்பர் 17

வெளியே செல்ல அனுமதிப்பது அபாயம்—அந்த வார்த்தையை முதல்வர்
அவர்கள் சொன்னது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது—“மற்ற மாநிலங்களைப்
போன்று உணவுப் பஞ்சம் இங்கும் ஏற்படும்” என்று முதல்வர் கூறினாரே,
அப்போது எந்தக் கட்சியும் தன்னுடைய மாநிலச் செயல் குழுவைக் கூட்டி,
இந்த எண்ணத்தை பிரதிபலிப்பதற்கு முன்வரவில்லை. இதையெல்லாம் பார்க்கிற
போது நான் ஒன்றை உணர்கிறேன். எல்லோருமே தவறுசெய்துதான் இந்த
நிலைக்கு நாட்டைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆளும் கட்சிதான் இதற்குப்
பொறுப்பு என்று எதிர்க் கட்சிகள் அதனைக் கண்டித்துக் கொண்டிருப்பதால்
நிலைமை மாறிவிடாது. மத்திய ஆட்சிதான் அசட்டையாக இருந்து நம்
நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது. உண்மையைப் பார்ப்
போமானால், இந்த நாட்டை ஒரு அந்நிய நாடு ஆக்கிரமிக்கிற காலத்தில்
எவ்வளவு அவசரமாகவும், தேசபக்தியோடும், கட்சி வேற்றுமையின்றியும்
செயல்படக் கடமைப்பட்டுள்ளோமோ, அதுபோன்று இந்தப் பஞ்சம் என்ற
அரக்கனை—பற்றுக்குறை, விலைவாசி உயர்வு, குடிநீர்ப் பஞ்சம் என்ற கொடுமை
களை நீக்குவதற்குத் தேசபக்தியோடு செயலாற்ற வேண்டியது கடமை. “நீங்கள்
எதிர்க் கட்சியாக இருந்தபோது அப்படி நடந்தீர்கள்; இப்படி நடந்தீர்கள்”
என்று ஆளும் கட்சியைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அதிலே நான் விரி
வாகப் போகவேண்டியதில்லை. ஆனால், ஒன்று கேட்கிறேன்; இப்பொழுது
எதிர்க் கட்சியாக இருப்பவர்கள்தான் ஆரோக்கியமான முறையை, பழக்க
வழக்கத்தை உருவாக்கிக் காட்டட்டுமே, தேசபக்தி\பாரம்பரியத்துக்கு முன்
னோடிகளான, பழமையான அகில இந்திய கட்சியான ஒரு எதிர்க் கட்சியாக
இருக்கும் இந்தப் பற்றுக்குறையும், விலைவாசி உயர்வும், குடி தண்ணீர்ப்
பஞ்சமும் வந்ததுகூட நல்லதுதான். ஒரு எதிர்க் கட்சி ஆளும் கட்சியோடு
எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற நல்ல சம்பிரதாயத்தை நிர்ணயிப்பதற்
காகவே இந்தக் கொடிய பஞ்சம் வந்து நமக்குக் கைகொடுத்திருக்கிறது என்று
ஏற்றுக்கொண்டு, எதிர்க் கட்சியினர் செயல்பட வேண்டும். நான் குறிப்பிட்டு
எந்த ஒரு கட்சியையும் சொல்லவில்லை; எந்த ஒரு தலைவரையும் சொல்லவில்லை.
தேச மக்களுடைய பட்டினியின் பெயரால், பஞ்சத்தின் பெயரால், விலைவாசிக்
கொடுமையின் பெயரால் ஆணையிட்டு நாம் ஒன்றுபட வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது ஆளுகிற கட்சி, எந்தப் பிரச்சினையிலும் அனைத்துக் கட்சி
களின் ஆலோசனையைக் கேட்க என்றுமே தவறியதில்லை. நண்பர் திரு. அப்துல்
வகாப் அவர்களும், நண்பர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் சொன்
னார்கள், “அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேசி இதற்கு என்ன



1974 டிசம்பர் 17] [திரு. ம. பொ. சிவஞானம்]

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முடிவு செய்வதற்கு முதல்வர் பொறுப்
பேற்க வேண்டும்” என்று; ஒரு கமிட்டி போடவேண்டுமென்றும் சொன்
னார்கள். இதெல்லாம் கமிட்டி போட்டு அவகாசமாகச் செய்யவேண்டிய விஷய
மல்ல. உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டிப் பேச முதல்வர்
பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பஞ்சத்திற்கான பரிகாரம் யாருக்குத் தெரியாது; எல்லோருக்கும் தெரியும்.
நாம் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு, அனைத்துக் கட்சித்
தலைவர்களையும் முதல்வர் அணைத்துச் செல்ல வேண்டும்.

இன்னொன்று நான் சொன்னால், யாரும் தவறாக எண்ணக் கூடாது. மத்திய
அரசு நாம் கோருகிற உணவுப் பொருட்களைக் கொடுக்கத் தவறுகிறது—பதில்
கொடுக்காமல் காலத்தை நீட்டிக்கிறது—என்ற நிலை ஏற்படுமேயானால்,
அப்போது ஒன்றுதான் வழி. வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை
வாங்குவதற்கு இந்த மாநில அரசை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்.
இதற்கு, ‘கான்ஸ்டிட்யூஷன்’ அனுமதிக்கவில்லை. அயல் நாட்டு அதிகாரம்
மத்திய ஆட்சியின் கையில் இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். அயல்
நாட்டோடு வணிக உறவு மத்திய ஆட்சிக்குத்தான் இருக்கிறது. இந்த மாநிலம்
சுயாட்சி பெற்ற பிறகும்கூட, அந்த அதிகாரம் மத்திய ஆட்சிக்குத்தான் இருக்க
வேண்டுமென்பதும் நம்முடைய கொள்கையாக இருக்கிறது. அதை நாம்
ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அன்னிய நாட்டு உறவு பற்றிய அதிகாரம்
மத்திய ஆட்சிக்குத்தான் என்று நம்முடைய சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்
கொள்வதால், அதற்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை. ஆனால், மத்திய
அரசின் அசட்டைக்கு அடி கொடுக்க இந்த கோரிக்கையைத் தவிர வேறு
ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நான் உழவனும் அல்ல, உழுவிப்பவனும் அல்ல; உண்ணுபவன். அந்த
வகையிலே இந்தப் பிரச்சினையில் உழவர்களுக்கு உரிய குறை என்னவென்று
எனக்குத் தெரியாது; உழுவிப்பவருக்குரிய குறையும் எனக்குத் தெரியாது;
உண்ணுவிப்பவனுக்குரிய குறையும் எனக்குத் தெரியாது. அதைப்பற்றி நண்பர்
திரு. கணபதி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நான் உண்ணுபவன்—
ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன்—நகரத்தில் இருக்கின்ற பாவத்தைப்
படைத்தவன்—என்பதைத் தவிர, எனக்கு வேறு ஒன்றும் இதில் அனுபவம்
இல்லை, அதிகமாகச் சொல்வதற்கு முடியாது; இன்னொரு முறையும் முதல்வர்
அவர்களை வேண்டுகிறேன், மத்திய அரசுக்கு ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தத்
தேதிக்குள் எங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்க வேண்டும். சவால்
கொடுப்பதாக அல்ல; சண்டைக்கு இழுப்பதற்கும் அல்ல; மக்களுடைய

பட்டினியைத் தெரிவிப்பதற்கு எனக்கு வேறு பாஷை கிடைக்கவில்லை; வேறு பரிகாரம் தெரியவில்லை. கெடுவுக்குள் அவர்கள் உணவு அனுப்பாவிட்டால், வேறு வெளி நாடுகளிடமிருந்து வாங்க எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்க வேண்டும். இது கொள்கையல்ல, கொள்கைக்கு விதிவிலக்காக! என்ன செய்வார்களோ, முதல்வர் அவர்களுடைய பொறுப்பு. **வணக்கம்.**

* **திரு. ஆர். சக்தி மோகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பிரச்சினையைக் குறித்து நானும் எனது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டைக் கடந்த ஒரு வருடமாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் இந்த உணவுப் பிரச்சினையைப்பற்றி நமது மேலவையிலே கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பேசப்பட்டு வருகின்றது. சிலர் காரமாகப் பேசினார்கள். சிலர் சாரமாகப் பேசினார்கள். முடிவில் இந்த உணவுப் பிரச்சினையை, உணவு விலையேற்றத்தை எப்படித் தடுப்பது என்பதற்கான ஒரு 'கன்ஸ்டிரக்டிவ்' திடமான, உறுதியான ஆலோசனையை யாரும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. விவசாயிகளைப்பற்றிப் பேசினார்கள், மிட்டாதாரர்களைப் பற்றிப் பேசினார்கள், மிராசுதாரர்களைப்பற்றிப் பேசினார்கள். ஆனால், வாங்கிச் சாப்பிடுபவர்களைப்பற்றி யாரும் பேசியதாகத் தெரியவில்லை. விவசாயிகளையும், மிட்டாதாரர்களையும், மிராசுதாரர்களையும், நிலச்சுவாந்தார்களையும்விட வாங்கிச் சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை தான் மிக அதிகம். நம் நாட்டில் அவர்கள் தான் மெஜாரிட்டி. அவர்கள் என்ன பாடுபடுகின்றார்கள் என்பதைப்பற்றி நாம் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வாங்கிச் சாப்பிடுபவர்கள் என்ன பாடு படுகின்றார்கள், அவர்களுடைய வருமானத்தின் அளவையும், அவர்கள் வாங்கி உபயோகிக்கும் பொருட்களின் விலையேற்றத்தினால் ஏற்படும் கஷ்டத்தின் அளவையும் வைத்து அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க அரசு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதில் அரசு நாட்டங் காட்ட வேண்டும். குறிப்பாகச் சொல்கிறேன், மதுரையில் படி அரிசி 7 ரூபாய். 7 ரூபாய் கொடுத்து மக்கள் அரிசி வாங்குகிறார்கள். பெரும்பாலான மக்களும், அரசாங்க சிப்பந்தியாக இருப்பவர்களும் அதிகமான கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கின்றார்கள். 500 ரூபாய் சம்பளம் உள்ள ஒருவருக்கு இரண்டு ரூபாய் அரிசி விற்கும்போதும், 500 ரூபாய்தான் சம்பளம்; 4 ரூபாய்க்கு அரிசி விற்கும் போதும் 500 ரூபாய்தான் சம்பளம்; இப்போது 7 அல்லது 8 ரூபாய் வரைக்கும் போகிற போதும் இதே 500 ரூபாய்தான் சம்பளம். இதற்கு அரசாங்கம் கருணை கூர்ந்து ஒரு மாற்று ஏற்பாடு செய்தாக வேண்டும். சில நண்பர்கள் தஞ்சை மாவட்டத்தை வைத்துப் பேசினார்கள். அடுத்தாற்போல இராமநாதபுரம் மாவட்டத்தை வைத்து, அந்த மாவட்ட உறுப்பினர் அவர்கள்



பேசினார்கள். இதற்கு ஊடே குவிண்டாலுக்கு 150 ரூபாய், 200 ரூபாய் விலை வைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒருவர் ரூபாய் 100 என்கிறார். இன்னொருவர் 200 ரூபாய் கொடுத்தால் நல்லது என்கிறார்.

ஆனால், நான் இப்பொழுது வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய சார்பிலே கேட்கிறேன்—படி அரிசி 2½ ரூபாய்க்குக் கொடுத்தால் மிக மிக நல்லது. இதற்கான ஏற்பாடுகளை பெரிய நிலச்சுவாந்தார்கள் செய்வார்களா என்று நான் கேட்கிறேன்.

இப்பொழுது பஞ்சம், பஞ்சம் என்று பேசுகிறார்கள். இப்போது பஞ்சம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 1967-லும் 1974-லும் உள்ள நிலையை ஒப்பிட்டால், 1967 ஆம் வருஷத்தில் இரண்டு ரூபாயிலிருந்து இரண்டரை ரூபாய் வரைக்கும் அரிசி விலை ஏறிற்று. அன்றிருந்த பொருளாதாரச் சூழலில் அந்த 2½ ரூபாயே மிகக் கடுமையாக இருந்தது. ஆனால், அன்றைக்கு 2 அல்லது 3 ரூபாயே கொடுத்தால்கூட வாங்குவதற்குப் பண்டங்கள் கிடைக்கவில்லை. மார்க்கெட்டிலே எதுவுமே கிடைக்கவில்லை. இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. அதிகப் பணத்தைக் கொடுத்தால் எத்தனை டன் வேண்டுமானாலும் அரிசி வாங்கலாம். வாங்கக் கிடைக்கிறது. எந்தப் பண்டங்களும் வாங்கக் கிடைக்கிறது. ஆக, பண்டமும் இருக்கிறது, பசி—பட்டினியும் இருக்கிறது. ஆனால், பணம்தான் இல்லை. இப்போது பணப் பஞ்சம்தான் இருக்கிறது. பணத்தைக் கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். இந்த அரசாங்கம் செய்த பாக்கியமோ, என்னவோ, பணம் கொடுத்தால் எவ்வளவு அரிசி வேண்டுமோ அவ்வளவும் வாங்கலாம் என்ற ஒரு நிலை 1974-ல் இருக்கிறது.

பண்டம் கிடைக்கின்றது. வாங்குவதற்கு வருவாய் போதவில்லை. போதிய பணம் வேண்டும், அல்லது விலை குறைய வேண்டும். இந்த இரண்டும்தான் இப்போது பொது ஜனங்களுக்கிடையில் இருக்கிற பிரச்சினை. மாநில அரசாங்கம் விதித்திருக்கின்ற நெல் விலை மூட்டை ஒன்றுக்கு 78 அல்லது 80 ரூபாய். மத்திய சர்க்கார் 50 ரூபாய் தான் விதித்திருக்கிறது. இந்த 78, 80 ரூபாய்க்கு அரசாங்கம் நெல்லுக்கு விலை விதித்த பிறகும் கூட, மார்க்கெட்டிலே மூட்டை ஒன்றுக்கு 160, 165 ரூபாய் வரையிலே விற்கிறார்கள். அப்படிப் பார்த்தாலும்கூட இரண்டு மூட்டை நெல்லுக்கு ஒரு மூட்டை அரிசி, 300 அல்லது 320 ரூபாய்தான் விற்றாக வேண்டும். ஆனால், 400 ரூபாய், 450 ரூபாய் என்று சொல்கிறார்கள். இது எங்கே? யானை கட்டிப் போரடித்த மதுரையிலே!

போன மாதத்தில் 50 கிலோ அரிசி வாங்கினேன். விலை ரூபாய் 210. சாதாரணமாக, 50 கிலோ அரிசிக்கு 32 படியாவது இருக்கவேண்டும். வீட்டிலே வந்து அளந்து பார்த்தபோது 30 படிதான் இருந்தது. ஆக 30 படி அரிசி இன்றைக்கு 210 ரூபாய் மார்க்கெட்டிலே. அதே சமயத்தில் பருப்பு விலை அரைப் படி 4½ ரூபாய். மிளகாய் விலை ஒரு கிலோ 10 ரூபாய். இந்த அளவுக்குப் போய்க்கொண்டிருந்தால், வாங்கிச் சாப்பிடுபவர்களுடைய கதி என்னவென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் தற்கால ரீதியிலேயாவது, இந்த விலையைக் குறைக்கிற வரையிலாவது, 500 ரூபாய் வருவாயுள்ள ஆட்களுக்கு 2,000 ரூபாயாவது வருவாய்க்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் துணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையென்றால் தாக்குப் பிடிக்க முடியாது. வாங்கிச் சாப்பிடுவதற்கு பணப் பற்றாக்குறை ஏற்பட்டால், பல தவறுகள் ஏற்படும். அந்தத் தவறுகளுக்கு இடம் கொடுக்கிற நிலையை நாம் ஏற்படுத்திவிடக் கூடாது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. இந்த அரசாங்கம் வியாபாரிகளுக்கு அதிகச் சலுகை கொடுக்கிறது என்பது பொதுப் புகார். சில வியாபாரிகளும் அப்படித்தான் இருக்கிறார்கள். சாதாரணமாக, சில வியாபாரிகள் இந்த விலை நிர்ணயச் சட்டத்தை மதிப்பதேயில்லை. எத்தகைய கடுமையான சட்டத்தைப் போட்டாலும் மதிப்பதில்லை. முதலமைச்சர் நெல்லின் விலையில் 20 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது என்று பத்திரிகையிலே அறிக்கை விடுத்தால், சில வியாபாரிகள் 40 ரூபாயை ஏற்றிச் சொல்கிறார்கள்; கேட்டாலும் பதில் சொல்வதில்லை.

(பிற்பகல் 5-20)

அழுத்திக் கேட்டால் அப்படித்தான் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு நிலைமை இருக்கின்றது. அரசாங்கத்திற்கு இருக்கின்ற தேசிய உணர்வு, பொது மக்களுக்கு இருக்கின்ற தேசிய உணர்வு, பெரும்பாலான வியாபாரிகளுக்கு இல்லை; கொஞ்சங்கூட இல்லை. சென்ற மாதம் பத்திரிகையிலே பார்த்தோம். மத்திய அரசிலிருந்து வந்த ரெயில்வே அமைச்சரிடம் சென்னையில் இருக்கின்ற வியாபாரிகள் தூது சென்றார்கள் என்றும், அப்போது அவர்கள் ரயில் வாகன்களை நீங்கள் கொஞ்சம் அடிக்கடி அனுப்பிவிடுவதால் இங்கே நாங்கள் தவ தானியங்களின் விலைகளை ஏற்றி விற்க முடியவில்லை என்றும், ஆகவே, வாகன்களைக் காலதாமதமாக அனுப்புங்கள் என்று வேண்டிக்கொண்டதாகவும் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதற்கு "அப்படி அல்ல, ஒரு நாளைக்கு 3 அல்லது 4 முறைகள் கூட நாங்கள் வாகன்களை அனுப்புவோம். மக்களுக்குச் சேவை செய்யத்தான் நாங்கள் இருக்கின்றோம்" என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கின்றார்கள். இந்த அளவுக்கு அடிக்கடி வாகன்களைக் கொடுத்தால் விலையை ஏற்றி விற்க முடியவில்லை என்று தூது போகக்கூடிய



வியாபாரிகள்பற்றி நாம் என்ன சொல்வது? உலர்ந்த சக்கில் இருக்கின்ற ஈரப் பசை கூட அவர்களுடைய நெஞ்சிலே இல்லாத நிலைமைதான் இருக்கின்றது என்று மக்கள் கூறுகிறார்கள். அவர்களுக்காக இந்த அரசாங்கம் எதற்காக பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்கிறேன். பொதுமக்கள் சார்பிலே இதை நான் கேட்கிறேன். ஒன்று அவர்களைக் கட்டுப்படுத்துங்கள். கட்டாயமாகக் கட்டுப்படுத்துங்கள். அவர்களைப் பிடித்து சிறையில் போடுவது, அபராதம் விதிப்பது முதலியவற்றுக்கெல்லாம் அவர்கள் அடங்க மாட்டார்கள். முடியுமானால் அவர்களைக் கேவலப்படுத்திப் பாருங்கள். அப்படி இல்லையென்றால், வாங்குவோரையும், விற்போரையும் விட்டுவிட்டு தற்கால ரீதியில் சர்க்கார் கொஞ்ச நாள் ஒதுங்கி இருக்கட்டும். இரண்டில் ஒன்று செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் லாபமே நோக்கங்கொண்ட சில வியாபாரிகளிடத்திலே பொது மக்களை சாகுகதி அடையச் செய்த பாவம் நமக்கு வரும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த வாரத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் அரிசிக்கு அரசு விலை நிர்ணயிக்கும் என்று சொன்னார்கள். அது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. உச்ச வரம்பு விலை நிர்ணயிப்பதை காலதாமதம் செய்யாமல் உடனடியாகச் செய்ய வேண்டும். அதற்குப் பின் அந்த விலைக்கு மேல் விற்கும் வியாபாரிகளுக்கு என்ன கடுமையான தண்டனை என்பதையும் அறிவித்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் அது மகிழ்ச்சியான ஒன்று. இந்த விலைக்குத் தான் அரிசி விற்கவேண்டும் என்று சொல்கின்றபோது, அதைக் காலதாமதப்படுத்தி அறிவிப்பு செய்தால், அந்த இடைக்காலத்தில் பண்டங்களை அவர்கள் பதுக்கி வைத்து, இன்னும் கொஞ்ச நாளைக்குப் பிறகு அதிக விலைக்கு விற்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து விட்டதாக ஆகிவிடும். ஆகவே உடனடியாக அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த அவையிலேயே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, இந்தப் பஞ்ச காலத்தில் இராமநாதபுரத்திலிருந்து, குறிப்பாக முதுகுளத்தூர் வட்டாரத்திலிருந்து தஞ்சை மாவட்டத்திற்கு மக்கள் பெருவாரியாகப் படையெடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இது நீண்ட நாளாக நடந்து கொண்டிருக்கின்றது. இதற்கு இன்னொரு புதிய ஏற்பாடுகூடச் செய்யலாம். ஒரு ஆறு மாதத்திற்கு இராமநாதபுரத்திலே பஞ்சப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களை தஞ்சையிலே ஒரு பகுதியிலே ஒரு காலனி ஏற்படுத்தி அதிலே 6 மாத காலம் தங்கியிருந்து, அங்கே இருக்கின்ற வேலைகளைப் பார்த்து, கூலியைப் பெற்று சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் நிலைமையை ஏற்படுத்தலாம். ஏனென்றால் எதுவும் இல்லாத நிலையிலே திருத்துறைப்பூண்டியிலேயும், மன்னார்குடி பகுதியிலேயும் போகின்ற இராமநாதபுர விவசாயிகள் அங்கே

கூலிக்கு அறுவடை செய்து பெறுகின்ற கூலியை அவர்களுடைய பகுதிக்குக் கொண்டுவர முடியவில்லை. அங்கே அடித்து விரட்டிவிடுகிறார்கள். மேலும் 'எங்களுக்கே வேலை கிடைக்காதபோது, நீங்கள் இங்கே வந்து எங்களுடைய பிழைப்பைக் கெடுக்கிறீர்கள்' என்று பல ஊர்களிலே விரட்டியடித்துக்கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். அப்படிப் பிழைப்பதற்குச் சென்ற இராமநாதபுரம் மக்கள், அங்கேயும் பிழைப்பு கெட்டு, இங்கும் விவசாயத்திற்கும் வழி இல்லாமல் மற்ற ஊர்களிலே பிச்சை எடுக்கின்ற கண்கலங்கும் காட்சியை நாம் பார்க்கிறோம். இதில் மேற்கு இராமநாதபுரம், கிழக்கு இராமநாதபுரம் என்று பிரித்திருக்கின்றார்கள். இந்த இரண்டு பகுதிகளில் சிலபகுதிகள் கொஞ்சம் வளமாக இருக்கின்றன. இந்த இரண்டுக்கும் இடையிலே முதுகுளத்தூர் பகுதி இருக்கின்றது. இந்த முதுகுளத்தூர் வட்டாரத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள் என்று கருதுகிறேன். அந்த மக்கள் சுதந்திர இந்திய சரித்திரத்தையே உருவாக்கியவர்கள். அதோடு அல்லாமல் தேசப் பொதுத் தேவைகளையும், அரசாங்கத்தின் ஆணைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கக்கூடியவர்கள். போற்றத்தக்க அளவுக்குத் தியாகம் புரிந்தவர்கள். அவ்வளவு தியாக புத்தி படைத்தவர்கள், வீரம் மிக்கவர்கள். வீரம் விளையாடிய பகுதி. ஆனால் அங்கே விளைச்சல்தான் இல்லை. அவர்களுக்கு என்று ஒரு தனியான திட்டத்தை வகுக்க வேண்டும். அதைக்கூட கடந்த கூட்டத்திலே நான் சொல்லியிருக்கின்றேன். முதுகுளத்தூர் மறவர்கள் மறுவாழ்வுத் திட்டம் என்று ஒரு ரிக்ளமேஷன் திட்டம் போட்டு, அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழிமுறைகள் செய்ய ஏற்பாடு செய்தால், அந்த மக்கள் மேம்பட்டு மேலும் பல நல்ல சேவைகள் செய்வார்கள். அவர்களிடமிருந்து நீங்களும் நல்ல பல தியாகச் செயல்களை எதிர்பார்க்கலாம் என்று கூறிக்கொள்கின்றேன்.

இப்போது நியாய விலைக் கடைகள் மூலம், கோவாப்பரேடிவ் துறைகளின் மூலம் விற்கவும் விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறோம். அப்படிக் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகம் செய்வது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், நம் நாட்டிலே, குறிப்பாக தமிழ் நாட்டிலே, கூட்டுறவுத் துறைக்கு ஒரு நல்ல பெயர் கிடையாது. திருப்திகரமான முறையிலே செயல்படவில்லை என்ற அதிருப்தி இருக்கின்றது. பலவிதமான தவறுகள் நடக்கின்றன என்று பொதுவாக மக்களிடத்திலே அதிருப்தி நிலவுகிறது. ஆகவே இந்தக் கூட்டுறவுத் துறையின் பொறுப்பு அரசாங்கத்திடம் இருந்தாலும் கூட, விநியோக முறைகளில் விசேஷக் கண்காணிப்பு இருக்க வேண்டும். ஒரு விஜிலென்ஸ் கமிட்டி மாதிரி அமைக்க வேண்டும். சர்வ கட்சியில் இருக்கின்ற





முக்கியமான விவரங்கள் தெரிந்தவர்களை, பெரியவர்களைக் கொண்ட கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியின் கண்காணிப்பில் விநியோகிக்க வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முதுகுளத்தூர் பகுதி மக்களுக்காக ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இந்த அரசுக்கு எண்ணம் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டும். அவர்கள் பகுதியில் இன்றைக்குப் பஞ்ச நிலைமை கொடுமையாக இருப்பதால், திருநெல்வேலிக்குப் போய் கூலி வேலை செய்து கூலியாக நெல் பெற்று வருகின்றனர். அப்படிப் பெற்று வரும்போது, இடையிலே உள்ள ஊர்கள் மிகப் பஞ்ச நிலைமையில் இருப்பதால், அங்குள்ளவர்கள் அதையும் அடித்துப் பிடுங்கிக்கொள்கின்றார்கள். இதுபோலவேதான் புதுக்கோட்டைப் பகுதியிலும் நடக்கிறது. முதுகுளத்தூர் பகுதி மக்கள் வேலைக்குப் போய் கூலியாக வாங்கிக்கொண்டு வருகிற கூலி நெல்லை இடையிலே உள்ளவர்கள், ஒரு அரைப் படி கொண்டு வந்தால், அதில் கால் படியைப் பிடுங்கிக்கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட பல புகார்கள் இருக்கின்றன. அவர்களுடைய பகுதியைப் பஞ்சத்திலிருந்து மீட்க, ஏற்கெனவே இருக்கின்ற, கிருதுமால் நதி, நாராயணக் காவேரி போன்ற திட்டங்களை உடனடியாக அவர்களுக்காக நிறைவேற்றித் தர வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களுக்கு அதன்மூலம் வேலை கிடைக்கும். அந்தக் கூலியை வைத்துக்கொண்டு நம் அரசாங்கத்தில், கூட்டுறவுத் துறையின் மூலம் விநியோகிக்கின்ற உணவுப் பொருள்களை வாங்கி உண்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து நமது மாநிலம் எந்தக் காலத்திலும் பற்றாக்குறை மாநிலம் அல்ல. எல்லா மாநிலங்களுக்கும் உணவு அளிக்கக்கூடிய சக்தி படைத்த மாநிலமாக இருக்கிறது. இன்றைக்கு கேரளத்தின் மூலம் அரேபிய நாடுகளுக்கு ஏராளமாக அரிசி போவதாக பத்திரிகையின் மூலமாகத் தெரிகிறது. அதுதான் நடப்பும்கூட. வேறு மாநில எல்லைகளில் பலத்த பாதுகாப்பு போடாது போனாலும், கேரளாவைப் பொறுத்த வரையிலும், ராணுவப் பாதுகாப்பில் செக் போஸ்டு வைத்து சரியான முறையிலே கண்காணிக்க வேண்டும். ஒரு படி அரிசி கூட கேரளத்திற்குப் போகக்கூடாது என்ற முறையிலே ராணுவ ரீதியிலே அங்கு பாதுகாப்பு செய்ய வேண்டும். நம்முடைய உணவுப் பொருட்கள் போகாமல் தடுத்துக்கொண்டுவிட வேண்டும். இப்போது இருப்பது போன்று பஞ்சம் பட்டினி என்ற நிலை ஏற்படும்போது, மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சொன்னது போல, இன்றைக்கு நாம் பற்றாக்குறை என்றால், மத்திய சர்க்காரைக் கெஞ்சிக்கொண்டிருப்பதை விட, தாய்லாந்து நாட்டிலிருந்து—அதுதான் பக்கத்திலே இருக்கின்ற நாடு,

அங்கு நெல் அபரிமிதமாக விளைகிறது—வரவழைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று டில்லியைக் கேட்க வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகளுக்கு லைசென்ஸ் மாநிலங்களில் கொடுப்பது போல, மத்திய அரசு மாநில அரசுக்கு, ஒரு குறிப்பிட்ட காலவரம்பிட்டு, ஒரு லைசென்ஸ் முறையிலாவது அரிசி வெளியிலிருந்து வாங்குவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டும். நாங்கள் எங்கள் கப்பல்கள் மூலம் தருவித்துக்கொள்கின்றோம் என்று கடுமையாகக் கேட்க வேண்டும். அதாவது கட்டாயமான வேண்டுகோளாக அது இருக்க வேண்டும். அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால், கடுமையான முறையிலே மக்கள் சார்பிலே நாம் இறங்கலாம். அதையும் கடந்து நிராகரிக்கப்பட்டால், வெளிநாட்டிலிருந்து அரிசியை அரசாங்கம் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி தராத காரணத்தினால், ஒரு சாத்வீக முறையிலே, ஜனநாயக சட்ட திட்டத்திற்கு உட்பட்டு பெரியதொரு போராட்டம் நடத்துவதற்கு எதிர்க் கட்சிகள்—தோழமைக் கட்சிகள் தயாராக இருக்கின்றோம் என்று கூறிக்கொள்ளுகிறேன். இன்றைக்கு நமது தமிழ் நாட்டில் வேண்டிய அளவுக்குப் பண்டம் இருக்கிறது, ஆனால் பணம்தான் இல்லை. ஆரம்பத்திலேயே நான் சொன்னமாதிரி, ரூ. 2 என்று இருந்த அரிசி விலை, ரூ. 5, ரூ. 7 என்று ஏறியிருக்கின்றது. ரூபாய் 2 அரிசி விற்கும்போது இருந்த ரூ. 500 வருமானம்—சம்பளம், இப்போது ரூ. 7-க்கு உயர்ந்தபோதும் அதே வருமானம்தான் என்ற நிலையில் எவரிடமிருந்தும் சரியான சேவையை நாடு எதிர்பார்க்க முடியாது. வாங்குகிற சம்பளம்—வருகிற வருமானம் அரிசிக்கே போதவில்லை என்றால் எவரும் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்ற முடியாமல் தவிக்கும் நிலைதான் ஏற்படும். இதே நிலை நீடித்தால் தவறுகள்தான் அதிகமாகும். அந்தத் தவறுகளுக்கெல்லாம் நாம்தான் காரணம் என்ற நிலை ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-30)

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினைபற்றி இந்த அவையில் ஒரு முழு விவாதம் நடத்தி பலரும் கலந்துகொள்ளும்படியான ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததற்காக உண்மையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பு எங்கே கிடைக்காமல் போகுமோ என்று எண்ணி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டிருந்தால் ஒரு மணி நேரம்தான் பேசியிருக்க முடியும். ஆனால் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து





வந்திருக்கும் அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்கள் பங்கு கொண்டு ஆங்காங்கே இருக்கக்கூடிய நிலவரங்களை எடுத்துச் சொல்லும்படியான, ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதற்காக இந்த அமைச்சுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையை மூன்று பாகமாக நாம் பிரிக்கலாம். ஒன்று விலைவாசிப் பிரச்சினை. இரண்டாவது உணவுப் பற்றாக்குறை. மூன்றாவது வறட்சி. இந்த மூன்று தலைப்புகளின் கீழ் இதை நாம் எடுத்துக்கொண்டு கவனிக்க ஆரம்பித்தால், இதுவரை இந்த நாட்டிலே என்றுமே இல்லாத அளவுக்கு அரிசியின் விலை இருக்கிறது. எந்தக் காலத்திலும் இருந்திராத அளவுக்கு அரிசி விலை ஏறிவிட்டது. இப்போது உயிரோடு இருப்பவர்கள் காலத்திலே எப்போதுமே இந்த மாதிரி வறட்சி ஏற்பட்டது கிடையாது. அதுவும் ஒரு நூற்றாண்டிற்குள் இவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டதேயில்லை என்று பத்திரிகையிலே பார்த்தேன். இங்கே பேசியவர்களும் சொன்னார்கள். அந்த அளவுக்கு வறட்சி ஏற்பட்டுள்ளது. விலையும் வறட்சியும் இப்படியிருக்க, பற்றாக்குறையைப்பற்றிச் சொல்லத் தேவையேயில்லை. நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, போன வருஷம் 55 லட்சம் டன் விளைந்தது என்று சொன்னார்கள். அந்தக் கணக்கு அவ்வளவு தூரம் ஒப்புக்கொள்ளக்கூடிய கணக்கல்ல. 55 லட்சம் டன் கிடைத்திருக்கிறது என்று எண்ணி அதற்குத் தகுந்தபடி தாராளமாக நாம் நடந்துகொண்டோம், நமது அரசு நடந்துகொண்டது. வெளி மாநிலங்களுக்கு—கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்கியது. அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. உண்மையில் அந்தக் கணக்கு சரியாக இருந்தால், இவ்வளவு சிரமம் நமக்கு ஏற்பட்டிருக்காது. தவறான புள்ளிவிவரங்கள் அமைச்சரவைக்கு கொடுக்கப்பட்டன என்பதைத்தான் என்னால் சொல்ல முடியுமே தவிர, வேறொன்றுமில்லை. ஏனெனில் ஏதோ 4, 5 தினங்கள் அல்லது 6 நாட்களுக்கு போக்குவரத்துக் கட்டுப்பாட்டை சற்று தளர்த்தியதன் மூலம் லட்சக் கணக்கான டன் வெளி மாநிலங்கட்குப் போய்விட்டது என்று சொன்னால், அதை என்னால் நம்ப முடியவில்லை, நம்பக்கூடிய விஷயமல்ல. குறைபாடு ஏற்பட்டு விட்டது. அதை யாரும் மறுக்க முடியாது. அரசாங்கம் மறுக்க முடியாது. நிறைய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு அக்டோபர் மாத இறுதியில் வட கிழக்குப் பருவ மழை வந்துவிடும் என்று எங்களைப் போன்றவர்கள் தெற்கு ஜில்லாக்களிலே, என் தஞ்சையைத் தவிர மற்ற ஜில்லாக்களெல்லாம், நம்பியிருந்தோம்—வாழ்க்கைக்கே அந்த மழையைத்தான் நம்பியிருந்தோம். இந்த மழை முழுக்கப் பொய்த்து விடுமென்று எண்ணவே இல்லை. ஒரு குளத்திலும்கூட தண்ணீர் இல்லை. ஏதோ கிணறு இருக்கும் இடங்களில் மட்டும் சோளம், கேப்பை, கம்பு போன்றவற்றைப் பயிரிடுகிறார்கள். சில இடங்களில்தான் நெல் பயிரிடுகிறார்கள். அப்படியும்

எல்லாக் கிணறுகளிலும் நிறைய தண்ணீர் கிடைப்பதில்லை. இவ்வளவு குறைந்த அளவு பயிரிடப்பட்டும்கூட அதற்குத் தேவையான அளவுகூட உரம் கிடைக்க வில்லை. எந்த இடத்திலும் நெல் நாற்று நடவில்லை. கிணறு இருக்கும் இடங்களில் மட்டும் சோளம், கேப்பை, கம்பு போன்ற பயிர்கள் பயிரிடப்படு கின்றன. அதற்குக்கூட உரம் கிடைக்கவில்லை. 1967-ல் 35 லட்சம் டன் நெல் தான் விளைச்சல். இந்த மாநிலத்தில் முதலமைச்சர் கொடுத்த தகவல்படி, விளைச்சல் சென்ற வருடம் 55 லட்சம் டன். 20 லட்சம் டன் அதிகமாக விளைந் திருக்கிறது. அப்படியும் நமக்கு இவ்வளவு மோசமான கஷ்டம் ஏற்பட்டிருக் கிறதென்றால், அதற்குக் காரணம் நமது எல்லைப்புறம் சரியாகப் பாதுகாக்கப்பட வில்லை என்பதுதான். வெளியே போய் விட்டது என்று சொல்லுவதை நம்பித் நான் ஆக வேண்டும். எல்லைப்புறம் என்று சொன்னால், மாநில எல்லையை விட்டுப் போயிருக்கிறது என்றுதான் சொன்னேன். அது தேசத்தை விட்டுக் கூட வெளியே போயிருக்கிறது என்று சொன்னால், அது எந்த அளவுக்கு உண்மையாக இருக்கும் என்று அரசாங்கத்துக்குத்தான் தெரியுமே தவிர, நமக்குத் தெரியாது. அதைப்பற்றியெல்லாம் குற்றங்குறை சொல்லிவிட்டு, அத்தோடு நம்முடைய வேலை முடிந்துவிட்டது என்று போவதற்கு நாம் தயா ராக இல்லை. அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் சேர்ந்து அக்கறையெடுத்து எதாவது செய்து, இந்தப் பஞ்சத்தின் கொடுமையை—கடுமையைக் குறைப்ப தற்கு வழி இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் நான் இந்த விவாதத்தில் கலந்துகொண்டேன். அப்படித்தான் இங்கு விவாதமும் நடைபெற்றது.

அரசாங்கம் இப்பொழுது மத்திய அரசாங்கத்திலிருந்து 3, 4 லட்சம் டன் உணவுப் பொருட்கள் கேட்டிருப்பதாக அடுத்த அவையில் பதில் சொன்னதாக நான் பார்த்தேன். அது போதாது என்பது என்னுடைய கருத்து. டிசம்பர் மாதம் வரை வட கிழக்குப் பருவ மழை பெய்யவில்லையென்றால், இனிமேல் நமக்குப் பெய்யும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? கிணற்றிலும் தண்ணீர் கிடைக்காது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடியில் குடி தண்ணீர்ப் பஞ்சமும் நமக்கு வந்து சேரும். இதையெல்லாம் அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே மக்களுக்கு வெளியிலிருந்து ஏதாவது உணவுப் பொருள் களைக் கொண்டுவந்து, ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் டன்னாவது கொண்டுவந்து, நம்முடைய குறையைப் போக்குவதற்கு, நாமே உற்பத்தி செய்யும் அளவுக்கு நிலைமை ஏற்படும் வரை உணவுப் பொருள்களைத் தருவிக்க வேண்டும். எவ்வளவு மரதம் என்று சொல்ல முடியாது. அப்படி மாதந்தோறும் ஒரு லட்சம் டன்னாவது வந்தால்தான், நாம் சமாளிக்க முடியும். நமது அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. புஞ்சை தானியத்திற்கு வெளியிலிருந்து விதி விலக்களித்திருக்கிறார்கள். நம்முடைய கிராமங்களில் ஒரு நல்ல பழக்கம்



இருக்கிறது. யாருக்குப் பஞ்சம் வந்தாலும், பட்டினி போட்டுவிட மாட் டார்கள். பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் தானியங்களைக் கொடுத்தாவது உதவி செய்வார்கள். ஆகவே அதைப் போய் பறித்துக்கொண்டு வந்தார்கள் என்று சொல்லும் குற்றத்துக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. அதை அப்படியே விட்டு விடுவது நலம். அரசாங்கத்தின் அலுவலர்கள், பெரிய உத்தியோகஸ் தர்கள், ரெவின்யூ போர்டிலிருந்து கொடுக்கக் கூடிய புள்ளிவிவரங்களை எல்லாம் நம்பி நாம் ஏமாந்து விடக்கூடாது என்று முதலமைச்சர் அவர்களை நான்

(பிற்பகல் 5-40)

மிகவும் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால் அவர்கள் கொடுக்கும் கணக்கு நம்மைப் பெரிய கஷ்டத்தில் கொண்டு போய் நிறுத்தி விடும். வரும் ஜனவரி அல்லது பிப்ரவரி வரையில் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் தஞ்சையில் எவ்வளவு கிடைக்கும் என்பது நிச்சயமாகத் தெரியும். தஞ்சை, மற்றும் வைகைப் பாசனம், தாமிரவருணிப் பாசனம் போன்ற பாசன வசதி உள்ள பகுதிகளில் எவ்வளவு தானியம் கிடைக்கும் என்பது ஜனவரி கடைசியில்தான் நிச்சயம் பண்ண முடியும். இப்போது சுற்றுப்பயணத்திற்கு அனுப்பப்பட்டிருப்பவர்கள் ஏதோ இரண்டு மாதப் பயிரைப் பார்த்துவிட்டு வந்து, அங்கேயெல்லாம் எவ்வளவு ஏக்கர் விளையும், எவ்வளவு டன் கிடைக்கும் என்று சொல்லுகிறதைக் கொண்டு நாம் ஏமாந்துவிடக் கூடாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நெல்லாக நம் கைக்குக் கிடைக்கும் வரையில், எதையும் நாம் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. இப்போது கபினி ஆற்றுத் தண்ணீர் வந்துவிட்டது. இப்போது வந்துள்ள தண்ணீர் போதாது என்பது எல்லோருக்கும் தெரியும். அரசுக்கும் தெரியும். மழை வரும் என்று நினைத்து, நமக்கு வந்துள்ள தண்ணீர் போதும் என்று நினைத்தோம். மழை வரவில்லை. மழை வருவதாகவும் தெரியவில்லை. ஆகவே தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலங்களையாவது கடைசி வரையில்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தண்ணீர் போதாது என்று மீண்டும் நமக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்பதற்காக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் இன்றைக்கு பெங்களூர் சென்று கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார். அங்கேயிருந்து மைசூர் முதலமைச்சர் அவர்களும் நானும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறோம். விரைவில் ஆவன செய்வதாக மைசூர் முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்திருக்கின்றார்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எப்போது வரையில் தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற தகவலை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்களானால், நலமாக இருக்கும். எப்போது வரையில் வரும் என்று தெரிந்தால், விவசாயிகளைப் பொறுத்தவரையில், கொஞ்சம் தைரியமாக இருக்க முடியும்.

**திரு. கே. ராஜாராம் :** பொதுவாக இந்த நேரம் வட கிழக்குப் பருவக் காற்று வந்து, மழை பெய்யும் நேரம். காவிரித் தண்ணீர் அதிகமாகச் செலவாகாத நேரம் இது. எப்போதும் நவம்பர், டிசம்பர் மாதங்களிலே மழை பெய்யும். மேட்டூரிலிருந்து பாசனத்திற்காக இந்த மாதங்களிலே நீர் திறந்து விட மாட்டார்கள். மின்சார உற்பத்திக்குத் தேவையானதை மட்டும்தான் திறந்துவிடுவார்கள். அதற்கு நேர் விரோதமாக இந்த வருடம் தண்ணீரை அதிகமாகத் திறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதிலும் பெரிய 'ட்ராபேக்', இப்போது நமக்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்று பொதுவாகக் கணக்குப் போட்டுப் பார்த்தால்—பழைய கணக்கை வைத்துக் கொண்டு பார்த்தால், அப்போதைக்கு இப்போது நமக்கு நான்கு மடங்கு தேவை என்று மதிப்பிடலாம். மழை இல்லை. ஆகவே தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த நிலையில் மைசூரிலுள்ள தண்ணீரைக் கேட்டு வாங்கு வதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். அதோடு பொது மராமத்து அமைச்சர் அவர்களும் ஒரு வாரத்தில் இரண்டு முறை அங்கே சென்று பேச்சுவார்த்தைகள் நடத்தி வெற்றி யோடு வந்ததற்காக அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால், உணவு விஷயம் மிகப் பெரிய விஷயம். அதை ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்கிவிடக் கூடாது என்பது என் சொந்த எண்ணம். உணவைப் பொறுத்தமட்டில் மக்கள் கஷ்டப் படாமலிருக்க, எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து முயற்சிக்க வேண்டு மென்று நான் எண்ணுகிறேன். மத்திய அரசிடமிருந்து எப்படியும் நாம் நம்முடைய பற்றாக்குறையைப் போக்குவதற்காக மாதம் ஒரு லட்சம் டன் வாங்கியாக வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காகவேண்டி அனைத்துக் கட்சியினரையும் சேர்த்து தூதுக் குழு ஒன்று இங்கேயிருந்து செல்ல வேண்டுமென்று அரசு எண்ணினாலும், அது நல்லது என்று அரசாங்கத்தில் கருதினாலும், அதையும் நாம் செய்யலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இந்தமாதிரிக் காரியங்களில் பல மாநிலங்களிலிருந்து இந்தமாதிரி தூதுக் குழுக்கள் சென்று, தங்கள் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகின்றதைப் பார்க்கிறோம். நம்முடைய மாநிலத்திலுமிருந்து அப்படி ஒரு தூதுக் குழு சென்று நமக்கு



மாதம் ஒரு லட்சம் டன் அரிசியை, நமது பற்றாக்குறை தீரும் வரையில் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அப்படியே அவர்கள் மாதாமாதம் ஒரு லட்சம் டன் என்று அனுப் பினாலும், அதை வாங்குவதற்கான சக்தி நமது மக்களுக்கு இருக்க வேண்டும். கண்ட்ரோல் விலைக்கே, குறைந்த விலைக்கே அரசாங்கம் தானியத்தை வினியோ கித்தாலும்கூட, அதை வாங்கக்கூடிய சக்தி மக்களுக்கு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கிராமத்திலுள்ள மக்கள்—ஏதோ சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களிலுள்ள மக்களைக் கொண்டு நாம் கணக்குப் போட்டு விடக்கூடாது—கிராமங்களிலே உள்ளவர்கள் நிலையைப் பார்க்க வேண்டும். இப்போது நகரப் பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிட்டிகளில் நியாய விலைக் கடைகளை வைத்திருப்பதைப்போல இன்னும் சில நாட்களுக்குள் எப்படியும் நாம் கிராமங்களிலும்கூட திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும் என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்த நிலைமை வரும்போது அந்த விலையில் வாங்குவதற்குக்கூட அவர்களுக்கு சக்தி இருக்கின்றதா என்றால், அவர்கள் கையில் காசில்லை. ஆகவே, வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாக கிராமப் பகுதிகளிலே மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பணிகளை ஆரம்பித்து அவர்களுக்கு ஏதோ ஒரு சில வேலைகளைக் கொடுத்தால்தான், அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதன்மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தானியத்தை அவர்கள் வாங்கிச் சாப்பிட முடியும். இதுவரையில் எந்தக் காலத்திலும் ஏற்பட்டிராத அளவிற்கு வறட்சி இப்போது ஏற்பட்டிருக்கின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் நான் பேசுகிறேன். இல்லையென்றால் இவ்வளவு கடுமையான சொற்களைப் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும் ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாத காலத்தில், கிராமப் பகுதிகளிலே அரிசி யைக் கொண்டுபோய் நாம் கொடுத்தாலும்கூட அதை வாங்குவதற்கு அவர் களுக்கு சக்தி இருக்காது. ஆகவே வாங்குவதற்கான சக்தியை அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டும் என்றால், வாய்க்காலை வெட்டுவது அல்லது குளங்களை ஆழப்படுத்துவது, கிணறுகளை ஆழப்படுத்துவது போன்ற வறட்சி நிவாரணப் பணிகளையெல்லாம் நாம் உடனடியாக ஆரம்பித்தாக வேண்டும்.

நேற்றையதினம் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். ஓர் ஓரமாகப் போட்டிருந்தார்கள். பஞ்சம் இப்போது இல்லை என்றாலும் 'நியர் ஃபேமின் கண்டிஷன்ஸ்' இருக்கின்றது, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வந்துவிடக் கூடிய அபாயம் இருக்கின்றது என்று போட்டிருந்தார்கள். டிசம்பர் மாதத் திற்குப்பின் நமது மாநிலத்தில் எப்போதும் மழை பெய்ததில்லை. கர்ப்போட்டம் என்று சொல்லுவார்கள். மார்கழி பிறந்துவிட்டது. இரண்டு

[திரு. கே. ராஜாராம்] [1974 டிசம்பர் 17

தேதியாகிவிட்டது. ஆகவே இனியும் மழை பெய்யும் என்று எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. நாம் இப்போது மிகவும் உஷாராக இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அனைவரும் சேர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால், இப்போது அமெரிக்காவில் கோதுமையைவிட அரிசி அதிகமாகப் பயிராகிறது என்று தகவல் கிடைக்கிறது. அப்படி இருந்தால் அங்கிருந்து அரிசியை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யலாம். இப்போது ஏதோ மூன்று லட்சம் டன் உடனடியாகக் கிடைக்க இருக்கிறது என்று பத்திரிகைகளில் போட்டிருக்கின்றார்கள். அமெரிக்காவிலிருந்து மட்டுமில்லாமல், தாய்லாந்து, பர்மாவிலிருந்தும் வாங்க முயற்சிக்கலாம். முன் காலத்தில் பர்மாவிலிருந்தும், தாய்லாந்திலிருந்தும் நமக்குக் குருணை அரிசி வருவது வழக்கம். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி பகுதிகளில் குருணை கிடைத்தால் உதவியாயிருக்கும், அரிசி வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. நொய் அரிசி என்று சொல்லக்கூடிய குருணை கிடைத்தால்கூட, அதை வாங்கிச் சாப்பிட கிராம மக்கள் தயாராயிருக்கின்றார்கள். அந்த அளவிற்கு இப்போது கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புஞ்சை தானியத்தைப் பொறுத்தமட்டில், கட்டுப்பாடில்லாமல் இருக்கலாம். போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் புஞ்சை தானியத்தைப் பொறுத்தவரையில் அவசியமில்லை.

அடுத்து, கூட்டுறவு ஸ்தாபனங்களிடத்தில் கொள்முதல் விநியோகம் இவற்றையெல்லாம் விட்டுவிடுவதைப் பற்றிச் சொன்னார்கள். கொள்கையளவில் கொள்முதல்--விநியோகம் இவற்றை முழுக்க முழுக்க கூட்டுறவுகளிடம் விட்டு விடுவது என்ற யோசனையை என் கட்சி சார்பில் முழுக்கவும் ஆதரிக்கிறேன். ஆனால் எல்லாம் ஆட்களைப் பொருத்துத்தான் இருக்கிறது. நேற்று நமது மாநிலத்தின் முக்கியமான 'இந்து' பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். சிறு செய்தியாக ஒரு மூலையில் போடப்பட்டிருந்தது. 1973-ம் ஆண்டில் மட்டும் 521 கூட்டுறவுச் சங்கங்கள் பேரிலே கையாடல் கேஸ் போடப்பட்டிருந்தது என்றும், அதிலே 121 பேர் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் இருந்ததைப் பார்த்தேன். ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் என்றால், அதெல்லாம் அதை நடத்தும் ஆட்களைப் பொருத்துத்தான் இருக்கின்றது. மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடிகளையெல்லாம், டெபுடி ரெஜிஸ்ட்ரார் அல்லது சப்-ரெஜிஸ்ட்ரார் இவர்கள்தான் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார்கள். டிஸ்ட்ரிக்ட் மார்க்



1974 டிசம்பர் 17]. [திரு. கே. ராஜாராம்]

(பிற்பகல் 5-30)

கெட்டிங் சொசைட்டிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கின்றன. அரசாங்கத்தின் பெரிய உத்தியோகஸ்தர்கள் நிரந்தரமாக இருந்து அவைகளை நடத்தி வருகிறார்கள். அந்த சொசைடிகளிடம் கொடுத்து, அவைகள் நடத்தும் பட்சத்தில் எனக்கு ஆட்சேபணை இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் என்று சொல்லி, எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிடமும் ஒப்படைப்பது அவ்வளவு நல்லதல்ல. டிஸ்டிரிக்ட் மார்க்கெட்டிங் சொசைடிகளை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நிரந்தரமாக இருந்து இப்போது நடத்துகிறார்கள். முன்பும் அப்படித்தான் நடத்தி வந்தோம். இப்போதும் அப்படிப்பட்ட ஜில்லா மார்க்கெட்டிங் சொசைட்டிகளிடம் கொடுத்தால் நல்லது. டிபுடிரெஜிஸ்டிரார் அதற்கு எக்சிகியூடிவ் ஆபீசராக இருக்கிறார். அம்மாதிரி பொறுப்புள்ள அதிகாரிகள் உள்ள சொசைடிகளிடம் கொடுத்து, அதற்குப் பல கிளைகள் வைத்து, கொள்முதல் செய்யலாம். மேலும் கொள்முதல் செய்பவர்களையே விநியோகம் செய்ய விடக்கூடாது. அதில்தான் பெரிய தவறுகள் வரும். அதற்குத் தனியாக ஒரு ஏஜன்சி இருக்க வேண்டும். எனவே கொள்முதல் செய்பவர்களையே விநியோகம் செய்ய விடக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் இப்போது மாதம் 500 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கு மட்டும்தான் ரேஷன் மூலம் அரிசி போடப்படுகிறது. அதை இன்னும் கொஞ்சம் தளர்த்த வேண்டும். டி.ஏ. சேர்த்து 510 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவருக்கு ரேஷன் இல்லையென்று சொல்லுகிறார்கள். இப்போது இருக்கும் விலைவாசிகளுக்கேற்ப, 500 ரூபாய் என்ற லிமிட் போதாது. அதை 1,000 ரூபாய் வரை தளர்த்தி, அவர்களுக்கும் ரேஷன் கொடுத்தால் நல்லது. எல்லாக் குடும்பங்களுக்கும் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும். 500 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கு மட்டும் ரேஷன் மூலம் அரிசி கொடுத்துவிட்டால், மற்றவர்கள் என்ன செய்வது? செங்கற்பட்டு போன்ற மற்ற இடங்களிலிருந்து சென்னைக்கு அரிசி வருவதைத் தடுத்திருக்கிறோம். எனவே அவர்கள் சாப்பாட்டிற்கு என்ன செய்வார்கள்? அவர்கள் விலைக்கு வாங்கித்தான் சாப்பிட வேண்டி இருக்கிறது. ஆகவே எல்லா குடும்பங்களுக்கும் ஓரளவுக்காவது அரிசி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் சாப்பாட்டிற்கு, வயலிலிருந்து அரிசி அல்லது நெல் வாங்கிக்கொண்டு வர பெர்மிட் கேட்டால் தாராளமாகப் பெர்மிட் கொடுத்து, வாங்கிக் கொண்டுவர அனுமதிக்கலாம். அவர்களுக்கு என்னதான் வழி என்று கேட்கிறேன். ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிசர் இருக்கிறார். அவருக்கு மாதம் 1,000 ரூபாய், 1,500 ரூபாய் சம்பளம். அவருக்கு ரேஷன் மூலம் கொடுக்க முடியாது. அவர் சாப்பாட்டிற்கு என்ன செய்ய முடியும்? வெளியிலிருந்து அரிசியை, நெல்லை வாங்கிச்

கொண்டுவர அனுமதியாவது கொடுக்க வேண்டும். தஞ்சை போன்ற இடங்களில் நிலம் இருந்தால் கொண்டு வரலாம். நிலம் இல்லையென்றால், விலைக்கு அவர்கள் வாங்கிக்கொண்டு வரலாம். அம் மாதிரி விஷயத்தில் அரசு யோசிக்க வேண்டும். இவையெல்லாம் அனுபவபூர்வமான கஷ்டங்கள். இதைப் பல பேர் என்னிடம் சொன்னார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரவர்களை சில நாட்களுக்கு முன்பு ஒரு கல்யாண வீட்டில் சந்தித்தேன். அப்போது அவரிடம் ஒரு விஷயம் சொன்னேன். 'ரேஷன் ஒரு சிலருக்குப் போடுகிறீர்கள், மற்றவர்கள் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? வெளியிலிருந்து வருகின்ற அரிசியையும் தடுத்து விட்டோம்; அவர்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்' என்று அவரிடம் சொன்னேன். அடுத்த நாளே செங்கற்பட்டிலிருந்து சென்னைக்கு அரிசி வரலாமென்று உத்தரவு இடப்பட்டது. நாம் சொன்னதால்தான் இந்த உத்தரவு போடப்பட்டதென்று நான் நினைத்தேன். இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு அரிசி வருவது மீண்டும் தடை செய்யப்பட்டது. எனவே, ரேஷன் இல்லாதவர்களுக்கு என்ன வழியென்று கேட்கிறேன். 500 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் வாங்குபவர்களுக்குத்தான் ரேஷன் கார்டு மூலம் அரிசி கிடைக்கும். ரூபாய் 500-க்கு மேற்பட்டவர்கள் வெளியிலிருந்து, சொந்த நிலத்திலிருந்துதான் அரிசி கொண்டுவர முடியும். சொந்த நிலம் இல்லாமலிருப்பின் மாதத்திற்கு 500 ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பவர்கள் நிலைமை என்ன? அதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். அவர்களுக்குப் பெர்மிட் கொடுத்து, தஞ்சாவூர், செங்கற்பட்டு, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து சொந்த உபயோகத்திற்கு—சாப்பாட்டிற்கு—வாங்கிக் கொண்டுவர நாம் அனுமதி கொடுக்க வேண்டும். இவையெல்லாம் அனுபவபூர்வமான கஷ்டங்கள். அவர்கள் என்னிடம் சொல்வதை வைத்துப் பேசுகிறேன். இதைச் சற்றுக் கவனித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உத்தியோகப் பற்றற்றவர்களிடமும் அரசாங்கம் யோசனைகள் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அளவிலும், ஜில்லா அளவிலும், தாலுகா அளவிலும் உணவுக் கமிட்டிகள் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று எண்ணுகிறேன். இதில் அவசரம் எதுவும் தேவையில்லை. 10 நாட்கள் நன்றாக யோசனை செய்து முடிவுக்கு வரலாம். விநியோகப் பொறுப்பை உத்தியோகஸ்தர்களிடம் விடுவதைக் காட்டிலும், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த கமிட்டியிடம் இதை விட்டு, கவனித்துக்கொள்ளச் செய்ய வேண்டும். லெவி முறையில் வசூலிக்கும்போது சில இடங்களில் உத்தியோகஸ்தர்கள் கடுமையாகவும், சில இடங்களில் தாராளமாகவும் நடந்து கொள்கிறார்கள். அதை உத்தியோகப் பற்றற்றவர்கள் கவனித்து, அரசாங்கத்தின் செவிக்குக் கொண்டுவர வாய்ப்பு இருக்கும். இப்போது இவ்வளவு கஷ்டமான நிலைமைகள் வந்துள்ளமையால் உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்ட கமிட்டியை தாலுகா அளவிலும், ஜில்லா அளவிலும், மாநில அளவிலும் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாதென்று எண்ணினேன். இருப்பினும் முக்கியமான விஷயமாக இருந்ததால் சில நிமிடங்கள் கூடுதலாகிவிட்டது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** துணைத் தலைவரவர்களே, இந்த உணவுப் பிரச்சினையிலே, மேலவையைப் பொறுத்தவரையிலே, மூன்று நாட்களாக எதிர்க் கட்சியினர் ஆளுங்கட்சியாக இல்லை என்ற அளவிலேயும்கூட, இந்த மாநில மக்களின் மேல் கொண்டுள்ள அக்கறையைக் காட்டும் அளவிலே நல்ல விளக்கங்களையும், நல்ல யோசனைகளையும், நல்ல கருத்துக்களையும் கூறியிருக்கிறார்கள்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள், "நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டது உள்ளபடியே அவருடைய அக்கறையைக் காட்டுகிறது" என்று சொன்னார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்ற நிலை இருக்கக்கூடாதென்ற கொள்கை நீண்ட காலமாகவே எங்கள் இயக்கத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கொள்கையை இன்னும் இந்த இயக்கம் கொண்டிருக்கிறதென்பதை முதலமைச்சராக ஆகியும், நம்முடைய முதல்வரவர்கள் காட்டியிருக்கிறார்கள். எதிர்க் கட்சி உறுப்பினராக அவர்கள் இருந்தபோதே, தீயினால் பாதிக்கப்பட்ட இடங்கள், புயலால் பாதிக்கப்பட்ட இடங்கள், வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட இடங்கள்—ஆகிய இடங்களுக்குச் சென்று, ஆயிரக்கணக்கிலே பணத்தை வசூல் செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்க்கார் செய்யும் உதவிக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, தீ விபத்து, வெள்ளப் பெருக்கு நடந்த சில மணி நேரங்களிலே, இப்போதைய நம் முதல்வரவர்கள் அந்தக் காலத்திலே, எங்கிருந்தாலும் வந்து உதவி புரிகின்ற பல நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்றன. அப்படிப்பட்டதொரு மனப்பான்மை அன்றைக்கே அவர்களுக்கு இருந்தது. அன்றைக்கு யார் ஆளுங்கட்சியாக இருந்தார்கள்; இதிலே நமக்கு என்ன அக்கறை; இந்தப் பஞ்சத்திலும், புயலிலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் கஷ்டத்தைப் பயன்படுத்தி எப்படியாவது அரசாங்கத்தைத் தாக்க வேண்டுமென்ற எண்ணம் அந்தக் காலத்திலே அவர்களுக்கு இல்லாத காரணத்தாலேதான், இப்போது ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடியை நல்ல முறையிலே உணர்ந்து, இன்றைக்கு

அதைப்பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லோருடைய ஆலோசனையையும் கேட்க வேண்டுமென்ற பெருந்தன்மையோடு இந்த விவாதத்தை, இந்த மன்றத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவக்கியிருக்கிறார்கள். இன்னொரு அவையிலேயும் துவக்கி வைத்தார்கள். என்றாலும், இங்கே பல நல்ல விளக்கங்களை, யோசனைகளை நீங்கள் தந்ததற்கு உண்மையிலேயே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருசில உறுப்பினர்கள் சில குறைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவைகளுக்கான விளக்கங்களைத் தரலாமென நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 6-00)

இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே அவருக்கு விவரம் தெரிந்ததிலிருந்து இதுவரையிலே இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான பஞ்சம் ஏற்பட்டதில்லை என்று சொல்லியிருக்கிறார். அவர் மட்டுமல்ல, அவரை விட மூத்தவர்கள் கூட இப்படி ஒரு கடுமையான பஞ்சம் வந்ததில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நிலைமை தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அகில உலகத்திலும் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அகில உலக அளவிலே ஓர் அகில உலக மாநாடு ரோம் நகரத்திலே கூடியிருக்கிறது. அவர்கள் அங்கே சென்ற ஆண்டு உலகம் பூராவும் 970 மில்லியன் டன்களாக இருந்த உணவு உற்பத்தி, இவ்வாண்டு 916 மில்லியன் டன்களாகக் குறைந்துவிட்டது என்று முடிவு செய்திருக்கிறார்கள். நவீன விவசாய முறைகளைக் கையாண்டிருந்தபோதிலும், பல நாடுகளில் கோதுமை, சோளம் ஆகிய தானியங்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது. இவ்வாண்டு ரஷ்யாவில்கூட 206 மில்லியன் டன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக 200 மில்லியன் டன்னாகக் குறைந்திருக்கிறது. சோளம் பெருமளவில் உற்பத்தியாகும் செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகளில்கூட பயிர்ச்சேதம் ஏற்பட்டு, விளைச்சல் குன்றி, சோளம் ஏற்றுமதி தடைப்பட்டிருக்கிறது. மழையில்லாமல் 20 சதவீதம் உற்பத்தி அங்கு குறைந்துவிட்டது. ஆகவே, உணவுப் பொருள்கள் பற்றாக்குறை தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதையும், அகில உலகத்தையும் பாதித்திருக்கிறது. இந்தியாவிலேயும், உணவு மாநாடு பலமுறை கூடியது. நானும் பலதடவை உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டிருக்கிறேன். அவற்றில் இதைப்பற்றி விவாதித்து இந்தப் பற்றாக்குறைக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற முடிவுகளையெல்லாம் எடுத்து வெளிநாட்டிலிருந்து பல லட்சம் டன்களைக் கொள்முதல் செய்தால் தான், சில மாநிலங்களிலே ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்களை நாம் நிவர்த்தி செய்யலாம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். நேற்றுகூட அமெரிக்காவிலிருந்து 3 லட்சம் டன் வருவதாக நாம் பத்திரிகையிலே காண்கிறோம்.





இதுதான் பொதுவான நிலை. இடையிலே என்ன சங்கடங்கள் ஏற்பட்டன என்ற நிலைமை பற்றிய விளக்கங்களையெல்லாம் கூட, நாங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே தனியாகவைத்து, தானே, புள்ளிவிவரங்களையெல்லாம் தனியாகத் தந்திருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட அதற்கான நிலைமைகளைச் சொல்லியிருக்கிறார்கள். சிறுதானியக் கட்டுப்பாட்டை எடுத்தவுடனேயே நிச்சயமாக ஒரு கடுமையான நிலை வரும் என்று இந்த மன்றத்திலே சென்ற மார்ச் மாதம் 16 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது முன்னதாகவே சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், 35 சதவீத மக்கள் சிறுதானியங்கள் சாப்பிடுகிறார்கள். ஆகவே, இந்தச் சிறு தானியங்களுக்கான உற்பத்தியை நாம் அதிகரிக்க வேண்டுமென்று முடிவாகப் பேசுகின்றபோது நான் சொன்னேன். பம்பாய் போன்ற மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிற பஞ்சத்தை நீக்குவதற்காக, 35 சதவீத மக்கள் சாப்பிடுகின்ற தானியங்களின் மீதான கட்டுப்பாட்டை எடுத்து, அடுத்த மாநிலத்துக்குப் போகலாம் என்று திறந்து விட்டிருக்கிறார்கள் என்ற நிலைமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி எதிர்காலத்தில் பஞ்ச ஆபத்து வருமென்று சொன்னார்கள். அப்போது ஒரு எதிர்க்கட்சிப் பத்திரிகையிலே கேலியாக ஒரு தலையங்கமே எழுதப்பட்டு, "இந்த முதலமைச்சருக்கு ஒன்றுமே தெரியவில்லை—தமிழ்நாட்டில் யாரோ, சிறு தானியங்கள் சாப்பிடுகிறார்களாமே! இது வெளியே போய்விட்டால் ஏதோ பஞ்சம் வருகிறதாம்!" என்றெல்லாம்கூட வெளியிடப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக்காட்டியபோது "அது என்னுடைய பத்திரிகை அல்ல" என்று "நவசக்தி" பத்திரிகையைப் பற்றி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆகையினாலே நாங்கள் அப்பொழுதே, எதிர்காலத்திலே வரக்கூடிய நெருக்கடியை இந்த மன்றத்திலே சொன்னோம், அதன் மீது முடிவு எடுக்கவில்லை என்ற நிலை இல்லை. இந்த முறையில் அந்த நடவடிக்கை எடுத்தால் நமக்கு பாதகம் ஏற்படும் என்ற காரணத்தால், உடனே என்னை டெல்லிக்கு அனுப்பினார்கள். நான் உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டு இந்த அரசின் கருத்துக்களைச் சொன்னேன். நான் சொன்னதையெல்லாம் இங்கேயும் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, 35 சதவீதம் மக்கள் சிறு தானியங்களைச் சாப்பிடுகிறார்கள் என்று நம்முடைய விவசாய அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். முதலமைச்சரவர்கள் பேரவையிலே பேசுகிறபோது, ஒவ்வொருவருக்கும்—அடல்ட்ஸ்-க்கு 400 கிராம் அளவுக்கு ஒரு நாளைக்கு வேண்டுமென்றும், குழந்தைகளுக்கு 200 கிராம் அளவுக்கு ஒரு நாளைக்கு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 டிசம்பர் 17

வேண்டுமென்றும் கணக்கு வைத்து, நம்முடைய மாநிலத்திலே இரண்டு லட்சம் டன் அரிசி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். மேலும் ஒரு லட்சம் டன் அரிசியிலே 50,000 டன் அரிசி மத்திய அரசுக்கும், பாக்கி 50,000 டன் அரிசி மற்ற மாநிலங்களுக்கும் கொடுத்ததாகவும், அதனால் மொத்தம் 3 லட்சம் டன் நமக்குக் குறைகிறது என்றும் சொன்னார்கள். 35 சதவீதம் மக்கள் இந்தச் சிறு தானியங்களைச் சாப்பிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி 35 சதவீதம் மக்கள் சிறு தானியங்களைச் சாப்பிடுவதாக இருந்தால், இன்னும் அதற்குக் குறைவாக இருந்தால்கூட, நமக்குக் கட்டுப்படியாக வேண்டும். ஏனென்றால் அதையும் சேர்த்துப் பார்க்கிறபோது, அதிகப்படியான மக்களுக்கு உணவு கொடுக்க முடியுமே? என் அந்தக் கணக்கும், இந்தக் கணக்கும் பொருந்தவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

•

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் பேரவையிலே பேசியதுபற்றி பத்திரிகையில் வந்ததை மாத்திரம்தான் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். பத்திரிகையிலே நான் தொடர்ந்து பேசியதை வெளியிட விட்டுவிட்டார்கள். அப்போது தான் அதற்கான விமர்சனங்கள் எழுத முடியும் என்ற காரணத்தாலோ என்னவோ, அந்த முக்கியமான பாகத்தை விட்டுவிட்டார்கள். நான் பேசும் போதேகூடக் குறிப்பிட்டேன். "இது முழுவதும் அரிசியைச் சாப்பிடுகிற கணக்கை நான் வைத்துக்கொண்டு பேசவில்லை" என்று எச்சரிக்கையாகக் குறிப்பிட்டு, "சிறு தானியங்கள் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். சிறு தானியங்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்லுகின்ற தடை அகற்றப்பட்டு, தாராளமாகக் கதவுகள் திறக்கப்பட்ட காரணத்தால், சிறு தானியங்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்றுவிட, சிறு தானியத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் அரிசி உணவுக்கு வந்துவிட்டார்கள். அதனால்தான் இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டது. அது மாத்திரமல்ல, பதுக்கலும் நடைபெற்றிருக்கிறது", என்று இவ்வளவு காரணங்களும் சொல்லியிருக்கிறேன். ஆனால், பத்திரிகைக்காரர்கள், அதையெல்லாம் விட்டுவிட்டு தாங்கள் தலையங்கம் எழுதுவதற்கும், விமர்சனங்கள் எழுதுவதற்கும் வசதியாக இந்த வார்த்தைகளை மாத்திரம் பயன்படுத்திக் கொண்டார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அதற்கான முழு விளக்கமும், நான் பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த முறையிலே ஏற்பட்ட கஷ்டம் என்று இங்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் அவர்கள் பேசும்போது விவசாயிகளை நாம் உற்சாகப்படுத்தவில்லை என்று சொன்னார்கள். அது உள்ளபடியே சொன்னார்களா,



1974 டிசம்பர் 17] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இல்லை இன்றைக்கு இருக்கிற நிலைமையை அனுசரித்துச் சொன்னார்களா என்று தயவு செய்து அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எத்தனை லட்சம் டன்கள் அதிகமாக நாங்கள் உற்பத்தி செய்திருக்கிறோம், அதற்காக விவசாயிகளுக்கு எந்த விதத்தில் ஊக்கம் அளித்திருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் வசதிகளை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1966-67-ல் 31.44 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் என்ற அளவிலே கொடுக்கப்பட்ட கடன் இப்போது கிட்டத்தட்ட ரூ. 77.97 கோடிக்கு உயர்ந்திருக்கிறது என்றால், இது விவசாயிகளையெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டுமென்று கொடுத்ததுதான். விவசாயிகளுக்கு இந்தக் கடனை உரமாகவும் பணமாகவும் கொடுத்திருக்கிறோம். நிலவள வங்கிகள் இதற்காக வழங்கிய கடன் தொகை 1966-67-ல் ரூபாய் 4.17 கோடியாகத்தான் இருந்தது. ஆனால் 1973-74 வரையிலே 20.97 கோடி ரூபாய் இந்த நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்பட்டு 6 லட்சம் பம்புசெட்டுகளைப் போட்டு, எந்த அளவுக்கு வேளாண்மைத் துறையிலே உற்பத்தியை அதிகப்படுத்திக் காட்ட வேண்டுமோ, அந்த அளவுக்குக் காட்டியதோடு, ஒரு 5, 6 லட்சம் ஏக்கர் என்றுகூட தமிழ் நாட்டிலே குறுவை சாகுபடி இல்லை என்று இருந்த நிலைமையை எல்லாம் மாற்றி, தஞ்சை மாவட்டத்திலே மட்டும், 2 லட்சம் ஏக்கருக்கு உட்பட்டதாக இருந்த நிலப்பரப்பை, இன்றைக்கு. அதாவது சென்ற ஆண்டு வரையிலே 5 லட்சம் ஏக்கர் என்ற நிலைக்கு அதிகப்படுத்தினோம். இந்த ஆண்டு, 3¾ லட்சம் ஏக்கர் என்ற அளவிலே குறைந்திருக்கிறது. விவசாயிகளுக்கு உரம் கொடுப்பதில், மற்ற மாநிலங்களிலே கிடைக்கின்ற உரத்தை மக்களுக்கு எவ்வளவு அதிகமாக இங்கே வாங்கிக் கொண்டுவந்து கொடுக்க முடியுமோ அவைகளை எல்லாம் மக்களுக்குச் செம்மையாக விநியோகிக்கின்ற முறையிலே எல்லாவற்றையும் தனியார் துறைகளிடமிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்றி விநியோகம் செய்திருக்கிறோம்.

மற்றவர்கள் எல்லாம் இங்கே வருத்தப்படமாட்டார்கள். உரத்திலே வேறு மார்க்கெட் இருக்கிறது. அதில் கூட அதிக விலை இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கெல்லாம் யார் காரணம் என்பதை பன்முறை நாம் சொல்லியிருக்கிறோம். கொடுக்கின்ற உரத்திலே 40 சதவீதம் தான் எங்கள் கையிலே கொடுக்கப்படுகிறது. 60 சதவீதம் உரம் நெய்வேலியிலே உற்பத்தியாகிறது. சென்னையில் உற்பத்தியாகிற யூரியாவையோ, மற்ற உரங்களையோ 40 சதவீதத்துக்குக் குறைவாக எங்கள் கையிலே அதாவது சர்க்கார் பொதுத் தொகுப்புக்குக் கொடுக்கிறார்கள். மற்ற 60 சதவீதத்தைத் தனியாரிடம் கொடுத்து, அவர்கள் வியாபாரம் செய்கிறார்கள். இவையெல்லாம் அனைவருக்கும் தெரிந்திருந்தும் கூட. இந்திய அரசாங்கத்திடம், உரத்திலே இப்படி ஒரு

நிலைமை ஏற்பட்டிருக்கிறது, விலையை ஏற்றியிருக்கிறார்கள், விநியோகத்திலே இப்படி ஒரு கஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி யாரும் இதுவரையிலே எந்த மன்றத்திலும், கண்டித்துப் பேசுவதைக் கூட ஏனோ மறந்து விடுகிறார்கள். இதற்கு மத்திய சர்க்கார் தான் காரணம் என்பதை நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் தான் காரணம் என்பதற்கு நான் ஓரேயொரு சிறிய விளக்கத்தைச் சொல்லலாம் என்று கருதுகின்றேன். இப்பொழுது நடுத்தர நெல் கொள்முதல் செய்வதற்கு 90 ரூபாய்தான் நாங்கள் விலை நிர்ணயித்தோம். இந்த 90 ரூபாய் விலை நிர்ணயித்து அவர்களுக்கு அனுப்பினோம். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். திரு. சுவாமிநாதன் அவர்கள் இதுபற்றி மிகக் கடுமையான விமர்சனங்கள் செய்திருப்பார்கள், விலை குறையப் போகிறது. குறைவதற்கு யார் காரணம், மத்திய அரசு காரணமா, அல்லது மாநில அரசு காரணமா என்று கேட்டு, பத்திரிகையிலே வர வேண்டும் என்பதற்காகக் கடுமையாக அதைப்பற்றி விமர்சித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் பேச வில்லை. நம்முடைய முதல்வரவர்கள் இந்த மாநிலத்தை ஆளுகிறவர்கள், 4½ கோடி தமிழ் மக்களுடைய தலைவராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சக்தியை நாம் அவர்களுக்குத் தந்திருக்கிறோம். அவர்களுடைய திறமை, ஆற்றல் எல்லாம் தெரியும். தமிழகத்தில் நம்முடைய விவசாயிகள் பாடுபட்டுச் செய்கின்ற இந்த உற்பத்தியை மேலும் பெருக்கவேண்டி, முதல்வர் அவர்கள் ஒவ்வோராண்டும் தஞ்சை மாவட்டத்திற்கு பொதுவாக சாகுபடி செய்வதற்கு ஒரு 15 நாட்களுக்கு முன்பே ஒரு நிகழ்ச்சி வைத்துக்கொண்டு அங்கு வருகிறார்கள். வந்து அந்த விவசாயிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறார்கள். என்னவென்றால், 'நாங்கள் மிகக் கஷ்டப்பட்டு நீங்கள் செய்கின்ற சாகுபடிக்குக் கொள்முதல் விலையைக்கூட்டித் தருவதிலே அக்கறை காட்டுகிறோம், எனவே நீங்கள் உற்சாகமாக விவசாயத்தைச் செய்ய வேண்டும்" என்று அவர்களைத் தூண்டுகிறார்கள். அப்படித் தூண்டிச் சாகுபடி செய்யச் சொல்கின்றார்கள். 2 லட்சம் ஏக்கர் 5 லட்சம் ஏக்கர் என்று சாகுபடிப்பரப்பை ஆக்கியிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அப்படியெல்லாம் விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியை அதிகமாக்குகிறோம். ஆனால் எங்களுக்கு ரூ. 90 என்று விலை நிர்ணயம் செய்யக்கூடிய சக்தி இல்லை. இந்த அரசுக்கு அந்த உரிமையில்லை. உறுப்பினர்கள் இதை உணர்ந்திருக்கிறார்களோ இல்லையோ தெரியாது. அந்த ஒரு சிறு அதிகாரம் கூட இல்லாமல் இந்த மாநிலத்தை நாங்கள் ஆண்டு கொண்டிருக்கின்றோம். தயவுசெய்து உறுப்பினர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். 15-ந் தேதி அதாவது நேற்று முன் தினத்தோடு எங்களுடைய அதிகாரம், மத்திய சர்க்கார் கொடுத்த அதிகாரம் தீர்ந்து விட்டது. இன்றிலிருந்து அவர்கள் சொல்லுகின்ற ரூபாய் 74-க்குத் தான் தமிழ் நாட்டிலே





இருக்கக் கூடிய விவசாயிகள் விற்க வேண்டும். அதற்கான விவரங்களை துணைத் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் திரு. கணபதி அவர்களும் புள்ளிவிவரத்தோடு சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-10)

**திரு. கே. ராஜாராம் :** லெவிக்குப் போடுவது மட்டுமே ரூபாய் 74-க்கு என்று இருக்கிறது. மீதியை என்ன விலைக்கும் விற்கலாமல்லவா? நாம் ஒரு விலையை நிர்ணயிக்கலாமே? என்ன விலைக்கு விற்கலாமென்று சொல்லக் கூடாதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நெல்லை என்ன விலைக்கு விற்கலாமென்று நான் இப்பொழுது சொல்லக் கூடாது. சர்க்கார் தான் ஒரு விலையை நிர்ணயித்துக் கொள்முதல் செய்வது. அந்த அடிப்படையில் நாங்கள் விலையை நிர்ணயிக்கிறோம். ஆனால் அதை வாங்கக் கூடாதென்று கட்டாயப் படுத்துவதுதான் இப்போதிருக்கிற நிலைமை. அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் இதைச் சிபாரிசு செய்கிறார்கள். நாம் அவர்களுக்கு நம் மாநிலத்தில் கொடுக்க சிபாரிசு செய்து விட்டோம். முன்னதாகவே செய்திருக்கிறோம். நான் டெல்லிக்குச் சென்று பேசியபோது ஒரு பிரச்சினை வந்தது. சிறு தானியங்கள் மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று நம்முடைய இந்திய உணவு அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களிடம் விளக்கினேன். விலையைக் கூட்டிக் கொடுத்தால்தான் சரியான விளைச்சலை விவசாயிகள் எல்லாம் உற்சாகமாகச் செய்து வருவார்கள் என்று சொன்னேன். அவர்களும் சீக்கிரமாக உங்களுடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், விலையை வரையறுத்து அனுப்புங்கள் என்று சொன்னார்கள். நாங்களும் எல்லோரையும் கலந்து கொண்டுதான் ரூபாய் 90 என்று விலையை நிர்ணயித்து வேகமாக அவர்களுக்கு அனுப்பினோம். அது மட்டுமல்லாமல், ஒரு 6 மாத காலத்துக்கு, குறுவை சீசன் முடிகிற வரையிலுமாவது, விவசாயிகளிடமிருந்து ஒரு பத்து ரூபாய் அதிகம் கொடுத்து வாங்குவதற்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்டோம். டிசம்பர் 1-ம் தேதி வரை மேலிடத்து உத்தரவு இருந்தது. அது தீர்ந்துவிடும் என்ற நிலையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று இந்த 15 நாட்களுக்கு விளைகின்ற நெல்லை வாங்குவதற்கு அதிகாரம் கேட்டார்கள். இது தான் நமக்கு இருக்கிற சக்தி. பேசுகின்ற அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் எல்லாவற்றுக்கும் காரணம் நீங்கள் தான் என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் இந்த விலைக்குத்தான் வாங்க வேண்டுமென்று கட்டுப்படுத்துகிறார்கள்.

[1974 டிசம்பர் 17

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷனில் தான் இந்த விலைகளை நிர்ணயிக்கிறார்கள். அந்த விலைக்குத் தான் நீங்கள் வாங்க வேண்டும். அப்படித்தான் எல்லா மாநிலங்களும் வாங்குகிறார்கள், நாங்கள் வாங்க முடியாது என்று சொன்னால், அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே நாம் வாங்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சட்டத்தின் அடிப்படையிலே தடுப்பார்களா என்று கேட்கிறீர்கள். சட்டத்தை மீறுவது என்றால் நாம் பிறகு தமிழ் நாட்டை தனியாகத் தான் பிரித்துக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு நண்பர் திரு. சுவாமிநாதன் தயாராக இருக்கக்கூடும். ஆனால் நாம் அப்படிப்பட்ட நிலைமையை விரும்பாதவர்கள். நான் அதை விளக்கித் தெளிவாகக் கூற வேண்டுமென்றால், ரூபாய் 74-க்கு மேல் லெவி கொள்முதல் செய்யக்கூடாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் விரிவாகச் சொன்னார்கள். உணவு அமைச்சர் அவர்கள் சொல்லியபோது கொஞ்சம் வாய் தவறி அவ்வளவு தான் விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியல்ல. அரசு வாங்கும்போது ரூபாய் 74-க்குத் தான் வாங்க வேண்டும். லெவி கொள்முதல் ரூபாய் 74 என்ற அடிப்படையில் தான் அமைந்துள்ளது. அதை அரசு வாங்கும்போது மோட்டாரகம், நடுத்தரரகம், சன்னரகம் என்கிற அடிப்படையிலே அமைந்துள்ள விலையைத் தான் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை மீறினால் என்னவாகும் என்று திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். அப்படி மீறினால் மத்திய அரசு என்ன செய்வார்கள்? மாதா மாதம் லட்சம் டன் அரிசி வேண்டுமென்று நாம் கேட்கும்போது, அவர்களும் சும்மா இருப்பார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, on the other hand, if we buy at a higher price in Tamil Nadu, automatically a lobby will develop in all other States. If Tamil Nadu is prepared to buy at Rs. 94 per quintal from Andhra and Kerala, you can expect pressure on the Central Government for an increase in procurement price also.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசு எதையும் செய்ய முடியும். லெவி வாங்குவதிலே ரூபாய் 74-க்கு வாங்குகிறோம். வெளி மார்க்கெட்டிலே லெவிக்குக் கொடுத்தது போக, பாக்கி இருந்தால் நீங்கள் எப்படி லெவி போடப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் ஒரு நல்ல விலையை எங்களுக்கு நிர்ணயித்துக் கொடுத்தால், இந்த விலையிலிருந்து



1974 டிசம்பர் 17] [திரு. ஜி. சுவாமிநாதன்]

நாங்கள் பணம் எடுத்துக்கொள்வோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே போனஸ் என்று கொடுத்தார்கள். இவ்வளவு நெல் போடுவதற்கு இவ்வளவு போனஸ் என்று கொடுத்தார்கள். அந்த மாதிரி எங்களுக்கு போனஸ் கொடுத்தால் சரிப்படுத்திக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதனாலே தான் லெவி முறை இருக்கட்டும் என்கிறோம். வெளி மார்க்கெட்டிலே அவர்களும் விற்க வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளும் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வெளி மார்க்கெட் என்பதையும் இன்றைக்கு நாம் நிர்ணயித்திருக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகத்தான் நெல்லை வாங்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையிலேயும் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு நியாயமான நிலையை, இப்போது இருக்கின்ற லெவிக்குத் தரக்கூடிய விலையைக் காட்டிலும் சற்றுக் கூடுதலான விலை இருக்கும் என்று என்னுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறேன். அது என்ன விலை என்று விரைவில் தெரியும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஒரு கடுமையான நிலைமை உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஏற்பட்டுவிட்டது. மழை இல்லாதது மட்டுமல்ல. சம்பா இரண்டாவது போகம், தாளடி விளைச்சலிலே நமக்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். கிட்டத்தட்ட 1,084 மில்லி மீட்டர் மழை 1972லே பெய்திருக்கிறது. 1973லே 800 மில்லி மீட்டர் தான் மழை பெய்திருக்கிறது. அதாவது செப்டம்பர் 1972லே, 175.8 மில்லி மீட்டரும், 1973லே 122.3 மில்லி மீட்டரும் கிட்டத்தட்ட 50 மில்லி மீட்டர் குறைந்திருக்கிறது. 1972 அக்டோபரிலே 275.5 மில்லி மீட்டரும், 1973 அக்டோபரிலே 200 மில்லி மீட்டரும், 1972 நவம்பரிலே 130.6 மில்லி மீட்டரும், 1973 நவம்பரிலே 81 மில்லிமீட்டரும் தான் பெய்திருக்கிறது என்பது சென்ற ஆண்டுக் கணக்கு. ஆக சென்ற ஆண்டும் வட கிழக்குப் பருவக்காற்றினால் நமக்குக் கிடைக்க வேண்டிய மழை குறைந்துவிட்டது. 1973-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியிலே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வரவில்லை. அணை மூடப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டு 12-3-1974ல் அணையை மூடிவிட்டார்கள். காரணம் அங்கே மேட்டூர் அணையில் தண்ணீர் குறைந்துவிட்டது. அதனாலே தாளடிப் பயிர் செய்வதைப்பற்றியும் சம்பாவைப்பற்றியும் பதில் சொல்லும்போது, முன்பு சொல்லியிருக்கிறேன். பொன்னி என்ற நெல்லை நாம் பயிரிடுவதிலே கூட சரியான விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் தண்ணீர்ப் பற்றுக்குறையும் மழை இல்லாததும் ஆகும். மார்ச் மாதத்திலே நாம் கொடுத்த

கணக்குக்கு அந்த அளவுக்கு நெல் விளைச்சல் இல்லை என்ற நிலைமையைச் சொல்கிறார்கள். ஆகவே சென்ற ஆண்டிலிருந்தே நமக்கு ஒரு கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் பல இடங்களிலே, வட ஆற்காடு போன்ற பகுதிகளிலே, சிறிது விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. வேலூரிலிருந்து தான் முதன் முதலிலே சிறிது விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஜனவரி 26-ல் என்று நான் கருதுகிறேன். திடீரென்று சிறு தானியக் கட்டுப்பாட்டை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்த நேரத்திலே பம்பாயிலே 150 ரூபாய் விலைக்கு சிறு தானியங்கள் விற்றுக் கொண்டிருந்தன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சிறுதானிய விலை 89 ரூபாயாக இருந்தது. மார்ச் மாதம் கட்டுப்பாட்டை எடுத்த உடனே பம்பாயில் விலை ரூபாய் 135 ஆகக் குறைந்திருக்கிறது. தமிழ் நாட்டிலே விலை ரூபாய் 129.79 ஆக உயர்ந்திருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடம் இருக்கின்றன. 6-3-1974லே கட்டுப்பாட்டை எடுத்த பிறகு பம்பாயிலே ரூபாய் 150 என்றும் தமிழ்நாட்டிலே ரூபாய் 89 என்றும் இருந்த நிலைமை மாறி இந்தக் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு பம்பாயில் விலை ரூபாய் 135 ஆகி 15 ரூபாய் விலை குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட ரூபாய் 39 அதிகமாகி விலை ஏறியிருக்கின்றது. அதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டிலே ரூ. 150, ரூ. 160 என்று வேகமாக விலை ஏறியது. முப்பத்தைந்து சதம் மக்கள் நம் மாநிலத்தில் சிறுதானியங்கள் சாப்பிடுகின்றார்கள். அந்தச் சிறு தானியங்களை வெகுவாக வெளி நாட்டிற்குக் கொள்ளை கொண்டு போய்விட்டார்கள். திரு. சக்தி மோகன் அவர்கள் ஏதோ வியாபாரிகளுக்கு நாங்கள் சாதகமாக இருப்பது போல் இனிமேல் இருக்காதீர்கள் என்று சொன்னார்கள். அதற்குக் கூட யார் யார் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம், யார் யாரைக் கைது செய்திருக்கின்றோம் என்று பின்னர் சொல்வதாக நான் சொன்னேன். என்னிடம் பட்டியல் எல்லாம் இருக்கின்றது. திரு. சுவாமிநாதன் அவர்கள் கூடச் சொன்னார்கள். 'நேற்று ஒரு உத்தரவு, இன்று ஒரு உத்தரவா? அதை மூடுவதா, இதைத் திறப்பதா?' என்று கேட்டார்கள். அதிலே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களும் செங்கற்பட்டைத் திறந்து விட்டால் என்ன என்ற அளவில் கருத்தைச் சொன்னார்கள். திரு. சுவாமிநாதன், தஞ்சையைத் திறந்தால் கூட தேவலாம் என்று எண்ணுவதாகத் தெரிகிறது. நிலைமைக்கு ஏற்றவாறு பேசுகிறார்கள். நாங்கள் செய்தால் குறை சொல்கிறார்கள். சிறு தானியங்கள் கட்டுப்பாட்டை மத்திய சர்க்கார் ஏன் எடுத்தார்கள் என்று யாரும் இங்கே கேட்கவே இல்லை. அது என்ன உத்தரவு? ஒரே கொள்கையை மத்திய அரசு வைத்திருக்கின்றார்களா? அவர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு எங்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உத்தரவுகளைப் போட்டுப்போட்டு, நாங்கள் வைத்திருக்கின்ற நிலைமைகளையெல்லாம் மாற்று



கின்றார்கள். நாங்கள் இங்கே இருக்கின்ற வியாபாரிகளையெல்லாம் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம். மாவட்டத்திற்கு மாவட்டம் நிலைமைகளை ஒழுங்கு படுத்தி வைத்திருக்கின்றோம். அவர்கள் திடீரென்று திறந்துவிடுகிறார்கள். அங்கே உள்ள, பம்பாயிலே உள்ள, குஜராத்திலே உள்ள வியாபாரிகளை இங்கே தமிழ்நாட்டிற்கு வந்து வாங்கச் செய்கிறார்கள். ரூ. 90 என்று இருக்கின்ற சிறு தானியங்களை விலை ஏற்றி ரூ. 150 என்று கொள்முதல் செய்ய வைக்கிறார்கள். அதன்படி அந்த வியாபாரிகள் செய்கிறார்கள். நாம் என்ன செய்ய முடியும்? அந்த வியாபாரிகளை இந்த ஊருக்குள் வரக்கூடாது என்று கட்டுப்படுத்துகிற அதிகாரம் எங்களிடம் இருக்கிறதா? அதை நாங்கள் செய்ய முடியுமா? இந்த விலை ஏற்றத்திற்கு முழுக் காரணம் மத்திய சர்க்கார்தான் என்று சொல்வேன். தனியாருக்கு அதிகமான சலுகைகள் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு பற்றாக்குறை 2 லட்சம் 3 லட்சம் என்று சொல்லுகிறார்கள் என்று கூட திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கு 1973-74ல் வர வேண்டிய நவரை தானியங்கள் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட 3 லட்சம் ஏக்கராவில் கிடைக்கவேண்டியது கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஏக்கராவில் தான் கிடைத்திருக்கிறது. நவரை தானிய மகசூல் ஜூன் ஜூலையில்தான் கிடைக்கும். நவரை தானியம் கிடைக்கும் அந்த நேரத்திலே மாநிலம் பூராவும் விலை குறையும். வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு இந்த மூன்று ஜில்லாக்களும் சர்ப்ளஸ் பகுதிகள். தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடையானதும் ஒரு முறை மாவட்டம் பூராவும் விலை இறங்கும். மறுபடியும் ரூ. 2 அல்லது, ரூ. 4 விலை ஏறும். மறுபடியும் நவரை தானியங்கள் வரும்போது விலை குறையும். டிசம்பரில் வழக்கமாக ரூ. 2 அல்லது ரூ. 4 என்று விலை ஏறும்.

(பிற்பகல் 6-20)

ஆகையினாலே இது இந்த வட கிழக்குப் பருவக் காற்றினுடைய கொடுமை. சேலம் மாவட்டம் பூராவும் இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். நான் அடிக்கடி அந்தப் பகுதிக்குப் போயிருக்கிறேன். சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் பகுதி சர்ப்ளஸ் பகுதி. இரண்டு ஆண்டுகளாக அங்கு மழை இல்லை. அது கேணியிலே நன்றாகப் பயிரிடுகின்ற இடம். கேணியிலே தண்ணீர் இல்லை. எவ்வளவோ விவசாயிகள் நன்றாகப் பாடுபடுகிறார்கள். நாங்களும் எங்களால் முடிந்த ஒத்துழைப்புகளையெல்லாம் தருகிறோம். உரம் கொடுக்கின்ற பிரச்சினையிலே கூட ஆத்தூருக்குத் தேவையான உரம் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். இவ்வளவு செய்தும் கூட அங்கே ஒன்றுமில்லை. ஆனால் அவருக்கு ஏதோ பேச வேண்டு

பென்ற நினைப்பிலே எதிர்கோ பேசினார்—கையாலாகாதவர்கள் என்று எங்களைச் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு எங்கள் மீது என்ன வருத்தமோ தெரியவில்லை. நாங்கள் கையாலாகாதவர்கள் என்ற வார்த்தையை நேற்று பேசும் போது அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இப்பொழுது வேண்டுமானால் நாங்கள் கையாலாகாதவர்கள் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால் ஒரு காலத்திலே நாங்கள் மிகப் பெரியவர்களையெல்லாம் எதிர்த்துத்தான் இந்த நாற்காலியைப் பிடித்திருக்கிறோம். நாங்கள் கையாலாகாதவர்கள் என்று அவர்கள் இப்பொழுது சொல்லுகிறார்கள். அந்தப் பெரியவர்களிலே ஒரு ஆள் கூட இன்றைக்கு எங்களை எதிர்க்கின்ற அளவிலே எந்தக் கட்சியிலும் இல்லை என்று கூட இந்த நேரத்தில் சொல்ல முடியும். அவ்வளவு பெரிய பெரிய பயங்கரமான மக்களுடைய விரோதிகளையெல்லாம் தமிழகத்திலே எதிர்த்து ஒரு வரிசையிலே உட்கார வைத்து விட்டு 1967-க்குப் பிறகு இன்றைக்கு இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிறோம். அவர்கள் எது வேண்டுமானாலும் சொல்லட்டும். கையால் எனக்கு ஆகவில்லையா? இல்லை, என் கையாலாகாதனத்திற்குக் காரணம் மத்திய சர்க்காருடைய தலையீடா? அந்த உரிமையை எல்லோரும் சேர்ந்து பெற வேண்டுமா வேண்டாமா? இந்த அவை இந்த நேரத்திலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று . . . .

**திரு. கே. ராஜாராம்:** அவைத் தலைவர் அவர்களே, மக்கள் விரோதிகளை உட்கார வைத்திருக்கிறோமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அப்படி யாரைச் சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்திலே எனக்கும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஒரே கொள்கைதான். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனக்கும் சோஷலிசத்திலே ஒரே கொள்கைதான். நான் மக்கள் விரோதிகள் என்று சொன்னது நிலச்சுவான்தார்கள், ஆலை முதலாளிகள், ஜமீன்தார்கள், ராஜாக்கள் போன்றவர்களையே. இதிலே எதிர்க்கட்சித் தலைவருக்கும் எனக்கும் கொஞ்சம்கூட வித்தியாசம் கிடையாது.

**திரு. கே. ராஜாராம்:** அப்படி ஒரு அரசியல் கட்சியைப் பற்றி சொன்னார்களோ என்னவோ என்று நினைத்தேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. நான் இன்னும் கொஞ்சம் கடுமையாகக் கூட கூட்டங்களில் சொல்கிறேன். காந்தியாரைக் கொன்ற கோஷ்டி என்று.



திரு. சுவாமிநாதன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது கொள்முதல் செய்து வெளி மாவட்டங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புகின்ற முறையிலே கூட சில தவறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் கொஞ்சம் நீளமாகப் படிக்க வேண்டியிருக்கிறது. கொஞ்சம் அக்கறையோடு படித்துக் காட்டவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்துக்குள்ளே அந்த லாரி வந்தவுடன் முதலில் அந்த காலி லாரி எடை போடப்படுகிறது; இரண்டாவது, நெல் ஏற்றப்பட்டவுடன் மீண்டும் எடை போடப்படுகிறது. மூட்டைகள் தார்பாலினால் மூடப்பட்டு சீல் வைக்கப் படுகின்றது. கொள்முதல் அலுவலர் (உதவி தாசில்தார்) சீல் வைக்கிறார். சீல் வைக்கும் இடத்தில் உள்ள அட்டையில் லாரியில் ஏற்றப்பட்டுள்ள மூட்டைகளின் எண்ணிக்கை, எடை விவரம் இவைகள் குறிப்பிடப்படுகின்றன. பிறகு மூன்று பிரதிகளாகத் தயாரிக்கப்படும் 'டிரிப் மெமோவில்' லாரியின் எண், ஏற்றப்பட்டுள்ள மூட்டைகளின் எண்ணிக்கை, எடை, எங்கு செல்கின்றன என்ற விவரம் போன்றவை குறிப்பிடப்பட்டு இரு பிரதிகள் லாரி டிரைவரிடம் கொடுக்கப்படுகின்றன. அதில் ஒரு பிரதியை மூட்டை இறக்கப்படும் இடத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் கொடுத்துவிட்டு, ஒரு பிரதியை லாரி டிரைவர் வைத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவது பிரதி சென்னை சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, கம்ப்யூடர் பிரிவில் சரிபார்க்கப்படுகிறது. பிறகு ஒவ்வொரு தினமும் இரவில் தஞ்சையிலிருந்து வெளியே சென்றுள்ள லாரிகளின் எண், ஏற்றப்பட்டுள்ள நெல்லின் விவரம் போன்ற தகவல்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களுக்கு டெலிபோன் மூலம் தஞ்சையிலிருந்து அறிவிக்கப்பட்டு, லாரிகள் கண்காணிக்கப்படுகின்றன. அங்கு போனவுடன் சில விதி முறைகள் இருக்கின்றன. அதாவது முன்பு ஒரு பூட்டுக்கு இரண்டு சாவி வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இரண்டு பூட்டு இரண்டு சாவி. எனவே முன்பு இருந்த முறை இப்பொழுது கிடையாது. இப்பொழுது டபிள் லாக் அண்டு கீ சிஸ்டம் இருக்கிறது. இதற்கென்று தாசில்தார் அந்தஸ்தில் தனி அலுவலரைப் போட்டிருக்கிறோம். இரண்டு அலுவலரும் சேர்ந்து வந்தால் தான், பூட்டைத் திறக்க முடியும். எனவே அங்கு போனவுடன் ஹல்லிங் ஏஜெண்ட், டபுல் லாக் ஆபிசரிடம் தெரிவிக்க வேண்டும். டபுல் லாக் ஆபிசர் டிபுடி தாசில்தார் அந்தஸ்தில் உள்ளவர். லாரியில் சீல் உடைக்கப் படாமல் சரியான முறையில் இருக்கிறதா, இல்லையா என்று சோதனை செய்யப்படுகிறது. சீல் சரியாக இருந்தால்தான், டிபுடி தாசில்தார் முன்னிலையில் மூட்டைகள் லாரியிலிருந்து இறக்கி கிட்டங்கியில் வைக்கப்படுகின்றன. இந்தக் கிட்டங்கிக்கு இரண்டு பூட்டுப் போட்டு பூட்டப்படும். ஒரு பூட்டிற்கான சாவிகள் ஹல்லிங் ஏஜெண்டிடமும் இருக்கும். இந்த இரண்டு பூட்டுகளையும் திறந்தால் தான், கிட்டங்கிக்குள் போகவோ, நெல் மூட்டைகளை எடுக்கவோ முடியும். ஒரு

வாரத்திற்குள் நெல் அரவைக்குத் தேவையானதும் நெல் மூட்டைகள் மட்டும் கிட்டங்கியிலிருந்து அரவையாளருக்கு ஒரு சமயத்தில் வழங்கப்படும். இப்படியொரு முறையை வைத்திருக்கிறோம். ஆனால் உறுப்பினர்கள் ஏதேதோ தகவல் கேள்விப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஒன்றே ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இதைவிட இன்னும் சற்றுக் கடுமையான முறையைக் கையாள வேண்டுமென்றால் அந்த யோசனையைச் சொல்லட்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் சொல்லுவதெல்லாம் முன்பு இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் வித்தியாசமே இல்லை என்பதுதான். முன்பு ஒரு பூட்டுப் போட்டு இரண்டு சாவிகள் வைத்திருந்தோம். இப்போது இரண்டு பூட்டுப் போட்டு இரண்டு சாவிகள் வைத்திருக்கிறோம். நெல் மில்லருடைய கோடவுனுக்குப் போகிறது. அப்பொழுதும் அதிகாரிகள் கண்காணித்தார்கள். அவர் திறக்கவேண்டுமென்றால் வந்துதான் திறக்கவேண்டும். மூட்டையை அப்படித்தான் அடுக்கவேண்டும். கவர்ண்மெட் அக்கவுண்டில்தான் இருக்கவேண்டும். இப்பொழுதும் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சாவி பூட்டெல்லாம் பிரமாதமல்ல. அங்கே வருகிற ஆளைப் பொறுத்துத்தான் எல்லாம் இருக்கிறது. யார் அங்கே போகிறாரோ, அந்த ஆபிசர் இருக்கிறாரே, அவரைப் பொறுத்திருக்கிறது. அவரிடம் தான் அந்தச் சாவி இருக்கிறது. நாளைக்கு இது ஒழுங்காக நடக்கவேண்டுமென்றால், 51 ரூபாய்க்கு ஜாக்கிரதையாக நன்றாகப் பார்த்து மாய்ஸ்ச்சர் ஒன்றுமில்லாமல் வாங்கிக்கொண்டு போனால், நன்றாக இருக்கும். அப்படியானால் சந்தேகமே வராது. ஆனால் இந்த நபர்கள் 54 ரூபாயாக இருந்தாலும், வாங்கி 55 கிலோ வாங்குவதற்கு பதிலாக 53 கிலோ இருந்தாலும், வாங்கிக்கொண்டு போகிறார்கள் என்றால், நாம் சந்தேகப்படுவதற்கான எல்லாக் காரணமும் இருக்கிறது. இந்த நஷ்டத்தை யார் பொறுப்பார்கள் ? யாரும் எந்த வியாபாரியும் நஷ்டத்திற்கு வியாபாரம் பண்ண மாட்டார்கள். மூட்டை உள்ளே போயிருந்தால், ஒழுங்காக இருக்குமா ? திரும்ப கவர்ண்மென்டிலே வைத்திருப்பதை அவர்கள் கொடுப்பார்களா என்பதையெல்லாம் ஜாக்கிரதையாகக் கண்காணிக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். இங்கிருந்து சீல் போட்டு, கோடவுனுக்குப் போகிற வரையில் நல்ல முறையிலே இருக்கிறது. அங்கே போனபின் உள்ள நிலைமையிலே ஒழுங்காக இருக்க வேண்டும் என்று முன் எச்சரிக்கையாகச் சொன்னேன். வாங்குகிற முறையைப் பார்த்தால் மூட்டைக்கு 3, 4 ரூபாய் குறைவு. அதை எப்படி அவர்கள் நிறைவு செய்யப் போகிறார்கள் என்பதற்காக ஜாக்கிரதையாக இருங்கள் என்பதை ஒரு எச்சரிக்கையாகச் சொன்னேன்.





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது போட்டிருக்கிற முறையை நான் சொன்னேன். உலகத்திலே ஒருவரையும் நம்பாமல் பின்யாரைத் தான் நம்புவது என்று தெரியவில்லை. தனிப்பட்ட வியாபாரிகளையும் சரியாக நமப முடியவில்லை. அதிகாரிகளையும் நம்ப முடியவில்லை. கூட்டுறவுத் துறையையும் நம்ப முடியவில்லை. பின்பு யாரைத் தான் நம்புவது என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்று தனியாரைத் தான் நம்ப வேண்டுமென்று பச்சையாகச் சொல்லி விடட்டும். நான் அப்படியே விடுகிறேன். அப்படியில்லாமல், அதிகாரிகளையும் நம்ப முடியாது, கூட்டுறவுத் துறையிலே நாம் எல்லோரும் கட்சிக்காரர்களும் சேர்ந்து ஒரு ஜனநாயக முறையிலே நடத்தி வருவதையும் நம்ப முடியவில்லையென்றால். . ..

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நான் சொல்வது இன்றைக்கு 51 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். நாளைக்கு மூட்டையைக் கொடுக்கவில்லையென்றால், அவர்கள் மூன்று பங்கு கொடுக்கவேண்டும்; 150 ரூபாய், 200 ரூபாய், கொடுக்கவேண்டும். இல்லை 250 ரூபாய் என்று சொன்னால், யாரும் வாங்க மாட்டார்கள். 51 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போய் 50 பெர்சன்ட் பெனல்டி என்று சொன்னால், 75 ரூபாய்க்கு விற்றால், என்ன என்ற எண்ணம் வருகிறது. அப்படி விற்றால், 4 பங்கு பெனல்டி கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தைப் போட்டால், அந்த அளவுக்காவது இத்தகையோருக்கு ஒரு பயம் இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். அப்புறம் கொடுக்கப் போகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் அன்றைக்கே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இன்றைக்கு ஒரு விவரத்தைச் சொல்கிறேன். அத்தகையவர்களுக்கு வெறும் பெனல்டி போட்டு, அத்தோடு நின்றுவிடுவதில்லை. அவர்களுடைய லைசென்சை 'கேன்சல்' பண்ணுகிறோம். இன்னும் அப்படிப்பட்டவர்கள் மீது வழக்குகள் எல்லாம் போடுவதற்கான சட்டங்கள் எல்லாம் இயற்றி வைத்திருக்கிறோம். அதைப்பற்றியெல்லாம் நான் பின்னே சொல்லுவேன்.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்களே, தஞ்சையிலே லாரிகளிலே ஏற்றுகிற முறையிலே கடைப்பிடிக்கப்படும் மிகச் சிறப்பான முறையை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது போன்ற முறையை ஆவடியிலிருந்து எடுக்கும்போது பின்பற்றுவதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழ்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 17

வாரத்திற்குள் நெல் அரவைக்குத் தேவையாயிடம் நெல் மூட்டைகள் மட்டும் கிட்டங்கியிலிருந்து அரவையாளருக்கு ஒரு சமயத்தில் வழங்கப்படும். இப்படி யொரு முறையை வைத்திருக்கிறோம். ஆனால் உறுப்பினர்கள் ஏதேதோ தகவல் கேள்விப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஒன்றே ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இதைவிட இன்னும் சற்றுக் கடுமையான முறையைக் கையாள வேண்டுமென்றால் அந்த யோசனையைச் சொல்லட்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் சொல்லுவதெல்லாம் முன்பு இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் வித்தியாசமே இல்லை என்பதுதான். முன்பு ஒரு பூட்டுப் போட்டு இரண்டு சாவிகள் வைத்திருந்தோம். இப்போது இரண்டு பூட்டுப் போட்டு இரண்டு சாவிகள் வைத்திருக்கிறோம். நெல் மில்லருடைய கோடவுனுக்குப் போகிறது. அப்பொழுதும் அதிகாரிகள் கண்காணித்தார்கள். அவர் திறக்கவேண்டுமென்றால் வந்துதான் திறக்கவேண்டும். மூட்டையை அப்படித் தான் அடுக்கவேண்டும். கவர்ண்மெட் அக்கவுண்டில்தான் இருக்கவேண்டும். இப்பொழுதும் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சாவி பூட்டெல்லாம் பிரமாதமல்ல. அங்கே வருகிற ஆளைப் பொறுத்துத்தான் எல்லாம் இருக்கிறது. யார் அங்கே போகிறாரோ, அந்த ஆபிசர் இருக்கிறாரே, அவரைப் பொறுத்திருக்கிறது. அவரிடம் தான் அந்தச் சாவி இருக்கிறது. நாளைக்கு இது ஒழுங்காக நடக்கவேண்டுமென்றால், 51 ரூபாய்க்கு ஜாக்கிரதையாக நன்றாகப் பார்த்து மாய்ஸ்ச்சர் ஒன்றுமில்லாமல் வாங்கிக்கொண்டு போனால், நன்றாக இருக்கும். அப்படியானால் சந்தேகமே வராது. ஆனால் இந்த நபர்கள் 54 ரூபாயாக இருந்தாலும், வாங்கி 55 கிலோ வாங்குவதற்கு பதிலாக 53 கிலோ இருந்தாலும், வாங்கிக்கொண்டு போகிறார்கள் என்றால், நாம் சந்தேகப்படுவதற்கான எல்லாக் காரணமும் இருக்கிறது. இந்த நஷ்டத்தை யார் பொறுப்பார்கள்? யாரும் எந்த வியாபாரியும் நஷ்டத்திற்கு வியாபாரம் பண்ண மாட்டார்கள். மூட்டை உள்ளே போயிருந்தால், ஒழுங்காக இருக்குமா? திரும்ப கவர்ண்மெண்டிலே வைத்திருப்பதை அவர்கள் கொடுப்பார்களா என்பதையெல்லாம் ஜாக்கிரதையாகக் கண்காணிக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். இங்கிருந்து சீல் போட்டு, கோடவுனுக்குப் போகிற வரையில் நல்ல முறையிலே இருக்கிறது. அங்கே போனபின் உள்ள நிலைமையிலே ஒழுங்காக இருக்க வேண்டும் என்று முன் எச்சரிக்கையாகச் சொன்னேன். வாங்குகிற முறையைப் பார்த்தால் மூட்டைக்கு 3, 4 ரூபாய் குறைவு. அதை எப்படி அவர்கள் நிறைவு செய்யப் போகிறார்கள் என்பதற்காக ஜாக்கிரதையாக இருங்கள் என்பதை ஒரு எச்சரிக்கையாகச் சொன்னேன்.



1974 டிசம்பர் 17]

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது போட்டிருக்கிற முறையை நான் சொன்னேன். உலகத்திலே ஒருவரையும் நம்பாமல் பின்யாரைத் தான் நம்புவது என்று தெரியவில்லை. தனிப்பட்ட வியாபாரிகளையும் சரியாக நமப முடியவில்லை. அதிகாரிகளையும் நம்ப முடியவில்லை. கூட்டுறவுத் துறையையும் நம்ப முடியவில்லை. பின்பு யாரைத் தான் நம்புவது என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்று தனியாரைத் தான் நம்ப வேண்டுமென்று பச்சையாகச் சொல்லி விடட்டும். நான் அப்படியே விடுகிறேன். அப்படியில்லாமல், அதிகாரிகளையும் நம்ப முடியாது, கூட்டுறவுத் துறையிலே நாம் எல்லோரும் கட்சிக்காரர்களும் சேர்ந்து ஒரு ஜனநாயக முறையிலே நடத்தி வருவதையும் நம்ப முடியவில்லையென்றால். . ..

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நான் சொல்வது இன்றைக்கு 51 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். நாளைக்கு மூட்டையைக் கொடுக் கவில்லையென்றால், அவர்கள் மூன்று பங்கு கொடுக்கவேண்டும்; 150 ரூபாய், 200 ரூபாய், கொடுக்கவேண்டும். இல்லை 250 ரூபாய் என்று சொன்னால், யாரும் வாங்க மாட்டார்கள். 51 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போய் 50 பெர்சன்ட் பெனல்டி என்று சொன்னால், 75 ரூபாய்க்கு விற்றால், என்ன என்ற எண்ணம் வருகிறது. அப்படி விற்றால், 4 பங்கு பெனல்டி கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தைப் போட்டால், அந்த அளவுக்காவது இத்தகையோருக்கு ஒரு பயம் இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். அப்புறம் கொடுக்கப் போகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இதைப் ப்ற்றி நான் அன்றைக்கே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இன்றைக்கு ஒரு விவரத்தைச் சொல்கிறேன். அத்தகையவர்களுக்கு வெறும் பெனல்டி போட்டு, அத்தோடு நின்றுவிடுவதில்லை. அவர்களுடைய லைசென்சை 'கேன்சல்' பண்ணுகிறோம். இன்னும் அப்படிப்பட்டவர்கள் மீது வழக்குகள் எல்லாம் போடுவதற்கான சட்டங்கள் எல்லாம் இயற்றி வைத்திருக்கிறோம். அதைப்பற்றி யெல்லாம் நான் பின்னே சொல்லுவேன்.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்களே, தஞ்சையிலே லாரிகளிலே ஏற் றுகிற முறையிலே கடைப்பிடிக்கப்படும் மிகச் சிறப்பான முறையை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது போன்ற முறையை ஆவடியிலிருந்து எடுக் கும்போது பின்பற்றுவதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழ்

நாடெங்கும் எந்த டிப்போவிலாவது இப்படிப்பட்ட நெல்மூட்டைகளை வைத்திருக்கின்ற முறை அமுலில் இருக்கிறதா, இரண்டு சாவிகளை வைத்துக் கொள்வது, இரண்டு பூட்டுகளை வைத்துக்கொள்வது, சீல் வைப்பது, லாரியில் ஏற்றும்போது எடை எடுப்பது, எடை எடுத்த பிறகு லாரியிலே மூட்டைகளை ஏற்றிய பிறகும் நிறுப்பது போன்ற முறைகளையெல்லாம் மற்ற எல்லா இடங்களிலும் கையாள்கிறார்களா என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-30)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் சொல்லுவது, எல்லா இடங்களிலும்தான் சொல்லுகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் நாங்களே வியாபாரம் செய்தால், அந்த முறை தேவையில்லை. ஆனால் வியாபாரிகளிடம், ஹல்லிங் ஏஜெண்ட்சிடம் முதல் இல்லாத காரணத்தினால், இதையெல்லாம் யோசித்துக் கூடுமான வரையில் செய்திருக்கிறோம். யோக்கியர்களும் இருக்கின்றார்கள். எல்லோரையும் சேர்த்து ஒரே மொத்தமாக எண்ணிவிட்டால், பிறகு நாட்டிலே யோக்கியர்களே இல்லாது போய்விடுவார்கள். யோக்கியமாக இருப்பவர்களுக்கு மதிப்பைக் கொடுத்தால்தான், நாட்டிலே யோக்கியர்களை அதிகமாக ஏற்படுத்த முடியும்.

**திரு. க. அறிவழகன்:** தலைவரவர்களே, நான் ஒரு முக்கிய செய்தியினைச் சொல்ல விரும்புகிறேன். ஆவடி நுகர்வோர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றை அண்மையில் கண்டுபிடித்தார்கள். ஆவடி உணவுக் கிடங்குகளிலிருந்து அரிசியை எடுத்து வரும் லாரிகளிலே முதலில் அந்த வண்டியின் ஸ்டெப்னி என்று சொல்லப்படும் மாற்றுச் சக்கரம், மற்ற உபகரணங்களையெல்லாம் எடுத்துவிட்டு உள்ளே சென்று குறிப்பிடப்பட்டுள்ள எடைக்கான அரிசியைக் கொண்டுவந்த பிறகு, வெளியே வந்தபிறகு, அந்தச் சக்கரம் மற்றும் உபகரணங்களுக்கு உண்டான அரிசியை வெளி வியாபாரிகளிடம் கொடுத்துப் பணமாக்கிக்கொள்ளுகின்றார்கள் என்று நுகர்வோர் கழகம் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றது. அது உண்மையாக இருந்தால், அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அது எப்படியோ தவறான தகவல் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். அது மத்திய அரசின் உணவுக் கார்ப்பரேஷனைச் சேர்ந்தது. அங்கேயிருந்து கேரளா போன்ற மற்ற மாநிலங்களுக்கு உணவு தானியத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அது நமது மாநில அரசைச் சேர்ந்தது இல்லை. நேற்று முன்தினம்கூட லாரி ஒன்று மவுண்ட் ரோடில் அடிபட்டுக்கிடந்ததை நான் அந்தப் பக்கம் காரில்



போகும்போது பார்த்தேன். அது மத்திய உணவு கார்ப்பரேஷன் லாரி. அதையும் எங்கே நம்முடையது என்று சொல்லி விடுவார்களோ என்று போய்ப் பார்த்தேன். அப்படி இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, மத்திய அரசின் கிடங்குகளில் இப்படி நடந்திருக்கிறது என்றால், அதைப்பற்றி மத்திய அரசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** செய்யவேண்டியவர்கள் செய்வார்கள். சீக்கிரமாக பல விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். தனியாகக் கேட்டால், பிறகு சில விளக்கங்களைச் சொல்லுகிறேன். இப்போது நேரம் போதவில்லை.

அடுத்து, இந்த வருஷம் குறுவையைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டிலே தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட முப்பது நாட்கள் தாமதமாக மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டது என்று காலை கூட நமது திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் நாலு லட்சம் ஏக்கர் என்று கணக்குக் கொடுக்கின்றார்கள், ஆனால் உண்மையிலேயே இரண்டரை லட்சம் ஏக்கர்தான் இருக்கும் என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஒன்றரை லட்சம் ஏக்கர் குறைவாகத்தான் இந்த வருஷம் பயிர் செய்திருக்கின்றார்கள். கொடுத்த கணக்கில் இருப்பது கிட்டத்தட்ட 3.74 லட்சம் ஏக்கர் பரப்பு என்றால், அதிலே ஒன்றரை லட்சம் ஏக்கர் குறைவாகத்தான் பயிர் செய்திருக்கின்றார்கள். இதிலே ஏக்கருக்கு 27 மூட்டை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். அந்த அடிப்படையில்தான் லெவி கணக்கையும் போட்டோம். மழையையும் எதிர்பார்த்துத்தான் எல்லாக் கணக்கையும் போட்டோம். மழை அடியோடு இல்லை. என்ன பண்ணுவது? மழை வராது என்று எண்ணி ஒரு கல்யாணத்திற்கு தட்டுப் பந்தல் போடுகிறோம். திடீரென்று மழை வந்துவிட்டால், ஏன் இப்படிப் போட்டீர்கள், அப்படிப் போடக்கூடாதா என்று கேட்டால் என்ன பண்ணுவது? மழை பெய்யும் என்று நினைத்தோம். இப்போது பெய்யவில்லை. இப்போது நாம் போட்ட கணக்கிற்கும் குறைவாகத்தான் விளைச்சல் இருக்கப் போகிறது. இப்போது புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மறுபடியும் கேட்டிருக்கிறோம். முதலில் ஏக்கருக்கு 27 மூட்டை கிடைக்கும் என்று எதிர்பார்த்த இடத்தில் இப்போது பதினெட்டு மூட்டை கிடைப்பதே கஷ்டம் என்று இருக்கிறது. நானும் ஒரு விவசாயிதான். கஷ்டங்கள் தெரிகிறது. ஆனால் நமது திரு. கணபதி அவர்கள் என்னைவிட மிகத் திறமையான விவசாயி. அவர் பல புள்ளி விவரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

அந்த முறையில் பார்த்தால், நாம் எதிர்பார்த்தது 3,68,000 டன் என்றால், அது ஏக்கருக்கு 27 மூட்டை என்ற கணக்கில். இப்போது பதினெட்டு மூட்டை என்றால், 2.4 லட்சம் டன்தான் தஞ்சையில் விளையும். அதிலே அவர்களுக்கு வேண்டியது போக உபரியாக ஒன்றரை லட்சம் டன்தான் வாங்கும் நிலைமையில், சரியாகச் சொல்லப்போனால் 1,15,000 டன்தான் கொள்முதல் செய்யக்கூடிய நிலையில், இருக்கிறோம். சிலர் விலைக்காக வைத்திருக்கலாம் என்று இருந்தாலும், விவசாயிகள் தங்களுடைய தேவைக்குப் போக மிச்சத்தைக் கொடுத்து விடவேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்கள்கூட கேட்டுக்கொண்டார்கள். சிலர் பாதுகாப்புக்காக வைத்துக்கொண்டிருந்தாலும், அவற்றையும் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதையெல்லாம் செய்யக்கூடாது, விவசாயிகளைக் கசக்கிப் பிழிவதாகிறது என்று மதிப்பிற்குரிய திரு. சுவாமி நாதன் அவர்கள் சொன்னார்கள். சிறு மூட்டையை தலைச் சுமையாக எடுத்துச் செல்லுவதையெல்லாம் பிடிக்கின்றார்கள், அதெல்லாம் கூடாது என்கிறார்கள். ஒரு பஸ்ஸில் 45 டிக்கெட்டுகள் என்றால், 45 பேரும் மூட்டையாக எடுத்துச் செல்லுகின்றார்கள். அந்தப் பஸ்ஸையே பிடித்திருக்கிறார்கள். இப்படிப் பிடிக்கின்றதைப் பார்த்தால், பரிதாபமாகத்தான் இருக்கும். அரசாங்கம் மக்களுக்காக சில கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது. அப்போது சில சமயங்களிலே அது சிலருக்குத் தொந்தரவாக இருக்கலாம். இப்படி எடுத்துக்கொண்டு போகும்போது, யார் கடத்தல் செய்கின்றார்கள் அல்லது யார் யார் அதற்குத் தூண்டுதலாக இருக்கின்றார்கள், யார் யார் அதற்குச் சற்று வெளியே இருந்துகொண்டு இதைச் செய்கின்றார்கள் என்று பார்த்தால், ஒன்றுமே செய்ய முடியாது. அப்படி இருக்கிறது. நான் சிறுவனாக இருந்தபோது மூட்டை நெல் மூன்று ரூபாய் கொள்ளிடம் ஓரங்களிலே உள்ள பகுதிகளிலே விற்றது நன்றாக நினைவிருக்கிறது. அறந்தாங்கியில் மூனே முக்கால் ரூபாய். ஆனால் கொள்ளிடத்தைத் தாண்டினால், நாலரை ரூபாய் என்று விற்கும். மூன்று ரூபாய்க்கும் நாலரை ரூபாய்க்கும் எவ்வளவு வித்தியாசம்? என்ன பெர்ஸெண்டேஜ்? இப்போது தஞ்சாவூரில் 51 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். இப்போது வெளியே 80 ரூபாய். பார்டரில் 60 ரூபாய் என்றால், திருச்சியில் ரூ. 102 என்று விற்கிறது. எவ்வளவு பெர்ஸெண்ட்டேஜ்? மூன்று ரூபாய் விற்றபோது நாலரை ரூபாய். ஆக இந்த முறையில் எந்தக் காலத்திலும் தஞ்சைக்கும் திருச்சிக்கும் ஒரே சமமான நிலைமையில் விலைகள் இருந்ததில்லை. அதற்காக இப்போது இருப்பது நியாயம் என்று சொல்லவில்லை. கூடுமான வரையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றுதான் விலையை நிர்ணயம் செய்கிறோம். ஆனால் இடையிலே வியாபாரிகள் செய்த பெரும் மோசடி இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டது. வேறு ஒன்றுமில்லை. அதற்காகத்தான் இப்போது கூட்டுறவுத் துறையிடம் இதை விட்டுவிட வேண்டும்



என்கிறோம். பொதுவாக தமிழ் நாட்டிலே குறுவை சென்ற ஆண்டு 14 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டது என்றால், இந்த வருஷம் 7.6 லட்சம் ஏக்கரில் தான் சாகுபடி செய்யப்பட்டது. தஞ்சாவூரில் முன்பு ஐந்து லட்சம் ஏக்கர் என்றால் இந்த வருஷம் 3.75 லட்சம் ஏக்கர்தான். குறுவை கண்டுமுதல் சென்ற வருஷம் 15 லட்சம் என்றால், இந்த வருஷம் ஐந்து லட்சம்தான் கிடைத்திருக்கிறது. சம்பா சாகுபடியில் சென்ற வருஷம் 37 லட்சம் ஏக்கர், 40 லட்சம் என்று கணக்குப் போட்டோம். ஆனால் நவரை விளைவையெல்லாம் குறைத்தால் 37 லட்சம். சென்ற வருஷம் 37 லட்சம் டன் அரிசி கிடைத்தது. இந்த வருஷம் சம்பா சாகுபடியில் 20 லட்சம் டன் அரிசிதான் எதிர்பார்க்க முடியும். தமிழ் நாட்டிற்கு 57 லட்சம் டன் அரிசி வேண்டும். இதிலே 37 லட்சம் டன் கிடைத்தால், கிட்டத்தட்ட 20 லட்சம் டன் குறை ஏற்படுகிறது. அதைக் குறிப்பிட்டுத்தான் நமது முதலமைச்சர் அவர்கள் மாதம் ஒரு லட்சம் டன்னையாவது மத்திய சர்க்கார் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் மத்திய அரசு கேட்டபோதெல்லாம் 50 ஆயிரம் டன், 75 ஆயிரம் டன் என்று கொடுத்திருக்கிறோம். அது மாத்திரமில்லை, எந்த மாநிலமாவது நம்மிடம் அரிசி வேண்டுமென்று கேட்டாலும், கேட்ட நேரத்திலே எல்லாம் கொடுத்திருக்கிறோம். மகாராஷ்டிரத்திலிருந்து வேண்டுமென்று கேட்டார்கள். கேரளத்திலிருந்து கேட்டார்கள். "நாங்கள் கொடுக்கிறோம். நீங்கள் மத்திய அரசிடமிருந்து பெர்மிஷன் வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று வேண்டிய அளவிற்கு நாம் உதவி செய்திருக்கிறோம். இப்படிக் கொடுத்ததால்தான் இப்போது நமக்கு இல்லை என்று சிலர் சொல்லுகின்றார்கள், அது தவறு. இருக்கும்போது எவ்வளவு தானியத்தை எவ்வளவு நாளுக்கு வைத்துக் கொண்டிருக்க முடியும்? குறுவை நெல்லை அரைக்காய்ச்சல் நெல் என்பார்கள். அதை ஒரு வருஷ காலத்திற்கு வைத்துக்கொண்டிருக்கலாம். பிறகு? அடுத்த போகம் வந்துவிடுகிறது. இருப்பதை வெளியே கொண்டு போகாமல், என்ன செய்வது? யோசித்துப் பார்க்க வேண்டும். அரிசியைத் தவிர மற்றப் பண்டங்களை வேண்டுமானால் நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கலாம். அரிசியை அப்படி வைத்துக்கொண்டிருக்க முடியாது.

அடுத்து, கலர் அரிசி என்று குறிப்பிட்டார்கள். இந்த கலர் அரிசி வருவதற்குக் காரணம். . .

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்** : சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில். .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதையும் அவையில் எடுத்துக் கொண்டு வந்து காண்பிக்கக்கூடாது. தலைவருக்குக் காண்பித்துவிட்டுத்தான் கொண்டுவர வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போதுகூட என்னிடம் காட்டியிருந்தால் போதும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து அந்த மூட்டையைக் கீழே வைக்கவேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மூட்டை இல்லை. சின்ன பொட்டலம்

(பிற்பகல் 6-40)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, நீண்ட நாட்கள் அரிசியை வைத்திருக்கிறோம். 60,000 டன்கள், 70,000 டன்கள் அரிசி கொடுத்திருக்கிறோம். அதில் இரண்டொரு இடங்களில் அப்படி இருக்கும்.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார் . . . )

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கொடுக்கக் கூடிய அரிசி மிகத் தரமானதாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவர்களைக் குறுக்கிட வேண்டாமென்று சொன்னேன். உறுப்பினர் எழுந்து பேசுகிறார்களா ?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கும் அரிசி மிக மோசமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மணச்சநல்லூர்காரர்களுக்குக் கொடுங்களென்று உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்களா ?

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார் . . . )

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சும்மா இப்படிக் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் எப்படி ?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இப்போது அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது. கொடுக்கின்ற அரிசியும் மோசமாக இருக்கிறது. எங்கள் கொள்கையே தனியாருக்குக் கொடுக்கக் கூடாதென்பதுதான். இது





வரை தனியார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இனியும் சொல்லப் போவதில்லை. கூட்டுறவிடம்தான் விட வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் சரியான பராமரிப்பு இல்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, நான் தீக்ஷிதர் கொள்கை என்று நான் சொன்னேன்.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார் . )

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்.)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, தீக்ஷிதர் கொள்கை என்று சொல்வதால் மறுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சரவர்கள் 'தீக்ஷிதர்' என்று பொதுவாகத்தான் சொன்னார்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** சீக்கிரமாக முடித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறைபற்றி சில பதில்களைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். 9,170 நியாய விலைக் கடைகள் தமிழ்நாட்டில் இருந்தன. எல்லாம் தனியாரிடத்தில் இருந்தன. இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக கிட்டத்தட்ட 7761 இடங்களை கூட்டுறவுச் சங்கங்களிடமும், 769 இடங்களைப் பஞ்சாயத்துகளிடமும், 311 இடங்களை தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமும் ஒப்படைத்திருக்கிறோம். தனியாரிடத்தில் இன்னும் 800 இடங்கள்தான் இருக்கின்றன. இவ்வளவு தூரத்திற்கு தனியாரிடமிருந்து எடுத்திருக்கிறோம். வியாபாரிகளுக்கு எந்தவிதமான சலுகையையும் இந்த அரசு கொடுக்கவில்லை. மதுரை நகரத்தில் 2 மாதங்களுக்கு முன்பு எல்லாக் கடைகளையும் எடுத்து, இப்போது நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தனியார்களுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் எடுத்து கூட்டுறவுத் துறைக்குக் கொடுத்திருக்கிறோம். நேற்றுகூட திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னார்கள். அவர்கூட ஒரு தலைவர்தான். அந்த சொசைட்டி நன்றாக நடக்கிறது. அங்கேயிருக்கிற 100 சொசைட்டிகளில் 99 நன்றாக நடக்கலாம். ஒரு இடத்தில் தவறு இருந்தால் சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1973-74-ஆ

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 17

ஆண்டிலே 68.89 கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவுத் துறை மூலமாக வியாபாரம் செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 1—7—1974 முதல் 30---11---1974 வரை, 5 மாதங்களில் 52 கோடியே 41 லட்சம் ரூபாய்க்கு கூட்டுறவு அங்காடிகளிலிருந்து மக்கள் பொருள்களை வாங்கியிருக்கிறார்கள். இதிலே சிறப்பு அங்காடிகள், சிறப்பு சிற்றங்காடிகள் எல்லாம் இருக்கின்றன. சிறப்பு அங்காடிகளில் மாதத்தில் 23 கோடி ரூபாய்க்கு 1973-74-ல் வியாபாரம் நடந்திருக்கிறது. 1974-75-ல், 5 மாதங்களில், 17 சிறப்பு அங்காடிகளில் மாத்திரம் 15 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. தனியார்கள் இந்த வியாபாரத்தைச் செய்து, அவர்களின் தனிப்பட்ட குடும்பங்களுக்குப் போய்க்கொண்டிருந்த பணத்தை, கிட்டத்தட்ட 15 கோடி ரூபாயை, 17 நிர்வாகங்கள் மூலமாக நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலமாக இந்த வியாபாரத்தை நாங்கள் எவ்வளவு தூரம் ஆதரித்திருக்கிறோம் என்பதனைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூட்டுறவு மோசடி என்று சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் கூட்டுறவுத் துறையில் நாற்காலி கிடைத்தால் சொல்ல மாட்டார்கள். ஒருசிலர் இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவைப் பொறுத்த அளவுக்கு ஒன்றைச் சொல்கிறேன். 11,861 கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட இரண்டு ஆண்டுகளிலே 500 சொச்சம் வழக்குகள் போடப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். சில வழக்குகளில் தலைவர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள்; சில வழக்குகளில் சிப்பந்திகள் குற்றம் செய்திருக்கிறார்கள். மொத்த வழக்குகளில் மீதி இருப்பது 359 வழக்குகள். 11,861 கூட்டுறவு சங்கங்களிலே 359 பேர்கள் மேலே வழக்கு இருக்கிறது. நீங்களே பெர்சன்டேஜ் கணக்குப் போட்டுப் பாருங்கள். 11,861 சங்கங்களிலே 617 கோடி ரூபாய் டர்ன்-ஓவர் ஆகிறது. இதிலே குறை இல்லாமல் எப்படி இருக்கும்? இதற்கு முன்பு பத்திரிகைகளிலே வரவில்லை. அப்போதிருந்த தலைவர்களுக்கு பத்திரிகைகள் சாதகமாக இருந்தனபோலிருக்கிறது. இப்போது சின்ன சமாச்சாரம் நடந்தால்கூட, பத்திரிகையில் பெரிதாகப் போடுகிறார்கள்.

நேற்றுகூட திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை மீது அவருக்குக் கோபம். "அதை நீங்கள் தான் பிடித்துவைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். உங்கள் கட்சிக்காரர்கள் இருக்கும் சங்கங்கள் ஒழுங்காக இருக்கிறதே, அதற்குக் கொடுக்கட்டுமா என்று நான் கேட்டேன். அதற்கு ஒரு பதிலும் அவர்கள் சொல்லவில்லை.

கிராமங்களில், கிராம நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அந்தச் சங்கங்களிலே 75 சதவிகிதம் நீங்கள்தான் இருக்கிறீர்கள். 75 சதவிகிதம் கிராம நாணய சங்கங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இல்லை.



1974 டிசம்பர் 17] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

25 சதவிகிதம்கூட அவர்கள் இருக்க மாட்டார்கள். சரியான புள்ளி விவரத்தைப் பின்னால் தருகிறேன். நீங்கள் 15, 20 வருஷங்களாக இருக்கிறீர்கள்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** தலைவரவர்களே, கூட்டுறவு நாணய சங்கங்களையோ அல்லது உங்களையோ யாரும் குறை சொல்லவில்லை. நீங்கள் கையாண்டிருக்கிற முறையைத்தான் குறை சொல்கிறோம். மார்க்கெட்டிங் சொசைடிகளிலே ஜனநாயக முறையிலே பங்குதாரர்களை வைத்து அந்த சொசைடிகளைப் பிடித்தால் யாரும் குறை சொல்லப் போவதில்லை. நீங்கள் அவற்றை நாமினேஷன் முறையில் கைப்பற்றியிருக்கிறீர்கள் என்றுதான் அவர் வருத்தப்பட்டுக்கொண்டார். நீங்கள் குறை செய்தீர்களென்று யாரும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** 75 சதவிகிதம் நீங்கள் இருக்கிறீர்களென்று நான் சொல்கிறேன். அதற்கு நாங்கள் எங்கே உட்கார்ந்து கொண்டு சங்கடப்படுவது? 25 வருஷமாக நீங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தீர்களே, அதை நாங்கள் பார்த்துக்கொண்டுதானே இருந்தோம்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** நீங்கள் மார்க்கெட்டிங் சொசைட்டிகளைப் பிடித்துக்கொண்டீர்கள் என்று. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** (மணி அடித்து) உட்காருங்கள்; உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, நேற்று கடுமையாக விமர்சனம் செய்தார்கள். நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய மந்திரி ஒல்லியாக இருக்கிறார்; நான் பருமனாக இருக்கிறேன் என்று சொன்னார்கள். எனக்கும் ஒரு டிக்கட்தான்; அவருக்கும் ஒரு டிக்கட்தான். சில பேர் நிறையச் சாப்பிடுகிறார்கள். என்னைவிட அவர் நிறையச் சாப்பிடுகிறார். (சிரிப்பு) அது உங்கள் உடம்பிலே ஒட்டவில்லை. (சிரிப்பு) நான் அதற்கு என்ன செய்வது? எங்கள் அண்ணா அவர்கள், எங்களையெல்லாம் தூய உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளமாகப் படைத்துவிட்டுப் போயிருக்கிறார். ஆகையால் சாப்பிடுவதெல்லாம் உடம்பிலே ஒட்டுகிறது.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** நீங்கள் தப்புப் பண்ணினதாக நாங்கள் சொல்லவில்லை.

[1974 டிசம்பர் 17

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள், அவர் உயரத்திற்குத் தகுந்தாற்போல் இருக்கிறார். திரு. தேவர் அவர்கள்தான் அவர் உயரத்திற்குத் தகுந்தாற்போல் கனமாக இல்லை. அவர் உயரத்திற்குத் தகுந்த சதை போட வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் ஏன் மெலிவாக இருக்கிறார் ?

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** அவர் இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கிறார். அந்தக் காற்று அவருக்கு அடித்துவிட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மின்சார அமைச்சர், மின்சாரக் கம்பி மாதிரி இருக்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** விநியோக முறையில் ஓரளவுக்குக் குறையிருக்கிறதென்று உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நேற்று நம்முடைய உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் நல்ல விளக்கங்களைச் சொன்னார்கள். அப்போது முதல்வரவர்கள், அதுபற்றி அறிக்கை தந்திருக்கிறோம்; 8,000 கார்டுகள் என்று இருந்ததைப் பிரித்து, 1500 லிருந்து 2000 வரை கார்டுகளைப் பிரித்து, சென்னையிலே கொடுத்திருக்கிறோமென்று சொன்னார்கள். சென்னையில் மட்டுமல்லாமல், தமிழகத்திலுள்ள மற்ற இடங்களிலும் க்யூ வரிசையைக் குறைக்க வேண்டுமென்பதற்காக சரியான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு திங்களுக்குள் அந்த நிலைமை சரிப்படுத்தப்படும்.

கூட்டுறவுத் துறைபற்றி மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான், சுதேசமித்திரன், நவசக்தி ஆகிய இரண்டு பத்திரிகைகளைப் பார்த்தேன். ஒன்று ஆளுங்கட்சிப் பத்திரிகை. சுதேசமித்திரன் ஆளுங் காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை. கூட்டுறவு மந்திரி இங்கேயும் இருக்கிறார்; மத்தியிலும் ஒரு கூட்டுறவு மந்திரி இருக்கிறார். அந்தப் பத்திரிகையில் ஒரு பயங்கரமான படத்தைப் பார்த்தேன். பயங்கரவாதியாக மூஞ்சியைப் போட்டு, வாயைத் திறந்து வைத்து, அதற்குள்ளே வண்டி வண்டியாகப் போவது மாதிரியும் போட்டிருக்கிறார்கள். இந்த கூட்டுறவுத் துறை 1904-ஆம் ஆண்டில் தோன்றியது. யார் யார் தவறு செய்தார்களோ, அதெல்லாம் எங்கள் தலையில் வந்து விழுகிறது. இப்போது கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அந்தப் புள்ளி விவரத்தைச் சொல்வதென்றால் நேரமாகும். தனியாக, அந்த மானியம் வரும்



1974 டிசம்பர் 17] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

(பிற்பகல் 6-50)

போது சொல்கிறேன். திருச்சிக்கு நான் சென்ற வாரம் சென்றிருந்தேன். அங்கு சிந்தாமணி சூப்பர்மார்க்கெட்டில் ஒருநாள் 1,70,000 ரூபாய் கல்லாக் கட்டியிருக்கிறார்கள். கல்லாக்கட்டியிருக்கிறார்கள் என்றால், உங்கள் எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கின்றேன். ஒரு டேபிளில் 1,70,000 ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. என்னென்ன வியாபாரம் நடந்திருக்கிற தென்றால், துவரம் பருப்பு, உளுந்து, சோப்பு, எண்ணெய், நெய், வெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் மருந்து இப்படிப்பட்ட பொருள்களாக விற்றிருக்கின்றன. இது ஒரே நாளில் விற்றது, திருச்சியிலுள்ள சிந்தாமணி சூப்பர்மார்க்கட்டில். இந்த 1,70,000 ரூபாய், யாருடைய பணம்? இவ்வளவுக்கு விற்பனையாவதற்கு ஏற்றவாறு அவ்வளவு தூரத்திலிருந்து வந்து மக்கள் வாங்குகிறார்கள். அவ்வளவு நாணயமாக, நேர்மையாக நடத்தினால், அந்த முறையை மக்கள் மனமுவந்து ஆதரிப்பார்கள் என்று தெரிகிறது. மக்களும், சுத்தமான பொருட்களையேதான் வாங்குகிறார்கள்.

மேலும், இவ்வளவு குறைந்த விலையில் கிடைத்தாலும், மக்கள் வாங்கத்தான் செய்கிறார்கள். அந்த நிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். அந்த இடத்துக்கு நீங்கள் போய்ப் பாருங்கள். தனியார் கடையில் துவரம் பருப்பு ரூபாய் 1.50 என்று போட்டிருப்பார்கள். ஆனால், இந்த சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிலே விலை ரூபாய் 1.70 என்று இருக்கும். அவ்வளவுக்கு அது தரத்தில் சிறந்ததாக இருக்கும். பொதுவாக, துவரம் பருப்பைப்பற்றி உங்களுக்குத் தெரியும். ஆண்டவன் நம்மையெல்லாம் 4 ஜாதியாகப் படைத்திருக்கிறான். அது மாதிரி துவரம் பருப்பிலும் 4 ஜாதி. நம்பர் 1, நம்பர் 2, நம்பர் 3, நம்பர் 4 என்று நான்கு வகையில் இருக்கிறது. இந்த நான்கு ரகங்களிலும், அந்தத் தனியார் கடைக்காரர் இந்த மூன்றாவது ரகத்தை வைத்திருப்பார். ஆனால், இந்த சூப்பர் மார்க்கெட்டில் நல்லமுறையில், நல்ல ரகம் வைத்திருப்பார்கள். சில சமயங்களில், அந்தத் தனியார் கடையில் குறைந்த விலைக்குக் கிடைக்குமென்று கூட சில பெண்கள் . . .

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவர் அவர்களே, ஆண்டவன் நான்கு ஜாதி படைத்தார் என்று சொன்னார்கள். அதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறாரா அல்லது வற்புறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 17

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, நான் ஆட்சேபித்தால் தெய்வ நம்பிக்கை இல்லையென்று சொல்வார்கள். அடிகளார் ஆட்சேபித்தால் உண்மை என்று சொல்வார்கள். அதனால்தான் நான் சொன்னேன். அடிகளார் ஆட்சேபித்ததால், எனக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லை. ஆண்டவன் படைத்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், இதிலே, இந்தத் துவரம் பருப்பிலே நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நவசக்தியைப்பற்றிச் சொல்லுகிறேன். மறுபடியும் சொல்லுகிறேன் என்று யாரும் வருத்தப்படக்கூடாது. என்னுடைய பத்திரிகை இல்லையென்றும் சொல்லக்கூடாது. தயவுசெய்து நீங்கள் போய் அதை எடுத்துப் படித்துப் பாருங்கள். நம்முடைய முதலமைச்சரைப் போட்டு, ஏதோ ஒரு பெரிய பயங்கரமான ஆளாகப் போட்டு, ஒரு பெரிய மீசை வைத்து அவரை ஒரு பெரிய கொள்ளைக்காரன், கொலைகாரன் மாதிரிப் போட்டு, அந்த வேலைகளையெல்லாம் செய்ய முதல்வர் அவர்கள் திருப்பிவிடுவதுபோல ஒரு படம் போட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** ஒரு கட்சி ஆட்சி நடத்துகிறபோது மாற்றுக் கட்சிப் பத்திரிகையில் வருவதையெல்லாம் அதிகமாகப் பொருட்படுத்தக்கூடாது. அதையெல்லாம் விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, அந்தத் துறையை, தற்போது, தி.மு.க.-வும் நடத்தவில்லை, தனியாரும் நடத்தவில்லை. அதற்கென்று தனியாக இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். ரிஜிஸ்ட்ரார் ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார், எல்லோரும் 'கெசட்டட்' அதிகாரிகள்தான். அவர்கள் சர்க்கார் அதிகாரிகள். சர்க்கார் சம்பளம் வாங்குகிற அதிகாரிகள். சம்பளம் வாங்கிக்கொண்டுதான் நடத்துகிறார்கள். இத்தனை பேர் கண்காணிப்பிலே இது நடைபெறுகிறது. இருப்பினும் இரண்டொரு இடங்களில் தவறுதல்கள் நடந்தும் இருக்கலாம். நாமெல்லாம் சேர்ந்து அதைத் திருத்த வேண்டும். இப்பொழுதுதான் நாம் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு அடியெடுத்து வைத்திருக்கிறோம்.

ஆகவே, ஒரு பயங்கரமான, ஒரு சோதனையான நிலைமையை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு மிகத் துணிவாக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இந்தக் காரியத்தைச் செய்வதற்கு யாரும் துணியவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த முயற்சியை எடுத்திருக்கிறார்கள். தனியாரால் எவ்வளவு சங்கடங்கள் வருகின்றன என்றும் நாம் பார்க்க வேண்டும்.



இருப்பினும் அதையெல்லாம் தாங்கிக்கொண்டு துணிந்து செய்கிறார்கள். தனியாரால் எவ்வளவு சங்கடங்கள் வருகின்றன என்பதைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த மாதம் 400 தனியார் கடைகளை எடுத்துவிட்டு, கூட்டுறவுத் துறை யிலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கடைகளை நாம் திறந்திருக் கிறோம். 400-க்கு மேற்பட்ட தனியாரிடமிருந்து வியாபாரத்தை நாம் எடுத்தி ருக்கிறோம். அவர்கள் எல்லாம் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் வாழ்த்துவார்கள் என்று நினைக்கிறீர்கள். தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் யாருடைய வாழ்த்துக்காகவும் இதைச் செய்யவில்லை. வாங்குகிற மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு, சோசலிசக் கொள்கை என்று சொல்வார்களே, அந்தக் கொள் கைக்கேற்ப, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்த வகையிலே கூட்டுறவுத் துறை மக்களுக்குப் பணியாற்றிக்கொண்டு வருகிறது. அப்படி உண்மையிலே பணியாற்றிய, தொண்டாற்றிய காரணத்தால்தான் திருவொற்றியூரிலே லாரியை மறித்தார்கள், மற்றும் மற்ற இடங்களிலெல்லாம் போக்குவரத்தைக் குலைத்து, மறித்து, ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வேலை செய்தார்கள்.

மேலும், எல்லோரும், கட்சிக் குழு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். எப்படியாவது ஒரு குழப்பத்தை உண்டு பண்ணக்கூடாதா என்று பல பேர் நினைக்கிறார்கள். எப்படி புரட்சி உண்டுபண்ணுவது என்றும் நினைக்கிறார்கள். 'இந்த மாதிரி நிலைமை இங்கே வராமல் இருந்துவிட்டதே, சென்ற ஆண்டு உலகத்துக்கே கொடுத்து நல்ல பெயர் வாங்கினார்களே, நல்ல வேளையாக இந்த ஆண்டு இம்மாதிரி மாட்டிக்கொண்டார்கள். மழை பெய்ய வில்லை. வடகிழக்குப் பருவக்காற்றில் கூட மழை பெய்யவில்லை, இதெல்லாம் நமக்கு நல்ல காலம்' என்று எண்ணி, இப்படியெல்லாம் மக்களிடம் இல்லாத தையும் பொல்லாததையும் சொல்லி அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவைத்து, குழப்பத்தையும் உண்டாக்கப் பார்க்கிறார்கள்.

8,000-க்கு மேற்பட்ட இடங்களிலே நாம் விநியோகப் பொறுப்பை வைத்திருந்த காரணத்தாலே எல்லாப் பொருட்களும் மக்களுக்கு நல்ல முறையில், ஒழுங்காக விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக் கொள்ளுகிறேன். கடைசியாக கடத்தல் பிரச்சினை . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவியைப் பொறுத்தவரையிலே லெவி தஞ்சை மாவட்டத்திலே கூடுதலாக இருக்கிறது, கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் நல்லது என்று கேட்டோம். அதுபற்றி

அமைச்சரவர்கள் ஏதாவது கூறுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். எவ்வளவு லெவி போடுவார்கள் என்பதை அறிய நாங்கள் எல்லாம் மிகுந்த ஆவலாக இருக்கிறோம் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, காவிரியில் தண்ணீர் வரும், மேலும் மழையும் பெய்யும் என்ற எண்ணத்தில் லெவி விதிக்கப்பட்டது. இப்போது லெவியை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் எப்படியும் ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் நினைத்தபடி மகசூல் ஏக்கரேஜுக்குக் கிடைக்காது. இரண்டாவது, உத்தியோகப் பற்றற்றவர்களுடைய உதவியை ஏற்றுக்கொண்டு இந்த லெவி வசூல் பண்ணுவது, உணவு விநியோகம் செய்வது இதையெல்லாம் மேற்பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அது பற்றியும் அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த லெவி முதலில், காவிரியில் தண்ணீரும் வரும், மழையும் கிடைக்கும் என்ற அளவில் எப்படி விளைவுகள் ஏற்படக் கூடும் என்ற அடிப்படையில் ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்களுடைய கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது, அவர்கள் சில கருத்துக்களை, இந்த லெவி முறையில் இருக்கின்ற இடர்ப்பாடுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாம் இவைகளையெல்லாம் எதிர்பார்த்து நிர்ணயித்த லெவி முறையில், நாம் எதிர்பாராத அளவுக்கு ஏற்பட்டுள்ள சூழலின் காரணமாக, சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்று அரசுக்கு எடுத்துச்சொல்லப்பட்டு வருகின்றது. அவைகளையெல்லாம், ஒருசேர கவனிப்பதற்காகத்தான் இப்போது வறட்சிப் பணிகளை ஆங்காங்கு இருக்கின்ற நிலைமையை மாவட்ட ரீதியாக ஆராய்ந்து வருவதற்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அதிகாரிகள், ரெவின்யூ போர்ட் மெம்பர்கள், இவைகளையெல்லாம் ஆலோசித்து அரசுக்கு அதுபற்றிய கருத்துக்களை வழங்க இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் வந்த பிறகு அதுபற்றி யோசித்து, லெவி முறையிலே எப்படிப்பட்ட மாற்றங்கள் இருக்கலாம், வருகின்ற அறுவடைக்குப் பிறகுதான் லெவி போடப்படுகின்ற சூழ்நிலை இருப்பதால், எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பது பற்றி அரசு அறிவிக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** விநியோகத்தை, வெளிமார்க்கெட் மற்றும் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மூலமாகச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வெளி மார்க்கெட் விலை என்ன என்பதை இன்னும் நிர்ணயம் செய்ய





வில்லை. வெளி மார்க்கெட் விலை என்ன என்பதையும், அந்த விலையை எப்பொழுது நிர்ணயம் செய்து முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதையும் அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அதுபற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அநேகமாக நாளைக்குள்ளாக அதிகாரிகளோடு அதுபற்றிப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம் என்று நம்புகிறோம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இந்த விநியோகத்தை முறைப்படுத்த, ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருந்தார். அதை இப்போது நிறைவேற்றியிருக்கிறோம். எங்காவது, உணவு விநியோகம் பண்ணுகிற இடத்திலே தவறு இருந்தால், நிர்வாகமோ, மற்ற இடங்களிலோ கூட தவறுகிற நிலைமைகள் ஏற்பட்டால், உடனடியாக அறிவிக்க வேண்டுமென்பதற்காக 39111 எண்ணுள்ள ஒரு போன் நம்பர் கொடுத்திருக்கிறோம். அப்படி குறைகள் இருந்து இந்த எண்ணுக்கு போன் செய்தால், உடனடியாக அதிகாரிகள் அங்கு வந்து, அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். அதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு ஐந்து நிமிட நேரம் கூடக் கொடுத்தால், என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இம்மாதிரியான போன் வசதி சென்னை நகருக்கு மட்டுமா அல்லது வெளி இடங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, முக்கியமான இடங்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறோம்.

